
அந்தி வானம்
ஆசிரியர்:
"நூரன்"

அந்தி வானம்

ஆசிரியர்:

"நூான்"

இஸ்லாமிய தமிழ் இலக்கிய கழகம்
சென்னை.

நூல் விளக்கக்குறிப்பு

நூல் பெயர்	:	அந்தி வானம்
ஆசிரியர்	:	"நூன்"
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	முதற்பதிப்பு, மே 2008.
உரிமை	:	வெளியீட்டாளருக்கே
தாள்	:	16 கி.கி. வெள்ளைத்தாள்
நூலின் அளவு	:	டெம்மி 1/8
பக்கங்கள்	:	192
அச்சிட்டோர்	:	மாஹின் பிரிண்டர்ஸ் 28, அப்பு மேஸ்திரி தெரு, சென்னை - 600 001. போன் : 25225143
விலை	:	ரூ. 50

நூன் அவர்களின் முன்னுரை

எட்டாம் நூற்றாண்டின் ஆரம்பக் கட்டம்

கிழக்கே சிந்து நதி தீரத்தில் வீர இளைஞர் காஸிமின் மைந்தர் முஹம்மத் வெற்றிக் கொடி நாட்டி வந்த அதே நேரம்.....

மேற்கே மத்தியதரைக்கடல் நுழைவாயிலிலே சிங்கமுகக் குன்றின் மீது இஸ்லாமிய தீபத்தை ஏற்றி வைத்தார், தீர வாலிபர் தாரிக். ஜியாதின் மைந்தரான அவரும் அவரைத் தொடர்ந்து வந்தவர்களும் கண்ட வெற்றிகளின் பின்னணியிலே, கோத் இனத்தவர் ஆட்சியின் கீழ் உயிர்ப்பில்லாமல் கிடந்த ஸ்பெயினை தங்கள் தீவிர கடின உழைப்பால் மாற்றியமைத்து வரலாற்றுச் சிறப்படைந்தனர் முஸ்லிம்கள்.

குறிப்பாக, அந்நாட்டின் தென் கிழக்குப் பகுதியை -உந்தலுஸ் என்று தாங்கள் உவப்புடன் அழைத்த பிரதேசத்தை -அவர்கள் சுவர்க்கப் பூங்காவைப் போல் ஆக்கிவிட்டனர். அங்கே சூழ்ந்திருந்த இருளினூடே அறிவுச் சுடரைப் பரப்பினார்கள்.

கல்வி, இலக்கியம், இசை, ஓவியம், சிற்பம், கட்டட அமைப்பு-அலங்காரம் போன்ற-பல கலைகள், மருத்துவம், தத்துவம், விஞ்ஞானம் ஆகியவை எல்லாம் தன்முத்தோங்கும்படி செய்தனர். அவை வளர்ச்சி பெறுவதற்குச் சாதகமாக வாழ்வின் வசதிகளுக்கான பல கண்டு பிடிப்புகளை அவர்கள் செய்தனர்.

இஸ்லாமியப் பண்பையும் பண்பாட்டையும் பரப்பி, நாகரிக வளர்ச்சிக்கு உத்வேகம் தந்து தயாவீரத்தை நிலைநாட்டி, நவீன ஐரோப்பா உருவாவதற்கு வழி வகுத்தனர், மூர்கள் என்னும் ஸ்பெயின் முஸ்லிம்கள்.

அவர்கள் தோற்றுவித்த கல்லூரிகள் ஒவ்வொன்றின் தலைவாயிலிலும் பொறிக்கப்பட்டிருந்தது:

''உலகத்தைத் தாங்கி நிற்பவை நான்கு: அறிஞர்களின் கல்வி, பெரியோர்களின் நீதி, நல்லவர்களின் பிரார்த்தனை, மாவீரர்களின் ஆண்மை.''

அவற்றிற்கு இலக்கணமாக வாழ்ந்து வந்த ஆட்சியில், எழுநூறு ஆண்டுகளுக்கு மேலாக அழகிய உந்தலுஸ் கலை, கலாச்சார, விஞ்ஞான

அறிவுக் கூடமாக - உயர் நாகரிகத்தின் மையமாக- உண்மையில், செம்மையான அறிவொளியின் பற்பல படிமங்களின் உறைவிடமாகத் திகழ்ந்தது. கலாச்சாரத்தில் அதை விட வேறெந்த நாடும் சிறந்திருக்கவில்லை.

ஆனால் அங்கிருந்து அவர்கள் வெளியேறிய பிறகு, அல்ல, வெளிறேற்றப்பட்ட பிறகு....

ஸ்பெயின் மீண்டும் விரைவிலே உயிர்ப்பற்ற நிலை- அறிவியல், ஆத்மீகப் பாழ்வெளியாகியது!

திராட்சை, ஜைத்தூன் கனிகள் என்ன, தங்கமணிக் கதிர்கள் என்ன, எத்தனையோ வகைக் காய், கனி, பயிர்கள் குலுங்கி வளங் கொழித்த நிலங்கள் மீண்டும் தரிசாயின!

மக்களும் மதமுமே மாறிவிட்ட சூழ்நிலை. அங்கே விஞ்ஞானம் விலக்கப்பட்டது. கலைகளும் கைத் தொழில்களும் இருந்த இடம் தெரியாமல் மறைந்தன. மக்கள் பெருக்கமான மாநகரங்கள் நாசமடைந்தன. அறிஞர்கள், மெஞ்ஞானிகள், வீரர்கள், வணிகர்கள் ஏராளமாக இருந்த இடங்களில் எல்லாம் பிச்சைக்காரர்கள், திருடர்கள், நாடோடித் துறவிகள்!

உந்தலுஸ் இன்று பாழடைந்த பிரதேசம். அதன் உயிர்ச் சலனமற்ற இடிபாடுகளினூடே சில சிதிலமடைந்த சின்னங்கள் தலை தூக்கி நின்றன.

ஸ்பானியரான வரலாற்றாசிரியர் கோந்தெ கூறுவது போல, அந்த இடிபாட்டுச் சின்னங்களினூடே உண்மையின் குரல் கேட்கிறது :

''கண்ணியமும் கவுரமும் தோல்வியுற்ற அரபியருக்கே! அழிவும் அவதியும், உண்மையில், அவர்களை வெற்றி கண்ட ஸ்பானிய (கிறிஸ்துவ)ருக்கே!''

ஆம், மூர்கள் என்ற அந்த முஸ்லிம்கள் சென்ற பிறகு கிறிஸ்துவ ஸ்பெயின் சில காலம் அந்திக் கதிரவனின் இரவல் ஒளியுடன் சோபிக்கும் சந்திரன் போலிருந்தது.

பிறகு கிரகணம் -அப்பால் ஒரே இருள் மயம் தான்.

இஸ்லாமிய ஆட்சியின் அந்திமச் சூரியன் ஒளிபட்டுத் தெறித்த மாவீரர் ஒருவரின் தீர எழுச்சியினூடே உந்தலுஸின் அருமை பெருமைகளைச் சித்தரிப்பதே 'அந்தி வானம்'.

ஆசிரியர்

பொருளடக்கம்

வ.எ.	தலைப்பு		பக்கம்
1.	புயல் ஓய்ந்ததா?	...	13
2.	மெழுகுப் பொம்மை	...	20
3.	தலைநகரில் எதிரொலி	...	29
4.	கொழுக்க வைத்த ஆடு	...	39
5.	நெஞ்சங்களில் மூண்ட நெருப்பு	...	51
6.	முன்னோர்களின் இரத்தம்	...	54
7.	விடிவெள்ளி	...	60
8.	வீரப்பரம்பரை	...	71
9.	வசந்தத்தின் கனவு	...	82
10.	ஒளிவெள்ளம்	...	91
11.	போர்க்கலை	...	105
12.	மாதுளம் முத்துக்கள்	...	114
13.	விழாவா, விபத்தா?	...	129
14.	சரணாகதியாம் சரணாகதி	...	142
15.	நெஞ்சிலிருந்து நீங்குமா?	...	155
16.	என்னருமை உந்தலூஸ்	...	167
17.	சென்று வருகிறேன்	...	179
18.	அந்திக்குப்பின்...	...	189

அந்தி வானம்

1. புயல் ஓய்ந்ததா?

கண்ணுக்கெட்டிய தூரமெங்கினும் வேகாச் சமவெளி வளமும் வனப்பும் நிரம்பப் பரவிக் கிடந்தது. அதைக் காவல் புரிவது போல கர்னாதா குன்றின் மீது நெடிதுயர்ந்து நின்றது கோமரஸ் கோபுரம்.

அக்கோபுரத்தின் கனத்த மதில் உட்புறம் ஒரே பளபளக்கும் வண்ணக் கலவை! அதன் பின்னணியில் அமைக்கப்பட்டிருந்த சிம்மாதனத்தின் மீது வீற்றிருந்தார், அரசர் அபூ அப்துல்லாஹ் முஹம்மத்.

நீண்டு அகன்றிருந்த சிங்காதன மண்டபத்தில், விண்வெளியின் கோளங்களையும் நீலவிதானத்தின் எண்ணற்ற தாரகைகளையும், போல் வட்டங்கள், வளைவு நெளிவுகளால் அலங்கரிக்கப்பட்டிருந்த மச்சின் உட்புறத்தை நோட்டமிட்டுக் கொண்டிருந்த சுல்தான் சற்றே தமது பார்வையைத் தாழ்த்தித் தமது வஜீரை நோக்கினார்.

முகத்திலே மென்முறுவல் படர, தமது குறுந்தாடியைத் தடவி விட்டுக் கொண்டவராக அவர் சொன்னார் :

'யூசுஃபே! நீரும் என்னுடன் சந்தோஷம் கொண்டாடும்! தாரகைகள் என்னைத் துன்புறுத்தி வந்ததை நிறுத்திக் கொண்டன. இனி எவரும் என்னைத் துர்ப்பாக்கியவான் என்று கூறவேண்டாம்!''

கர்னாதா நகரெங்கும் காட்டுத் தீப்போல பரவியிருந்த- அங்குள்ள மக்களின் மனதைப் பெரிதும் கவ்வியிருந்த- செய்தியைப் பற்றியே சுல்தான் அவ்வாறு கூறுகிறார் என்பது வஜீர் யூசுஃப் இப்னு சுமீஷாவுக்குத் தெரியாதா என்ன?

'இது உண்மையில் மகிழ்ச்சிக்குரிய விஷயம் தானா?'- மவுனமாக அவர் உள்ளத்தில் ஒரு கேள்வி எழுந்தது'

விவேகமும் எச்சரிக்கையும் மிக்க அமைச்சர் அவர்!

மன்னரின் தந்தையார் மவ்லா அபுல் ஹஸன் ஆட்சி காலத்தி லிருந்து அன்று வரை நடந்த சம்பவங்கள் அவர் மனக் கண்முன் நிழலாடின.

''அரசே! வானத்தின் ஒரு பகுதியில் புயல் ஓய்ந்து விட்டது. ஆனால் அது மற்றொரு திசையிலிருந்து வீசக் கூடும்.

''நமது காலடியிலோ கொந்தளிக்கும் கடல்! நம்மைச் சூழவோ கடினமான மலைப் பாறைகள்- ஆளை உள்ளிழுத்துக் கொல்லும் ஆபத்தான உதிர் மணல்! நிலைமை முற்றிலும் அமைதியான பிறகு கொண்டாட்டங்களை வைத்துக் கொள்ள லாமே!'' என்று அவர் வெகு சூசகமாகச் சொன்னார்.

''இப்போது கொண்டாடினால் என்ன? என்னுடைய உரிமையை எனக்குச் சேரவிடாமல் ஆபித்துக் கொண்டவர் இப்போது அதற்குரிய கூலியைப் பெற்று விட்டார். இதைப் பற்றி நாம் பராமுகமாக இருப்பதற்கில்லை. ஆம், இங்கு நாம் நடத்தும் கொண்டாட்டம் அங்கே அவர் காதுகளுக்கு எட்டும் அளவுக்குச் சிறப்பாக இருக்க வேண்டும். எம்மை அவர் எவ்வளவு துச்சமாக எண்ணினார்! இன்று அவர் நிலைமை....ஹ.....ஹ்....ஹா!'' -வெறுப்புமிழச் சிரித்தார், அபூ அப்துல்லாஹ்.

''இருந்தாலும், அவர் சிற்றப்பர் ஆயிற்றே! உங்கள் தந்தையாருடன் பிறந்தவர்.....''- வஜீர் யூசுஃப் சொல்லலுற்றார்.

ஆனால் அவருடைய பேச்சை இடைமறித்தார், அரசர் அபூ அப்துல்லாஹ்:

''தந்தையுடன் பிறந்தவரா? தந்தையார் தாம் என்ன! உனக்குத் தெரியாதா? பட்டத்து அரசியாரின் மைந்தருக்குரிய உரிமையை எமக்குத் தந்தாரா? எம்மை ஒதுக்கிவிட்டுத் தமது தம்பியாருக்கு அவர் பட்டம் சூட்டினார் ....இன்று? மாலகாவில் அவர் தம்பியாருக்குப் படுதோல்வி! கர்னாதாவில் நாம் அவர் தலையீடின்றி நிம்மதியாக ஆள முடியும்! ஆம், தேடி வரும் நல்ல காலத்தை யாரும் தடுத்து நிறுத்தி விட முடியுமா? எம்முடைய மனம் போலக் காரியம் நடந்து விட்டது. இனி...மாலகாவில் அவர் வீழ்ச்சி! கர்னாதாவில் எமது மகிழ்ச்சி. கோலாகலமான பொது

விழாவுக்கு ஏற்பாடு செய்யும்! அன்று அல்ஜஹ்ஹலுக்கு வழி விடாமல் நகர வாயில்களை மூடிய கர்னாதா மக்கள் - எம்மைத் தங்கள் சுல்தானாக ஏற்ற அதே மக்கள், இந்த விழாவில் உற்சாகமுடன் கலந்து கொள்வார்கள் என்பதில் என்ன சந்தேகம்! போம், விழாவிற்குத் துரிதமாக ஏற்பாடு செய்யும்!''

அபூ அப்துல்லாஹ் குறுகிய கண்ணோட்டம் கொண்டவர். சிறு வயதிலிருந்தே தவறான முடிவில் பிடிவாதமாக நிற்பவர் என்பதை வஜீர் நன்கு அறிந்திருந்தார்.

அவரால் மவுனமாக எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியவில்லை-

'அரசர் அபுல் ஹஸன் வாழ் நாளின் போதும் அதன் பிறகும் இவர் நடந்து கொண்ட விதம் கர்னாதாவுடைய வரலாற்றின் போக்கையே மாற்றி விட்டதே!''

மழை 'சோ' வெனக் கொட்டிக் கொண்டிருந்தது. வானமே பொத்துக் கொண்டாற் போலக் கனத்த மாரி!

'உய்' என்ற பேரிரைச்சலுடன் பேய்க் காற்று வேறு சுழன்று சுழன்று அடித்துக் கொண்டிருந்தது.

வானத்தைப் போலவே சூழ்வெளி எங்கும் ஒரே கருமை!

அதனூடே கனவுருவங்கள் போலக் குதிரை வீரர்கள் துள்ளிப் பாய்ந்து சென்றனர். அவர்களைத் துரிதமாகப் படை நடத்திச் சென்று கொண்டிருந்தார், சுல்தான் அபுல் ஹஸன்.

உந்தலூஸ் எல்லையில் வாதீஸலீத் ஆற்றோரம், மோசமான பருவ நிலையைக் கொஞ்சமும் பொருட் படுத்தாது கடிது பறந்து சென்றன புரவிகள்! மழையின் ஆர்ப்பரிப்பையும் புயலின் ஓங்காரத்தையும் தங்கள் போரிசையாகக் கொண்டு முன்னேறிச் சென்றனர், முஸ்லிம் வீரர்கள்.

அதோ குன்றின் மீது அல்ஜஹாரா நகரம்! அதன் கோட்டைக் கோபுரங்கள் 'மாஜூஸ்' களின் நிழலுருவங்கள் போல எழும்பி நின்றன.

அங்கு காவல் புரிந்து கொண்டிருந்த வீரர்களின் கண்களுக்கு அபுல் ஹஸனின் படையினர் வருவது அவர்கள் கோட்டையை மிக

அண்மிக்கும் வரை புலப்படவில்லை. அவர்கள் ஏறி வந்த புரவிகளின் கனத்த குளம்படி ஓசைகள் கேளாத அளவுக்கு மழையின் ஆரவாரமும், புயலின் பயங்கர இரைச்சலும் இழைந்திருந்தனவே!

திடீரெனப் பகைவர் வந்து விட்டபோது கோட்டைக் காவல் வீரர்கள் செய்வதறியாமல் திகைத்துச் செயலற்ற நிலையில், முஸ்லிம்கள் கோட்டை மதில் மீது தாவி ஏறினர். தங்களை எதிர்த்தவர்களை வெட்டி வீழ்த்தி நகரை எளிதில் கைப்பற்றினர்.

'ஜஹாராவை மீட்க வேண்டுமே? -காஸ்தல்லியர்கள் பல வாறாகக் கலந்தாலோசித்து ஒரு முடிவுக்கு வந்தனர்.

கர்னாதா நகருக்கு தென் மேற்கே நாற்பதைந்து கல் தொலைவில் மலைச் சாரலில் முஸ்லிம் அரசின் நுழைவாயிலைக் காக்கும் கோபுரம் போல நின்ற அல்ஹம்மா கோட்டையை நோக்கி விரைந்தனர், கிறிஸ்துவ படையினர். அங்கு அவர்கள் அகால நேரத்தில் வந்தடைந்தனர்.

காவற் கோபுரத்தில் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த காவல் வீரன் கொல்லப்பட்டான்.

'ஆ' வென்று அவன் அலறி வீழ்ந்த சந்தடியில் பதறித் துடித்தெழுந்த மற்ற முஸ்லிம் வீரர்கள் உறக்கக் கலக்கம் மிகுந்த நிலையில் தங்கள் மீது கொஞ்சமும் எதிர்பாராவிதமாகப் பாய்ந்த வர்களைத் தக்க முறையில் எதிர்த்து நிற்க முடியாமல் திண் டாடினர்.

அவர்களைக் கொன்று தீர்த்த கிறிஸ்துவர்கள் கோட்டை வாயிலைத் திறந்து நகரினுள்ளே ஆவேசமுடன் புகுந்தனர்.

சற்று நேரம் நகரமெங்கும் அல்லோலகல்லோலம்! பிறகு நிலைமை ஒருவாறு சமனப்பட்டு, நகர மக்கள் கிறிஸ்துவர்களைத் தீரமுடன் எதிர்த்துச் சண்டை யிடலாயினர்.

ஆனால், கிறிஸ்துவர்கள் கையோங்கி நிற்க, நகரமெங்கும் குருதி வெள்ளம் ஓடியது. ஒரே பிணக்காடு!

மறுநாள் விடிய, வளங் கொழித்த நகரம் இடுவெளியாக மாறியிருந்தது. மகிழ்ச்சி பொங்க மக்கள் திரண்டு சென்ற அழகிய தெருக்களில் எல்லாம் இறந்த மனிதர்களின் சடலங்கள். நகர வாசிகளில் நான்கில் ஒரு பகுதிக்கு மேல் மடிந்து விட்டிருந்தனர்.

ஆம், ஜுஃம்ஆ பள்ளியில் உயிரைக் காப்பாற்ற ஓடி ஒளிந்த பெண்டு பிள்ளைகளும் கூட, படு கொலை செய்யப்பட்டனர்.

அல்ஹம்மாவை கிறிஸ்துவர்களிடமிருந்து விடுவிக்க அபுல்ஹஸன் தமது படைகளுடன் சென்று அதை முற்றுகை யிட்டார்.

அதன் பேரில் அங்கிருந்த கிறிஸ்துவர்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்கள், மிருக தீனிகளுடன், பெரும் படையொன் றுக்குத் தலைமை தாங்கி, வந்தார், காஸ்தால்லிய மன்னர் ஃபர்டினாண்டு. அவருடன் அநேக பீரங்கிகளும் சென்றன.

அச்செய்தியறிந்த அபுல் ஹஸன் தமது படை முகாமைக் கலைத்து அங்கிருந்து சென்றார்.

அல்ஹம்மா மீண்டும் அரசர் ஃபர்டினாண்டு வசமாகியது.

அந்நகரில் நின்ற கிறிஸ்துவ காவற்படையைப் பலப்படுத்தி மூன்று மாதங்களுக்கு வேண்டிய உணவுப் பொருட்கள் கைவசமிருக்கும் படிச் செய்து விட்டு அங்கிருந்து கிளம்பினார் ஃபர்டினாண்டும் அவரது படை வீரர்களும்.

வழியிலே அவர்கள் வேகா சமவெளியின் பல பகுதிகளில் திடீர்த் தாக்குதல்கள் நடத்தினர்; கொள்ளை அடித்தனர்; இளம் பயிர்களையும் திராட்சைக் கொடிகளையும் மரங்களையும் நாசப்படுத்தினர். எவ்வித எதிர்ப்புமின்றி அவர்கள் கர்த்தபா சென்றடைந்தனர்.

அதற்கிடையில்......

''நமது மத விரோதிகளுக்கு எதிராகத் தொடர்ந்து போரை நடத்த வேண்டும். ஆகவே, ஈவுப்படி உணவுப் பொருள்கள், துருப்புகள், வெடி மருந்து அனுப்பி வைக்க வேண்டியது. எந்த நேரத்திலும் உந்தலுஸ் புறப்பட்டுச் செல்ல நம் வீரர்கள் சித்தமாக இருக்க வேண்டும்'' என ஒவ்வொரு மாவட்டத்துக்கும் அரசி இஸபெல்லாவின் உத்திரவு கடிதில் சென்றது.

கர்ப்பமுற்றிருந்த நிலையிலும் கூட அவர் தாமே தமது கணவர் படையிறங்கியிருந்த கர்த்தபா நோக்கித் துரிதமாகச் சென்றார்.

'எல்லோரும் லோஷாவில் அணி திரள வேண்டும். அரசர் ஃபர்டினாண்டு தலைமையில் களம் நின்று அந்நகரை

முஸ்லிம்களிடமிருந்து கைப்பற்ற வேண்டும்'- இதுவே கிறிஸ்துவர்களின் திட்டமாக அமைந்திருந்து.

அதன் பேரில் மன்னர் அபுல் ஹஸன் கடலுக்கப்பால் மர்ரகஷிலிருந்து உதவி பெற முயற்சி செய்யலாயினார். ஆகவே, வட மேற்கு ஆப்பிரிக்க கடற்கரையோடு உந்தலுஸ் முஸ்லிம்களின் எல்லாத் தொடர்புகளையும் துண்டிக்க விரும்பினார். இஸபெல்லா, தமது இரு சிறந்த கடற்படைத் தளபதிகளின் கண்காணிப்பில் ஜபல் அல்தாரிக் வரை மத்திய தரைக் கடலில் தமது போர்க் கப்பல்களைச் சுற்றி வரும்படி செய்தார்.

அப்போது தலைநகர் கர்னாதாவிலிருந்து வந்த செய்தி அபுல் ஹஸனை இருதலைக் கொள்ளி எறும்பு போலாக்கியது-

''சுல்தானா ஆயிஷா-வும் இளவரசர் அபூ அப்துல்லாஹ் முஹம்மதும் சிறையிலிருந்து தப்பி விட்டனர். மன்னருக்கு எதிராக இளவரசரைக் கலகம் செய்யும்படி அரசியார் செய்து விட்டார். இலஞ்சங்கள் மூலம் கோட்டைக் காவல் படையின் ஒரு பிரிவினரைத் தங்கள் சார்பில் இழுத்துக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் அபூ அப்துல்லாஹ்வை அரசராக ஏற்றிருக்கிறார்கள்.''

'சுல்தானா ஆயிஷா-வுக்குப் பிறந்த மைந்தன் வேறு எவ்வாறு இருப்பான்? பொறாமையில் பிறந்து பொறாமையில் வளர்ந்தவன்!''-

அரசர் அபுல் ஹஸன் மனதில் எண்ணங்கள் இழைந்தோடின.

அவரது முதல் மனைவியார் தான் சுல்தானா ஆயிஷா. அவரது அருமந்தன்ன புதல்வர் தான் அபூ அப்துல்லாஹ் முஹம்மத்., போஅப்தில் எனக் கிறிஸ்துவர்களால் அழைக்கப்பட்ட அதே அபூ அப்துல்லாஹ் தான்!

மன்னர் அபுல் ஹஸன் இரண்டாந்தாரமாக மார்த்தாஸ் கவர்னரின் புதல்வியார் இஸாபெல்லாதெ ஸோலிஸ் என்பவரை மணந்திருந்தார். அவரது வாழ்வில் விடிவெள்ளியாக விளங்கிய புதிய அரசியாரை முஸ்லிம் குடிமக்கள் அனைவரும் பிரியமுடன் ஜுஹ்ரா (வெள்ளிக் கிரகம்) என்றே அழைத்து வந்தனர். அவர் மீதும் அவரது குழந்தைகள் மீதும் அரசருக்கு மிகவும் நேயமிருந்தது.

அதைக் கண்டு பொறுக்காது உள்ளூர மனம் பொருமிப் புகைந்து வந்த சுல்தானா ஆயிஷா மன்னருக்கு எதிராக அவ்வப்போது பல சதிகள் செய்து வந்தார்.

அதனால் அவரையும் அவரது புதல்வரையும் சிறை வைத்தார் அபுல் ஹஸன்.

இப்போது அவர்கள் தப்பி விட்டனர்!

வியப்பை விட வேதனை அதிகமாயிற்று, சுல்தானுக்கு. எவ்வளவு இக்கட்டான நிலை அவருக்கு, இப்போது?

'இங்கே முஸ்லிம் பேரரசை நிலைகுலையச் செய்ய முனைந்து நிற்கின்றனர். அங்கே கர்னாதாவில் நம்முடைய சிம்மாதனத்தையே அபகரித்துக் கொள்ள முயற்சி! இனி?'-

அபுல் ஹஸன் கர்னாதா விரைந்தார்.

தந்தையும் தனயனும் களத்தில் எதிரெதிராக நின்று சண்டையிட்டனர். இருதரப்பிலும் ஏராளமான பொருட் சேதம்,.உயிர் நாசம்!

காஸ்தல்லியர் திரண்டு வந்து லோஷாவை முற்றுகையிட்டிருந்த செய்தி கிட்ட, தென் மேற்கே கடிது செல்ல விரும்பினார் அபுல் ஹஸன்.

ஒருவாறாகத் தமது தகப்பனாருடன் போர் நிறுத்தம் செய்ய இசைந்தார், போஅப்தில், அல்லது, அவருள்ளத்தில் வேறென்ன திட்டமோ?

2. மெழுகுப் பொம்மை

அடுத்தடுத்து நின்ற குன்றுகளிடையே ஆழமான கணவாய்கள்.

சமவெளியிலோ ஆங்காங்கே குறுக்குமறுக்குமாக பல சிற்றோடைகளும் கால்வாய்களும் ஓடிக் கொண்டிருந்தன.

அதனால் அப்பிரதேசத்தின் பல்வேறு பகுதிகள் ஒன்றுக்கொன்று இலகுவாகத் தொடர்புக் கொள்ள முடியாத வகையில் இருந்தன.

அந்த நெளிவு சுழிவுகள் எல்லாம் முஸ்லிம்களுக்கு நன்கு பழக்கமானவை. ஆனால் கிறிஸ்துவ துருப்புகளுக்கோ விருப்பம் போல இயங்க முடியாத நிலை.

இருந்தும், அரசர் பெ`ர்டினாண்டு தலைமையில் அவை ஸிஞ் சீல் ஆற்றைக் கடந்து வந்து லோஷாவைத் தீவிரமாக முற்றுகையிட்டு நின்றன.

அந்நகரிலிருந்த முஸ்லிம்கள் தலைநகரிலிருந்து சுல்தான் அபுல் ஹஸன் படைகளுடன் வருவதை எதிர் நோக்கியிருந்தனர்.

ஒரு நாள் லோஷாவின் பிரதானக் கோட்டை வாயில் திறந்தது.

அலீ அதாரின் தலைமையில் முஸ்லிம் புரவி வீரர்கள் எதிரி முகாம்களை நோக்கிப் பாய்ந்து சென்றனர்.

''நம்மை முற்றுகையிட்டு நிற்கும் பகைவர்களை நிலைகுலையச் செய்வோம், வாருங்கள்!'' என்ற கட்டளையை ஏற்று அவர்கள் தங்கள் குதிரைகளை முடுக்கிச் சென்றனர்.

அவ்வாறு அவர்கள் வருவதைக் கண்ட கிறிஸ்துவ துருப்புகளும் அவர்களைச் சந்திக்கத் துள்ளி வந்தனர்.

திடீரென அலீ அதார் தமது வீரர்களுடன் பின் வாங்கிச் சென்றார்.

தங்களுடைய படைப் பெருக்கத்தைக் கண்டு தான் முஸ்லிம்கள் பின்னடைவதாக எண்ணிய கிறிஸ்துவர்கள் அவர்களைச் சுற்றி வளைத்து வெற்றி காணும் ஆர்வமுடன்

தொடர்ந்து வந்தனர். தொடர்ந்து வந்து கொண்டே இருந்தனர்.

கோட்டையை அவர்கள் நெருங்கி வந்த போது, அங்கே கிறிஸ்துவப் பாசறையில் முஸ்லிம் புரவிப் படையொன்று திடீரெனப் பாய்ந்தது!

இரவிலே எதிரிக்குத் தெரியாமல் ஆற்றைக் கடந்து சென்று மரஞ்செடி கொடிகளுக்கிடையில் ஒளிந்திருந்தது அது.

கிறிஸ்துவ முகாமில் படை அரவமில்லாத நிலையில் மின்னல் எனப் புகுந்து அங்கிருந்த சிறு பீரங்கிகளைக் கைப்பற்றியது.

அதையறிந்த கிறிஸ்துவப் படைகள் தங்கள் படை முகாமை நோக்கி விரைந்தன.

அதே நேரம், அலீ அதாரும் சடாரெனத் தமது படையினரைத் திருப்பி கிறிஸ்துவர்களின் பின்னே செல்லலாயினார்.

அங்கேயிருந்த ஒரு குன்றின் உச்சியில் அவர் நமது வீரர்கள் அணி திரள நின்றார்.

திட்டமிட்டபடி எல்லாம் நடக்க, முஸ்லிம் படைகளின் இடையே கிறிஸ்துவத் துருப்புகள் அகப்பட்டுக் கொண்டன!

சுணங்காமல் முஸ்லிம்கள் இடுக்கித் தாக்குதலைத் துவங்கினர்.

தங்களைக் காப்பாற்றிக் கொள்ளும் பதைபதைப்பில் கிறிஸ்துவ வீரர்கள் சிதறியோடினர்.

அவர்களது தளர்ந்த உணர்ச்சிகளுக்கு மீண்டும் முறுக்கேற்றி, அவர்களது அணிகளிடையே ஒழுங்கேற்படுத்த முனைந்தார் அரசர் பெஃர்டினாண்டு. ஆனால் பலன் இல்லை.

அப்போது கிறிஸ்துவர்களின் முகாமிலே ஏற்பட்டிருந்த பீதியையும் குழப்பத்தையும் அலீ கவனித்தார். குன்றிலிருந்து தமது படையுடன் 'சரேலெனப்' பாய்ந்து வந்தார்.

'ஆபத்தான கட்டம். என்ன செய்வது?....ஆம், புதிய படைகள் வரும் வரை பொறுத்திருக்க வேண்டும். மீண்டும் கடுமையாக முற்றுகையிடுவோம்'-

சட்டென ஒரு முடிவுக்கு வந்து விட்டார் அரசர் பெஃர்டினாண்டு.

வந்த வழியே திரும்பி ஓடிக் கொண்டிருந்த படைகளினூடே சவாரி செய்தவராக அவர் தாமும் பின் வாங்கிச் செல்லலுற்றார்.

அதைக் கண்ட முஸ்லிம் வீரன் ஒருவன் அவரைத் தாக்கினான்.

அவன் மீது ஈட்டியைக் குறிவைத்து எறிந்து விட்ட நிலையில், அவரது குதிரை மீது மற்றொரு முஸ்லிம் வீரன் சுட்டான். மயிரிழையில் தப்பித்தார் மன்னர் பெஃர்டினாண்டு.

என்றாலும், அவர் மனங் குலையாமல் தம்முடைய படைகளை நடத்திச் சென்றார்.

அவரது உறுதி கண்ட முஸ்லிம்கள் அவரது படைகளின் பின்னால் மேலும் அழுத்திச் செல்லவில்லை.

பகைவர்களை அப்படியே பின்வாங்கிச் செல்ல விட்டனர் அவர்கள்.

மறுநாள்....

''டக், டக், டக், ட.க்!''-

குதிரைகளின் குளம்புகள் தரையில் பட்டுத் தெறிக்கும் ஓசை மெல்ல மெல்ல வளர்ந்து வந்தது.

ஆம், லோஷாவை நோக்கி வலிமையான படைகள் வந்து கொண்டிருந்தன.

'யார் படைகளாக இருக்கும்?''- என எண்ணிய கோட்டைக் காவல் வீரர்கள் அண்மையில் தெரிந்த அப்படைகளைக் கூர்ந்து நோக்கினர்.

அவர்கள் கண்களில் அச்சம் இல்லை; நம்பிக்கை படர்ந்தது.

சுல்தான் அபுல் ஹஸன் தமது படைகளுடன் துரித கதியில் வந்து கொண்டிருந்தார்.

கோட்டையை வந்தடைந்த போது அதன் மீது எதிரி முற்றுகை நீங்கியிருப்பதைக் கண்டார்.

'இதற்காகவா இவ்வளவு விரைந்து வந்தோம்??''-

சுல்தான் உள்ளத்தில் சிந்தனை ஓடியது.

அலி அதாரின் மீது கேள்விக்குரிய பார்வையைச் செலுத்தினார்.

அவரோ நடந்ததை எடுத்துரைத்து மேலும் கூறினார்: ''சுல்தான் அவர்கள் மட்டும் சற்று முன்னே வந்திருந்தால் நம் எதிரிகளில் ஒருவர் கூட மிஞ்சி இருக்க முடியாது''

''என்ன கைசேதம், தப்பி விட்டார்களே!'' என்றார் சுல்தான்.

லோஷாவில் கொஞ்சமும் தாமதிக்க விரும்பவில்லை சுல்தான் அபுல் ஹஸன். உடனடியாகவே தமது படைகளை அழைத்துக் கொண்டு அங்கிருந்து விரைந்தார். அரசர் பெர்டினாண்டு சென்ற திசையிலே இருபது கல் தொலைவுக்கப்பால் தியோ பிரியோவரை புயல் வேகத்தில் சென்றார். ஆனால் கிறிஸ்துவர்களின் சுவடே தென்படவில்லை!

அந்நிலையில் அவர் சினதெ என்ற ஊரைக் கைப்பற்றினார்.

அவர் மைந்தரோ மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிக் கொண்ட வேதாளமாக அல்ஹம்ரா கோட்டையைத் தமது வசமாக்கினார். கர்னாதா அரசு முழுவதும் ஆட்சி அதிகாரம் பெற்றார்.

அதன் பேரில் சுல்தான் அபுல் ஹஸன் மாலகா சென்றார். அங்கே அவரது மைந்தரின் பெயரே அவருடைய தம்பியாருக்கும்; அபூ அப்துல்லாஹ் முஹம்மத்! ஆனால் அழகும் தீரமும் மிக்க அன்னாரை மக்கள் அல்ஜஹ்ல் என்று அழைத்து வந்தனர். அவரது ஆளுகையின் கீழ் இப்போது வாதீ அஷ், பஸ்தா ஆகிய ஒரு சில இடங்களே இருந்தன.

லோஷாவில் தங்கள் துருப்புகளுக்கு ஏற்பட்ட தடங்கலுக்குப் பழி வாங்க பெர்டினாண்டு, இஸபெல்லா இருவரும் துடித்தனர். எதிர்பாராத வகையில் கிறிஸ்துவர்களுக்கு முஸ்லிம்கள் பெரும் சேதத்தையும் நஷ்டத்தையும் விளைவித்து விட்டதை அவர்களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

அதை ஈடுகட்ட பெருமளவில் தீவிர நடவடிக்கை எடுக்கலாயினர். அந்த கிறிஸ்துவ அரச தம்பதிகள்.

அதற்கிடையில்-

ஜய்யானுக்கு வடமேற்கே, எல்லையிலிருந்த நகரதிகாரி யிடம் யுவான் தெகார்ரல் என்ற சாதாரண கிறிஸ்துவ படை வீரன் பிடிபட்டான். பொய்க் கதைகள் கூறி கர்னாதா சுல்தான் போஅப்திலிடமிருந்து அநேக கிறிஸ்துவ கைதிகளையும் பணத்தையும் பெற்றுக் கொண்டவனாக ஓடி வந்தவன் அவன்.

அதையறிந்த பெர்டினாண்டு, இஸபெல்லா அவ்வீரன் பெற்றிருந்த பணத்தையெல்லாம் போஅப்திலுக்குத் திருப்பித் தருவதுடன், அவனால் விடுவிக்கப்பட்டு விட்ட கிறிஸ்தவ வீரர்களுக்கு அவர் கேட்கும் தொகையையும் கொடுக்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்தனர்.

அதே நேரம், போஅப்திலுக்கு எதிர் தரப்பில் நின்ற அபுல் ஹஸன், அல்ஜஹ்லுக்கு மேலும் தொல்லைகள் தரும் வகையில் அவர்கள் மாலகா மாகாணத்திற்குள் தங்களது சிறந்த படைகளை அனுப்பி வந்தனர்.

சென்ற இடங்களில் எல்லாம் வயல்களில் நின்ற பயிர்களை எரித்தனர். ஜைத்தூன் மரங்களையும் திராட்சைக் கொடிகளையும் வெட்டித் தள்ளினர். செழிக்கும் கிராமங்களில் நிர்த்தூளி பண்ணினர். கால் நடைகளைக் கடத்திச் சென்றனர். திக்கற்ற மனிதரைக் கொன்று குவித்தனர். எங்கும் இடிபாடுகள்- பிணங்கள்- புகை மண்டலம்!

அதைக் கேள்வியுற்று வெகுண்டெழுந்தார் அல்ஜஹ்ல். தளபதி நயீம் ரிஸ்வானையும் தமக்குத் துணையாகக் கொண்டு, பொறுக்கி எடுக்கப்பட்ட வீரர்களுடன் வடக்கு நோக்கிச் சென்றார்.

அஷ்ஷர்கியா மலைப் பகுதிகளில் காஷ்தீலியரைத் தாக்கினார். முன்னர் கிறிஸ்துவ மன்னன் பேலயோ முஸ்லிம் படைகள் மீது நடத்திய நடவடிக்கைகள் நினைவுக்கு வந்தது போல, அல்ஜஹ்ல் தம் படைகளுக்கு உத்தரவிட்டார்:

''பெரும் நெருப்புக் கொள்ளிகளைக் கொளுத்துங்கள்! அவை பரப்பும் ஒளியிலே அங்குமிங்கும் நன்கு தேடுங்கள் ஒளிந்து கிடக்கும் எதிரிகளைக் கண்டு பிடியுங்கள்: கொல்லுங்கள்!''

அவ்வார்த்தைகளால் ஆவேசமுற்ற வீரர்கள் கிறிஸ்துவர்களுக்குப் படு சேதம் விளைவித்தனர். இரண்டு நாட்களில் எண்ணூறு கிறிஸ்துவர்கள் கொல்லப்பட்டனர்.

ஆயிரத்து இருநூறு பேர்கள் சிறைப்பட்டனர்.

''அல்ஜஹ்றல் வாழ்க!'' அல்ஜஹ்றல் வீரம் வாழ்க!'' கர்னாதா மக்கள் வாய்களிலும் அல்ஜஹ்றல் பெயர் அடிபட ஆரம்பித்து விட்டது.

அதைப் பொறாத போஅப்தில் தமது சிறிய தந்தையாரைப் போலவே தாமும் சாதனை செய்து கர்னாதா மக்களின் மனங்களைத் தம்பால் முற்றிலும் மாற்றி விட வேண்டுமென ஆசைப்பட்டார்.

குளிர் காலத்தையும் பொருட்படுத்தாது பத்தாயிரம் துருப்பு களுடன் கர்னாதாவிலிருந்து புறப்பட்டார். லோஷாவில் புகழீட்டிய வீரர் அலீ அதாரையும் தம்முடன் அழைத்துக் கொண்டார் அவர்.

விரைந்து சென்று லூஸனாவைத் தாக்கினார்.

அதை விடுவிக்க பெரும்படைகளுடன் காப்ரா மகாப் பிரபு வந்தார். அவர் படை நடத்தி வந்த பாதை நெடுகில் இருமருங்கிலும் ஆறு மைல் தொலைவரை அவரது வீரர்கள் இளம் பயிர்களை நாசம் செய்தனர். வீடுகளையும் களஞ்சியங்களையும் ஆலைகளையும், அழித்தனர். திராட்சை, ஜைத்தூன் தோட்டங்களை- ஆரஞ்சு, பாதாம், முசுக்கட்டை மரங்களை யெல்லாம் வெட்டிச் சாய்த்தனர்.

அவர்கள் ஒருபுறம்-லூஸானா நகர்ப்படை ஒருபுறம்!

அவ்விரு படைகளுக்கு மிடையே சிக்கிக் கொண்ட போஅப்தில் படுதோல்வியுற்றார். கிறிஸ்துவர்களிடம் சிறைப் பட்டார்.

'சே என்ன அவமானம்! இப்னுஹம்ராக்களில் இது வரை எவருமே கிறிஸ்துவர்களிடம் சிறைப்பட்டதில்லை. சண்டை போடத் தெரியாதவனுக்கெல்லாம் வெற்றிப் பிரதாப ஆசை ஏன்- இவ்வாறு நினைத்த முதியவர் அபுல் ஹஸன் சிந்தனை அல்ஜஹ்றல் பால் ஓடியது.

விரைவில், தம் தம்பியார் சார்பில் பட்டம் துறந்து, இல்லோரா சென்றார், அம் மன்னர்.

ஆனால் பொறாமைக்கார சுல்தானா ஆயிஷா தமது மகனுக்காகச் சிறுமையைத் தாங்க முன் வந்தார்.

பெர்டினாண்டு மன்னரிடம் தூது அனுப்பி, போஅப்திலின் விடுதலைக்கு வழி காண முற்பட்டார்.

ஆண்டு தோறும் திரை கட்டி வருவதுடன், காஷ்தீலிய மேலதிகாரத்தின் கீழ் போஅப்தில் குறு நிலச் சிற்றரசராக இருந்து வர உடன்பாடு செய்து கொள்வதற்கு அவர் இசைத்தார்.

'கர்னாதா அரசிலே வேற்றுமைகளை வளர்த்து விரிவாக்க வேண்டும். அந்நாட்டின் இராணுவ வலிமையைப் பிரிக்க வேண்டும். இதற்கு போ அப்தில் நல்ல கருவியாகப் பயன்பட முடியும்' என்று எண்ணினார் அரசர் பெர்டினாண்டு.

உண்மையிலே, பலவீனமான நெஞ்சமும் சலன புத்தியும் கொண்ட போஅப்திலை மன்னர் தமது அரண்மனையில் தங்கி யிருந்த போது அவரை மெல்ல மெல்லத் தமது விருப்பம் போல் அடக்கக்கூடிய மெழுகுப் பொம்மையாக மாற்றி விட்டார். விவேகமும் செயலாற்றலு மிக்ககாஷ்தீலிய அரசர்.

தங்கள் சொற்படி யெல்லாம் ஆடக்கூடிய அளவுக்கு அவர் மீது தாங்கள் ஆதிக்கம் பெற்றுவிட்ட நிலையில், அவருக்கு ஏராளமான நிதியும், உதவிக்கு ஆட்களும் தந்து கர்னாதா அனுப்பி வைத்தனர். பெர்டினாண்டும் அவரது துணைவியாரும் தம்முடன் வந்த காஷ்தீலியர்கள், மற்றும் அல்ஹம்ராவின் கருவூலங்களிலிருந்து இலஞ்சம் ஊட்டப்பட்ட கர்னாதா மக்களில் ஒரு பகுதியினரின் துணையுடன் தர்ரோஹ் ஆற்றிற்கு இப்பாலிருந்த அல்பேய்ஸினைக் கைப்பற்றினார் போஅப்தில்.

அப்பிரதேசத்தை அல்ஹம்ரா வுடன் இணைந்து நின்றது ஒரு பாலம்.

பாலத்திற்கு ஒரு புறம் அல்ஜஹ்ல் ஆட்சி, மறுபுறம் போஅப்தில் அரசாங்கம்!

மீண்டும் உள்நாட்டுக் குழப்பம் வெடித்துப் பரவியது!

நாட்டிலே இருந்து வந்த கண்ணியமானவர்கள், உயர் பதவியில் இருந்தவர்கள், மேன்மக்கள் அனைவருக்குமே போஅப்தில் கலகம் செய்யத் துவங்கியது பிடிக்கவில்லை.

'அவர் ஒரு பச்சோந்தி! கிறிஸ்துவ மன்னரின் அடிமை' என்று கருதினர்.

அபுல் ஹஸனுக்கோ வயது அதிகமாகி விட்டது. அரச கடமைகளைச் சரிவரக் கவனிக்க முடியாத தள்ளாத நிலை;

ஆகவே, அவரது இளவல் அல்ஜஹ்லின் தலைமையை அவர்கள் அனைவரும் எதிர்நோக்கினர்.

நாட்டின் நிலையை நன்குணர்ந்த அல்ஜஹ்ல் தமது அண்ணன் மகனிடம் தூதுவர் ஒருவரை அனுப்பினார்.

''ஏற்கெனவே நமது அரசு வெகுவாகக் குறுகிவிட்து. எஞ்சி நிற்பது கர்னாதாவும் அதன் சுற்றுப் பிரதேசங்களும் தான். ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம். நம் நாடே இரண்டு பட்டிருந்தால், எதிரிக்குச் சொல்ல வேண்டியதில்லை! நமக்குள் வேற்றுமை வேண்டாம். நாம் ஒன்று சேர்வோம். நமக்குப் பொதுவான எதிரியை ஒன்றிணைந்து எதிர்த்து நிற்போம்'' என்று செய்தி விடுத்தார்.

அதையொட்டி, அவர் தூதுவரும் போஅப்திலிடம் எவ்வளவோ எடுத்துக் கூறினார்.

ஆனால் தன்னலமிகுந்த- திறமையற்ற அந்த வாலிபர் தமது சிறிய தந்தையின் சமாதானக் கோரிக்கையைத் துச்சமாகத் தள்ளிவிட்டார்.

'அடுத்து?'-

தீவிரமாக உள் நாட்டுப் போர் தொடர்ந்து நடந்தது.

அல்ஹம்ராவிலிருந்து கலத்ரபா வீரர்கள் பலரை வெட்டி வீழ்த்தி- அவர்களது இரத்தம் சொட்டும் தலைகளைத் தம்முடைய புரவியின் சேண முகப்பில் தொங்க விட்டவராக கர்னாதா வில் நுழைந்தார் அல்ஜஹ்ல்.

அவர் வருகை அறிந்த போஅப்தில் இஷ்பீலியா சென்று பெர்டினாண்டிடம் தஞ்சம் அடைந்தார்.

விரைவில் அவர், அல்ஜஹ்லை எதிர்த்து நின்று போராடு வதற்கான உதவியை கிறிஸ்துவ அரசரிடமிருந்து பெற்றவராக கர்னாதா திரும்பி வந்தார். ஏராளமான கிறிஸ்துவப் படை வீரர்களும் அவர்களுடன் வந்தனர்.

ஒவ்வொரு குன்றின் உச்சியிலும் ஒரு கோட்டை. ஒவ்வொரு

கோட்டையிலும் போரில் சிதைந்து விழும் இடிகாடுகளில் புதைந்து அளவுக்குத் துணிந்து நின்ற வீரர்கள், அவ்வாறு முற்றுகையிடப் படும் கோட்டைகளிலிருக்கும் முதியவர்களும் குழந்தைகளும் முன்னதாகவே கர்னாதா அனுப்பப்பட்டு விட்டனர்.

அல்ஜஹ்லின் கழுகுக் கண்கள் கிறிஸ்துவப் படையினரின் ஒவ்வொரு பலவீனத்தையும் ஊடுருவிக் கண்டன. அவர்கள் கொஞ்சமும் எதிர்பாராத இடங்களில் திடீர்த் திடீரென அவர்கள் படைக்கு முன் எதிர்ப்பட்டு வந்தார்.அவர்களுக்கு உணவுகளும் மற்றும் பண்டங்களும், தளவாடங்கள் கொண்டு வரும் கோவேறுக் கழுதைக் கூட்டங்களைத் தடுத்து நிறுத்தி வந்தார். கிறிஸ்துவப் படைகள் மீது மின்னல் தாக்குதல்கள் நடத்தினார். எல்லைகளில் அவர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் எடுத்து வந்தார்.

இருந்தும், இல்லோரா வீழ்ந்தது. அடுத்து, கஸ்ர், போனலா, ரூண்டா, செட்டனில், மார்பெல்லா, கர்ட்டமா, கோயின் மற்றும் மோஸ்லின் ஆகிய இடங்கள் கிறிஸ்துவர்கள் வசமாயின. மொத்தம் பதின் மூன்று நகரங்கள் வீழ்ந்த பிறகு, அவர்கள் லோஷாவைக் கடும் முற்றுகையிட்டுக் கைப்பற்றினர்.

இப்போது கர்னாதாவிலிருந்து மேற்கே அறுபது கல் தொலைவிலிருந்த பிரதேசங்கள் வரை தங்கள் வெற்றி எல்லையை நீடித்தனர்.

லோஷாவில் கிறிஸ்துவர்களுடன் அங்கு ஏற்கெனவே வசித்து வந்த முஸ்லிம்களும் இருந்தனர். அந் நகரை நல்லபடி அரண் செய்தனர், வெற்றி கண்ட கிறிஸ்துவர்கள்.

அடுத்து, அவர்கள் இலக்கு?

3. தலைநகரில் எதிரொலி

ஸ்பானிய மன்றம் குழுமியிருந்தது. சிற்றரசர்கள், மத குருக்கள், பிரபுக்கள் புடை சூழ மன்னர் பெர்டினாண்டு வீற்றிருந்தார்.

''லோஷாவைக் கைப்பற்றி இழந்த கண்ணியத்தை நாம் மீட்டுக் கொண்டோம். நம்முடைய நாட்டில் வந்து நிலைத்து விட்ட மூர் வல்லூறின் கண் போன்ற இல்லோராவைப் பறித்து விட்டோம். கர்னாதாவின் கேடயம் போலான மோஸ்லினையும், பிடுங்கியுள்ளோம். உண்மையில், நாம் அடிக்கடி சொல்லி வந்தது போல, கர்னாதா ஒரு மாதுளம் பழம் போல, அதிலிருந்து ஒவ்வொரு வித்தாக எடுத்து முடித்து விட வேண்டும். அது வரை நாம் ஓய்ந்திருக்கலாகாது.''

''ஆம், அது முற்றிலும் உண்மையா?''

''இன்னும் எஞ்சியுள்ள நகர்களையும் நாம் கைப்பற்ற வேண்டும்.''

''மாலகா அவர்களின் சக்தி வாய்ந்த துறைமுகம் என்பது உங்களுக்குத் தெரியும். வளமுடன் வலிமை மிக்க நகரம் அதை நாம் கைப்பற்றினால், கர்னாதாவின் சிறகொன்றையே சிதைத் தெறிந்தது போலாகி விடும்!''

''அதை நாம் வசப்படுத்த வேண்டியது தான்.''

''ஆனால் அதற்கு முன்னால் வெல்ஸ் மாலகாவை நாம் கைப்பற்றுவோம்.''

-அவ்வாறு பலவாறான கருத்துக்கள் பரிமாறப் பட்டபின், அவை ஒரு முடிவுக்கு வந்தது.

அம்முடிவு ஒற்றர்கள் மூலம் அல்ஜஹ்லுக்கு எட்டியது.

தலைநகரில் தாமில்லாமல் நெருக்கடி ஏற்படக் கூடிய நிலை. இருந்தும், இரவோடிரவாகக் கிறிஸ்துவ முகாம்களைத் திடீரெனத் தாக்கினார் அவர்.

ஆனால் காதீஸ் மகா பிரபுவால் பின்னடையும் படி செய்யப்பட்டார்.

எதையும் சாதிக்க முடியாமல் தலைநகர் திரும்பினார் அல்ஜஹ்ல்.

ஆனால் கர்னாதா மக்கள் தங்கள் மூதாதையரான கூஃபாவாசிகளைப் போல் திடீரென மாறிவிட்டனர். போஅப்திலுக்குத் தங்கள் விசுவாசத்தை மாற்றிக் கொண்டவர்களாக, கோட்டை வாயில்களை அல்ஜஹ்லுக்குத் திறக்க மறுத்து விட்டனர்.

ஆக, வாதீஅஷ், அல்மரிய்யா, பய்யாஸா மற்றும் ஒரு சில முக்கிய ஊர்கள்தான் அல்ஜஹ்ல் வசம் எஞ்சி நின்றன.

காஷ்தீலியர்களோ தங்கள் அரசரின் சார்பில் உறுதியாக நின்றனர். அதனால் பெர்டினாண்டு வெல்ஸ் மாலகாவை உத்வேகமுடன் முற்றுகையிட்டு நின்றார்.

நகருக்கருகில் நின்ற குன்று ஒன்றில் கிறிஸ்துவ வீரர்கள் தங்கள் படை நிலையைப் பலப்படுத்திக் கொண்டிருந்த போது அவர்கள் மீது முஸ்லிம்கள் திடீரெனப் பாய்ந்தனர்.

குழப்பமுடன் கிறிஸ்துவர்கள் பின் வாங்கத் துவங்கினர்.

அதனால் ஏற்பட்ட குழப்பமும் சந்தடியும் அப்போது தான் மதிய உணவை முடித்து விட்டு சற்றே களைப்பாறிக் கொண்டிருந்த அரசர் பெர்டினாண்டின் காதுகளில் விழுந்தன.

வெறும் உடல் கவசம் மட்டுமே அணிந்திருந்த நிலையில் அவர் கூடாரத்தை விட்டு வெளியே வந்து தம்முடைய புரவியின் மீது தாவியேறினார். முஸ்லிம்கள் அணிகளினூடே பாய்ந்து சென்றார்.

சிதறியோடிய தம்முடைய படை வீரர்களை ஒன்று திரட்ட முயன்றார்.

அந்நிலையில், தம்முன் எதிர்ப்பட்ட முஸ்லிம் வீரன் ஒருவன் மீது தமது ஈட்டியைக் குறி வைத்து எறிந்தார்,. அடுத்து சேண முகப்பில் தொங்கும் உறையிலிருந்து வாளை உருவ முனைந்தார். ஏனோ வாளை அவரால் உருவ முடியவில்லை!

ஒரு கணம் தாமதித்தால் அவர் கொல்லப்படலாம்! அல்லது, சிறைப்படலாம்!

அவரது இக்கட்டான நிலையைக் கண்ணுற்ற காதீஸ் மகாப்

பிரபுவும் காசிலோஸோ தெலாவேகாவும் தங்களுடைய வீரர்களுடன் மன்னரை நோக்கி விரைந்தனர். அவரைச் சூழ்ந்திருந்த முஸ்லிம்களுடன் துரித கதியில் சண்டையிட்டு அவர்களைப் பின்னடையச் செய்தனர்!

மன்னர் பெர்டினாண்டு மயிரிழையில் உயிர் தப்பினார். ஆனால் அவருடைய முற்றிகையிலிருந்து வெல்ஸ் மாலகா தப்ப முடியவில்லை. கிறிஸ்துவர்களிடம் சரணடைந்தது அந்நகரம். அதற்கும் மாலகாவுக்கும் இடையே உள்ள இருபது சிற்றூர்களும் விரைவில் பணிந்தன.

அடுத்து-

கடலின் ஒரு கரத்திலிருந்து மற்றொரு கரம் வரை மாலகாவைச் சூழ்ந்து வளைத்தனர். கிறிஸ்துவர்கள் அப்பெருநகரைச் சூழ்ந்திருந்த நிபல்ரய்யோ மலைத் தொடரைச் சார்ந்த குன்றுகளிலும் சமவெளியிலும் அவர்கள் கூடாரங்கள் அடித்து முகாமிட்டனர்.

பாசறையின் நடுவே அமைக்கப்பட்ட அழகிய கூடாரத்தின் உச்சியிலே காஷ்தீலிய அராகூன் அரசுகளின் கொடிகள் அருகருகே பறந்து கொண்டிருந்தன.

முஸ்லிம்களின் பீரங்கிகளுக்கு இலக்குக்கு இலகுவாகும் அக்கூடாரத்தைச் சீக்கிரமே வேறிடத்திற்கு மாற்றிக் கொண்டார் பெர்டினாண்டு.

அவர் நடத்திக் கொண்டிருந்த முற்றுகையிலிருந்து எவ்வகையிலும் மாலகாவை விடுவிக்க வேண்டுமென்று துணிந்து செயலாற்ற முனைந்தார் அல்ஜஹ்ல்.

ஆனால் அவர் மீது அளவு மீறிய பொறாமை கொண்டிருந்த போஅப்திலோ தமது இதயத்து மெல்லிய உணர்ச்சிகளைக் கல்லாக்கியவராக மாலகாவில் நடந்த சோக நிகழ்ச்சிகளைப் பற்றிக் கிஞ்சிற்றும் கவலைப்படவே இல்லை.

மந்திரி, பிரதானிகள் எடுத்துக் கூறிய நியாய வாதங்களையும் செவி மடுக்கவில்லை அவர்.

மனமிளகாத நிலையில், மாலகாவுக்கு உணவுப் பொருள்கள்

ஏற்றி வந்து கொண்டிருந்த கோவேறு கழுதைகள், குதிரைகளின் கூட்டங்களை அவர் தமது வீரர்களுடன் சென்று இடைமறித்து அவை அங்கு மேலும் வராமல் அதற்கான மார்க்கங்களையும் துண்டித்தார்.

அதே நேரம், உயர்ந்த பட்டாடைகள், கீழை நாட்டு வாசனைத் திரவியங்கள், நேர்த்தியான அலங்கரிக்கப்பட்ட அரபிக் குதிரைகளை அரசர் பெர்டினாண்டுக்கு அகமகிழ்வுடன் அன்பளிப்பாக அனுப்பி வைத்தார், போஅப்தில்.

அவற்றைக் கொண்டு சென்ற தூதுவர்கள் வசம் கிறிஸ்துவ அரசருக்கு அவர் ஒரு செய்தியும் அனுப்பினார்-

''அல் ஜஹ்ல் மீது தாங்கள் கண்டு வரும் வெற்றிக்கு எனது பாராட்டுக்கள்! பெருமதிப்புக்குரிய உங்களது நட்பு எனக்கு தொடர்ந்து இருந்து வர வேண்டுமென யாசிக்கிறேன்''.

நாட்டின் நலத்தைக் கருதாமல், தன்னுடைய நலத்தையே பெரிதெனக் கொண்டார் போஅப்தில். அரசு குலைந்து போவதைத் தவிர்ப்பதற்கு தமது படைகளைப் பயன்படுத்தாமல், அதைச் சிதைத்து வந்தவர்களின் நட்பையே அவர் நாடி நின்றார்.

ஆம், கர்னாதா மக்கள் அவரை 'அஸ் ஸகீர்' என்று தானே அழைத்தனர்? வயதால் மட்டுமே அவர் 'சின்ன' அரசராக இருக்க வில்லை. எல்லாவற்றிலுமே சின்னவராக இருந்தார். அதை விட துரதிர்ஷ்டம் வேண்டுமா? அந்த பரிதாப நிலைக்குரியவர் என்பதால் தானோ அவரை கிறிஸ்துவர்கள் 'அல் ஜுகைபீ' என்று அழைத்தனர்?

அவர்களது அரசர், போஅப்திலின் போக்கை ஊக்கப்படுத்தும் முறையில் அவரது குடிமக்களுக்கு எவ்வித இடைஞ்சலும் இல்லாமல் விவசாயம் செய்யவும் ஸ்பானியருடன் போர்த் தளவாடங்கள் தவிர மற்ற பொருள்களில் வணிகம் செய்து வரவும் அனுமதி வழங்கினார்.

அந்நேரம், கிறிஸ்துவ அணிகளை ஊடுருவ வாதீ அஷ் முஸ்லிம்கள் முயன்றனர்.

ஒரு சிலர் முற்றுகையிடப் பட்டிருந்த நகருக்குள் நுழைநது விட்டனர். ஒரு சிலர் அவ்வாறு செய்ய முயன்ற போது கிறிஸ்துவர் களின் வாள்வீச்சு, ஈட்டி எய்தலால் கொல்லப்பட்டனர். ஒரேயொரு

முஸ்லிம் வீரன் மட்டும் கிறிஸ்துவர்களுக்கு எவ்வித எதிர்ப்பும் காட்டவில்லை.

தன்னைச் சிறைப்படுத்தியவர்களிடம் கூறினான்:

''என்னை உங்கள் அரசர் சமூகம் கொண்டு செல்லுங்கள்! சில முக்கியத் தகவல்களைச் சொல்ல வேண்டும்.''

சற்றைப் பொழுதில் அவன் அலங்காரமான தொரு கூடாரத்துக்குக் கொண்டு வரப்பட்டான்.

அங்கே-

பட்டும் பட்டாடையும் அணிந்து கம்பீரமான பாவனை களுடன் இருவர் காஷ்தீலிய மொழியில் பேசிக் கொண்டிருந்தனர்.

அவர்களைக் கண்டதும் தனது இடையிலிருந்த குறுவாளை உருவினான், அந்த முஸ்லிம் வீரன், எதிரே அமர்ந்திருந்த ஆடவர் மீது பாய்ந்து, அவர் தலை மீது தனது குறுவாளை ஓங்கி வீசினான்.

''ஹா'' என்ற அலறல்!

''தொலைந்தான், நம் வைரி!'' என்று கூவினான் முஸ்லிம் வீரன். பிறகு அவன் மின்னல் வேகத்தில் திரும்பி அருகிலிருநத மாது மீது தனது வாளை வீசினான்.

அவளது ஆடையின் பலத்த பின்னல் வேலைகளில் வாள்முனை வழுக்கித் திரும்பியது. ஆகவே, மீண்டும் வாளை ஓங்கினான்.

அதற்குள் கிறிஸ்துவ வீரர்கள் ஓடி வந்தனர். ஒரு முகமாக அவர்கள் முஸ்லிம் வீரனைத் தாக்க, அவனுடம்பில் நூறு காயங்கள்!

சின்னாபின்னமாகச் சிதைந்த அவனது சடலம் எறிவிசையால் நகரினுள்ளே எறியப்பட்டது.

'இது மற்றவர்களுக்கு ஒரு படிப்பினையாக இருக்கும்! இனி அவர்கள் நம் முகாமில் நுழையத் துணிய மா. டார்கள்!''

'என்ன துணிச்சல் அவனுக்கு? முட்டாள்! இறந்தது தான் மிச்சம்! அவன் எண்ணி வந்ததை அரசியார் மண்ணாக்கி விட்டார்!''

''என்ன! அரசியார் மண்ணாக்கி விட்டாரா?'

''ஆம்! அவனை அரச கூடாரத்துக்குக் கொண்டு வந்த போது

மன்னர் பகலில் தூங்கிக் கொண்டிருந்தார். அரசியார் மனதுக்கு என்ன தோன்றியதோ? கைதியை மற்றொரு கூடாரத்துக்கு கொண்டு செல்ல உத்தரவிட்டார். அங்கே மேயோ சீமாட்டி டோனே பயிட்ரிஸ் தெபோதில்லா போர்த்துக்கீசிய பிரபு டான் அல்வாரோவுடன் பேசிக் கொண்டிருந்தார். மடையன்! அந்த பிரபுவை அவன் மன்னர் என்று நினைத்து அவசரப்பட்டு விட்டான். நாமும் பழிக்குப் பழி வாங்கி விட்டோம்!''

இவ்வாறு கிறிஸ்துவ வீரர்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டனர்.

அதே நேரம், முஸ்லிம் வீரன் உடலைக் கண்டு கொதித்து எழுந்தனர், மாலகா மக்கள்.

அவர்களில் ஒரு சிலர் ஓடோடிச் சென்று நகரிலிருந்த கலீஷியப் பிரபு ஒருவரை சிதைத்து அவர் உடலை கழுதை மீது ஏற்றி அதை நகர் வழியாக விரட்டினர்.

''உங்களால் தான் முடியுமா? இதோ பாருங்கள்! உங்கள் வினைக்குக் கூலி'' என்று கூவினர்.

சற்றைப் பொழுதில் அக்கழுதை கிறிஸ்துவர் முகாமுக்கு ஓடி வந்தது. அதன் மீது கிடந்த சடலத்தின் கோலம் கிறிஸ்துவர்களின் உணர்ச்சியைக் கிளறி விட்டது.

அவர்கள் படைகளின் எண்ணிக்கை விரைவில் அறுபதினாயிரமாகப் பெருகி விட்டது.

தரையிலும் கோட்டை கொத்தளங்களிலும் கடலிலும் ஏக சமயத்தில் அவர்கள் முஸ்லிம்களுடன் பொருதி நின்றனர்.

ஒவ்வொரு முனையிலுமே மிகைத்து நின்ற அவர்களுடன் முஸ்லிம்கள் அடிக்கடி கோட்டையிலிருந்து வெளியேறி வந்து கொஞ்சமும் அஞ்சாமல் போரிட்டனர். இருந்தும், ஏதும் பயன் காணாத நிலையில், மீண்டும் மீண்டும் கோட்டைக்குள்ளேயே போய் இருக்கும் படி நேர்ந்தது.

அக்கோட்டையின் கோபுரம் ஒன்றைப் பிரதானக் கட்டத்துடன், நான்கு வளைவுகள் கூடிய பாலம் இணைந்து நின்றது.

கிறிஸ்துவர்கள் இருள் மறைவிலே சென்று அதன் கீழே சுரங்கம் வைத்துத் தீ வைத்தனர்.

பேரோசையுடன் சுரங்கம் வெடிக்க, பாலம் சிதிலமடைந்து, சூழ்வெளியெங்கும் சிதள்கள் சிதறித் தெறித்தன.

பீதியடைந்த முஸ்லிம்கள் சிதறியோடினர்.

சேதமடைந்த பாலத்தின் மீது ஒருவாறாகச் சென்று நகருக்குள் பின்னடைந்து சென்றனர்.

அவர்கள் கிறிஸ்துவர்கள் மீது பீரங்கி வெடி பிரயோகித்து வந்த கோபுரத்தைப் பகைவர்கள் கைப்பற்றினர்.

''நகரினுள் செல்லும் முக்கிய வழி நம் வசம்! இனி அந்த மார்க்க விரோதிகள் எங்ஙனம் தப்புவார்கள்? பார்ப்போம்!''- கிறிஸ்துவர்கள் பலர் இறுமாப்புடன் கூறினர்.

முற்றுகை ஆரம்பமாகி மூன்று மாதங்களாகி விட்டன. மாலகா மக்கள் சோர்வடையலாயினர்.

எதிரிக்குப் பணியாமல் உறுதியுடன் நின்ற காவல் படைகளைப் பற்றி முணு முணுக்கத் தொடங்கினர்.

அவ்வாறு சரணடைந்து வரும்படி ஏற்கெனவே கிறிஸ்து வர்கள் செய்தியனுப்பியதைக் கோட்டை காவல் அதிகாரிகள் ஏற்க மறுத்திருந்தனர்.

இப்போது அல்லல்படும் நகர மக்களே வலியுறுத்திய போது-

''நாங்கள் சரணடையத் தயார்! வழக்கமான தாராள நிபந்தனைகளை விரும்புகிறோம்!''

முஸ்லிம் தூதர் ஒருவர் அந்தச் செய்தியை ஏந்தியவராக கிறிஸ்துவர் முகாம் விரைந்தார்.

அவரை நேரில் பார்க்க மறுத்து விட்டார் பெர்டினாண்டு அரசர்.

மாறாக, லியோன் பிரபு மூலம் ஆணவமான செய்தி அனுப்பினார்-

''தாராளமான நிபந்தனைகளாம்! சரணடைந்து விடும்படி ஒன்றுக்கு இரண்டு முறை கேட்டோம்; மறுத்து விட்டனர். இப்போது தாராளமான நிபந்தனைகள் வேண்டுமாம்! அவற்றிற்கான காலம் பிந்தி விட்டது. நிபந்தனைகளைப் பற்றிக் கூறுவதற்கு

அவர்கள் யார்? வெற்றி கொள்வோர் கூறுவதைத் தான் அவர்கள் ஏற்க வேண்டும்! அதை நாம் உரிய நேரத்தில் கூறுவோம்!''

அச்செய்தியுடன் தங்கள் தூதுவர் வந்த பிறகு மாலகா முஸ்லிம் தலைவர்களிடையே கொந்தளிப்பான விவாதம் நடந்தது. மறுபடியும் கிறிஸ்துவர்களிடம் தூது அனுப்பினர் முஸ்லிம்கள். மீண்டும் பல தூதர்கள் கிறிஸ்துவர்களிடம் சென்று வந்தனர். முடிவாகச் சென்ற தூதுவர் எடுத்துச் சென்ற செய்தி-

''நீங்கள் விரும்புவது போல கோட்டை அரண்களும் நகரமும் உங்களிடம் ஒப்படைக்கிறோம். ஆனால் நகரவாசிகளுக்குத் தனி, நபர் பாதுகாப்பு- சுதந்திரம் அளிக்கப்பட வேண்டும்.

இவை மறுக்கப்பட்டால், இங்குச் சிறையில் உள்ள ஐயாயிரம், ஆறாயிரம் கிறிஸ்துவக் கைதிகளை நாங்கள் கொத்தளங்கள் மீது நிறுத்தி தூக்கிலிடுவோம். எங்கள் பெண்டு பிள்ளைகளையும், முதியவர்களையும் அரண்களில் வைத்து நகரைத் தீக்கிரையாக்கு வோம். உங்கள் அணிகளை நாங்கள் ஊடுருவுவோம். சண்டையில் வெற்றி காண்போம். இன்றேல், மாள்வோம்!''

முஸ்லிம் தூதுவர் கொண்டு வந்த ஓலையை நோட்டமிட்டார், அரசர் பெர்டினாண்டு. அவர் முகத்தில் எவ்வித சலனமும் இல்லை. வெகு அமைதியாகவே அவர் பதில் சொன்னார்:

ஒரு கிறிஸ்துவரின் முடியைக் கூட நீங்கள் மாற்ற முடியாது. உங்கள் நகரில் உள்ள ஆண், பெண், குழந்தைகள் அனைவரையுமே எம் வாளுக்கு இறையாக்குவோம்.''

நடப்பது நடக்கட்டும், என்று நகர் வாயிலைக் கிறிஸ்துவர் களுக்குத் திறந்து விடுவதைத் தவிர வேறு வழியில்லை, மாலகா வாசிகளுக்கு!

தெருக்கள் எல்லாம் மனிதச் சந்தடியின்றி வெறிச் சோடிக் கிடந்தன. பெரும்பாலான முஸ்லிம்கள் தங்கள் வீடுகளுக் குள்ளேயே அடைந்து கிடந்தனர்.

மதகுருக்கள் மற்றும் பரிவாரங்கள் புடை சூழ, படைவீரர்கள் அணி திரண்டு செல்ல, பெர்டினாண்டும் இஸபெல்லாவும் மாலகாவில் நுழைந்தனர்.

அதன் பிரதான தெருக்கள் வழியாக வெற்றிக் களிப்பிலே ஊர்வலமாகச் சென்று பரிசுத்த மேரி தேவாலயம் அடைந்தனர்.

பொதுப் பிரார்த்தனை நடந்தது.

அப்பால் 'அல் கஸபா'- கோட்டையின் முற்ற வெளியில் அரச தம்பதிகள் வீற்றிருக்க, அங்கே நகர மக்கள் வந்து கூடும்படிக் கட்டளையிடப் பட்டது.

அதன் பேரில் அப் பெரிய முற்ற வெளியில் திரண்டிருந்த முஸ்லிம்கள் மீது மன்னர் பெர்டினாண்டின் உத்திரவு படிக்கப் பட்டது.

இனி அவர்கள் கிறிஸ்துவ மன்னரின் விருப்பம் போல் நடத்தப் படுவதற்கான முன்னோடி அது!

அவர்களில் மூன்றில் ஒரு பங்குப் பேர்கள் கிறிஸ்துவக் கைதிகளுக்காகப் பரிவர்த்தனை செய்யப் பட்டார்கள்.

அதே அளவினர். நடந்து முடிந்த போரில் கிறிஸ்துவர்களுக்கு ஏற்பட்ட செலவினங்களைப் பொருளாலோ உழைப்பாலோ ஈடு கட்டும்படி ஏவப்பட்டனர்.

எஞ்சியோரில் நூறு முஸ்லிம்களைப் பெர்டினாண்டு, இஸபெல்லா தம்பதியர் ரோமில் போப்பின் சேவைக் கெனத் தங்கள் அன்பளிப்பாக அனுப்பி வைத்தனர்.

ஐம்பது அழகிய முஸ்லிம் இளம் பெண்களைப் போர்த்துக்கல் ராணிக்கும் முப்பது மங்கையரை நேபிள்ஸ் ராணிக்கும் இஸபெல்லா அரசியார் அன்பளிப்புச் செய்தார்.

மற்ற ஆடவர், பெண்டிர்களை பெர்டினாண்டுடன் இருந்த கிறிஸ்துவச் சிற்றரசர்கள், பிரபுக்கள், காலாட் படையினர், ஆகியோர் தத்தம் அந்தஸ்துக்கும் தேவைக்கும் ஏற்பப் பகிர்ந்து கொண்டனர்.

ஆயிற்று!

மாலகா முஸ்லிம்களுக்கு அனுசரனையாக இருந்த கிறிஸ்து வர்கள் பொதுச் சதுக்கத்தில் பகிரங்கமாக நிறுத்தப்பட்டனர்.

கூர் முனையாகச் சீவப்பட்ட நீண்ட மூங்கில் கோல்

களை ஏந்திய புரவி வீரர்கள், அவர்களை நோக்கிப் பாய்ந்து சென்றனர்.

தங்கள் கைகளிலிருந்து மூங்கில் முனைகளைக் கொண்டு அவர்கள் உடல்களைக் குத்திப் பின் அவற்றை வெளியே இழுத்தனர். மீண்டும் அவ்வாறே குத்தி அவர்களை உயிரிழக்கச் செய்து அவர்கள் சடலங்களை அந்த மூங்கில்களைக் கொண்டே உயரே தூக்கி நிறுத்தினர்!

யூதர்களோ கொழுந்து விட்டெரியும் சிதைகள் மீது தொங்க விடப் பட்டவர்களாக உயிருடன் எரிக்கப்பட்டனர்.

''மாலகா! புகழ் பெற்ற அழகிய நகரமே! உன்னுடைய கோபுரங்களின் மாட்சி எங்கே? உன்னுடைய கோட்டையின் வளைவு சுவர்களின் வலிமை எங்கே?''

''உன் மக்களைப் பாதுகாக்க முடியவில்லையே!''

''உன் பூத்துக் குலுங்கும் மலர் வனங்களும் பசுமை எழில் சிந்தும் வயல்களும் திரட்சியான குலைகள் தொங்கும் திராட்சைத் தோட்டங்களும் எங்கே?''

''அவை எல்லாம் அழிந்து விட்டது போல, எங்கள் வலிவும் அழிந்து விட்டதே!''-

திக்கற்ற முதியவர்களும் சிறுவர்களும் இளம் பெண் டிர்களும் அழுது புலம்பியது வடக்கே தலை நகரில் எதிரொலித்தது.

4. கொழுக்க வைத்த ஆடு!

அல்ஹம்ரா அரண்மனையிலிருந்து வெகு ஆடம்பரத்துடன் புறப்பட்டார், சுல்தான் போஅப்தில்.

வஜீர் யூசுஃப், மற்றும், பிரதானிகள், படை அதிகாரிகள் அவரைப் புடை சூழ்ந்து சென்றனர்.

மாபெரும் சதுரக் கோபுரத்தின் அடியிலே அமைந்திருந்த கோட்டையின் பிரதான வாயிலான நீதி வாயில் மீது பிரம்மாண்டமான குதிரை லாடம் போன்ற வளைவினூடே வெளியேறினர், அரசரும் அவரது பரிவாரங்களும்.

பின்னர் அதன் வலது புறமாகத் திரும்பி, குன்றின் சரிவிலே ஆங்காங்கு பசுமை எழில் கொழிக்கும் மரக் கூட்டங்களின் நிழலினூடே சுற்றி வளைந்து சென்ற பாட்டை வழியாக அவர்கள் அமர்ந்திருந்த புரவிகள் பாய்ந்து சென்றன.

சற்றைப் பொழுதில் ஆழமான குறுகிய கணவாயைக் கடந்து அல்ஹம்ராவை எதிர் நோக்கியிருந்த கர்னாதாவின் பெருஞ்சாலை வழியாக அவை விரைந்தோடின.

அடுத்து, நகரினுள்ளே தெருக்களில் பதிக்கப்பட்டிருந்த கற்களின் மீது துரித கதியில் பட்டு வந்த அப்பரிகளின் குளம்புகள் தொடர்ந்து எழுப்பிய ஒலி சுல்தானின் உள்ளத் துள்ளலுக்கு ஏற்ப லயம் இழைத்தது போலிருந்தது.

ஆங்காங்கு மக்கள் திரள் திரளாகக் காணப்பட்டனர். அவர்களும் தம்மைப் போலவே மாலகா வீழ்ச்சியை வரவேற்றிருப்பார்கள் என்றே எண்ணியிருந்தார் சுல்தான் அல் ஸகீர்.

ஆனால்,.....அவர் எதிர்பார்த்த களிப்பும் மன நிறைவும் அந்த முகங்களில் தென்படவில்லை. மாறாக, ஒரு வித வெறியும் சோகமுமே காணப்பட்டன.

ஆம், மாலகா கிறிஸ்துவர்கள் வசமாகியது, கர்னாதாவாசிகளைப் பேரதிர்ச்சியும் வேதனை உணர்ச்சியும் அடையச் செய்து விட்டது. வீடுகளின் முன்னும் வீதிகளிலும் அவர்கள் அல்லாடிக் கொண்டிருந்தனர்.

மாலகாவில் முஸ்லிம்கள் தோல்வியுற்றதற்குப் போஅப்திலே காரணமென்று அவர்கள் கருதினர்.

அதோ!அவர்- சுல்தான் அல்ஸகீர்! அவர் முகத்தில் தான் எவ்வளவு மகிழ்ச்சி- பெருமிதம்!

அங்கே மாலகாவில் முஸ்லிம்களுக்குத் தோல்வியின் வேதனை! இங்கே இவர்....?

''முஸ்லிம்கள் கிறிஸ்துவர்களிடம் பணியச் செய்யும் அளவுக்கு எதிரியுடன் கூடிக் குலவும் சந்தர்ப்பவாதி!'' -ஆவேசமுடன் பலர் கூவினர்.

''அல்ஜஹ்ல் வாழ்க!'' என்று மற்றும் பலர் வாழ்த்தொலி எழுப்பினர்.

அதற்கிடையில் நகரின் புகழ் பெற்ற சதுக்கத்திற்கு அருகே வந்து விட்டார், போஅப்தில்.

அடிக்கடி விளையாட்டுப் போட்டிகளும், துவந்தச் சண்டைகளும் நடந்து வந்த அதே சதுக்கம் தான்!

அத்தகைய கேளிக்கைகளைக் கண்டு களிக்கத்தான் அங்கு மக்கள் குழுமுவது வழக்கம். இன்றும் அங்கே ஒரே கூட்டம்!

எவ்விதப் போட்டியோ விளையாட்டோ நடைபெறவில்லை.

'பின் ஏன் கூட்டம்?'-

''அல் ஜஹ்ல் வாழ்க! அவர் நாட்டுப் பற்று மிக்கவர். தேசத்தின் நலத்துக்காக எத்துணை உறுதியுடன் போராடினார்!''

''ஆம், மற்றவர்களின் அடிமையாக- கைப்பாவையாக ஆட்சிக்கு வருவதை வெறுக்கும் மன்னர்களின் வாரிசு!''

''அவர் கடுமையாக நடப்பவர்தான்! இரத்தம் சிந்துவதில் வேட்கை மிக்கவர்தான். ஆனால் பிறந்த பொன்னாட்டிற்கு விசுவாசம் கொண்டவர்.''

''கர்னாதா ஆட்சியின் மாட்சியை அவர் இதுவரை காப்பாற்றி வந்தார். அவருடைய செங்கோல் குடிகளைப் பொறுத்த வரையில் வெறும் இரும்புத் தடியாக இருந்திருக்கலாம். பகைவர்களைப் பொறுத்த மட்டிலோ அதுஎஃகினாலான வாளாக இருந்ததென்பதை யாரால் மறுக்க முடியும்?''

''ஆனால் அல்ஸகீர்? மார்க்கத்தை- உற்றார் உறவினரை- நாட்டை- எல்லாவற்றையுமே உதறியெறிந்து விடுவார். அரசுரிமையின் வெறும் சாயலுக்காக!''

''செங்கோலுக்குப் பதிலாக ஒரு கோரைப் புல்லைப் பிடித்துக் கொள்வதானலும் அவர் திருப்தியடைந்து விடுவார்...''

மக்கள் தலைவர்கள் ஆத்திரமாக- ஆவேசமாக- உணர்ச்சி பொங்க உரையாற்றிக் கொண்டிருந்தனர்.

அல்ஸஹ்லை வாழ்த்தியும் அல்ஸகீரைக் குறை கூறியும் அவர்கள் பேசியபோது கூடியிருந்தவர்கள் வாயொலிகளால் ஆரவாரம் செய்தனர்.

அந்த ஜன சமுத்திரம் அவரைக் கண்டு பொங்கி எழுந்து விட்டால்....?

போஅப்தில் தமது புரவியின் லகானைச் சுண்டியிழுத்தார். மற்றவர்களுக்கு அவசரபாகச் சைகை காட்டியவராக தமது குதிரையின் போக்கைத் திருப்பினார். அதன் விலாக்களிலே அங்கு வடிகளால் இடித்தார்.

குதிரை அல்ஹம்ராமை நோக்கிப் பறந்தது!

விரைவில் நீதி வாயில் மீண்டும் திறந்து மூடியது!

மேற்கே மாலகாவைக் கைப்பற்றிய பெர்டினாண்டு அரசர், அடுத்து தலைநகர் கர்னாதா செல்ல விரும்பவில்லை.

அதற்கு முன்னர் அல்ஜஹ்ல் வசம் இன்னுமிருந்து வந்த கிழக்குக் கோட்டைகளைக் கைப்பற்ற எண்ணினார்.

வாதீ அஷ், பய்யாஸா, அல்மரிய்யா, வேரா முதலிய கோட்டைகளை எல்லாம் வெற்றி கண்டால் அவர் நெடுநாளாக மனதில் வைத்து வந்த அந்தரங்கத் திட்டம் நிறைவேறுவது எளிது என்று அவர் நம்பினார்.

''நீர் நம்முடைய கூட்டாளி. உம்முடைய எதிரி நமக்கும் எதிரி தான். அவரை முறியடிப்பதில் உமக்கு உதவி செய்ய விரும்புகிறோம். ஆகவே, நாம் கிழக்கு நோக்கிப் படையெடுத்து வருகிறோம். உம்முடைய பகைவரிடமிருந்து நாம் வெல்லும் பிரதேசங்களையெல்லாம் உமக்கே தருவோம்'' என்ற செய்தியை அரசர் பெர்டினாண்டு போஅப்திலுக்கு அனுப்பினார்.

அந்நிலையில், ஐம்பதினாயிரம் காலாட்படைவீரர்களும் பன்னிரண்டாயிரம் புரவி வீரர்களும் அவர் தலைமையில் தண்டு நடந்தனர்.

அவரைப் பலவிடங்களில் வெற்றி கண்டவர் அல்ஜஹ்றல். அவ்வாறிருக்க, அன்னவர் கையோங்கி விட்டால், நிச்சயம் தம்மைக் கர்னாதாவிலிருந்து வெளியேற்றி விடுவார் என்று அஞ்சினார் போஅப்தில்.

ஆனால் அதே நேரம், அறுப்பதற்கான ஆட்டைக் கொழுக்க வைப்பவரைப் போலவே அரசர் பெர்டினாண்டு தம்பால் நடந்து வருவதை அவர் உணர்ந்து பார்க்கவில்லை.

தமக்கு உதவி செய்ய வரும் சாக்கில் முஸ்லிம் அரசின் அதிகாரத்தைப் பிளக்கவே கிறிஸ்துவ மன்னர் எண்ணியிருந்ததை அவரால் எண்ணிப் பார்க்க முடியவில்லை.

''அல் ஜஹ்றலுக்கு எதிராக எமக்குத் தாங்கள் உதவ முன் வந்தது குறித்து மகிழ்கிறோம். அதற்கு எமது கைமாறாக உங்களுக்கு நாம் ஒழுங்காகத் திறை கட்டி வருவோம். உங்களின் மேலதிகாரத்தின் கீழ் இராணுவ சேவை செய்வதுடன், கப்பங் கட்டும் குறுநில அரசராகவும் இருந்து வருவோம். வாதீ அஷ், அல்மரிய்யா, பய்யாஸா ஆகிய விடங்கள் கிறிஸ்துவர்கள் வசமானால், கர்னாதாவை தங்களிடம் நாங்கள் ஒப்படைத்து விடுவோம். அப்போது அங்குத் தங்கள் படைப்பிரிவு இருந்து வருவதையும் நாங்கள் ஒப்புக் கொள்வோம்''-

அவ்வாறு தமது அண்ணன் மைந்தர் அரசர் பெர்டினாண்டுடன் செய்து கொண்ட இரகசிய உடன்பாட்டைப் பற்றி அல்ஜஹ்றல் தெரிய வரவில்லை. ஆனால் காஷ்தீலியர்களின் முழு வலிமையும் தம் மீது திரும்பியுள்ளதையும் கர்னாதாவின் பெயரையும் புகழையையும் காப்பதற்காக எதிர்த்து நிற்க வேண்டும் என்ற அவசியத்தையும் உணர்ந்தார்.

அதற்கிடையில், வெலஸ் எல்ரூபியோ, வேரா, முஜாகர் ஆகிய இடங்கள் அரசர் பெர்டினாண்டின் கட்டளைகள் பிறந்தவுடனேயே தங்கள் கோட்டை வாயில்களைக் கிறிஸ்துவ படையினருக்குத் திறந்து விட்டன.

வஷ்கா, தபர்னாஸ், கோட்டைகள் மீது மீண்டும் படை முயற்சிகள் செய்த அரசர் பெர்டினாண்டு பய்யாஸைவைத் தமது முழு பலத்துடன் முற்றுகையிட்டார்.

அதை எதிர்ப்பார்த்த அல்ஜஹ்ல் தம்முடைய உறவினரான ஸிதீயஹ்யாவின் தலைமையில் பதினாயிரம் முஸ்லிம் வீரர்ககளை அந்நகரின் உதவிக்காக அனுப்பி வைத்தார்.

தெற்கே கடலுக்கப்பால் முஸ்லிம் அரசர்களின் உதவி கோரியும் தூதுவர்களை அனுப்பினார் அவர்.

பய்யாஸாவைத் தற்காத்து நின்றவர்கள் தங்கள் மீது முற்றுகையிட்டு நின்ற பகைவர்களை எதிர்த்து, தொடர்ந்து பல மாதங்கள் உறுதியுடன் தாக்குப் பிடித்து நின்றனர். அவர்களுடன் பொருதிப் போரிட்ட வர்களாக அவ்வெதிரிகளைக் கோட்டையை நெருங்க விடாமல் பின்னடையச் செய்தனர்.

என்றாலும், உணவுப் பொருள்கள் குறைந்து வந்ததுடன், எதிர்த் தாக்குதல்களின் போது ஏராளமானவர்கள் இறந்து விட்டனர்.

அந்நிலையில், அரசி இஸபெல்லா வேறு தம்முடைய படைகளுடன் வந்து தமது கணவருடன் சேர்ந்து கொண்டார்.

அவற்றையெல்லாம் அல்ஜஹ்லுக்குத் தெரியப்படுத்தி, யஹ்யா மேலும் செய்தியனுப்பினார்:

''நாம் கோரியுள்ள உதவி ஆப்ரிக்காவிலிருந்து வர வேண்டும். அல்லது, தாங்களாவது பய்யாஸாவின் மீட்சிக்குப் படையுடன் வர வேண்டும்.''

ஆனால்-

அந்நேரம் வாதீ அஷ்ஷைக் கிறிஸ்துவர்களின் தாக்குதலிலிருந்து தற்காத்து நின்று கொண்டிருந்தார் அல்ஜஹ்ல்.

ஒரு வீரரைக் கூட பய்யாஸாவுக்கு அனுப்ப முடியாத நிலை, அவருக்கு!

வேறு வழியில்லாமல் போக, முஸ்லிம் வீரர்கள் உயிர்களே மேலும் வீணே இழக்காமலிருக்க, ஸிதீயஹ்யா பெர்டினாண்டு-இஸபெல்லா அரச தம்பதியரைச் சந்தித்துப் பேசினார்.

''உங்களுக்கு எதிராக இனி ஆயுதம் ஏந்த மாட்டேன், அல்ஜஹ்லையும் உங்களுக்கு எதிர்ப்புக் காட்டாமல் பணிந்து போகும் படிச் செய்கிறேன்'' என்று அவர்களிடம் உறுதியளித்து வந்தார்.

விரைவிலே, சாதகமான நிபந்தனைகளுடன் கிறிஸ்துவர்களிடம் சரணடைந்த அவர் அல் ஜஹ்லுக்கும் கடிதமெழுதினார். அவரும் தம்மைப் போலவே நடந்து கொள்வது நலமென்று அழுத்தமாக ஆலோசனை கூறினார்.

தம்மால் இயன்ற மட்டும் கர்னாதா முஸ்லிம்களின் விடுதலைக்காக -சுதந்தரத்துக்காகப் போராடி வந்தவர் அல் ஜஹல்.

இப்போது கர்னாதா அரசுக்கு வரும் முடிவைத் தடுக்க முடியாது என்று அவர் நினைத்தார்.

ஒரு நாள் கிறிஸ்துவர்களின் முகாமுக்கு விரைந்து சென்றார் அவர். அரசர் பெர்டினாண்டிடம் பேச்சு வார்த்தைகள் நடத்தினார்.

''அல் மரிய்யா, வாதீ அஷ் ஆகிய நகரங்கள் கிறிஸ்துவக் காவற் படைப்பிரிவுகளை ஏற்றுக் கொள்ள வேண்டும். அவற்றின் குடிமக்களுக்கு எல்லா உரிமைகளும் இருந்து வரும்'' என்று அரசர் பெர்டினாண்டு கூறிய நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டார்.

அவருக்கும், ஸிதீயஹ்யாவுக்குத் தரப்பட்டது போலவே, போதுமான பிரதேசங்கள் வழங்கப்பட்டன. அந்தாரஸ், அல்ஹமார் சமவெளி, மார்பெல்லா, மற்றும் உப்புச் சுரங்கங்களின் உற்பத்தியில் பாதியும் ஆண்டொன்றுக்கு நாற்பது லட்சம் பொற்காசுகளும் அவருக்குத் தர இசைந்தார் கிறிஸ்துவ மன்னர்.

அவற்றை ஏற்றவராக அந்தாரஸ் பகுதியில் ஒதுங்கி வாழச் சென்றார், அல் ஜஹ்ல்.

பர்ஸனா, தபர்னாஸ், அல்முஸய்ர், ஸலோபிரனா, இன்னும் அல்புஷாராத்தில் வேறு பல நகரங்களும் பெர்டினாண்டிடம் சரணடைந்தன.

எஞ்சி நின்றது தலைநகர் கர்னாதா!

அல்ஹம்ரா அரண்மனையின் அரவணைப்பிலே, அல் ஜஹ்ல் அடியோடு முறியடிக்கப்பட்டது பற்றி மகிழ்ந்திருந்த நிலையில்,

போ அப்திலுக்க அரசர் பெர்டினாண்டிடமிருந்து திடீரென ஒரு செய்தி வந்தது.

அதைக் கண்ணுற்ற அவர் பெரும் அதிர்ச்சி அடைந்தார்.

அச் செய்தியை அவர் அவ்வளவு விரைவில் எதிர் பார்க்க வில்லை. உண்மையில், அல்ஜஹ்லின் பிரதேசங்கள் தமக்குக் கிடைக்கும்; நட்புறவிலே அரசர் பெர்டினாண்டு தம்முடைய ஆட்சிக்கு ஆக்கமளிப்பார் என்ற நப்பாசை , அவருக்கு!

ஆனால்-

''நமது உடன்பாட்டின்படி எம்முடைய பங்கை நிறைவேற்றி விட்டோம். இனி நீர் உம்முடைய பங்கை நிறைவேற்ற வேண்டும். கர்னாதாவை எங்கள் வசம் ஒப்படைத்து விடும். அங்கு எங்கள் காவற் படைப் பிரிவு இருந்து வர வேண்டும்''-

இவ்வாறு கிறிஸ்துவ மன்னரின் செய்தி ஓடியது.

கர்னாதாவை எங்கள் வசம் ஒப்படைத்து விடும்....கர்னாதா! உந்தலுஸ் முஸ்லிம்களின் மாட்சிக்கும் மகிழ்ச்சிக்கும் உறைவிட மன்றோ?

மன்னர்கள் மண்டபத்தில் அங்குமிங்கும் உலவிய ப்டிபோ அப்தில் சிந்திக்கத் துவங்கினார்.

மண்டபத்தின் சுவர்களில் தீட்டப்பட்டிருந்த அவரது முந்தையரின் முகங்கள் அவரை நோக்கி எள்ளி நகையாடுவன போல இருந்தன. கர்னாதா அரசைத் தோற்றுவிக்க- அதை நிலைப்படுத்த- அதை வளர்க்க அவர்கள் செய்த சாதனைகள்தான் எத்தனை! ஆனால் அவரோ ....அதன்! தலைநகரையே கிறிஸ்துவர்களிடம் ஒப்படைக்க வேண்டிய நிலையா?

''கர்னாதாவுக்குப் பதிலாக வேறு நகரங்களையாவது தரலாம்! எவ்வளவு அவசரம்! கர்னாதாவைத் தருவதாகக் கிறிஸ்துவ மன்னரிடம் நாம் ஒப்புக் கொண்டோமே! அப்படியே ஒப்படைப்பதென்றாலும், நாம் விரும்பிய படி முடியுமா....?

அன்று கர்னாதாவின் பெருஞ் சதுக்கத்தில் நடந்தவை யெல்லாம் போஅப்திலின் நினைவில் இன்னும் பசுமையாக இருந்தன.

அல்ஜஹ்றல் அடைந்த தோல்வி குறித்துக் கர்னாதா மக்களிடைய நிலவிய வேதனையும் ஆத்திரமும் கொஞ்சம் நஞ்சமல்ல!

தம்முடைய சுய நலத்துக்காக விருப்பங்களுக்காக எது வேண்டுமானாலும் செய்யத் துணிவார் என்று போஅப்தில் மீது மக்களின் கடுஞ்சினம் அல்லவா திரும்பியிருந்தது?

'நம்மைக் கொலை கூடச் செய்து விடுவார்களோ?'' என்ற அச்சத்தில் போஅப்தில் அல்ஹம்ராவே தஞ்சம் என்று அடைபட்டுக் கிடந்தார். கர்னாதாவில் தலை காட்ட முடியாமல் இருந்தார்.

இந்நிலையில், அம் மக்களிடம் கர்னாதாவைக் கிறிஸ்துவர் களிடம் ஒப்படைக்க வேண்டு மென்றால்....?'

தம் தலையே போய்விடும் என்று அஞ்சினார் போ அப்தில்.

தம்முடைய உண்மை நிலையையும் சிரமங்களையும் விளக்கி அரசர் பெர்டினாண்டுக்கு அவர் ஓலை அனுப்பினார்.

''போரிலே இதுவரை கிடைத்திருக்கும் வெற்றிப் பொருள் களுடன் இப்போது திருப்தி கொள்ளுமாறு கேட்டுக் கொள் கிறோம்.இங்கு நிலைமை சரியாகும் வரை பொறுத்துக் கொள் ளுங்கள். எல்லாம் சரிவர நிறைவேற எமக்கும் அவகாசம் தாருங்கள்!'' என்று அவர் கோரினார்.

அதனால் அமைதி அடைவதற்குப் பதிலாக அரசர் பெர்டினாண்டு ஆத்திரத்துடன் சீறினார்.

''துரோகி! கொஞ்சமும் விசுவாசமில்லாதவன். அன்று அவன் தந்தைக்கு எதிராக உதவி செய்தேன். நேற்று அவன் சிற்றப்பனுக்கு எதிராக உதவி செய்தேன். என் அரண்மனையில் அவனுக்குத் தஞ்சம் அளித்தேன். ஆட்சி அதிகாரம் பெற வழி செய்தேன்.; வகை செய்தேன் இன்று ....அவன் என்னவோ எழுதியிருக்கிறான் வாக்குமாறி! கர்னாதாவை அவன் தருவதென்ன! நாமே வசப்படுத்திக் கொள்வோம்!''-

சூழ்ந்திருந்த மந்திரி, பிரதானிகள் முன்னிலையில் கோபா வேசமுடன் கூறினார். அதை ஆமோதிப்பது போலவே அவர்களும் இருந்தனர்.

சுடச்சுட கர்னாதா மக்களுக்குச் செய்தி பறந்தது-

''சண்டையில்லாமல் அமைதியான முறையிலே நீங்கள் சரணடைந்து விடுங்கள். இன்றேல், எல்லாரும் அடிமைகளாக்கப் படுவீர்கள். எம்முடைய கட்டளையை உடனே ஏற்றுக் கொண்டால், உங்கள் உயிர்களும் உடைமைகளும் பத்திரமாக இருக்கும்! இன்றேல், எங்கள் வாள்முனை மற்றவற்றைக் கவனித்துக் கொள்ளும்!''

சிம்மாதன மண்டபத்தில் பேரவை கூடியிருந்தது.

மந்திரிகள், பிரதானிகள், படையதிகாரிகள், நகரப் பிரமுகர்கள் தத்தம் ஆசனங்களில் கவலை தோய்ந்த முகங்களுடன் இருந்தனர்.

அவர்களுக்கப்பால் மண்டபத்துக்கு வெளியே அரசர் பெர்டினாண்டிடமிருந்து வந்திருந்த தூதுவர்கள் அமர்ந்திருந்தனர்.

அவர்களை யெல்லாம் சற்று நேரம் மவுனமாகச் சூழ நோக்கினார் சுல்தான் போ அப்தில்.

''அவை இன்று கூடியிருப்பது ஏன் என்பது உங்களுக்குத் தெரியும்? கிறிஸ்துவர்களின் அரசரிடமிருந்து வந்துள்ள செய்திக்கு நாம் என்ன பதில் அனுப்புவது?'' என்று முறுக்கவிழ்ந்த குரலில் அவர் கேட்டார்.

''என்ன பதில் அனுப்புவது?அல்ஜஹ்லின் நகரங்களுக்கு ஆபத்து வரும் போதெல்லாம், நம் தலைநகருக்கு ஒன்றும் வராது என்றிருந்தாகி விட்டது. ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து மனுஷனையும் கடிக்க வந்து விட்டது போல இப்போது கர்னாதா அரசின் மற்றக் கோட்டை நகர்களையடுத்து இப்போது தலை நகரையே குறி வைத்து விட்டனரே? அதைப் பெர்டினாண்டு வசம் ஒப்படைத்தால்....நம் நிலை? ஒப்படைக்காவிட்டால்....நமது வருங்காலம்....நம் பெண்டு பிள்ளைகளின் கதி?'

இவ்வாறு நினைக்க நினைக்க அவையினருக்கு நெஞ்சம் பதறியது. அறிவு மருண்டது. நாவெழ மறுத்தது.

''என்ன பதில் அனுப்புவது?'-

அந்தச் சிந்தனை அழுத்தத்தில் அவர்களுடைய வாய்களிலிருந்து வார்த்தைகள் வெளி வர முடியாமல் திணறின.

மன்னர் பேர அப்திலே அன்று வஜீர் கூறியது போல, ஆழ் கடலுக்கும் ஆபத்தான உதிர் மணலுக்குமிடையில் அகப்பட்டவர் போல இருந்தார்.

வெளிறிய -ஒளி மங்கிய பார்வையை மண்டபத்தில் குழுமியிருந்தோர் மீது செலுத்தினார்.

''என்ன பதில் அனுப்புவதா?.....''

திடீரென அவையின் அமைதியைக் கிழித்துக் கொண்டு வந்தது உணர்ச்சி மிக்கூறிய குரல் ஒன்று.

அவையினரின் பார்வை ஒரு முகமாகக் குரல் வந்த திசையில் திரும்பின.

வாட்ட சாட்டமாக, ராஜகளை ததும்பும் தோற்றத்துடன் நின்று கொண்டிருந்தார், மூஸா அபில் கஸ்ஸான்.

''நாங்கள் கிழவர்கள், கிழவிகள் என்று கிறிஸ்துவ அரசர் கருதுகிறாரா?.....'' என்று சொல்லி வரும் பொழுதே அவுர் கண்களில் கனல் தெறித்தது.

அரச குடும்ப வழியினரான அவர் எத்தனையோ களம் கண்டவர். படைத் தலைமையில் இணையில்லாதவர். போர் வீரர்கள் போற்றும் தீரர்.

மேலும், மக்களிடையே அவர் நல்ல செல்வாக்கும் அபிமானமும் பெற்றவர். மக்கள் மீது தாராள மனப்பான்மை கொண்டவர் என்பது அவையினர் அறிந்ததே!

துவந்தச் சண்டைகள் என்ன---மன்ற விளையாட்டுப் போட்டிகள் என்ன---குதிரை ஏற்றமென்ன..... எல்லாவற்றிலுமே அவர் தலை சிறந்தவர் என்பதையும் அவர்கள் தெரிந்திருந்தனர்.

அவர் கூறலுற்றதற்கு ஆவலுடன் செவிமடுத்திருந்தனர்-

''...கிறிஸ்துவ அரசர் தெரிந்து கொள்ளட்டும்; வேல் எய்ய....வாளேந்த....குதிரை மீது பாய்ந்து செல்ல...வில் வளைத்து அம்பு தொடுக்க......ஈட்டியைக் குறி பார்த்து எறிய..... இவற்றிற்காகவே மூர்.....ஆம், இந்நாட்டு முஸ்லிம் பிறக்கிறான். இவற்றிலிருந்து அவனை ஒரு போதும் பிரிக்க முடியாது. பிரிக்க முயன்றால், அவன் தன்மையே மாறி விடும்.....''

சற்றே பேச்சை நிறுத்தினார், மூஸா அபில்கஸ்ஸான்.

''...இவற்றிலிருந்து மட்டுமா நம்மைப் பிரிக்கக் கிறிஸ்துவர்கள் விரும்புகிறார்கள்? அன்று மற்றவர்களைப் போலவே பேலயோவையும் நம் முன்னோர்கள் ஒழித்துக் கட்டியிருந்தால், இரு நாட்டு வரலாறே வேறு விதமாக இருந் திருக்கும். அவன் நல்ல காலம்! முஸ்லிம்களின் படையெடுப்புக்கு இலக்காகாமலே தப்பி விட்டான்! அவன் வழி வழியாக வந்தவர்கள் இன்று வரை என்ன செய்து வந்திருக்கிறார்கள்? சாம, பேத, தான, தண்டம் ஆகிய அத்தனை உபாயங்களையும் கையாண்டு முஸ்லிம் களை இந்தத் தீபகற்பத்திலிருந்து வெளியேற்றி விடத் தானே முயன்று வந்திருக்கின்றனர்? துரதிர்ஷ்டவசமாக நம்மிடையே ஏற்படும் வேற்றுமைகளைச் சாதகமாக்கிக் கொண்டு நம் அருமை உந்தலுஸ் மீது எத்தனையெத்தனை படையெடுப்புகள் செய்துள்ள னர்! எவ்வளவு கொலைகள், சூறைகள் நடத்தியுள்ளனர்....இவை போன்றவை நம்முடைய இப்னு அஹ்மார் அரசு அமைந்த பின்னரும் தானே நடந்து வருகின்றன?----'''

இவ்வாறு தாமறிந்த பாரம்பரிய வரலாறுகளை அவையில் கோடிட்டுக் காட்டலானார்.

சுல்தான் யூசுஃபின் மைந்தர் ஏழாம் முஹம்மது காலத்தில் கிறிஸ்துவர்கள் உந்தலுஸ் மீது படையெடுத்து வந்தனர். அதில் அவர்கள் பெருந் தோல்வி கண்ட போதிலும், வாதீ அஷ், மற்றும் கர்னாதாவின் பெரும் பகுதியை நாசமாக்கிச் சென்றனர்.

அப்பால் இப்னு அஷ்னாஃப் தமது சிறிய தந்தையாரிட மிருந்து ஆட்சியைக் கைப்பற்றிய போது யூசுஃபின் புதல்வர் அலீயின் மைந்தர் ஸஅத் (இப்னு இஸ்மாயீல்) என்பவருக்குக் காஷ்தீலிய அரசர் இரண்டாம் ஜான் ஆதரவு தந்தார். இப்னு அஷ்னாஃப் மீது அதிருப்தியுற்ற முஸ்லிம் பிரபுக்கள், காஷ்தீலியப் படை வீரர்களுடன் இஸ்மாயீல் கர்னாதா வந்தார்.

ஐந்து வருடம் கொடிய உள் நாட்டுப் போர் நடந்தது. எங்கும் ஒரே இரத்தக் களறி! முடிவில், இப்னு அஷ்னாஃப் தோல்வியுற, இஸ்மாயீல் அரசு கட்டிலேறினார்.

காஷ்தீலிய மன்னன் நாலாம் ஹென்ரியின் தர்பாருக்கு

ஏராளமான அன்பளிப்புகளுடன் தூதுவர்களை அனுப்பிச் சமாதான நட்புறவு நீடிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். புதிய சுல்தான்.

ஆனால்....

அவ்வாறு செய்ய மறுத்து கர்னாதா மீது படையெடுத்தான் ஹென்றி.

பல ஆண்டுகள் தொடர்ந்து போர் நடந்தது.

ஏராளமான முஸ்லிம்களின் வீடுகள் எறிந்து சாம்பலாகின. வயல்கள், தோட்டங்கள் எல்லாம் இரக்கமற்ற முறையில் அழிக்கப்பட்டன. அழகிய அரண்மனைகள், ஏன், நிலத்தை வளப்படுத்திய நீர்ப்பாசனக் கால்வாய்களையும் கூட இனியொரு போதும் செம்மை செய்ய முடியாத அளவு பாழ்படுத்தினர், கிறிஸ்துவர்கள்.

அவர்களின் நகரங்களோ வெகு தொலைவிலிருந்தன!

5. நெஞ்சங்களில் மூண்ட நெருப்பு

உர்ஜுதுனா, ஜபல் அல்தாரிக் ஆகிய இடங்களைக் காஷ்தீலியர்கள், முஸ்லிம்கள் எதிர்பாராத விதமாகத் தாக்கிப் பிடித்தனர்.

அதற்கு மேலும் கிறிஸ்துவரை எதிர்த்து நின்றால், நாடு முழுவதும் அழிந்து விடும்!

கர்னாதா அருகில் ஹென்றி மன்னனைச் சந்தித்தார், சுல்தான் இஸ்மாயீல்.

அவன் மேலதிகாரத்தை ஒப்புக் கொண்டு, ஆண்டொன்றுக்குப் பன்னிரண்டாயிரம் தீனார்கள் கப்பங்கட்டுவதாக உடன்பாடு செய்து கொண்டார்.

அவருக்குப் பிறகு அவரது மைந்தர் அபுல் ஹஸன் பட்டம் சூட்டிக் கொண்டார்.

அதற்கிடையில் நாலாம் ஹென்றி இறக்க, அவருடைய புதல்வியார் இஸபெல்லா அரசியானார். அவரை அராகூன் அரசர் பெர்டினாண்டு திருமணம் செய்து கொண்ட பின்னர், காஷ்தீலியா, அராகூன், லியூன் ஆகிய பிரதேசங்கள் ஒன்றாக இணைந்தன.

அரசர் பெர்டினாண்டும் அரசி இஸபெல்லாவும் பிற மதத்தினரை அடக்கியொடுக்கி, வென்று, கொன்று, ஏன், உயிருடன் எரிப்பதைத் தங்கள் மதக் கடமையென கொண்டனர். முஸ்லிம்களின் நாகரிகத்தை ஸ்பெயினிலே இல்லாதொழித்து விடக் கங்கணம் கட்டினர்.

ஆனாலும் அவர்கள் தங்கள் அரசில் குழப்பமும் கொந்தளிப்புமாக இருந்த போது சுல்தான் அபுல் ஹஸனுடன் சமாதான உடன்பாடு கொண்டிருந்தனர்.ஆனால் அஃது நிலைமை சமனப் பட்டு வர, அவ்வுடன்பாடு முடியும் காலத்தை எதிர்நோக்கி இருந்தனர்.

''...இவையெல்லாம் உங்களுக்குத் தெரியாதவை அல்ல. அதன் பிறகு கிறிஸ்துவ அரசர் என்ன செய்தார் என்பது நீங்கள் அறிந்தது தான்....''

மூஸா அபில் கஸ்ஸான் மண்டபத்தைச் சூழ நோக்கினார்.

'அபூ அப்துல்லாஹ்! இவருக்கு எவ்வளவு மாற்றமானவர் சுல்தான் அபுல் ஹஸன்! அவர் வன்னெஞ்சம் படைத்தவராக இருந்திருக்கலாம். ஆனால் ஆண்மை மிக்க வீரர். எச்சரிக்கை யானவர். எல்லாவற்றிற்கும் மேலாக நாட்டுப் பற்று மிக்கவர், அதனால்.....'-

...தமது தந்தை செய்திருந்த உடன்பாட்டைப் புதுப்பித்துக் கொள்ள விரும்பினார். ஆனால் அதற்கு முதற்படியாக மன்னர் இஸ்மாயீல் கட்டி வந்தது போல் திரை கட்டும்படி தூதுவர் மூலம் கட்டளையனுப்பினார் அரசர் பெர்டினாண்டு. அதை ஏற்காத தால், கலீபா அபுல் ஹஸன் கடுமையான பதில் அனுப்பினார்:

''காஷ்தீலிய மன்னர்களுக்குக் கப்பங்கட்டிய கர்னாதா மன்னர்கள் இறந்து விட்டனர். இப்போது எங்கள் நாணயச் சாலைகளில் தங்கக் காசுகள் அடிப்பதில்லை. வாள் பட்டை களையும் ஈட்டியின் கூர் முனைகளையும் தான் அடிக்கிறோம். உங்கள் அரசரிடம் போய்ச் சொல்லுங்கள்!''....

அதை அவையினருக்கு நினைவூட்டினார் மூஸா.

''இப்போது சொல்லுங்கள்; நாம் என்ன பதில் அனுப்ப வேண்டும்? ஏன், அதை நானே சொல்ல விரும்புகிறேன்.

''கிறிஸ்துவ அரசருக்கு எங்களுடைய ஆயுதங்கள் வேண்டுமா? அவர் இங்கு நேரில் வரட்டும்! முடியுமானால், எங்களை வெற்றி கொண்டு அவற்றை அடைந்து கொள்ளட்டும். ஆனால்....எங்களை வெற்றி கொள்வது அவ்வளவு இலகுவல்ல என்பதை அவர் மனதிலிருத்திக் கொள்ளட்டும்.

''என்னைப் பொறுத்தவரையிலும் கர்னாதா கோட்டை மதில் ஓரம்- நான் எந்த இடத்தைக் காப்பாற்றப் போராடி வீழ்கிறேனோ அவ்விடத்திலேயே ஒரு கபுரடியைப் பெறுவதை விரும்புகிறேன்..

''ஆம், கிறிஸ்துவர்களுக்கு அடி பணிவதால் கிடைக்கும் அரண்மனைச் சுகபோகத்தை விட இதுவே இனிமையானது. கண்ணியமிழந்து வாழ்வதை விட மரணம் சிறந்தது----'''

அவ்வாறு சொல்லி வரும் பொழுதே மூஸா மன்னரைப் பார்த்தார். அவர் கண்களிலே ஒருவிதக் தெளிர்ச்சி. அடுத்து, அவர் அவையினரைப் பார்த்தார்; அவர்கள் முகங்களிலே ஒரு விதப் புத்துணர்ச்சி!

அவர் கூறியதை ஆமோதிக்கும் வகையில் அவர்களில் பலர் குரல் எழுப்பினர்.

கிறிஸ்துவத் தூதுவர்களோ, முகத்தில் ஈயாடாதவர்களைப் போல இருந்தனர்.

அந்நிலையில், தமது ஆசனத்தில் மீண்டும் அமர்ந்தார் மூஸா அபில் கஸ்ஸான்.

''கர்னாதாவைக் கிறிஸ்துவ அரசரிடம் ஒப்படைப்பதற்கில்லை. எங்கள் ஆயுதங்களையும் ஒப்படைக்க மாட்டோம்''என்ற பதில் அனுப்பும் முடிவுடன் அவை கலைந்தது.

மூஸாவின் எஃகை விட உறுதியான வார்த்தைகள் மன்னரையும் மந்திரி, பிரதானிகளையும் மாற்றி விட்டது போலவே, மனம் தளர்ந்து நம்பிக்கை குன்றியிருந்த மக்களுக்கும் புதிய உத்வேகத்தை ஊட்டின.

உல்லாச வாழ்வை வெறுத்துக் கடினமான உழைப்பை மேற்கொள்ளும் எண்ண நெருப்பு அவர்களின் நெஞ்சங்களில் மூண்டது, இதயங்களில் போர் உணர்வை மீண்டும் துள்ளியெழச் செய்தது.

காலப் போக்கில், மன்னர் மீது அவர்கள் கொண்டிருந்த ஆத்திரமும் இப்போது தணிந்து விட்டிருந்தது.

எல்லாரும் ஒன்றிணைந்து பகைவரை எதிர்த்துச் செயல் பட வேண்டிய அவசர நேரம்!

அல் புஷாராத் பிரதேசத்தில் கிறிஸ்துவர் ஆட்சியை இன்னும் ஏற்றுக் கொள்ளாத பல கிராமங்கள் சிறு நகரங்களிலிருந்தும் பகிரங்கமாக அவர்களுக்கு எதிராகக் கிளர்ச்சியும் கலகமும் செய்த ஊர்களிலிருந்தும் முஸ்லிம் தொண்டர்கள் தலை நகரில் வந்து குவிந்தனர்.

குடிமக்களின் நல்லெண்ணத்தைப் பெற விரும்பினார், மன்னர் போ அப்தில்.

தலை நகரின் பாதுகாப்புக்காக அவர் தீவிர ஏற்பாடுகளைச் செய்தார்.

கிறிஸ்துவர்கள் கைப்பற்றிய இடங்களில் சிறுபடைகளுடன் புகுந்து போரைத் தொடர்ந்து நடத்தினார், எல்லைக் காவல் நிலையங்கள் சிலவற்றையும் கைப்பற்றினார்.

6. முன்னோர்களின் இரத்தம்

தூதுவர்கள் கொண்டு வந்து தந்த ஓலையைப் படித்த அரசர் பெர்டினாண்டின் கண்கள் கோவைப் பழங்களாகின. கன்னங்களில் செம்மையேறியது. உதடுகள் துடித்தன.

தமக்கு எதிர்ப்பான பதில் வரும் என்று அவர் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை.

பல்லைக் கடித்துக் கொண்டு, பொங்கி வந்த ஆத்திரத்தை அடக்கிக் கொண்டார்.

தூதுவர்களை அப்பால் போகும்படி அவர் சைகை செய்தார்.

'நாம் பொறுமையாக இருக்க வேண்டும்' என்று தமக்குத் தாமாகவே சொல்லிக் கொண்டே யோசனையில் ஆழ்ந்தார்.

உந்தலுஸ் முஸ்லிம்களின் ஒரே புகலிடமாக இருந்தது கர்னாதா கோட்டை. ஆதலால் அவர்கள் எளிதில் விட்டுவிடத் துணிய மாட்டார்கள். அதன் படை பலமும் பாதுகாப்பு ஏற்பாடு களும் போர் வீரர்களின் தீரமும் நாடறிந்தவை. போரில் சண்டை செய்வதையே தங்களின் சிறந்த தொழிலாகக் கருதும் வீரர்களாக அவர்கள் இருந்தனர்.

தகுந்த ஏற்பாடுகள் இல்லாமல் அந்நகரைத் தாக்கியோ முற்றுகையிட்டோ கைப்பற்றுவது எளிதல்ல என்பதைப் பெர்டினாண்டு உணர்ந்திருந்தார்.

ஆகவே, முஸ்லிம்களிடமிருந்து வந்த பதிலையறிந்து அவர் களுக்கு உடனடியாகத் தக்க பாடம் கற்பிக்க வேண்டும் என்று துடிதுடித்த ஸ்பானிய கவுன்ஸில் உறுப்பினர்களிடம் அவர் கூறினார்:

''நாம் பொறுமையைக் கையாள வேண்டும். அவர்கள் பிரதேசத்தில் இவ்வாண்டு சூறைத் தாக்குதல்கள் நடத்துவோம். அங்கு வரும் ஆண்டில் பொருள் தட்டுப்பாடு உண்டாகும். அந்நிலை யில் அதன் மீது பலனுள்ள முறையில் நாம் படையெடுத்துச் செல்வோம்.''

அதுவே 'சரி' என்று அவரது அவையினரும் ஒப்புக் கொண்டனர்.

அவர்கள் எல்லோரும் கூடி முடிவு செய்தபடி கர்னாதாவின் அண்மையில் போ அப்திலுக்கு விசுவாசம் காட்டி நின்ற செழுமையான பகுதிகளில் அடிக்கடி கிறிஸ்துவ வீரர்கள் புகுந்தனர். ஊர்களையும் வாணிபக் கூட்டங்களையும் கொள்ளையடித்தனர். நாட்டிலே நாசம் விளைவித்து, மக்களுக்குத் தொல்லை தந்தனர்.

பசுமையான வயல்கள் பாழாகின. வளம் கொழித்த 'வேசா' சமவெளி கொஞ்சம் கொஞ்சமாக வெறிச்சோடும் வெறும் நிலப்பரப்பாகி வந்துள்ளது.

அதற்கிடையில், முஸ்லிம்கள் மீது இறுதியான- முழுமை யான முயற்சி செய்ய கவனமுடன் சித்தங்கள் செய்து வந்தார், அரசர் பெர்டினாண்டு. தம்முடைய கிறிஸ்துவ மார்க்கத்திற்குப் பெருமைத் தேடித் தருவதுடன், அதை வளர்ப்பதற்குரிய போரை நடத்த அவர் உள்ளூற விழைந்தார். தம் ஆட்சியின் கீழிருந்து யூதர்கள் மீதெல்லாம் வரி விதித்து நிதி திரட்டினார்.

முன்னர் அவர் மூதாதையர் ஒன்பதாம் அல்பான்ஸோ முஸ்லிம்கள் மீது வெற்றி வாகை சூடியது அவரது நினைவுக் கடலில் அலை பாய்ந்தது.

யாகூஃப் அல் மன்ஸூர் மறைவுக்குப் பிறகு, இஷ்பிலியா, குர்த்துபா ஆகிய இடங்களைச் சூழ்ந்திருந்த பிரதேசங்களில் தமது துருப்புகளை அனுப்பி நாட்டை நாசப்படுத்தினார்.

அந்நிலையில் அலத்ரபாவை ஆளுநர் யூசுஃப் காதில் கிறிஸ்துவர்களிடம் ஒப்படைத்தார்.

அதைக் கேள்வியுற்ற பின்னர் முஹம்மத் அல் நஸீல் லி தீன் இலாஹி ஸிப்தாவிலிருந்து கடல் கடந்து உந்தலுஸ் வந்தார்.

யூசுஃபிற்கு மரண தண்டனை அளித்தார்.

தங்கள் மரியாதைக்குரிய தலைவருக்கு நேர்ந்த கதியை விரும்பாத உந்துலுஸ் முஸ்லிம்கள் முஹம்மதின் படைகளிலிருந்து வெளியேறினர்.

அந்நேரம்-

பலஸ்தீனம், ஷாமிலிருந்து ஸுல்தான் ஸலா ஹுத்தீனிடம் களத்தில் அடிப்பட்டு ஓடி வந்த சிலுவை வீரர்கள் ஸ்பெயின் வந்தனர்.

அப்போது மூன்றாம் இன்னோஸண்ட் அரசன் ஸ்பெயினில் சிலுவைப் போர்ப் பிரகடனம் செய்தான்.

துலைத்துலா மதகுரு ரோட்ரிகஸ் ரோம் நகர் சென்று போப் உதவி நாடினார். செல்லுமிடமெல்லாம் முஸ்லிம்களுக்கு எதிராகப் புனிதப் போர் பிரச்சாரம் செய்தார்.

காஷ்தீலியா, அநாகூன், புர்த்துக்கல், லியூன், நபார் ராஹு அரசர்களின் படைகளும் பிரான்சு, இத்தாலி, ஜெர்மனி ஆகிய இடங்களிலிருந்து வந்த சிலுவை வீரர்களும் ஒன்று திரண்டு முஸ்லிம்கள் மீது படை எடுத்து வந்தனர்.

இரு படைகளும் லாஸ் நவாஸ் தெ தொலோசோ என்னுமிடத்தில் பொருதின. முஸ்லிம்கள் முறியடிக்கப்பட, மிகுந்த சிரமத்துடன் முஹம்மத் மீண்டும் மர்கஷ் போய்ச் சேர்ந்தார்.

'ஆம், அவரைப் போல கடலுக்கப்பால் இருந்து வந்தவர்கள் தானே இந்த மூர்கள்? இவர்களையும் அவர் வெளியேறியது போல நடக்கச் செய்ய வேண்டும்; அல்லது, நாம் வெளியேற்ற வேண்டும். அதற்கிடையில் அவர்களுக்கு மீண்டும் கடலுக்கப்பாலிருந்து உதவிகள் வரவிடக்கூடாது'- என்ற சிந்தனைகள் பெர்டினாண்டு உள்ளத்தில் எழுந்தன.

ஜபல் அல்தாரிக் ஜலசந்தியில் அவருடைய கப்பல்கள் சுற்றி வரத் துவங்கின.

தரையிலோவெனில் கிறிஸ்துவ உலகத்தின் சிறந்த வீரர்களை அவர் திரட்டினார். படைகளுக்கு வேண்டிய ஆயுதங்கள், சேகரித்தார்.

அவர் மேலதிகாரத்தை ஒப்புக் கொண்டிருந்த குறுநில அரசர்கள் முஸ்லிம்களுக்கு எதிரான போரில் கலந்து தங்கள் ஈவுப்படியும் வீரர்களையும் அனுப்பி வைத்தனர்.

அவ்வாறு திரண்டு கொண்டிருந்த வீரர்களின் தளபதிகளில் ஒருவராக காதிஸ் மகாபிரபு ரோட்ரிகே போனஸே நியமிக்கப் பட்டார்.

பனிக் காலம் முடிந்து வசந்தம் பிறந்து விட்டது.

மரஞ் செடி கொடிகளில் இளந்துளிர்களும் மொட்டுகளும்

மலர்களும் துளிர்த்து அரும்பி- பூத்து எழில் சிந்தத் துவங்கியதைப் போல, தமது உள்ளத்தில் நம்பிக்கை தோன்றிய நிலையில் மூர் எல்லையை நோக்கிப் புறப்பட்டார் அரசர் பெர்டினாண்டு.

அதே நேரம் அரசி இஸபெல்லா இளவரசர் ஜுவான், இளவரசிகள் ஜுவானா, மரியா, கத்தலீனா ஆகியோருடன் அல்சலாலாரியல் கோட்டைக்குச் சென்றார்.

அங்கிருந்து கொண்டே, கர்னாதா மீது படையெடுத்துச் சென்றுள்ள கிறிஸ்துவ வீரர்களுக்கு வேண்டிய உணவுப் பொருள் களை அவ்வப்போது அனுப்பி வைக்க எண்ணினார் கிறிஸ்துவ அரசியார். அவசியம் ஏற்பட்டால், பின்னர் தாமும் அரசர் முகாமிட் டிருக்கும் இடம் சென்று சேர்ந்து கொள்ளத் திட்டமிட்டிருந்தார்.

பல்வேறு கணவாய்கள் வழியே கிறிஸ்துவப் படைகள் பாய்ந்து சென்றன.

வழி நெடுகிலும் அவர்களால் துன்புறுத்தப் பட்டோர் பீதியால் வெளிறிய முகங்களுடன் தலைநகர் வந்து சேர்ந்தனர். அவர்களுக்கு முன்னதாகவே ஒற்றர்கள் மூலம் கிறிஸ்துவர்கள் படையெடுத்து வரும் சேதி கர்னாதாவை எட்டிவிட்டது. நகர மக்கள் பீதி அடைந்தனர்.

அல்ஹம்ராவில் அரசவை அவசரமாக மீண்டும் கூடியது.

பிரம்மாண்டமான கோபுரத்தின் கனத்த சுவர்களில் மூன்று புறம் இருந்த சாளரங்களின் வழியாகத் தொலைவிலிருந்து மழை மேகங்களைப் போலக் கருமை வானை மறைக்கும் பெரும் தூசிப் படலங்கள் படர்ந்து மிதந்து வந்தன.

சற்றைப் பொழுதில் பகலவன் ஒளியில் பளிச்சிடும் பெரு வெள்ளம் போல கிறிஸ்துவப் படைகள் தர்ரோஹ்வின் சமவெளிகளினூடே துரித கதியில் வந்து கொண்டிருந்ததை சுல்தான் போஅப்திலும் மந்திரி பிரதானிகளும் காண முடிந்தது.

வரிசை வரிசையாகப் புரவி வீரர்களும், காலாட் படையினரும் விரிகடல் அலைகளைப் போல பாய்ந்து வந்தனர். நாற்பதினாயிரம் காலாட்படை வீரர்கள், பத்தாயிரம் குதிரை வீரர்கள்!

அவர்களின் கலசங்களும், வேல்களும் வாட்களும் வெய்யவன் ஒளி பட்டுத் தெறித்த வெள்ளிப் பாளங்களைப் போலப் பளபளத்துப் பளிச்சிட்டன.

அவ்வாறு பகைவர்கள் படை நடந்து வருவதைக் காண, போர் அனுபவம் கண்ட முதிய வீரர்களுக்கே கால்கள் தள்ளாடின. மற்றவர்களைப் பற்றிச் சொல்ல வேண்டுமா?

அவையில் கலந்து கொள்ள வந்தவர்களின் நெஞ்சங்களில் ஜின் அறைந்தாற் போல இருந்தது. அச்சத்தால் அவர்கள் நெஞ்சங் களில் ஒரே குழப்பம்!

எதிரிகளின் முற்றுகையின் காரணமாக நடக்கப் போகும் கடும் போராட்டம் பயங்கர நிகழ்ச்சிகளை நினைக்க அவர்கள் நிலை தடுமாறினர்.

''குடிமக்கள் பராமரிப்பு பாதுகாப்பு ஏற்பாடுகள் எப்படி இருக்கின்றன?'' என நகர ஆளுநர் அபுல் காஸிம் அப்துல் மாலிக்கை நோக்கிக் கேட்டார் அரசர் போ அப்தில்.

''அரசாங்கக் களஞ்சியங்களில் உள்ள தானியங்களும் வணிகர்கள் நகர மக்களிடம் உள்ள உணவுப் பொருள்களும் ஒரு சில மாதங்களுக்குத் தான் போதும். ஆனால் கிறிஸ்துவ அரசரின் முற்றுகையோ நீண்டதாக இருக்கும் என்றே அஞ்சுகிறேன்'' என்று அவையினர் பெரும் பாலோரின் உள்ளத்தின் உணர்ச்சிகளை-அச்சங்களைப் பிரதிபலிப்பது போலப் பேசினார் அப்துல் மாலிக்.

அடுத்து, நகர மக்களில் ஆயுத மேந்திப் போரிடக் கூடியவர் களின் பட்டியலை மன்னரிடம் சமர்ப்பித்தார்.

''ஏராளமானவர்கள் இருக்கின்றார்கள்! ஆனால் என்ன பயன்? போர் பயிற்சியில்லாத குடிமக்கள் முறையான படைவீரர்களைப் போல உறுதியுடன் சண்டையிடுவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

''சமாதான காலத்தில் நாம் பத்திரமாக இருக்கும் நேரத்தில் இவர்கள் ஜம்பம் அடிப்பார்கள். அறைகூவல் விடுப்பார்கள். எதிரிகள் தூரத்திலிருக்கும் போது இவர்களைவிட ஆணவமாகப் பேசுவோர் யாரும் இருக்க மாட்டார்கள்.

''ஆனால் பகைவர்கள் நம்முடைய வாயில்கள் முன்னே போர் முரசம் கொட்டும் போதே....இவர்கள் இருக்கும் இடம் தெரியாமல் ஓடி ஒளிந்து கொள்வார்கள்.

''இவர்களால் வீண் கவலையும் பெரும் பொறுப்புமே அன்றி நமக்கு எவ்வித சகாயமுமில்லை!''

இவ்வாறு கூறி முடித்துத் தமது ஆசனத்தில் அமர்ந்தார் அப்துல் மாலிக்.

''இந்நிலையில் நாம் கிறிஸ்துவ அரசரின் கருணையைத் தான் நாட வேண்டும். இதைத் தவிர வேறு வழியில்லை''.

''இப்போது நாம் முயன்றால் அவரிடமிருந்து கண்ணியமான நிபந்தனைகளை அடையலாம்''

''சரண் அடைவதற்கான சமரசப் பேச்சு வார்த்தைகள் நடத்த வேண்டும்''- இம்முறையில் அவையினர் பலர் பேசினர் மன்னரை வேண்டினர்.

மூஸா அபில் கஸ்ஸான் துள்ளியெழுந்தார்.

''இதற்குள் நாம் ஏன் நம்பிக்கை இழக்க வேண்டும்? அன்று உந்தலுஸை வெற்றிக் கொண்டவர்கள் அதைச் சிறப்புடன் வளர்த்து வளமாக்கிய முன்னோர்களின் இரத்தம் நம்முடைய நாளங்களில் ஓடவில்லையா?.....'' என்று கேட்டார்.

அந்நேரம்:-

''மூஸா? உன் நாளங்களில் ஓடும் இரத்தம்....? என்ற கேள்விக்கு விடை காணுவது போல உந்தலுஸின் வரலாற்றினூடே அவர் நினைவு அதிகதியில் ஊடுருவிச் சென்றது.

அப்போது அவர் மனக் கண் முன்னே....!

7. விடிவெள்ளி!

மூஸா...மூஸா நுஸைர்! திமிஷ்கிலிருந்த கலீபா முதலாம் வலீதின் சார்பில் வட மேற்கு ஆப்பிரிக்காவில் நல்லாட்சி செய்து கொண்டிருந்தார்.

கடலின் மறுபுறம் கோத் மன்னன் ரோடரிக்கின் அக்கிரம ஆட்சி நடந்து கொண்டிருந்தது.

விடிஸாவைக் கொன்று பட்ட மேறிய அவனது கொடுங் கோன்மையின் நிலைக்களனாக இருந்தது ஸ்பெயின். அங்கே செல்வந்தர்களும் மதகுருக்களும் சுகபோகங்களில் சொகுசாக வாழ, ஏழைகள், பாட்டாளிகள், ஏன், யூதர்களும் கூட கசக்கிப் பிழியப்பட்டு வந்தனர். அந்தக் கொடிய அவதியிலிருந்து தப்பி ஆபிரிக்கக் கரையில் வந்து தஞ்சம் புகுந்தனர்.

அவர்களின் இடையறாத முறையீடுகள் ஒருபுறமிருக்க, சிப்தாவின் ஆளுநரான ஜுலியஸ் வேண்டுகோள் வேறு. அவரது மகள் ஃபிளோரா ரோடரிக் மன்னனால் கற்பழிக்கப்பட்ட எத்தனையோ பெண்களில் ஒருத்தி!

அநீதி துடைக்க விழைந்த மூஸா நுஸைர், சிறு படையுடன் தாரிக் என்பவரை ஸ்பெயினுக்கு அனுப்பி வைத்தார். உண்மை நிலையை நேரில் தெரிந்து அப்படை திரும்பிய பிறகு-

ஜியாதின் மைந்தர் தாரிக்கை தம் பால் அழைத்தார் மூஸா நுஸைர்.

அவரால் விலைக்கு வாங்கப்பட்டு செல்வமாக வளர்க்கப் பட்ட பெர்பர் சிறுவர்தான் இன்று வீரமும் விசுவாசமும் நிறைந்த வாலிபராக வளர்ந்திருந்தார். திறமிக்க ஜனாத்தா கோத்திரத்தைச் சேர்ந்த அந்த உற்சாகமிக்க இளைஞரான தாரீக்கை நோக்கி மூஸா கூறினார்:

''தாரிக்! கடலுக்கப்பால் ஸ்பெயினில் கொடுங்கோன்மை தலை தூக்கி நிற்கிறது. ஏழை எளியவர்கள் துன்புறுத்தப்படு கிறார்கள்; பெண்களின் கற்பு சூறையாடப் படுகிறது. இவ்வாறு நம்மிடம் தஞ்சமடைந்தவர்கள் கூறியதை உறுதிப் படுத்துவதாகத்

தானே இருக்கிறது தாரிக் கொண்டு வந்த சேதி! அராஜகம், அக்கிரமம், அநீதி எங்கு நடந்தாலும் அவற்றைத் துடைப்பது இறைவழி நடக்கும் இஸ்லாமியரின் கடமை அன்றோ?''

''ஆம், நிச்சயமாக!'' என்று கூறினார் தாரிக். அவருள்ளத்தில் துள்ளியெழுந்த இஸ்லாமிய உணர்வில் தோய்ந்து வந்தன அவர் வார்த்தைகள்.

''உடனடியாக நாம் ஆவன செய்ய முனைய வேண்டும்!'' என்றார்.

''உண்மைதான்! நம்முடைய பெரும் படையொன்றை ஸ்பெயினுக்கு அனுப்பலாம் என்று நினைக்கிறேன். இப்படை யெடுப்பில் ஜுலியனும் நேரில் வந்து உதவி செய்வதாகக் கூறுகிறார்! நீர் என்ன சொல்லுகிறீர்?''

''அப்படியானால், படை அனுப்ப வேண்டியதுதான்!''

''அதை உம்முடைய தலைமையிலே அனுப்ப வேண்டியது தான்!''

''என் தலைமையிலா!''- கண்கள் அகல விரிய, உணர்ச்சி பொங்கும் குரலில் வியப்பு மீறக் கேட்டார் தாரிக்.

''ஆம்! உம்முடைய தலைமையிலேயே அனுப்பப் போகிறேன். உம் மீது எனக்கு நம்பிக்கையுண்டு ''என்றார் மூஸா நுஸைர்.

''சற்று நேரம் மவுனமாக இருந்தார். தாரிக்- அவர் உள்ளத்தில் அன்று இருபதே வயது நிரம்பிய உஸாமாவை அண்ணல் முஹம்மது (ஸல்) அவர்கள் ரோமர்கள் மீது படையெடுத்துச் செல்லும் வீரர் களுக்குத் தளபதியாக நியமித்தது நினைவுக்கு வந்ததோ என்னவோ, நம்பிக்கையுடன் தமக்கு தரப்பட்ட பொறுப்பை ஏற்கச் சித்தமானார்.

''தங்கள் உத்திரவு!'' என்றார்.

அவர் தலைமையில் ஏழாயிரம் முஸ்லிம் வீரர்கள் புறப்பட்டுச் செல்வதற்குக் கப்பல்களும் மற்ற ஏற்பாடுகளும் 'மளமள' வென்று நடந்தன.

கி.பி.711 சங்கையான ரஜப் திங்கள் முதலாம் நாள்.

தாரிக்கையும் அவரது வீரர்களையும் ஏற்றிச் சென்ற கப்பல்கள் பாய் விரித்து நேர் வடக்கே துரிதமாகப் பாய்ந்து சென்றன.

ஓரிரவு: நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாரிக்கின் கனவில் தோன்றினார்கள்.

அது புத்தம் புதியதோர் நாட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்த அவ் வாலிபரது நம்பிக்கைக்கு மேலும் உரமேற்றியது.

நாட்களின் ஓட்டத்திலேயே ஸ்பெயின் விரைவில் நெருங்கி வந்தது. மெல்ல மெல்ல அதன் கரை முஸ்லிம்களின் கண்கள் முன் விரிந்து வளர்ந்து வந்தது.

அதோ! சிங்கமுகம் போலத் தோற்றமளிக்கும் குன்று!

அதன் அடிவாரத்தில் அலை புரண்டு கொண்டிருந்த கரையோரமாகக் கப்பல்கள் ஒவ்வொன்றாக அணைந்து நங்கூரம் பாய்ச்சின.

இருண்டு கிடந்த ஸ்பெயின் மீது ஒளிவீசும் 'விடிவெள்ளி' யாகத் தரையிறங்கினார் தாரிக்!

சிங்கமுகக் குன்று விடிவெள்ளிக் குன்று- ஜபலல்தாரிக் ஆகியது.

அக்குன்றினை அணைத்து நின்ற கப்பல்களிலிருந்து வீரர்கள் எல்லாம் உற்சாகமுடன் இறங்கி ஸ்பெயின் நாட்டு மண்ணை மிதித்து நிமிர்ந்தனர்.

''படகுகளையெல்லாம் எரித்து விடுங்கள்!'' தாரிக்கிடமிருந்து அவர்களுக்குக் கட்டளை பிறந்தது.

'முன்பின் தெரியாத வேற்று நாடு. போகுமிடமெல்லாம் பகைவர்கள் தானே இருப்பார்கள்? நாம் வெற்றியடைந்தால் சரி! தோல்வியடைந்தாலோ ....மீண்டும் தாயகம் திரும்ப வேண்டமா? படகுகளை எரித்து விட்டால்---?'-

முஸ்லிம் வீரர்கள் கலக்கம் ததும்பும் விழிகளுடன் தங்கள் தளபதியை நோக்கினர்.

''படகுகளை எரித்து விட்டால் பிறகு என்ன செய்வது? ஒரு சிலர் வாய் திறந்தே கேட்டு விட்டார்கள். மற்றவர்களின் முகக்

குறிகளிலிருந்து அவர்களது நெஞ்சங்களை நிறைத்திருந்த தயக்கத்தை உணர்ந்தார் தாரிக்.

''வீரர்களே! இனி இந்தக் படகுகள் நமக்கேன்? மீண்டும் தாயகம் திரும்பிச் செல்லவா நாம் இங்கு வந்தோம்? நமக்கு முன்னே வாட்களை உருவியவர்களாக எதிரிகள் நிற்கின்றனர். நமக்குப் பின்னே பேரலை எழுப்பும் பெருங்கடல் விரிந்து கிடக்கிறது. வீரத்தையும் துணிவையும் துணையாகக் கொள்வோம். வாருங்கள்! முன்னேறிச் செல்வோம்! முன் வைத்த காலைப் பின் வைப்பது நமது ஆண்மைக்கு அழகல்ல. எதிரியுடன் தீரமுடன் போராடுவோம். வெற்றி அல்லது வீர மரணம்!

''நாம் வெற்றியடைந்தால், நமக்குப் புதிய நாடு கிடைக்கும். இறந்து பட்டால், வரலாற்றில் சிறந்த இடம் கிடைக்கும். இதை விட்டுத் தோல்வியுடன் தாயகம் திரும்புவதா? வாட்களை உருவுங்கள்! வெற்றி பெறப் புறப்படுங்கள்! இறைவன் நமக்குத் துணை நிற்பான்!''

தாரிக்கின் உணர்ச்சி மிக்க வார்த்தைகள் முஸ்லிம் வீரர்களின் நெஞ்சங்களில் வீரக் கனலை மூட்டியது.

கொஞ்சமும் சுணங்காது அவர்கள் ஓடிச் சென்று கரையோரம் நங்கூரம் பாய்ச்சி நின்ற படகுகளுக்குத் தீமூட்டினர்.

எரிந்து கொண்டிருந்த படகுகளிலிருந்து வானளாவ எழுந்த செந்நாப் பிழம்புகளைப் போல, பகைவர்களை முறியடித்து வெற்றி காண வேண்டுமென்ற எண்ணம் முஸ்லிம் வீரர்களின் உள்ளங்களில் கொழுந்து விட்டு எரியத் துவங்கியது.

அந் நிலையில்-

''அல்லாஹு அக்பர்! அல்லாஹு அக்பர்! அல்லாஹு அக்பர்!''- உணர்ச்சி துள்ளித் தெரிக்கும் குரலில் முழங்கினார் தாரிக்.

ஜபல் அல்தாரிக்கில் முட்டி மோதிய அலைகளின் பேரிரைச் சலைப் போல் முஸ்லிம் வீரர்களும் அடுத்தடுத்து முழங்கினர்.

''அல்லாஹு அக்பர்! அல்லாஹ் மாபெரியவன்!''

அவ்வாறு அவர்கள் தங்களைத் தடுத்து நிறுத்த முயன்ற கோத் இனத்தாரை வெற்றி கண்டவர்களாகத் துரிதமாக முன்னேறிச் சென்றனர்.

அதையறிந்த ரோடரிக் பெரும்படை திரட்டினான். மூஸாவின் உதவி கோரினார் தாரிக்.

ஷவ்வால் திங்கள் பிறக்க ஈதின் இளம்பிறை தோன்ற இன்னும் இரண்டே நாட்கள் இருந்தன.

ஜபல் அல் தாரிக்கிலிருந்து வடக்கே 40 மைல் தொலைவில் இன்ப வெளி (வாதீபக்கா சமவெளி) யில் (வாதீலக்கா என்னும்) மகிழ்ச்சி ஆற்றின் கரையின் தென்புறத்தில் படையிறங்கினார் தளபதி தாரிக்.

மறுகரையில் ரோடரிக் முகாமிட்டான்.

இப்போது தாரீக்கின் தலைமையில் பன்னிரண்டாயிரம் முஸ்லிம் வீரர்கள் இருந்தனர். ரோடரிக்கின் படையிலோ ஒரு லட்சம் வீரர்கள்!

''வெற்றி நமக்கே!'' என்று எண்ணி இறுமாந்திருந்தான் ரோடரிக்.

அவனுக்கென்று தந்தத்தால் செய்த சிம்மாசனம். அதில் பதித்திருந்த நவரத்தினங்கள் கண்ணைப் பறிப்பது போல பளிச்சிட்டன. அவன் கழுத்திலே முத்து மாலை. மேனியின் மீது பளபளக்கும் பட்டாடைகள். குடம் குடமாக மது குடித்தான். மதுவின் போதையிலே அழகிய மங்கையரை அணைத்து மகிழ்ந்தான்.

அவன் கூடாரத்தில் மட்டுமின்றி கிறிஸ்துவ முகாம் எங்குமே ஒரே கூத்தும் கும்மாளமுமாக இருந்தது!

இறையானை மறக்காத முஸ்லிம் வீரர்கள் நோன்பு நோற்றிருந்தனர். அவர்கள் உடம்புகளிலே முரட்டுத் துணிகள்! வாரி விடாத தலை-தாடி வளர்ந்த முகத்துடன் எளிய தோற்றம் கட்டுப்பாடான நடை முறையுடன் அவர்கள் இயங்கி வந்தனர்.

அதிகாலையில் இரு படைகளும் நேருக்கு நேர் அணி வகுத்து நின்றன.

சேணங்கள் இல்லாக் குதிரைகள் மீது முஸ்லிம்கள் ஏறியிருந்தனர். ஸ்பானியரோ, தங்க லாடங்கள் அடித்த புரவிகள், மீதமர்ந்து, பட்டு, பீதாம்பரங்கள் அணிந்தவர்களாகக் காணப்பட்டனர்.

சடாரென இரு படைகளும் ஆவேசமுடன் மோதின.

மாலைவரை, எவருமே பின்னடையவில்லை. பேரலைகள், மலைப்பாறைகள் முட்டி மோதுவதைப் போல பொருதிச் சண்டையிட்டனர்.

களமெங்கும் இறந்துபட்ட முஸ்லிம்களின் சடலங்களை விட அதிகமாகக் கிறிஸ்துவர்களின் பிணங்கள்தான் குவிந்து கிடந்தன.

இரவு வர, போர் நிறுத்தம் செய்து வீரர்கள் தத்தம் முகாம் திரும்பினர்.

ஏழு நாட்கள் வரை கடுமையான போர்.

எட்டாவது நாள்.

''அல்லாஹு அக்பர்!'' என்ற வீர முழக்கத்துடன் எதிரி அணிகளினூடே பாய்ந்தார் தீரர் தாரிக்.

அவரைப் போலவே அவரது வீரர்களும் களத்தில் இயங்கலாயினர்.

எதிர்ப் பட்டவர்களை வெட்டி வீழ்த்திக் கொண்டே மின்னல் வேகத்தில் முன்னேறினார் முஸ்லிம் தளபதி.

என்றாலும், அவரது முக்கிய இலக்கு ரோடெரிக்! அவனை நோக்கி விரைந்தார் தாரிக்.

நெஞ்சின் அகம்பாவம் பட்டுத் தெறிக்கும் பார்வையுடன் அதோ! அவன் ஆற்றோரம் வந்து கொண்டிருந்தான். நேருக்கு நேர் அவனைச் சந்தித்தார், தாரிக். கொஞ்சமும் அஞ்சாமல் இறுமாப்புடன் தம்மை நோக்கிய அவனுக்கு அவகாசம் தராமலே, தமது ஈட்டியைத் திடீரென ஓங்கி அவன் நெஞ்சில் பலமாகப் பாய்ச்சினார். அது குத்தித் துளைத்த இடத்திலிருந்து இரத்தம் பீறிட்டுப் பாய்ந்தது. அந்தத் தாக்குதலின் வேகத்திலே ரோடரிக்சி ன் கழுத்தில் கிடந்த முத்து மாலை அறுந்து, முத்துக்கள் சிதறி விழுந்தன.

அவனும் வேதனை தாளாத நிலையில் ஆற்றில் குதித்து மாண்டான். அதற்கு மேல் அவனது படை களும் முஸ்லிம்களின் சூடுகண்ட தாக்குதலை எதிர்த்துச் சமாளிக்க முடியாமல் திணறிப் பின் வாங்கின, சின்னா பின்னமாகச் சிதறி ஓடின. வெற்றி கண்ட தாரிக் தம்முடைய படைகளைப் பிரித்தார்.

குர்த்துபா, கர்னாதா, மாலசா, தத்மீர் ஆகிய இடங்களை நோக்கி வடக்கே நான்கு பிரிவுகளை அனுப்பினார்.

தலைமைப் பிரிவுடன் தாமே துலைத்துலா நோக்கிச் சென்றார். அது அன்றைய ஸ்பெயினின் தலை நகர். குர்த்துபாவிலிருந்து மூன்று நாள் பயணத் தொலைவில் இருந்தது.

ஆறு, மலை வெளிகளைத் தாண்டி இஸ்லாமியப் படை அங்கு வந்து சேர்ந்த போது நகர் வெறிச்சோடிக் கிடந்தது! மக்கள் சந்தடி வெகுவாகக் குறைந்து காணப்பட்டது.

காரணம்? அங்கிருந்த கிறிஸ்துவ ஆடவர், பெண்டிர், குழந்கைள் அனைவருமே மலைக்குப் பின்னால் போய்ப் பதுங்கிக் கொண்டனர்.

அவ்வாறு வெளியேறாமல் இருந்த யூதர்களிடம் நகரை ஒப்படைத்தார் தாரிக்.

அந்நேரம்-

வாதீயில் கபீர் என்னும் பேராற்றின் கரையிலிருந்த குர்த்து பாவை எழுநூறு வீரர்களுடன் தளபதி முகித் முற்றுகையிட்டார்.

மாலை மயங்கி பயங்கர இரவு வந்தது.

பனிமழை கொட்ட ஆரம்பித்தது. அப்பொழுது வீசிய புயலிலே உறை பனிச் செதில்கள் பஞ்சுப் பிரிகளைப் போல தரையில் வீழ்ந்து அடுக்கடுக்காகப் படிந்து வந்தன. பூமியெங்கும் வெண்பட்டு மெத்தை விரித்தது போன்ற பனிப் பரப்பு! அதனூடே குளம்பொலிகள் கேட்காத நிலையில் மெல்ல நடை போட்டுச் சென்ற புரவிகள் மீதமர்ந்து கோட்டையை நோக்கிச் சென்றனர், முஸ்லிம் வீரர்கள்.

அங்கே சுவரில் பிளவுபட்டிருந்த பகுதியில் அவர்கள் தங்கள் தாக்குதலைத் துவங்கினர்.

கோட்டை மதிலை எவ்வாறு கடப்பது?'என்று முஸ்லிம் வீரர்கள் ஆராய்ந்து வந்த நிலையில்-

அதோ, ஒரு அத்திமரம்! சுவரின் பிளவுக்கு நேரே கிளைகள் பரப்பி நின்று கொண்டிருந்தது.

ஓடிச் சென்று அதன் மீது ஒரு முஸ்லிம் வீரர் ஏறினார். உயரமான கிளையொன்றிலிருந்து துணிந்து கோட்டை மதில் மீது பாய்ந்தார். 'அல் ஹம்துலில்லாஹ்!'-

அங்கு தம்மைச் சற்று ஆசுவாசப்படுத்தியவராக நின்றவர், தமது தலைப்பாகையைக் கலைத்தார். அதன் ஒரு முனையைத் தாம் பிடித்துக் கொண்டு மறு முனையை கீழே நின்று கொண்டிருந்த வர்களை நோக்கி வீசினார்.

பிறகு அவர் ஏதோ சைகை காட்டினார்.

அப்பால் தமது கையிலிருந்த முனையை அவர் இறுகப் பிடித்து நிற்க, அவர் தலைப்பாகைத் துணியின் துணை கொண்டு முஸ்லிம் வீரர்கள் ஒவ்வொருவராகக் கோட்டை மதிலில் காலூன்றியவர்களாக மெல்ல மெல்ல ஏறி, அதன் மேல் தளம் சென்றடைந்தார்கள்.

அதைக் காத்து நின்ற கிறிஸ்துவ வீரர்களை அவர்கள் கொஞ்சமும் எதிர்பாராத நிலையில் தாக்கினர்.

அவர்களை எதிர்த்து நிற்க முடியாமல் காவல் வீரர்கள் முஸ்லிம்களுக்குக் கோட்டை வாயிலைத் திறந்து விட்டனர்.

இஸ்லாமியப் படை கோட்டையினுள்ளே புகுந்தது.

குர்த்துபா போரின்றி முஸ்லிம்களிடம் சரணடைந்தது!

அதே போல மாலகா, கர்னாதா ஆகிய நகரங்கள் அவர்கள் வசம் எளிதில் விழ, அல் ஜஸீரா பகுதி முழுவதுமே முஸ்லிம்கள் வசமாகியது.

அவர்கள் வெற்றி கண்ட இடங்களில் எல்லாம் கிறிஸ்துவக் குறுநில மன்னர்கள், பிரபுக்கள், மதத் தலைவர்கள் முஸ்லிம்களிடம் பணிந்து போயினர். அல்லது, அவர்களைச் சந்திக்க விரும்பாமல் ஓடினர்.

ஏழைகளும் அடிமைகளும் யூதர்களும் முஸ்லிம்களை விடுதலை வீரர்கள் என்று வாழ்த்தி வரவேற்றனர்.

அதற்கிடையில்-

ரமலான் திங்களின் போதே பதினெட்டாயிரம் முஸ்லிம்

வீரர்களுடன் மூஸா நுஸைரே ஸ்பெயின் கரையில் வந்திறங்கி விட்டார்.

அவருடன் வந்தவர்களில் பலர் யமன் தேசத்துச் சிறந்த குடும்பங்களைச் சேர்ந்தவர்களும் நாயகத் தோழர்களின் சந்ததியினர்களும் இருந்தனர்.

அவர்களுடன், தாரிக் செல்லாத பகுதிகளுக்குத் தாமே படை நடத்திச் சென்றார் மூஸா.

மதீனா ஸலீம், கர்மூனா ஆகிய நகரங்களைவிழச் செய்த பின்னர் அழகிய நகரான இஷ்பீலியாவை பல மாதங்கள் முற்றுகையிட்டுக் கைப்பற்றினார்.

பின்னர் அதன் அருகிலிந்த மாரிடா என்ற கோட்டை நகரையும் படைகளுடன் சூழ்ந்து நின்றார். ஆனால் அக்கோட்டை அவர் முற்றுகையைத் தாக்குப் பிடித்து நின்றது.

'என்ன செய்வது?'- மூஸாவும் அவரது படைத் தலைவர்களும் பலவாறாகக் கலந்தாலோசித்து வந்தனர்.

ஒரு நாள்.....

பெரிய உருளைகள் மீது வீட்டைப் போல் அமைந்திருந்த ஒரு பொறியை முஸ்லிம் வீரர்கள் சிலர் தள்ளிக் கொண்டு வந்து கோட்டை மதிலருகே நிறுத்தினர்.

சந்தர்ப்பம், சூழ்நிலைக்கேற்ப முஸ்லிம்கள் புதிதாக உருவாக்கிய 'துப்பாபா'- நகரும் கோட்டை அது.

அதனுள்ளே பல முஸ்லிம் வீரர்கள் மறைந்திருந்தனர். எதிரிகள் எய்த ஈட்டியோ தொடுத்த அம்புகளோ அவர்களை நேரடியாகத் தாக்கி எளிதில் கொல்லவோ காயப்படுத்தவோ முடியவில்லை.

துப்பாபாவிலிருந்த வீரர்கள் துளைகள் வழியாக வேண்டிய சாதனங்களை இயக்கி கோட்டை வாயிலை நிதானமாக இடிக்கவும் துளைக்கவும் முற்பட்டனர்.

விரைவில் கோட்டை விழுந்தது.

அடுத்து, லைவா, பாஜா ஆகிய இடங்களைக் கைப் பற்றிய பிறகு இஷ்பீலியா திரும்பினார் மூஸா நுஸைர்.

அவரைச் சந்திக்க தாரிக் புறப்பட்டுச் சென்றார்.

தலைவரும் தளபதியும் துலைத்துலாவில் சந்தித்தனர்; உள்ளம் திறந்து பேசினர்.

அதனால் இருவரும் ஒரு மனப்பட்டவர்களாக தங்கள் படைகளை ஒன்றிணைத்து அராகூன் மாகாணத்தை வென்று வரப் புறப்பட்டனர்.

வடக்கிலும், வட கிழக்கிலும் ஸரகுஸ்தா, தாரக்கூனா, பாஷிலூனா போன்ற கோட்டை நகரங்கள் முஸ்லிம்களுக்குத் தங்கள் வாயில்களைத் திறந்து விட்டன.

இரண்டே ஆண்டுகளில் ஜபல் அல் புர்த் மலைத் தொடர் வரை ஸ்பெயின் முழுவதும் இஸ்லாமியக் கொடியின் கீழ் வந்தது. அடுத்து சில ஆண்டுகளில், புர்த்துக்கல் வெல்லப்பட்டு, அல்கர்பு (மேற்கு) என்ற தனி மாகாணமாக முஸ்லிம் அரசுடன் இணைக்கப்பட்டது.

அஷ்தூரிஷில் மட்டும் கிறிஸ்துவர்கள் இன்னும் முஸ்லிம்களை எதிர்த்து நின்றனர்.

வட மேற்கில் சலீஷியாவை வெல்லுமாறு தாரிக்கை அனுப்பி விட்டு, வடக்கே பிரான்சுக்குச் செல்ல ஜபல் அல்புர்தைக் கடந்து செல்லலானார் மூஸா.

வானளாவ உயர்ந்து நின்ற அம்மலை உச்சியில் நின்றவராக எதிரே விரிந்து பரந்து கிடந்த சூழ்வெளியை நோக்கினார்.

அப்போது தோன்றிய பேரெண்ணம் அவர் நெஞ்சமெல்லாம் வியாப்பித்தது-

'ஐரோப்பா முழுவதையும் நாம் வெற்றி காண வேண்டும். முஸ்லிம்கள் ஆட்சியின் கீழ் கொண்டு வர வேண்டும். கீழை ரோமப் பேரரசின் தலைநகர் குஸ்துன்துன்யா செல்ல வேண்டும். அதற்கப் பால் சிறிய ஆசியாவைக் கடந்து ஷாம் போக வேண்டும். அங்கே திமிஷ்கில் கலீபா வலீதைச் சந்திக்க வேண்டும்!'

அந்நேரம், கிறிஸ்தவ உலகம் வேற்றுமைகளாலும் உட்குரோதங்களாலும் பிளவுண்டு கிடந்தது. அதனால் படைகளை ஒன்று திரட்டி முன்னேறி வரும் அரபியரைத் தடுத்து நிறுத்தப் போதிய ஆற்றல் பெற்ற கிறிஸ்துவ அரசர் எவரும் இருக்கவில்லை.

ஆக, ஐரோப்பா மூஸாவின் காலடியில் கிடந்தது. அந்நிலையில், அவர் இத்தாலி செல்லவிருந்த நேரம்-

கலீபா வலீதிடமிருந்து செய்தி வந்தது:

நீரும் தாரிக்கும் உடனே ஆப்பிரிக்கா திரும்பிச் செல்ல வேண்டியது!''

மூஸா அதைக் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. அவரது எண்ணம் வெறும் ஆசைக் கனவாக- ஆகாயக் கோட்டையாகவே நின்று விட்டது. அல்ல, மணல் வீடு போல் ஒரு நொடியிலே சரிந்து வீழ்ந்து விட்டது!

என்றாலும், கலீபாவின் கட்டளையை தட்ட விரும்ப வில்லை. உடனே மலைகள் சூழப் பயங்கரமான காடுகள் அடர்ந்த கலீஷியா வந்தார். அதன் பிரதானக் கோட்டையைக் கைப்பற்றி, பகைவர்களை அஷ்தூரிஷின் பாறைகளின் குறுவழிகளினூடே பயந்தோடும்படிச் செய்தார்.

வயது முதிர்ந்த நிலையிலும், அவர் மிகுந்த உத்வேகத்துடன் இயங்கினார் எல்லாத் திசைகளிலிருந்தும் எதிரிகளை நோக்கினார்.

பேலயோ அரசன் மட்டும் மிஞ்சி நின்றான். அவனையும் அடக்கி விட்டால், முஸ்லிம்களுக்கு எதிராக ஸ்பெயினில் எவரும் எஞ்சியிரார்..

ஆனால் அவன் நல்ல காலம், ஏனோ அவனை வெல்லாமல் முஸ்லிம் வீரர்கள் திரும்பினர்.

அவனோ மேலும் அரண்கள் அமைத்து, ஆதரவு திரட்டி, ஸ்பெயின் நாட்டில் தங்கியிருந்த முஸ்லிம்களை அழித்தொழிக்க உறுதி பூண்டான்.

8. வீரப் பரம்பரை

காலம் விரைந்தோடியது.

அரபு, பெர்பர், ஸ்பானிய முஸ்லிம்களிடையே வேற்றுமைகள், உட்பகைகள், குரோதங்கள் வளர்ந்தன.

வடக்கிலிருந்து பேலயோவின் சந்ததியினர் படையெடுத்து வந்தால், அவர்கள் ஒன்று சேர்வதும் பிறகு மீண்டும் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்வதுமாக இருந்தார்கள்.

திமிஷ்கின் அப்பாஸியர் ஆட்சியைக் கைப்பற்ற, கலீபா ஸஃபாஹ் உமய்யா சந்ததியினர்கள் மீது வஞ்சம் தீர்க்க முனைந்தனர்.

அவரது கட்டளையின் பேரில் நடந்து கொண்டிருந்த கொலைச் செயல்களிலிருந்து மயிரிழையில் தப்பி, தலைநகரிலிருந்து வெளியேறினார், ஹிஷாமின் பேரன் அப்துர் ரஹ்மான்.

அரசாங்க ஒற்றர்களின் பிடியில் அகப்படாமல் அங்குமிங்குமாகத் திரிந்த அவர், பத்ர் என்னும் விடுதலை பெற்ற அடிமையுடன் பலஸ்தீனம் வந்தார். கையிலிருந்த காசெல்லாம் கரைந்து விட, ஏழையாகிப் பல இன்னல்களை அனுபவித்தார்.

அங்கிருந்து எகிப்து வந்த அவர், சில காலம் சென்று கய்ரவான் வந்தார். அதன் ஆளுநர் காட்டிய பகைமை மனப்பான்மை விரைவில் அவரை வடமேற்கு ஆபிரிக்காவிற்குச் செல்லத் தூண்டியது.

மர்கஷில் வாழ்ந்து வந்த பெர்பர்களில் மிக்னாஸா கோத்திரத்தாரின் ஆதரவை அவர் முதலில் பெற்றார். அப்பால் முன்னாளில் தம் தாயார் அடிமைப்பட்டிருந்த நவ்ஸா கோத்திரத்தாரிடையே வசித்து வரலாயினார். நாட்கள் செல்லச் செல்ல, அவரது அரசியல் திட்டங்கள் அவர்களுக்குப் பிடிக்காமல் போயிற்று.

அந்நிலையில், அலை கடலுக்கப்பால், தம்முடைய முன்னோர்கள் கண்ட முஸ்லிம் அரசை ஆள எண்ணினார், அப்துர் ரஹ்மான். அதற்கான ஆதரவு தேடி அங்கிருந்த தமது உமய்யா வமிசத்தவர்களிடம் தமது நம்பிக்கைக்குரிய 'மவ்லா' பத்ரை அனுப்பி வைத்தார்.

அவரிடமிருந்து வந்த வேண்டுகோளை அவர்கள் வெகு உற்சாகமுடன் வரவேற்றனர். அந்நாட்டிற்கு அவரை நேரிலேயே வரும்படி அழைப்பு விடுத்தனர்.

அவர்கள் அனுப்பித் தந்த பணத்தையும் கப்பலையும் கொண்டு அல்முனக்காபு என்னுமிடத்தில் வந்திறங்கினார், அப்துர் ரஹ்மான்.

மூதார் கூட்டத்தாரின் கொடுமைகளால் அவதிப் பட்டுக் கிடந்த யமனியர்கள் அவரது கொடியின் கீழ் ஒன்று திரண்டனர்.

அப்போது ஐபீரிய தீபகற்பத்தை அப்பாஸிய கலீபாவின் மேலதிகாரத்தைப் பெயரளவில் ஒப்புக் கொண்டு, அநேகமாக சுயேச்சையாகவே ஆண்டு கொண்டிருந்தார், யூசுஃப் அல்ஃபிஹ்ரீ.

அவருடைய படைகளை மஸாராவில் சந்தித்தார் அப்துர் ரஹ்மான். களத்திலே ஆவேசமுடன் போராடி, பெருஞ்சேதம் விளைவித்த அவர் எதிரியைப் பணியச் செய்தார்.

தண்டனைக்குள்ளாவதற்குத் தேடப்பட்ட நாடோடி நாடாளும் அமீர் ஆனார். ஸ்பெயின் வந்து 'புகுந்தவர்' என்பதால் 'அல்தாக்கீல்' ஆனார்.

சண்டைகளால் பிளவு பட்டுச் சிதறிக் கிடந்த தமது அரசில் ஒழுங்கு- ஒன்றிணைந்து கொண்டு வர முயன்றார் அவர். அதை அரபு குறுநில மன்னர்கள் விரும்பவில்லை. தங்கள் சுதந்தரமான போக்கிற்கு முடிவு ஏற்பட்டு விடுமே என்று அஞ்சினர்.

அவ்வெண்ணத்தில் அல்தாக்கீலுக்கு எதிர்ப்புக் காட்டிய அவர்களுக்கு, ஜபல் அல் புர்துக்கு அப்பாலிருந்து பிரான்சு நாட்டு மன்னர் ஸப்பினும், அவர் மறைவுக்குப் பிறகு, அவரது மைந்தர் சார்லமோனும் ஆதரவு காட்டி வந்தனர். அதனால் உந்தலுஸில் அடிக்கடி தொல்லைகள் ஏற்பட்டு வந்தன.

குர்த்துபாவின் நேரதிகாரத்திலிருந்து முஸ்லிம் ஆளுநர்களைப் பிரித்துவிட பேரரசர் சார்லமோன் தொடர்ந்து முயன்று வந்தார்.

அந்த ஆளுநர்களின் கிளர்ச்சிகளை அல் தாக்கீல் சமாளித்துக் கொண்டிருந்த வேளை-

உந்தலுஸின் வடபகுதிகளில் கிறிஸ்தவர்கள் அடிக்கடி புகுந்து ஊர்களை எரித்தனர். வீடுகளையும் வயல்களையும் அழித்தனர்.

மக்களில் பலரை அடிமைகளாகக் கடத்திச் சென்றனர்.

அல்ஃபான்ஸோவின் மைந்தன் ஃபுரூபெல்லாத என்பான் லூகோ, ஒபொர்ட்டோ, ஷனமான்கா, காஷ்திலியா, ஸம்மூரா, செகோவியா ஆகிய இடங்களைக் கைப்பற்றினார்.

அந்நேரம், முஸ்லிம் கிளர்ச்சிக்காரர்களில் ஒருவர் உதவி கோர மலைகளைக் கடந்து, வழியெல்லாம் நாசம் விளைவித்தவராக சரகுஸ்தா வந்தார், சார்லமோன்.

அங்கே அவரை நாயகத் தோழர் உபாதாவின் சந்ததியினரான ஹுஸேன்யஹ்யா அல் அன்சாரி பலமாக எதிர்த்து நின்றார். என்றாலும், அவர் பின்னடையும் படி செய்யப்பட்டார்.

ஏதோ நம்பிக்கைத் துரோகம் நடந்து விட்டதாக எண்ணிய சார்லமோன் எப்படியோ தமது நாடு திரும்பலானார்.

அதன் பிறகு சார்லமோன் அப்துர் ரஹ்மானுடன் சமாதான உடன்பாடு செய்து கொண்டார்.

அல் தாக்கீல் மறைந்த பிறகு மீண்டும் தீப கற்பத்தில் குழப்பங்களைத் தூண்டிவிட்டு, உந்தலுஸ்பால் துரோக சிந்தையுடன் நடந்து வந்தனர் பரங்கியர்.

அவர்களுக்கு எதிராக வடக்கு நோக்கி இரு படைகளை அனுப்பி வைத்தார் அப்துர் ரஹ்மான் மைந்தர் ஹிஷாம்.

அப்படைகளில் ஒன்று கட்டலோனியா வழியே சென்று மீண்டும் அர்பூனோவை கைப்பற்றியதுடன், மேலும் பல ஊர்களை முஸ்லிம்கள் தங்களது வசப்படுத்தினர். அவர்களிடம் ஓர்பியனா ஆற்றங்கரையில் மைந்தரைப் பாதுகாத்திருந்த துலூய் பெரும் பிரபு படு தோல்வியுற்றார்.

அதே நேரம், முஸ்லிம்களின் மற்றொரு படை கலீஷியரை அதிகமான உயிர்ச் சேதம் அடையச் செய்து, அவர்களைச் சமாதானம் கோரும்படி செய்தது.

ஹிஷாமுக்குப் பிறகு பட்டம் சூட்டிக் கொண்ட ஹாக்கமுக்கு எதிராக அவருடைய சிறிய தந்தையாரில் ஒருவரான அப்துல்லாஹ் அய்லா சாப்பள் சென்று, சார்லமோனிடமிருந்து உதவி பெற்று, துலைத்துலாவைக் கைப்பற்றினார்.

மற்றொருவரான ஹீலைமான் பவன்ஸிய்யாவைத் தம் வசப் படுத்திக் கொண்டார்.

சார்லமோன் மைந்தர்களான லூபி, சார்லஸ் இருவரும் வடக்கிலிருந்து படைகளுடன் பாய்ந்து வந்தனர். அராகூனிலிருந்து சலீஷிய சிற்றரசன் அல்ஃபான்ஸோ உந்தலுஸில் புகுந்தான்.

அவனைத் தோற்கடித்து, பரங்கியரை ஜபல் அல்புர்துக்கு அப்பால் எப்ரோவுக்கு விரட்டியடித்த ஹாக்கம் 'அல் முந்தஸிர்' (படையெடுப்பவர்) 'அல் முஸப்பர்' (வெற்றியாளர்) ஆனார்.

அவரையடுத்து, அவர் மைந்தர் அப்துர் ரஹ்மான் 'அல் அவ்சத்'(நடுவழியாளர்) ஆட்சிக்கு வந்தார்.

ஒரு காலத்தில் துலைத்துலா தங்கள் பெருமைக்குரிய தலை நகராக இருந்து வந்ததை கிறிஸ்துவர்கள் மறந்து விடவில்லை. இப்போது அது முஸ்லிம்களின் வசமிருந்து வந்ததை எண்ண எண்ண அவர்கள் பகைமை கொழுந்து விட்டெரிந்து கொண்டிருந்தது.

லியூன் சிற்றரசன் இரண்டாம் அல்ஃபான்ஸோ மதீனா ஸலீம் மாவட்டத்தில் நுழைந்தான். மற்ற கிறிஸ்துவக் கூட்டத்தினர்களும் முஸ்லிம் பிரதேசங்களில் தங்கள் படைகளுடன் புகுந்தனர்.

அவர்களை எதிர்த்துச் சென்ற முஸ்லிம்கள், அவர்களுடைய கோட்டை கொத்தளங்கள், கோபுரங்கள் பலவற்றை இடித்துத் தள்ளினர். எரித்தனர். லியூன் நகரமே பாழ்பட்டது.

அதே போல, கட்டலோனியாவைத் தாக்கிய பரங்கியரும் படு தோல்வியுடன் பின்னடைந்தோடும் படிச் செய்யப்பட்டனர்.

அல் அவ்சத்தின் மைந்தர் முஹம்மத் சிம்மாதனமேறிய பிறகு, மத்தியத் தரைக் கடலில் மீண்டும் வடக்கேயிருந்து, 'உர்தூமானிய் யூன்' என்ற 'மாஜூஸ்' கூட்டத்தினர் தோன்றலாயினர். ஆனால் அவர்களுடைய கப்பல்களுக்கு பலத்த சேதங்களை விளைவித்து, அவர்களை விரட்டியடித்தது, முஸ்லிம் கப்பற் படை.

துலைத்துலா வாசிகள், லியூன் சிற்றரசன் உதவியுடன், படை புறப்பட்டு வர, அந்தக் கூட்டுப் படைகளை முஹம்மத் தாமே நேரில் களஞ் சென்று வாதீஸலீத்கெஹ் அருகில் முறியடித்துக் சரணடையச் செய்தார்.

முஹம்மதின் புதல்வர் அப்துல்லாஹ் ஆட்சியின் போது, ஸ்பானிய, அரபு பெர்பர் முஸ்லிம்களிடையே இடையறாத இனப் போராட்டங்கள். கிளர்ச்சிகள்! அதனால் நாடெங்கும் குழப்பம், கொந்தளிப்பு!

ஏதோ ஒரு கடுங்குற்றத்திற்காகத் தமதுமைந்தர் முஹம்மதுக்கு மரண தண்டனை விதித்தார் அமீர் அப்துல்லாஹ்.

மூன்றுவாரப் பச்சிளம் பாலகரான பிள்ளையை விட்டு விட்டு இறந்தார் முஹம்மது.

மகன் பால் அவ்வளவு கடுமை காட்டியதற்குப் பிராயச்சித்த மாகவோ என்னவோ, பேரர் அப்துர் ரஹ்மானை மிகுந்தவாஞ்சை யுடன் வளர்த்து வந்தார் அப்துல்லாஹ்.

அவர் காலத்துக்குப் பிறகு இருபத்திரண்டு வயது வாலிபராக ஆட்சிப் பொறுப்பேற்றார் அப்துர் ரஹ்மான்

அதை, அவருக்கு மேல் வயதிலும் அனுபவத்திலும் முதிர்ந்த அவரது சிறிய தந்தையாரும் மற்ற உறவினர்களும் உவப்புடன் வரவேற்றனர். நாட்டிற்கு நல்ல காலம் வந்து விட்டதென்று எண்ணினர்.

பாட்டனாரைப் போல அதிகக் கடுமையாகவே அரசு விவகாரங்களில் கடுமையாகவோ, சுற்றி வளைத்தோ நடக்க விரும்பவில்லை அமீர் அப்துர் ரஹ்மான்.

கிளர்ச்சிக்காரர்கள் பால் துணிவான- நேரான கொள்கையை மேற் கொண்டார்.

''உங்கள் கப்பங்களை நாம் விரும்பவில்லை. உங்கள் கோட்டைகளும் நகரங்களுமே எமக்குத் தேவை. கிளர்ச்சியை விட்டுப் பணிந்தால், மன்னிப்புண்டு, இன்றேல் தக்க தண்டனைகளை அளிக்கத் தவறமாட்டோம் ; தயங்க மாட்டோம்'' என்று உறுதியாகத் தெரிவித்தார்.

அதன் பேரில் பல முக்கிய நகரங்கள் விரைவிலேயே அவருக்குப் பணிந்து போயின.

அவ்வாறு தொடங்கிய அமீர் அப்துர் ரஹ்மான் ஆட்சியின் முதல் ஐந்தாண்டுகளில் நாட்டில் கொடிய பஞ்சம் நிலவியது.

ஏராளமான அரபிய பெர்பர்கள் உந்துலுஸிலிருந்து வெளியேறி வட மேற்கு ஆபிரிக்கா சென்றனர்.

அந்நிலையைத் தங்களுக்குச் சாதகமாகக் கொண்டு அல்ஃபான்ஸோ தலைமையில் கலீஷியர் படை திரண்டு வந்தனர்.

காட்டு மிராண்டிகளாக- பண்டத்துக்கு பண்டமாற்றுபவர் களாக- வறியவர்களாக இருந்த கிறிஸ்துவர்கள் உந்தலுஸ் முஸ்லிம் கள் வளங்கொழிக்க வாழ்ந்து வந்ததைக் கண்டு பொறாமை கொண்டனர். பேராசை மீக் கூறியவர்களாயினர். மலைப் பகுதிகளி லிருந்து வந்து முஸ்லிம் பிரதேசத்தில் புகுந்து அடிக்கடி தாக்குதல் நடத்தினர். எந்த நகரத்தை அவர்கள் கைப்பற்றினாலும் அங்கே இரக்கமற்ற முறையில் கொள்ளை, கொலைகள் தான்! அது மட்டுமல்ல!

லியூனைத் தலைநகராகக் கொண்டிருந்த அல்ஃபான்ஸோவும் அவன் சந்ததியினரும் அரபு நாகரிக வளர்ச்சியை வெறுத்து வந்தனர்.

ஆக, நாட்டை மட்டுமின்றி தங்கள் நாகரிகத்தையுமே முஸ்லிம்கள் காப்பாற்ற வேண்டிய நிலை!

இரண்டாம் உர்தூன் தலைமையில் லியூன் வாசிகள் மாரிடா மாகாணத்தைச் சூரையாடினர். அல்ஹினத்தை கைப்பற்றினர். முஸ்லிம்களைக் கொலை செய்தனர். பெண்கள், குழந்தைகளை அடிமையாக்குவற்குச் சிறைப்படுத்தி சிலரைக் கொன்றனர்.

அந்த கிறிஸ்துவர்களுக்கு தக்க பாடம் கற்பிக்க அப்துர் ரஹ்மான், படைக்குத் தாமே நேரில் தலைமை தாங்கிச் சென்றார்.

உர்தூன் பணிந்தான். ஆனால் அவன் கூட்டாளி சாங்கோவும் லியூன் சிற்றரசனும் தங்கள் கூட்டுப் படைகளுடன் எதிர்க்கத் துணிந்தனர்.

குன்றுகள் மீதிருந்த கிறிஸ்துவ வீரர்கள் பாறைகளைத் தள்ளி விட்டனர். அவை மலைச் சரிவிலே பேரொலியுடன் கீழே உருண்டு வந்தன.

அதனால் ஏற்படக் கூடிய ஆபத்தை உணர்ந்தார் அல்தாஸீர் தீன் இலாஹி. வெகு சாதுரியமாக தமது வீரர்களுடன் கணவாய் களைத் துரிதமாகக் கடந்து அவர் ஜுன்குரா சமவெளியில் படையிறங்கி முகாமடித்தார்.

இதைக் கண்ட கிறிஸ்துவ வீரர்கள் மலை உச்சியிலிருந்து சமவெளிக்குப் பாய்ந்து வந்தனர். அது பெரும் தவறாகப் போய்விட்டது!

முஸ்லிம்களுடன் நடந்த சண்டையில் அவர்கள் படுதோல்வி கண்டனர். மலைச் சரிவுகளில் உருண்டு வரும் கற்களால் அடிபட்டு நொறுங்கிச் சாவும் அபாயம் நீங்கிய நிலையில் முஸ்லிம்கள் உத்வேகத்துடன் போரிட்டனர். அல் நாஸீருக்கு சிறப்பான வெற்றி கிட்டியது.

அடுத்து, விரைவிலே கிறிஸ்துவர்கள் மீண்டும் படை யெடுத்து வர, முஸ்லிம்களே மறுபடியும் வெற்றி பெற்றனர்.

நபார்ரா முழுவதும் பல கோட்டைகளைக் கைப்பற்றி அவற்றை இடித்துத் தகர்த்து விட்டுத் தலைநகர் திரும்பினார் அல் நாஸீர்.

அதன் பிறகு தமது அரசு முழுவதையும் ஒழுங்கு படுத்தி ஆளத் துவங்கிய அமீர் அப்துர் ரஹ்மான் தாமே அமீருல் மூமினீன் ஆனார்.

லியூனில் இரண்டாம் ராமிரே தனது சகோதரன் நான்காம் அல்ஃபான்ஸோவின் கண்களைக் குருடாக்கி -மற்றும் பல உறவினர்களைக் கொன்று பட்டம் ஏறினான். முஸ்லிம்கள் மீது தீராப் பகை கொண்டிருந்த அவன் அவர்கள் பிரதேசங்கள் மீது படையெடுப்புச் செய்தான். அவனை நேர்முகப் போருக்கு இழுக்க முயன்றார் சுல்தான். அவனோ வஹ்மா கோட்டையில் போய் இருந்து கொண்டான்.

அங்கொரு சிறுபடையை நிறுத்தி விட்டு, அவர் வடக்கே முன்னேறினார்.

நபார்ரா சிற்றரசன் கார்ஸியாவின் அரச மாதா தியூதாவும் ராமிரேயைப் போலவே முஸ்லிம்கள் மீது அளவு கடந்த வெறுப்புக் கொண்டிருந்தாள்.

அந்நிலையில் நபார்ரா, லியூன், கலிஷியாவின் படைகள் முஸ்லிம்களுக்கு எதிராக ஒன்று திரண்டன.

காஷ்தீலியா, அலவர் நோக்கி சுல்தான் படை நடத்திச் சென்றார். கலீஷியாவில் பல கோட்டைகளையும் கொத்தளங்

களையும் தாக்கி அழித்தார். காஷ் தீலியாவின் தலை நகரான புர்குஷை அவர் அழித்ததைத் தடுக்கச் சக்தியற்றிருந்தான் ராமிரே.

அந்நேரம், சர்குல்தா ஆளுநர் முஹம்மத் ஹிஷாம், சுல்தான் ஏதோ தமக்கு அநீதி விளைவித்து விட்டதாக எதிராகக் கிளர்ச்சி செய்தார்.

ஆக, வடக்குப் பகுதி முழுவதும் சுல்தானுக்கு எதிராக அணி வகுத்து நின்றது!

துரிதமாக சர்குஸ்தா சென்று அதைத் தீவிரமுடன் முற்றுகை யிட்டுப் பணியச் செய்து, முஹம்மது ஹிஷாமையும் மன்னித்தார் சுல்தான் அப்துல் ரஹ்மான். அவரது மேலதிகாரத்தை இப்போது தியூதாவும் ஒப்புக் கொண்டான்.

ராமிரோவிக்கோ அடிக்கு மேல அடி! சுல்தானை நேருக்கு நேர் சந்திக்க முடியாமல் குன்றுகளில் போய் ஒளிந்து கொண்டான்!

சில ஆண்டுகளில் கலீஷியா, பகுதியினர் போர் செய்யத் சித்தமாயினர். அவர்கள் மீது சிறு சிறு படையெடுப்புகள் நடத்த எண்ணிய சுல்தான், படைத் தலைமையை நஜ்திடம் தந்தார்.

புதிய தளபதி இஸ்கலாவி (அடிமை) சந்ததியினரின் வழித் தோன்றல் ஆவார்.

ஜெர்மனி பிரான்சு, இத்தாலி, ஸ்காண்டிநேவியா, வரங்கியா, ரஷ்யாவிலிருந்து ஏராளமானவர்கள் வெனிஸ், ஜெனோவா, பைசா நகர வணிகர்களால் அடிமைகளாகக் கொண்டு வரப்பட்டு உந்தலுஸ் சந்தைகளில் விற்கப்பட்டு வந்தனர்.

அவர்கள் இஸ்லாத்தையும் அரபு மொழி, கலாச்சாரம், பழக்க வழக்கங்களையெல்லாம் அப்படியே மேற்கொண்டு நடந்து வந்தனர். அரபியர் இல்லங்களில் இருந்த அவர்களில் ஒவ்வொரு வரும் குடும்பத்தில் ஒருவராகவே கருதப் பட்டனர். தாமிருக்கும் வீடுகளில் அந்தரங்கப் பணிகளை நிறைவேற்றுவதற்கு நம்பிக்கை யுடன் அமர்த்தப்பட்டிருந்தனர்.

அத்தகையோர் பலரை சுல்தான் அப்துர் ரஹ்மான் தம் அரண்மனையில் வைத்திருந்தார். அவர்களுக்கு இராணுவத்திலும் அரசாங்கத்திலும் முக்கிய பதவிகள் தந்தார். அவர்களைக் கொண்ட

படைப்பிரிவே சுல்தானின் நம்பிக்கைக்கு மிகவும் பாத்திரமாக இருந்து வந்தது.

அந்த 'அடிமை' களுக்கு மரியாதை காட்டி நடந்து வர வேண்டுமென்று சுல்தான் கூறி வந்தது அரபு நாட்டு பாலைவனத்து மாவீரர்களின் சந்ததியினருக்குப் பிடிக்கவில்லை.

அப்படியிருக்க- 'ஒரு இஸ்கலாபி'க்கு படைத் தலைமையா?

உள்ளூரக் குமைந்து வந்த புழுக்ககம் இப்போது ஆத்திரமாகப் பீறியெழுந்தது! எப்போது பொங்கி வெடிக்குமோ?

ஸம்மூரா வரை எதிர்ப்பில்லாமல் முஸ்லிம் படை முன்னேறியது.

அந்நகரை ஒன்றையடுத்து மற்றொன்றாக பல மதில்கள் வளைத்து நின்றன..

வெளி மதிலின் பிளவு, வழியாகச் சென்ற முஸ்லிம் வீரர் களைத் தடுத்து நிறுத்தியது, உள் மதிலைச் சுற்றியிருந்த நீர் நிரம்பிய அகலமான அகழ்!

தயங்கி நின்றவர்களை நோக்கி எதிரிகளின் அம்புகளும் வேல் களும் பாய்ந்து வந்தன.

அரபியர்களின் படைப் பிரிவுகள் மெல்ல மெல்லப் பின்னடைந்தன. அடிமை வீரர்கள் மட்டுமே சுல்தானுடன் எஞ்சி நின்றனர்.

அவ்வாறு அவர்கள் மதில்களுக்கிடையில் கைவிடப்பட்டு அடைப்பட்டவர்கள் போலிருந்த நிலையில் லியூன் நபார்ரா வீரர்கள் பாய்ந்து வந்து தாக்க, தளபதி நஜ்தின் இனத்தவரில் ஏராளமானோர் இறந்து விட்டனர்.

இருந்தும், சுல்தான் தாக்குதலைத் தொடர்ந்து நடத்தினார்.

செத்துக் கிடந்தவர்களின் சடலங்களின் மீது ஓடியுவர்களாக அகழைக் கடந்து, கோட்டைக் காவல் வீரர்கள் மீது துணிந்து சாடினர் இஸ்கலாபிகள்.

அதனால் அதிர்ச்சியுற்று ஓடியவர்களை துரத்திக் கொண்டு சென்றனர். நகரில் புகுந்து சண்டை செய்தனர். பெண்டு பிள்ளை களைத் தவிர மற்றவர்களைத் தாக்கி வீழ்த்தினர்.

ஸம்மூராவில் ஏற்பட்ட சேதத்தால் சுல்தான் சோர்ந்து விடவில்லை.

கூடிய விரைவிலேயே கலீஷியாக நபார்ரா மீது மீண்டும் அவர் படையெடுத்தார். பகைவருக்கு தக்க பாடம் கற்பித்தார்.

பட்டலியோஸில் அவரது ஆளுநராக இருந்த அஹ்மத் ஈஸா ராமிரேயை கடுமையாக முறியடித்தார்.

மற்றும் சில கிறிஸ்துவக் கூட்டத்தினர்களின் நெஞ்சுரத்தை குலைக்கும்படியான படையெடுப்புகளும் நடந்தன.

முடிவில், ராமிரே மகன் இரண்டாம் உர்தூன் சமாதானம் கோரினான்.

''கலீபாவின் மேலதிகாரத்தை ஒப்புக் கொள்ள வேண்டும். உந்தலுஸ் கிறிஸ்துவர்களுடன் சேர்ந்து சதிச் செயல்களில் ஈடுபடக் கூடாது. குர்த்துபா அரசின் எல்லையில் உள்ள கோட்டைகளை விரைவில் அழித்து விட வேண்டும். இனி முஸ்லிம் பிரதேசங்கள் மீது படையெடுப்புச் செய்யக்கூடாது'' என்று சுல்தான் விதித்த நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டான்.

அதற்குப் பதிலாக-

நபார்ரலியூன் சிற்றரசுகளில் சுதந்தர ஆட்சி நீடிப்பதை அனுமதித்தார் சுல்தான் அப்துர் ரஹ்மான். வழக்கம் போல் அவை செலுத்தும் கப்பங்களை ஏற்றுக் கொள்ளவும் அவர் ஒப்புக் கொண்டார்.

அவ்வுடன்பாட்டின் படி உந்தலுஸ் எல்லை மீண்டும் எப்ரோவுக்கு திரும்பியது. மத்திய தரைக் கடலில் தர்தோஸாவி லிருந்து பேராற்றக் கரையோரமாக அஃபார்கா கோட்டையைக் கடந்து அட்லாண்டிக் கரையில் லாரிடா வரை நல்ல தற்காப்பு எல்லைகள் கொண்டதாக முஸ்லிம் அரசு விளங்கலாயிற்று.

மீண்டும் கலீஷியா, லியூன், நபார்ரா, கூட்டுப் படையெடுப்பு நடக்க, அல்நாஸிர் காஸ்தீலியா, உலவா வழியே பாய்ந்து சென்றார்.

அவரை எதிர்த்த நகரங்களும் கோட்டைகளும் அழிந்தன.

அந்நேரம், சரகுஸ்தா முதலிய பலவிடங்கள் முஸ்லிம் ஆளுநர்கள் சுல்தானுக்கு எதிராக எழும்பினர். அந்நிலையில்,

மீண்டும் மீண்டும் கிறிஸ்துவர்களின் படை நடவடிக்கைகள் வேறு!

தீரத் தளபதி அஹ்மத் ஈஸா துலைத்துலா ஆளுநர் மீது பெரும் வெற்றி அடைந்தார். சலீஷியா, லியூன் படைகளையும் முறியடித்தார்.

அடுத்தடுத்துத் தொடர்ந்து அவர் எடுத்த போர் நடவடிக்கைகளின் விளைவாக லியூன், காஷ்தீலியா, நபார்ரா, குர்த்துபா சுல்தானுக்கு திறை கட்டும் சார்பு அரசுகளாகின.

அவ்வாறு ஐம்பது ஆண்டுகள் அரசோட்சிய அல்நஸீரையடுத்து அவர் மைந்தர் இரண்டாம் ஹகம் பட்டத்துக்கு வந்தார்.

அல் முஸ்தன்ஸிர் பில்லாஹ் (அல்லாஹ்வின் உதவி கோருபவர்) ஆக ஆட்சியிலமர்ந்த புதிய மன்னர் சிறந்த அறிஞர் மட்டுமல்ல, தீர மிகுந்த போர் வீரருமாக இருந்தார் என்பதை விரைவிலேயே காட்டும் படி செய்து விட்டது, கிறிஸ்துவர்களின் வாலாட்டம்!

முதலில், காஷ்தீலியாவில் ஷாந்த எஷ்தியானைத் தாக்கி அதைக் கைப்பற்றினார்.

அவரது தளபதி காலிப் அஸ்தா வந்து கலீஷியரைத் தோற்கடித்தார். நபார்ராவில் சுல்ஹார்ராவைக் கைப்பற்றினார். நபார்ரா, கலீஷியா, அலவா, காஷ்தீலியா, இன்னும் பலவிடங்களில் முஸ்லிம் படைப் பிரிவுகள் நிறுத்தப் பட்டன.

லியூன் சிற்றரசன் சாஞ்கோகடா, லோனியா, பரீல் முனீரா, புஷ்கூனிஹ் அதிபர்களும் சமாதானம் கோரினர்.

9. வசந்தத்தின் கனவு!

வசந்த காலம்!

பச்சைப் பசேலென்ற புல்வெளியும் ஆங்காங்கு பலவகை மரங்களும் வண்ணப் பூக்களும் மணம் பரப்பும் மலர்களும் பூத்துக் குலுங்கும் செடி கொடிகளுமாக எழில் கொழித்துக் கொண்டிருந்தது, அந்தப் பூங்கா.

அங்கே ஒரு மரத்தின் அடர்ந்த நிழலில் நால்வர் அமர்ந்திருந்தனர்.

அருகிலிருந்த குர்த்துபா பல்கலைக் கழகத்திலிருந்து வந்திருந்த மாணவர்கள் அவர்கள். கூடி விருந்துண்டு ஆடிப் பாடி அளவளாவி உல்லாசமாகப் பொழுது போக்க வந்திருந்தனர். அவர்களிடையே ஒரே சிரிப்பும் கும்மாளமும் தான்!

அவர்களை விட்டும் விலகி அதோ! ஒரு தனிமையான இடத்தில் ஒதுங்கி ஏதோ சிந்தனையில் மூழ்கி இருந்தார் முஹம்மத்.

யமன் தேசத்து அபி ஆமிர் கோத்திரத்தைச் சேர்ந்த அவருடைய முந்தையர், தளபதி தாரிக்குடன் ஸ்பெயின் வந்தனர். புதிய நாட்டில் அவர் குடும்பத்தவர்கள் அரசாங்கத்தில் உயர் பதவிகள் வகித்து வந்தனர்.

அவர்களின் வழி வழி வந்த முஹம்மத் அபி ஆமில் தம்முடன் படித்த மற்ற மாணவர்களைப் போல ஓய்வு நேரத்தை கேளிக்கை விளையாட்டுக்களில் செலவழிக்கவில்லை. எளியவர்களாயிருந்த வாழ்வில் உன்னத நிலை எய்தி ய மேதைகள்- ஆண்மையுடன் அரும் பெரும் செயல்கள் புரிந்த வீர தீரர்கள் ஆகியோரின் வரலாறுகளை ஆழ ஊன்றிப் படித்து வந்தார்.

வழக்கம் போலவே தனது சக மாணவர்கள் உல்லாசமாகப் பொழுதைப் போக்கிக் கொண்டிருக்க, அவர் ஏதேதோ சிந்தனை வலை பின்னிக் கொண்டிருந்தார்; என்ன வருங்காலத் திட்டமோ?

''அடேயப்பா! எவ்வளவு பெரிய யோசனையோ!''

''எந்த கோட்டையைப் பிடிக்கக் போகிறானோ?''

''வேறெந்த கோட்டை? ஆகாயக் கோட்டை தான்!''-

மாணவர்கள் தங்களுக்குள் வார்த்தைகளைப் பரிமாறிக் கொண்டு சிரிப்பை நிறுத்தினர்.

திடீரென எழுந்தார், முஹம்மத்!

வாட்ட சாட்டமாக வளர்ந்திருந்த அவர் பார்க்க கம்பீரமாக இருந்தார். விசாலமான நெற்றி, அறிவுத் தீட்சண்யம்; சுடர் வீசும் கண்கள், வீரமும் விவேகமும் ததும்பும் முகத் தோற்றம்!

''நண்பர்களே! நான் சொல்வதைக் கேளுங்கள்'' என்று அவர் பேச ஆரம்பித்தார்.

சக மாணவர்களும் அவர் கூறுவதை ஆர்வமுடன் கேட்பது போன்ற பாவனையுடன் அவரை நோக்கினார்.

''நான் ஒரு நாள் இந்நாட்டின் சுல்தான் ஆவேன்!...''என்றார், முஹம்மத். அவ் வார்த்தைகள் தீர்க்கமாக வெளி வந்தன.

அதைக் கேட்ட நண்பர்கள் 'கொல்'லெனச் சிரித்தனர். அந்தச் சிரிப்பிலே பரிகாசம் துள்ளித் தெறித்தது.

முஹம்மத் அபி ஆமில் அதைச் சட்டை செய்யவில்லை.

''நான் ஆட்சி செய்யும் காலை உங்களுக்கெல்லாம் பதவி தருவேன். யார் யாருக்கு எந்த உத்தியோகம் வேண்டும். கூறுங்கள்! நான் மன்னராகும் போது அவ்வாறே செய்வேன்!'' என்றார் திண்ணமான குரலில்,

அவருக்கு பைத்தியமா? அல்லது, தலைக் கனமா? முகத்தில் எவ்வித அறிகுறியும் இல்லை! மனத்தில் பொங்கி வந்த நகைப்பை அடக்கியவர்களாகத் தங்களுக்கு வேண்டிய பதவிகளைக் கூறினர் மூவர்.

நான்காம் மாணவனோ கண்களில் நையாண்டியும் அலட்சியமும் நிரம்பக் கூறினான்:

''இவன் சுல்தானவானாம்''! பதவி தருவானாம்! ஹஹ்ஹா! சரி என் விருப்பம் என்னவா? என் உடலின் மீது தேனைத் தடவி, தேனீக்களும் ஈக்களும் அதில் ஒட்டிக் கொள்ள என்னை ஒரு கழுதை மீது ஏற்றுங்கள். அதன் வாலை நோக்கி என்னை உட்கார வைத்து, குர்த்துபாவின் வீதிகளில் என்னை ஊர்வலமாகக் கொண்டு செல்லுங்கள்!''

''அப்படியே செய்வோம்!'' என்றார் முஹம்மத் அபி ஆமீர்.

கல்லூரி வாழ்க்கை முடிந்தது.

அரண்மனை வாயில் முன் உட்கார்ந்து குடிமக்கள் கலீபாவுக்கு சமர்ப்பிக்கும் மனுக்களை எழுதிக் கொண்டிருந்தார் முஹம்மத் அபி ஆமீர்.

பின்னர் நகரிலேயே சிறந்த நீதிபதிகளில் ஒருவரான இப்னு ஸாலிம் என்பவரிடம் வேலைக்கமர்ந்தார். அப்பால் அமைச்சர் முஸ்ஹஃபி மூலம் அரண்மனை ஊழியரானார். அங்கு படிப்படியாக வேலை உயர்வு கிடைக்க, தமது முப்பத்தொன்றாம் வயதில் ஏக சமயத்தில் நம்பிக்கைக்குரிய பல பதவிகளை வகித்து வந்தார். அரசியார் ஸுப்ஹ் (வைகறை) இடமும் நன்மதிப்பு பெற்றார்.

வட ஆபிரிக்காவில் நடந்த கிளர்ச்சியை அடக்க சுல்தான் ஹகம் முனைந்த போது, பார்வையாளராக இருந்தார் அவர். அதனால் அவருக்கு இராணுவத்துடன் நல்ல தொடர்பு ஏற்பட்டது, அவர் திறமையைக் கண்டு கலீபாவும் தளபதிகளும் மெச்சினர். அதே போல, கடலுக்கப்பால் பெர்பர்களின் நேசமும் அவருக்குக் கிடைத்தது.

ஆபிரிக்காவில் வெற்றி பெற்றுத் தளபதி காலிப் கோலாகலமாக குர்த்துபா திரும்பி இரண்டாண்டுகள் ஆகின.

பதினொரு வயதே ஆன இளவரசர். இரண்டாம் ஹிஷாம் தமக்குப் பிறகு அமைதியான முறையில் பட்டத்திற்கு வர வேண்டுமென விழைந்தார் கலீபா ஹகம். தம்முடைய மைந்தர் மீது அவருக்கு அத்தியந்த பிரீதி.

மந்திரி, பிரதானிகள், கனதனவான்களைக் கூட்டுவித்தார். ஹிஷாமுக்கு விசுவாசப் பிரமாணம் செய்துகொடுக்கும் படி செய்தார்.

அப்பால் தமது மரணப் படுக்கையில் கிடந்த நிலையில், தமது மைந்தரின் பொறுப்பை ஆற்றல் மிக்க அரசியார் ஸுப்ஹிடமும் தமது நம்பிக்கைக்குரிய அதிகாரிகளான ஹாஜிப் முஸ்ஹஃபி, அந்தரங்க அமைச்சர் முஹம்மது அபி ஆமீர் ஆகியோரிடமும் ஒப்படைத்து விட்டுக் கண்ணை மூடினார்.

அவர் விருப்பம் போலவே அல்முவய்யித் பில்லாஹ் (இறைவன் மார்க்கத்திற்கு உதவியாளர்) என்ற பட்டத்துடன் ஹிஷாம் கலிபாவாகப் பிரகடனம் செய்யப்பட்டார்.

அந்நிலையில், முஹம்மத் அபி ஆமிர் தளபதியார் காலிபின் மகளாரைத் திருமணம் செய்து கொண்டார்.

விரைவிலே அவர் தமது அதிகார வளர்ச்சிக்குத் தடையாக இருப்பார்கள் என்று கருதியவர்களையெல்லாம் விலக்கிவிட வழி கோலினார். முஸ்ஹஃபி, லஞ்சக் குற்றம் சாட்டப்பட்டுச் சிறையில் அடைபட்டு இருந்தார். தளபதி காலிப் கொல்லப்பட்டார். இன்னும் பல அரசாங்க உயர் அதிகாரிகளும் பிரமுகர்களும் கொல்லப்பட்டனர்.

இரண்டாம் ஹிஷாமை பெயரளவுக்கு கலீபாவாக்கி அவரை அரண்மனையில் ஒதுக்கி வைத்து விட்டு எல்லா ஆட்சி அதிகாரத்தையும் தம்முடைய கையில் வைத்துக் கொண்டார் முஹம்மத் அபி ஆமீர்.

ஹாஜிப் அல் மன்சூர் (வெற்றியாளரான முதல் அமைச்சர்) என்ற பட்டம் சூட்டிக் கொண்டார். தலைநகருக்குக் கிழக்கே ஆற்றோரம் கம்பீரமான ஒரு அரண்மனையைக் கட்டி, அதில் ஆடம்பரமாக வாழ்ந்து வரலானார்.

நாணயங்கள் அவர் பெயரால் அச்சிடப்பட்டன. அரசாங்க அறிக்கைகளும் கட்டளைகளும் அவர் முத்திரையின் கீழ் வெளியிடப்பட்டன. கலீபாவின் பெயருடன் அவர் பெயரும் இணைந்த வகையில், பள்ளி வாயல் 'குத்பா' ஓதப்பட்டு வந்தது, ஏன், அரசர்கள் அணியும் அங்கிகளையே அவர் அணிந்து வரலாயினார்.

படைகளிலிருந்த அரபியரை நீக்கிவிட்டு, அவர்களுக்குப் பதிலாக தாம் நம்பியிருக்கக் கூடிய பெயர்களைச் சேர்த்துக் கொண்டார்கள்.

அவ்வளவுக்குமிடையிலும் அன்று தாம் பூங்காவில் சக மாணவர்களிடம் கூறியதை மறந்து விடவில்லை.

அவர்களில் மூவர் விளையாட்டாகத் தம்மிடம் விரும்பிய பதவிகளை அளித்தார். நான்காம் மாணவரை அவர் முன் விரும்பியவாறே கழுதை மீதேற்றி ஊர்வலமாக வரச் செய்ததுடன், அவரது சொத்துக்களையும் பறிமுதல் செய்து விட்டார்!

ஹிதம் இறந்த பிறகு, கலீஷியா, புஷ் கூனிஷ் கிறிஸ்துவர்கள் மீண்டும் முஸ்லிம் மக்களுக்கு எதிராக எழுந்தனர். அவர்களை அடக்கியொடுக்கக் கிளம்பினார் அல் மன்சூர்.

அவ்வாறு ஒரு முறை படையெடுத்துச் சென்று கிறிஸ்துவர்களுடன் போர் புரிந்து கொண்டிருந்த போது முஸ்லிம்கள் புறமுதுகிட்டு ஓடினர்.

உடனே தமது சிம்மாசனத்திலிருந்து கீழே இறங்கினார், அல் மன்சூர். கேடயத்தை வீசியெறிந்து விட்டு, தரையில் அப்படியே அமைதியாக அமர்ந்து விட்டார். பகைவர்களைப் பற்றிக் கொஞ்சமும் சட்டை செய்யவில்லை.

அவரது நெஞ்சுறுதியைக் கண்ட முஸ்லிம் வீரர்கள் மீண்டும் களம் திரும்பினர். புதியதொரு உத்வேகம் கொண்டவர்களாக எதிரிகள் மீது பாய்ந்தனர். அவர்களை லியூன் நகர வீதிகள் வரை துரத்திச் சென்றனர்.

வசந்த காலத்திலும் இலையுதிர் காலத்திலுமாக ஆண்டுக்கு இரண்டு முறையாக ஒவ்வோராண்டும் வடக்கேயிருந்த கிறிஸ்துவ சிற்றரசுகள் மீது படை நடத்திச் சென்று வெற்றி கண்டு வந்தார், அல் மன்சூர்.

ஒரு முறை, அவர் நபார்ரா சிற்றரசனிடம் ஒரு முஸ்லிம் மாது போர்க் கைதியாக இருப்பதை அறிய வந்தார். உடனே அவருக்கு எதிராகத் திரண்டு கிளம்பச் சித்தமாகி விட்டார். உடனே அம்மாதை விடுதலை செய்து அல் மன்சூரிடம் மன்னிப்புக் கோரினார் அந்த கிறிஸ்துவ சிற்றரசர்.

மற்றொரு முறை, வடக்கு பிரதேசங்களில் போர் செய்து விட்டுத் திரும்பிக் கொண்டிருந்ததார் அல் மன்சூர்.

அவரையும் அவரது படைகளையும் தலை நகர் செல்ல முடியாமல் கிறிஸ்துவர்கள் தடுத்து நின்றனர். நேரிலே எதிர்க்கத் துணிவில்லாத அவர் கூண்டுக் கிளிபோல் அகப்பட்டுக் கொண்டதை நினைத்து மகிழ்ந்திருந்தனர்.

ஆபத்தான நிலை என்ற போதிலும், அவர் மனம் தளரவில்லை. தமது வீரர்களை நானா பக்கங்களிலும் அனுப்பினார். அந்தப் பகுதியிலேயே தமது படையினருக்கான குடிசைகள் கட்டவும்

வேளாண்மை செய்யவும் வேண்டிய பொருள்களைச் சேகரித்து வரும்படி செய்தார்.

விரைவிலே, மளமளவென்று குடிசைகள் எழும்பின. முஸ்லிம் வீரர்கள் எவ்வித பயமுமின்றி நிம்மதியாக விவசாயம் செய்யத் துவங்கி விட்டனர்.

கிறிஸ்துவர்களுக்கு ஒரே வியப்பாகப் போய்விட்டது. வாய் விட்டே அவர்கள் முஸ்லிம்களிடம் விசாரிக்கத் தலைப்பட்டனர்.

''இதில் என்ன ஆச்சர்யம்? இப்போது நாங்கள் எங்கள் ஊர் திரும்புவதற்கு அவசரம் ஒன்றுமில்லை! அடுத்த போர் விரைவிலே துவங்கப் போகிறது. அதற்கிடையில் எங்களுக்கு வேண்டிய வசதிகளைத்தான் செய்து கொண்டுள்ளோம்!

இவ்வாறு அல் மன்சூர் கூறிய பதில் கிறிஸ்துவரைத் திகைப் படையச் செய்யவில்லை! திகிலடையச் செய்தது. அவர்கள் நினைத்த தொன்று. இப்போது நடப்பது வேறாக அல்லவோ இருக்கிறது?

''முஸ்லிம்கள் நம் நாட்டில் நிலையாக குடியமர்ந்து விட்டால்....?' என அஞ்சிய அவர்கள், தங்கள் நிலையிலிருந்து விலகி முஸ்லிம்கள் திரும்பிச் செல்ல வழி விட்டனர்.

அது மட்டுமல்ல.முஸ்லிம்களுக்குக் கிடைத்திருந்த வெற்றிப் பொருள்களை ஏற்றிச் செல்லக் குதிரைகளும் கோவேறு கழுதைகளும் அவர்கள் கொடுத்து உதவினர்!

அந்த கிறிஸ்துவர்கள் மீது ஐம்பத்திரண்டு படையெடுப்புகள் நடத்தினார் அல் மன்சூர். எந்த திசையாகிலும் சரி, எந்த வேளை யாகிலும் எங்கும் அச்சமின்றிப் படை நடத்திச் சென்றார்.

ஒவ்வொரு படையெடுப்பிலும் வெற்றி அவருக்கே! எவருக்கும் தலை வணங்காத அவர் கொடிஎன்றுமே தாழவில்லை.

சமயங்களில் தங்களிடம் சிக்கிக் கொண்ட நிலையில் கூட அவருக்குத் தீங்கு செய்ய முடியாத அளவு கிறிஸ்துவர் அஞ்சுமளவுக்கு அவர் துணிகரம் விளங்கியது.

ஒவ்வொரு கிறிஸ்துவ சிற்றரசின் தலைநகரையும் அவர் வென்றார். லியூன், நபார்ரா, மீண்டும் கப்பம் செலுத்தும் சிற்றரசுகளாகின. இஸ்லாமிய அரசின் எல்லை மீண்டும் ஜபல் அல்புர்தைத் தாண்டி நின்றது.

அல்மன்சூர் மறைவுக்குப் பின்னர் நூற்றிருபது ஆண்டுகள் ஓட, உமய்யாக்கள் ஆட்சி மடிந்து ஸ்பெயின் நாட்டின் அரசியலில் எவ்வளவோ மாற்றம்.

அல்மஹ்தி அரசர் அபூயாகூப் யூசுஃப் வட ஆபிரிக்காவில் ஆண்டு கொண்டிருந்தார்.

ஒன்பதாவது அல்ஃபான்ஸோ தலைமையில் வந்த காஷ்தீலிய படைகள் உந்தலுஸை அச்சுறுத்தின. ஜபல் அல்புர்துக்கு அப்பாலிருந்து ஏராளமான கிறிஸ்துவத் தொண்டர்கள் வந்து அப்படைகளுடன் சேர்ந்து கொண்டனர்.

முஸ்லிம் பிரதேசங்களில் புகுந்து கொள்ளை, கொலை, தீ வைப்பு, நாசம் நிகழ்த்தினர். அவர்களுக்கு உதவியாக கிறிஸ்துவ உலகின் மூலை முடுக்கிலிருந்தும் வீரர்களைத் திரட்டிக் கொண்டு பரங்கியரும் வந்தனர்.

எல்லாரும் ஒன்றிணைந்து படல் போல் அருகில் அல் ஆர்க் என்னுமிடத்தில் கடல் கடந்து வந்த அரசர் அபூயாகூபின் படையைத் தாக்கினர்.

ஆனால் கிறிஸ்துவர்கள் படு தோல்வி அடைந்தனர். அவர்களில் 146000 பேர்கள் உயிரிழந்தனர். மற்றவர்கள் கலத்சபா ஓடோடிச் சென்று அதன் கோட்டை அரண்களுக்குப் பின்னே தஞ்சமடைந்தனர்.

அக்கோட்டையை முஸ்லிம்கள் விரைந்து சென்று தாக்க, அல்ஃபான் ஸோ தலைத்துலா தப்பி ஓடினான். மீண்டும் படை திரட்டி வந்தான்.

ஆனால் மீண்டும் தோல்வியே! கலத்சபா, வாதீ அல்ஜூரா, மஜ்ரிக், என்ஸலேனா, ஷலமால்கா மற்றும் பல நகரங்களும் கோட்டைகளும் முஸ்லிம்களிடம் வீழ்ந்தன.

யாகூப் துலைத்துலாவை முற்றுகையிட்டார். அதை எவ்வகையிலும் கைப்பற்றி விட வேண்டுமென்று அவரது வீரர்கள் உறுதியுடன் நின்றனர்.

ஒரு நாள் கோட்டைக் கதவுகள் திறந்து வெள்ளைக் கொடி ஏந்திய வீரன் ஒருவன் முன்னே வர, அல்ஃபான்ஸோவின் தாயார் நகருக்கு வெளியே வந்தார். அவருடன் கிறிஸ்துவ மன்னனின் மனைவியும், மகள்களும் வந்தனர்.

சுல்தான் முன்னிலையில், கண்ணீர் வடித்தவராக நின்றார் அல்ஃபான்ஸோவின் அன்னை.

''இதோ! இவர்களைப் பாருங்கள்! இறைவனுக்காக இவர்களை நினைத்தாவது இந்நகரை எங்கள் வசம் விட்டுச் செல்லும்!''என்று பணிவுடன் குறையிரந்தார்.

வீரர் யாகூபின் உள்ளத்தில் ஈரம் சுரந்தது. அம்மாதின் வேண்டுகோளால் மனமுருகிய சுல்தான் கூறினார்:

''உம்முடைய கோரிக்கையை ஏற்றோம்! கவலையை விடும்!''

அவருக்கு இரத்தினங்களையும் ஆபரணங்களையும் உயர்ந்த பொருள்களையும் அன்பளித்தார். சகல கண்ணியத்துடன் அனுப்பி வைத்தார்.

அப்பால் அவர் துலைத்துலாவின் மீதிருந்த முற்றுகையை நீக்கியவராக அராகூன் சென்றார். மஜ்ரித்தை விடுதலை செய்தார்.

அப்போது கிறிஸ்துவர்கள் சமாதானம் கோர, அவர்களுடன் உடன்பாடு செய்து கொண்டார் அபூயாகூப் யூசுஃப்.

உந்தலுஸ் என்ற முத்தாரம் அறுந்து பட, அதிலிருந்து சிதறிய முத்துக்களைப் போன்ற பிரதேசங்களை ஆங்காங்கு ஆண்டு வந்த ஷெய்குகளின் நல்ல காலம் மெல்ல மெல்ல மாறி வந்தது. தங்கள் கோட்டைகளை அவர்கள் எதிரிகளிடம் ஒப்படைக்கத் துவங்கிய காலம்.

காஷ்தீலியர் குர்த்துபா, பவன்ஸிய்யா, மர்ஸிய்யாவைக் கைப்பற்றினர்.

அவர்கள் ஷெய்குகளை ஒருவருக்கு மற்றொருவரை எதிராக மூட்டிவிட்டு ஒவ்வொருவராக ஒழித்து கட்டி வந்த போது,

ஜெரஸ், ஜ்ய்யான், கர்னாதா, மாலகா. அல் மரிய்யாவைக் கைப்பற்றினார். ஷெய்குகளில் ஒருவரான இப்னு அஹ்மார்.

மனுநஸல் கோத்திரமாக உந்தலுஸில் குடியேறிபல தலைமுறைகளாக நிலைத்து விட்டவர்களின் வழி வந்தவர் அவர், உமய்யாக்களின் ஆட்சியில் இராணுவத்தில் முக்கிய பதவிகள் வகித்து வந்தவர்களின் சந்ததியினர். ஷெய்கு முஹமது என்ற இயற்

பெயர் கொண்ட அவர் தமது குணாதிசயத்தாலும் திறமையாலும் தம் இனத்தவரிடையே செல்வாக்குப் பெற்றிருந்தார்.

நாட்டில் நிலவிய சூழ் நிலைகளைச் சாதகமாகக் கொண்டு சுருங்கியிருந்த தம்முடைய ஆட்சியை வலிவு படுத்தினார்.

கர்னாதாவை தலைநகரமாகக் கொண்டு கலீபில்லாஹ் (இறையருளால் வெற்றி கண்டவர்) என்ற பட்டத்துடன் அரசாளத் தொடங்கினார்.

செம் மனிதரின் மைந்தர் (இப்னு அஹ்மார்) ஆன அவர் கர்னாதா குன்றுகள் மீது செங்கோட்டை (அல்ஹம்ரா) கட்டினார்.

பிறகு கர்னாதா மீது படையெடுத்து வந்த காஷ்தீலிய மன்னனை விரட்டியடித்தார்.

அவரது தம்பியின் பேரர் இஸ்மாயீல் பட்டத்துக்கு வந்த போது அவரிடமிருந்து அநேக நகரங்களைக் கிறிஸ்துவர் கைப்பற்றினர்.

அப்பால் ஐந்தாண்டுகள் சென்று காஷ்தீலிய மன்னன் தனது மைந்தன் பெத்ரூஹ்வின் தலைமையில் பெரும் படை யொன்றை கர்னாதா நோக்கி அனுப்பினான்.

இங்கிலாந்து இளவரசன் உட்பட இருபத்தைந்து இளவரசர்கள் அப்படையில் இருந்தனர்.

இல்பீசாவில் அவர்களுடன் பொருதிய சுல்தான் இஸ்மாயீல் சிறப்பான வெற்றி பெற்றார். அவரை எதிர்த்துச் சண்டையிட்ட கிறிஸ்துவ இளவரசர்கள் அனைவருமே களத்தில் இறந்து பட்டனர்.

இருபது ஆண்டுகள் சென்று அவர் மைந்தர் அபூ அப்துல்லாஹ் அறுநூறு ஆண்டுகளுக்கு முன்னர் தளபதி தாரிக் படையிறங்கிய அல் அதே சிங்கமுகக் குன்றை -ஜபல்தாரிக் என்னும் விடிவெள்ளிக் குன்றை கிறிஸ்துவர்களிடமிருந்து கைப்பற்றினார்.

10. ஒளி வெள்ளம்

உந்தலுஸை முதலில் வெற்றி கண்ட வீர தீரர்கள்- அதை ஆண்டவர்களின் அஞ்சாமை மீதும் ஆண்மை மிக்கவர்கள் மீது மட்டும் மூஸா ஆபில் அஸ்ஸானுக்கு நினைவு ஓடவில்லை.

மறைந்து கிடைக்கும் உலகம் அருளினூடே பளிச்சிடும் மின்னல் வெட்டிலே ஒரு நொடியில் தோன்றி மறைவது போல அவர் நெஞ்ச வெளியிலே அவரது அருமை நாட்டின் பெருமை மிக்க வரலாறு தோன்றி மறைந்தது. உந்தலுஸை அரசோட்சிய மன்னர்களின் எத்தனையோ பேர்களின் குணநலமாட்சிகள்- அவர்கள் ஆற்றிய சிறந்த பணிகள் மீதெல்லாம் அவரது நினைவு மின்னல் பட்டுத் தெறித்தது.

போரிலே வெற்றி கண்ட வீராதி வீரர்களால் மட்டுமின்றி, சமாதான காலத்தில் நாட்டின் வளம் கண்ட நல்லாட்சி மன்னர்களால் தான் உந்தலுஸ் எத்துணை உயர் நிலை பெற்றிருந்தது?

முஸ்லிம்கள் முதன் முதல் ஹிஷ்பானியாவை (ஸ்பெயினை) வெற்றி கண்டவுடன், அத்தீபகற்பத்தில் புதியதோர் சகாப்தம் உதயமாகி ஒளி வெள்ளம் பரவலாயிற்று. அதனால் அங்கே நலமான பல சமூக மாறுதல்கள் விளைந்தன.

மதகுருக்கள், நில பிரபுக்கள் போன்ற ஒரு சில குறிப்பிட்ட வகுப்பினர்களின் கொடிய அதிகாரம் ஒழிந்தது. தொழில்கள் நசுக்கப்பட்டிருந்த நிலை மாறியது. நேர்மையான வரி முறை வழக்கத்திற்கு வந்தது. எல்லாருக்கும் மத சுதந்திரம் வழங்கப் பட்டது. முஸ்லிம்கள் கிறிஸ்துவர்கள் அனைவருக்குமே பொது வாழ்வில் சமவுரிமை தரப் பட்டது. மிருகங்களிலும் கேவலமாக இருந்த அடிமைகளின் நிலை உயர்ந்தது. அவர்களில் பலர் முஸ்லிம்களாக மாறினர்.

பரோபகரமான அந்த நல்லாட்சியின் ஆரம்பத்திலிருந்தே ஆள வந்தார் ஆளப்பட்டோரிடையே கலப்பு மணங்கள் நிகழலாயின. மூஸா நுஸைரின் மைந்தர் அப்துல் அஜீஸ் நாட்டின் கலீபாவின் பிரதி நிதியாகயிருந்த நிலையில், களத்தில் இறந்துவிட்ட ரோடரிக் அரசனின் விதவையைத் தாமே மணஞ் செய்து கொண்டார்.

இஷ்தானியா நான்கு மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டது. அவற்றில் தலைமையாக விளங்கிய உந்தலுஸ் கடலுக்கப்பா லிருந்து வந்தவர்களில் திமிஷ்க் வாசிகள் இசுபீலிய குர்த்துபா ஆகிய இடங்களிலும், ஹிம்மஸ் வாசிகள் இஷ்பீலியா, நீப்லாவிலும், கின்னிரின் வாசிகள் ஜய்யானிலும். பலஸ்தீன வாசிகள் அல்ஜஸீரா, மதீனா சைதூனியாவிலும், ஜோர்தான் வாசிகள் ரய்யோ, மாலகா விலும், பாரசீக வாசிகள் ஸிரஸிலும், யமன் வாசிகள் துலய்துலா விலும் ஈராக் வாசிகள் கர்னாதாவிலும் மிஸ்ர்வாசிகள் அல்-இஷ் பூனா, மாரிதாவிலும் இனம் பிரிந்து குடியேறினர். நாட்டின் மத்திய பகுதியில் ஹிஜாஸை சேர்ந்த பத்தாயிரம் வீரர்கள் குடியமர்ந்து நிலை பெற்றனர்.

அவர்களுக்கெல்லாம் அரசுத் தலைவர்களாக அமீர்களாக இருந்தவர்கள் அண்ணல் நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் வாழ்வு-வாக்குளைப் பின்பற்றிப் புதிய நாட்டை முன் மாதிரியான முறையிலே ஆண்டு வந்தனர்.

அதனால் விரைவிலேயே முஸ்லிம்கள், கிறிஸ்துவர் களிடையிலும் ஏராளமானவர்களின் நன்மதிப்பைப் பெற்றுவிட்டனர்.

அவர்களில் ஒருவராக இருந்தார் ஸாராஹ். ரோடரிக் அரசனால் கொலை செய்யப்பட்டிருந்த விடிலு மன்னரின் பேத்தி அவர். ஹிஷாம் சென்று திமிஷ்கின் கலீபா தர்பார் சென்றார். தம்முடைய தந்தையாரின் உரிமைகளை ஆபித்திருந்த சிற்றப்பனுக்கு எதிரான உதவி கோரினார்.

அவரைக் கருணையுள்ளத்துடன் வரவேற்நற கலீபா, அவரைத் தமது அந்தபுரத்திலே கண்ணியமான முறையில் தங்கச் செய்தார்.

அவருடைய புதல்வர் ஹகம் அல் முஸ்தன்ஸீர் ஒரு இலக்கியப் பிரியர். அறிஞர்களுக்குத் தமது கருவூலத்திலிருந்து அள்ளிக் கொடுத்தார்.

உந்தலுஸையே ஓர் இலக்கியச் சந்தையாக மாற்றி விட்டார் அவர். எந்த நாட்டிலும் எந்த வொரு இலக்கியம் வெளியானாலும் உடனே அது உந்தலுஸுக்கு வந்து விடும்.

சுல்தானுடைய நூலகத்தில் மட்டும் நான்கு இலட்சம் நூற்கள்!

அந்நூலகம் பாரசீகம் வரை பிரசித்தி பெற்று விட்டது. இஸ்பஹானிலிருந்த அபுல் பரஜ் தமது 'கிராபுல் ஃபிஹ்ரிஸ்த்' என்ற நூலின் பிரதி யொன்றை, சுல்தான் ஹக்முக்கு அனுப்பி வைத்தார். ஈராக்கில் நூல் வெளியாகு முன் அந்தப் பிரதிக்குச் சன்மானமாக அதன் ஆசிரியருக்கு ஆயிரம் தீனார் அனுப்பி வைத்தார், கலீபா அல் முஸ் தன்ஸிர்.

அதே போல் உந்தலுஸ், மற்றும் வெளி நாடுகளில் எத்தனை எத்தனையோ அறிஞர்கள், தத்துவ மேதைகள், விஞ்ஞானிகளுக்கு அவர் பெரும் ஆதரவு தந்தார். கொள்கை வெறியரின் தொந்திரவில் லாமல் தத்துவ ஞானிகள் தங்கள் ஆய்வுகளை நடத்த வசதி செய்து தந்தார்.

அவர் காலத்தில் நாட்டு மக்களில் அநேகமாக எல்லாருக்குமே எழுதப் படிக்கத் தெரியும். ஏழைகளுக்காகத் தலைநகரிலே இருபத் தேழு பள்ளிக்கூடங்கள் இருந்தன. அவர்களுக்குக் கட்டணமில்லாத படிப்பு மட்டுமின்றி, இலவசமாகப் புத்தகங்களும் வழங்கப்பட்டு வந்தன.

அவருடைய ஆட்சியின் கீழ் குர்த்துபா பல்கலைக்கழகம் உச்ச நிலையையெட்டி இருந்தது. ஐரோப்பா, ஆசியா, ஆப்பிரிக்கா கண்டங்களிலிருந்து முஸ்லிம்களிடம் கிறிஸ்துவர்களும் வந்து அதில் கல்வி கற்றனர்.

அங்கே அழகிய தொரு பள்ளி வாயல். அதற்கு வேண்டிய தண்ணீர் இலட்சக் கணக்கான பணச் செலவில் வெகு தொலைவி லிருந்து ஈயக் குழாய்கள் வழியாகக் கொண்டு வரப்பட்டது.

பல்வேறு நாடுகளிலிருந்தும் வரவழைக்கப்பட்ட பேராசிரியர் களின் கீழ் பல்லாயிரம் மாணவர்கள் இன, மத வேறுபாடின்றி கல்வி கற்றுச் சென்றனர். அதற்குச் சாத்தியமாக பல்கலைக் கழகத்துக்கு மன்னரால் பல மானியங்கள் வழங்கப்பட்டிருந்தன.

அவரது தர்பாருக்கு வர சிம்மாதனம் இழந்த நான்காம் உர்தூன் சிற்றரசர் அனுமதி கோரினார்.

அதை ஏற்ற கலீபாவின் உத்திரவுப்படி அவரை அழைத்து வர தலைநகரிலிருந்து புரவிப் படை யொன்று புறப்பட்டுச் சென்றது.

அவ்வாறே உர்தூன் வந்தார். அந்நாஸீர் அடக்கத் தலம் சென்றார். தொப்பியைக் கழற்றி வெறுந் தலையுடன் மண்டியிட்டு மவுனமாகப் பிரார்த்தனை செய்தார்.

அவரை அல்ஜஹ்றா அரண்மனையில் வரவேற்றுப் பேச கலீபா செய்தி அனுப்பினார்.

குர்த்துபா நகரப் பிரமுகர்கள் புடைசூழ, அரண்மனை சென்றனர், உர்தூனும் அவரது சகாக்களும்.

வாயிலுக்கு முன்னே குதிரைகளிலிருந்து இறங்கி அரண்மனையினுள்ளே அனைவரும் சென்றனர்.

உடன் பிறந்தோர், உறவினர்கள், அமைச்சர்கள், நீதிபதிகள், அறிஞர்கள் குழுமியிருந்த மண்டபத்தின் நடுவே வீற்றிருந்தார் கலீபா ஹகம்.

அவரை நோக்கி மெல்ல மெல்ல சென்று மரியாதை செலுத்தி நின்றார். கலீபா நீட்டிய கரத்தை முத்தமிட்டார். பிறகு அப்படியே பின் நடந்து வந்து, தமக்கென அமைக்கப்பட்டிருந்த ஆசனத்தில் அமர்ந்தார். அவருடன் சென்ற மற்றவர்களும் அமர்ந்தனர்.

குர்த்துபா கிறிஸ்துவ நீதிபதி மொழி பெயர்க்க அருகில் நின்றார்.

அவரை நோக்கி, கலீபா கூறினார்:

'நம்மிடம் உதவி கிடைக்கும் என்று நம்பி நீர் வந்தது பற்றி மகிழ்ச்சி கொள்ளும். நீர் எதிர்பார்ப்பதற்கு மேலாகவே உமக்கு நாம் உதவி செய்வோம்'.

'தங்கள் தயவையே நான் நம்பியிருக்கிறேன். என் மீதும் என் குடிமக்கள் மீதும் அனைத்து மேலதிகாரங்களும் இருக்கட்டும். தங்கள் கட்டளைகளையேற்று விசுவாசத்துடன் நடப்பேன்'என்று பணிவாகச் சொன்னார் உர்தூன்.

'நீர் நமது தயவுக்கு உரியவர் என்று நம்புகிறோம். நம் சிம்மாதனத்தின் நிழலில் நீர் உதவி நாடி வந்தது பற்றி சந்தோஷப்படும்!'

கலீபாவுக்கு மீண்டும் தமது பணிவைத் தெரிவித்துக் கொண்டவராக உர்தூன் பேசலுற்றார்-

'முன்னர் எனக்கு விரோதமாக என் உறவினர் சாஞ்சோ தங்கள் தந்தையாரிடம் உதவி கேட்டார். அவரது வேண்டுகோள் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இப்போது நான் உங்கள் முன் வந்து நிற்கிறேன். அதே போல உதவி கோருகிறேன்.

'ஆனால் என் நிலைமை வேறுவிதமானது. சாஞ்சோவை குடி மக்கள் வேண்டாம் என்று வெறுத்தார்கள். நானே அவர்களது அரசனாக இருக்க வேண்டுமென்று வற்புறுத்தினார்கள். அவர் வந்து கலீபாவின் உதவி பெற்று, சிம்மாதனத்தை அடைந்தார். நானோ துரத்தப்பட வில்லை. நானாகவே நாட்டைத் துறந்தேன்.

''என்னையும் எனது படை வீரர்களையும் எனது கோட்டை களையும் கலீபாவாகிய தங்களிடம் காணிக்கையாக வைத்துக் கொள்வோம். இவ்வாறு எனக்கும் சாஞ்சோவுக்கும் இடையே எவ்வளவோ வேறுபாடுகள்- குண நல வித்தியாசமே உண்டு!''

'நீர் கூறியதை நாம் கவனமாகக் கேட்டோம். உமது விசுவாசத் துக்குத் தகுந்த முறையிலே நாம் உதவி செய்வோம். காலம் சென்ற எமது தந்தையாரிடம் சாஞ்சோ பெற்றுக் கொண்ட சன்மானங் களைப் போல நீரும் எம்மிடம் பெறுவீர். உம்முடைய எதிரி நம்மிடம் முதலில் உதவி நாடினார். என்றாலும், உம்மை நாம் மதிக்கின்றோம்.

'நீர் உமது நாட்டிற்க மகிழ்ச்சியுடன் திரும்பிச் செல்லும்! உம்முடைய அரசை நாம் ஆதரித்து வலிமையுள்ளதாக்குவோம். உம் அதிகாரத்தை ஏற்றுக் கொள்ளும் குடி மக்களுக்கு நீர் அரசராக இருக்கும்படி செய்வோம்.

'உம்முடன் ஓர் உடன்பாடு செய்து கொள்ள விரும்புகிறோம். அதில் உமது அரசின் எல்லைகளையும் உமது உறவினர் சாஞ்சோவின் எல்லைகளையும் குறிப்பிடுவோம். அவர் உம்மைத் தாக்காமல் தடுப்போம்-

அவ்வாறு கலீபா தம்முடைய நல்லெண்ணத்தை வெளியிட்டார்.

அவருக்குத் தமது நன்றியையும் மரியாதையும் தெரிவித்த வராக அரச சமூகத்திலிருந்து வெளியேறி அருகிலிருந்த மண்டபம் சென்றார்.

''நான் கண்ட காட்சியின் மாட்சி நம்மை மயக்கமுறச் செய்து விட்டது''. என்று தம்மைச் சார்ந்தோரிடம் கூறினார், உர்தூன்.

அரண்மனையின் ஹாஜிப் கலீபாவின் சார்பில் தந்த அங்கியொன்றை அவர் பெற்றுக் கொண்டு சென்றார்.

அவ்வாறு மகிழ்ச்சி மிக்க அரசர்களில் ஒருவராகத் திகழ்ந்த அபூயாகூப் யூசுஃப் காலத்தில் தான் இப்னு பஜாபோன்ற மருத்துவர்கள் இப்னு ருஷ்த் முதலிய தத்துவ மேதை விஞ்ஞானிகள் புகழ் பெற்று விளங்கினர். அம் மன்னர் இஷ்பிலியாவில் வான சாஸ்த்திர ஆய்வு நிலையம் ஒன்றைக் கட்டினார்.

அப்துர் ரஹ்மான் அந் நாஸிரை விட அதிகமான அளவு உந்தலுஸை உன்னத நிலைக்குக் கொண்டு வந்தார், அல் மன்ஸூர்.

தலைநகரிலிருந்த ஜும்ஆ பள்ளி வாசலை விசாலப்படுத்தி அதை மேலும் அலங்கரித்தார்.

சையத் (தலைவர்) என்று தம்மை அழைத்துக் கொண்ட அவர் தலைமையிலும் மலிக்குல் கரீம் (தயாள குணமுள்ள அரசர்) என்ற அவரது சிறப்புப் பெயருக்கேற்பவும் முஸ்லிம் அரசு பெருமையும் அடைந்தது.

அவரால் ஒழுங்காக அமைக்கப்பட்ட இராணுவத்தைக் கொண்டும் நாடு வலிமையும் புகழும் பெற்றது.

கல்வியையும் கலைகளையும் அவர் ஆதரித்து வந்தார். உலமாக்களைப் பகைத்துக் கொள்ளாத முறையில் தத்துவ மேதைகளுக்கு ஆதரவு தந்து வந்தார். எழுத்தாளர்களின் புரவலராக இருந்த அவர், புலவர்கள் பலருக்கு உபகார நிதியளித்து வந்தார். தலை நகரிலிருந்து வெளிப் பயணம் செல்லும் போதெல்லாம் அவருடன் பல கவிஞர்களும் சென்று வருவார்கள். போர்க்களங் களில் அவர் மன்னவரையும் மற்றவரையும் மகிழ்வித்து வந்தனர்.

நாட்டின் போக்குவரத்துத் துறையில் அவர் பல முன்னேற்றங் களைக் கொண்டு வந்தார். பல புதிய பாட்டைகள் அமைத்தார். இஷ்பீலியாவிற்கு கிழக்கிலும் குர்த்துபாவுக்கு தெற்கிலும் இஸ்கஜ்ஜா அருகில் ஜெனில் ஆற்றின் குறுக்கே ஒரு பாலமும் தலை நகரில் வாதீ அல் கபீர் ஆற்றைக் கடக்க ஒரு பாலமும் கட்டினார்.

ஒரு சில தகாத முறைகளினால் அவர் அதிகாரத்துக்கு வந்தவராக இருந்த போதிலும், விசுவாசமும், தாராள நோக்கும் நீதியுள்ளமும் கொண்டவராக இருந்தார், அவர்.

ஒரு முறை அவர் சில கைதிகளுக்கு மன்னிப்பு அளித்தார். அவர்களில் தமது பகைவனாக இருந்த ஒருவனை மட்டும் மன்னிக்க வில்லை. அன்றிரவு மஞ்சத்தில் படுத்த அவர் கொஞ்சமும் உறக்கம் வராமல் புரண்டு கொண்டு கிடந்தார். தூக்கக் கலக்கத்தால் -யாரோ ஒருவர் வந்து அந்த கைதிக்கு நியாயம் வழங்கும்படி எச்சரிக்கை செய்தது போன்ற உள்ளுணர்வு.

உடனே அவர் படுக்கையை விட்டு எழுந்தார். பேனா இறகை கையில் எடுத்தார். அக் கைதியை விடுவிப்பதற்கான கட்டளையை எழுதிவிட்டு மீண்டும் சயனிக்கச் சென்றார். நிம்மதியாகத் தூங்கலுற்றார்.

அவர் பெயரைக் கேட்ட மாத்திரத்தில் பகைவர்கள் நடுங்கின போதிலும், அவரது படைவீரர்கள் எல்லாம் அவர் மீது பெரும் பற்றுதல் கொண்டிருந்தனர். அந்த அளவு அவர்களின் இன்பத்திலும் துன்பத்திலும் அவர் பங்கெடுத்துக் கொண்டார். என்றாலும், இராணுவ ஒழுங்கை மீறும் வீரர்கள் மீதும் சட்டத்திற்குக் கட்டு படாத மக்கள் மீதும் கடுந்தண்டனை விதிக்க அவர் தயங்கவில்லை. படையணிகளை அவர் பார்வையிடும் பொழுது புரவிகளும் கூட கனைக்காமல் அப்படியே மரம் போல் நின்று விடுமாம்!

ஒரு முறை அவர் பள்ளி வாசலுக்குச் சென்று கொண்டிருந்தார். வழியில் ஒரு வணிகர் அல் மன்ஸூரை அணுகி, 'இதோ! தங்களுடன் இருக்கும் அதிகாரிக்கு எதிராக நான் வழக்குத் தொடர்ந்திருக் கிறேன்;' என்று முறையிட்டார்.

உடனே அல் மன்ஸூர் தமது செயலாளரைக் கைது செய்து நீதிபதியிடம் அனுப்பினார். வழக்கை விசாரித்து அந்த அதிகாரி குற்றவாளி என நீதிபதியே தீர்ப்புக் கூறினார். அதைக் கேட்டவுடன் அதிகாரியைப் பதவியிலிருந்து நீக்கி விட்டார், அல் மன்ஸூர்.

'அத்தகைய மன்னர்கள் பலரின் அரும்பணிகளால் தலைநகர் குர்த்துபா கண்ட வளர்ச்சி?'

வாதீ அல் கபீர் ஆற்றின் மருங்கே ஓடிய அந்த அகன்ற நெடுஞ்சாலை வழியே தமது அழகிய வெண் புரவியைக் கடிதில் விரட்டிச் சென்றார் மூஸா அபில் கஸ்ஸான்.

குர்த்துபாவின் பிரதான கோட்டை நகருக்கு இன்னும் பதினான்கு கல் பயணமிருந்தது.

ஆனால் அந்தச் சூழல் வெறிச்சோடிக் கிடக்கவில்லை. எழில் சூழ்ந்த சார்பு நகர்கள்! அங்கே வனப்புள்ள தோட்ட வீடுகள்! இடையிடையே பள்ளி வாயல்களின் மினாராக்கள் உயர்ந்து நின்றன.

அந்தி நேரம் நெருங்கி வந்தது. 'பொழுது இருட்டுவதற்கு முன் கோட்டை வாயிலை அடைந்து விட வேண்டுமே!'-

குதிரையின் விலாவிலே தமது அங்குவடியால் இடித்து, லகானைச் சுண்டியிழுத்தார் மூஸா. அந்தக் குறிப்பறிந்து அவருடைய புரவி மனோவேகமாகப் பறந்தது.

அதோ பிரமாண்டமான கோட்டை மதில்கள்! விரைவிலே கோட்டை வந்தடைந்தார் மூஸா. அதன் வாயிலைக் காத்து நின்ற வீரர்களிடம் அவர் தம்மை இனம் கூறினார். உடனே பித்தளை முலாம் பூசப்பட்டிருந்த இரும்புக் கதவுகள் திறக்கப்பட்டன. தமது பரியை மெல்லச் செலுத்தியவராக கோட்டைக்குள்ளே நுழைந்தார். அந்த கர்னாதா மாவீரர்.

மாலை மயங்கியது. இன்னும் கொஞ்ச நேரத்தில் இரவு தனது இருள் போர்வையை விரிக்கத் துவங்கி விடுமே!

என்ன விந்தை! ஒரு நொடியில் மீண்டும் பட்டப் பகல் போல் ஒளி வெள்ளம்!

எங்கும் பெருகிப் பரவிய அந்த வெளிச்சத்திலே பளிச்சிட்டன. ஆற்றின் நெடுகிலுமிருந்த அரண்மனைகள்- அழகிய கட்டடங்கள்! சிங்காரத் தோட்டங்களிலிருந்த பூஞ்செடிகள், வாசனைப் பூண்டுகள் பரப்பிய நறுமணம் மூஸாவின் மனதுக்கு இதமாக இருந்தது.

கடினமாக வட்டக் கற்கள் பரப்பப்பட்டு, மிகவும் துப்புரவாக இருந்த பாட்டை வழியே அவரது புரவி வெகு இலாவகமாகத் துள்ளல் நடைபோட்டுச் சென்றது.

ஆங்காங்கு ஆற்றின் இரு கரைகளையும் அழகிய பாலங்கள் இணைத்தன. அவற்றிடையே மிகப் பெரிய உயரமான பாலத்தின் வழியாகத் தமது குதிரையை ஓட்டிச் சென்றார், மூஸா. அப்பாலும் குன்றைந்தது முக்கால் கல் நீளமாவது இருக்கும் என்று அவர் மனதிற்குப் பட்டது.

நகர மத்தியில் குறுகிய- நிழ்லுள்ள தெருக்கள் வழியாகச் சென்றார் அவர். அவற்றிலே இன்னும் மனிதப் புழக்கம் இருந்தது.

கருத்த ஆப்பிரிக்கர்கள், மாநிறமான பெர்பர்கள், இலேசான மஞ்சள் நிறமுள்ள கிரேக்க வியாபாரிகள்- அரபுப் படை வீரர்கள்- தொழிலாளர்களுடன் கலந்து காணப்பட்டனர்.

பல வண்ண வேலைப் பாடுகள் கொண்ட ஆடைகள் அணிந்த காவல் வீரர்களும் அரண்மனை ஊழியர்களும் நடந்து சென்றார்கள்.

கூனல் முதுகுகளில் சரக்கு மூட்டைகள் ஏற்றிய ஒட்டகங்கள் அசைந்தாடிச் சென்று கொண்டிருந்தன.

வெள்ளிப் பூண்களும் பூக்களும் பதித்த பல்லக்குகளை அடிமைகள் சுமந்து வந்தனர்.

வெண் பட்டாடை, இரத்தினங்கள் பதித்த அரைக்கச்சை அணிந்து- வாட்களைத் தங்கள் இடைகளில் தொங்க விட்டு அரபிக் குதிரைகள் மீது அமர்ந்து கனவான்கள்- சிவப்பு பச்சைத் தொப்பிகள் அணிந்து செல்லும் வியாபாரிகள்-இவ்வாறு பல திறப்பட்ட மக்கள் வழி நெடுகிலும் தென்பட்டனர்.

அந்தக் காட்சிகளைக் கண்ணுற்றவாறே நகர மத்திக்கு வந்து விட்டார், மூஸா அபில் கஸ்ஸான்.

அங்கே பெரியதொரு நீர்த் தேக்கம். அதன் நடுவே பொற் தகடுகள் மேவிய சிங்கச்சிலை அதன் வாய் வழியே நீர் தெறித்து விழுந்து கொண்டிருந்தது. அச் சிங்கத்தினருகே ஒரு பெரிய மனித உரு. அதன் நீட்டிய கரத்திலிருந்து சிந்திய தண்ணீர் சிங்கத்தின் மீது சிதறித் தெறித்துக் கொண்டிருந்தது.

புரவி ஓடிக் கொண்டே இருந்தது

சற்றைப் பொழுதில் ரூஸாஃப் தோட்டம் வந்து விட்டது. அதன் எழிற் தோற்றம் கண்ணைக் கவர்ந்தது. நானாவித அபூர்வச் செடிகள் அங்கு செழித்து நின்றன. அதன் நடுவே கவினுறும் அரண்மனை. அவ்வரண்மனையைச் சேர்ந்த விருந்தினர் விடுதி வந்து சேர்ந்தார், மூஸா.

அன்று வெள்ளிக் கிழமை இரவு அதிலும் புனித ரமலான் திங்கள்! சுறுக்கிலே சிரமபரிகாரம் செய்து கொண்டு சுணங்காது அவர் ஜும்ஆ பள்ளி விரைந்தார்.

கிச்சிலி மரங்கள் பச்சைப் பசேலெனத் தூண்களைப் போல வரிசை வரிசையாக நின்றன. அவற்றிற்கப் பால் அழகுச் சிற்பமாக நின்றது பள்ளி வாயில்.

அதன் கம்பீரமான வாயில் வழியாக நுழைந்து, விசாலமான தொரு வெளி முற்றம் அடைந்தார் மூஸா. அங்கே வாச மலர்கள் பூத்துக் குலுங்கி நின்றன. சலவை, மற்றும் விலையுயர்ந்த கற்களால் அமைந்த ஆயிரம் தூண்கள், வளைவுகளையும் தாழ்ந்த மரக் கூரையையும் தாங்கி நின்றன. நானூறு முழ அகலமும் இருநூற்று அறுபத்தாறு முழ நீளமும் கொண்ட அந்த விசாலமான முற்றத்தைக் கடந்து செல்ல....

கிழக்கு மேற்காகவும் தெற்கு வடக்காகவும் ஏராளமான வளைவுப் பகுதிகள்- அவற்றில் செம்பு முலாம் பூசிய கதவுகள்!

ஆங்கோரிடத்தில், தண்ணீர் குறையாமலிருக்க சதா நீர் நிரம்பிக் கொண்டிருந்த 'ஹவுல்' அதில் ஆயிரக் கணக்கானவர்களுடன் தாமும் ஒருவராக 'ஒலு'ச் செய்து கொண்டு உள்ளே சென்றார் மூஸா.

ஆயிரத்துக்கு மேற்பட்ட தூண்கள் பள்ளியின் சிவப்பு, பொன்னிறமுள்ள கூரையைத் தாங்கி நின்றன.

அக் கூரையிலிருந்து பித்தளையாலும் வெள்ளியாலும் செய்யப்பட்ட நூற்றுக் கணக்கான சர விளக்குகள் தொங்கிக் கொண் டிருந்தன. அவற்றில் எரிந்து கொண்டிருந்த ஆயிரக் கணக்கான திரிகளிலிருந்து கசியும் எண்ணெய்யின் சுகந்தம் சூழ் வெளியெங்கும் பரவியது.

பள்ளியின் உட் சுவர்களில் எல்லாம் பல வண்ணப் பளிங்குகள் பதிக்கப்பட்டிருந்தன.

அதோ மண்டபத்தின் நடுவே இருபத்து நான்கு முழச் சுற்றளவில் பெரிய தொரு சரவிளக்கு. பல்லாயிரம் வெள்ளித் தகடு களால் செய்யப்பட்ட அதன் எதிர் ஒளித் தட்டு அதன் ஆயிரம் விளக்குகளின் ஒளியைப் பத்து மடங்காகப் பெருக்கியது.

அந்த ஒளிப் பெருக்கிலே மிஹ்ராப் கண்கொள்ளாக் காட்சி யாக இருந்தது. வெள்ளித் தகடுகளால் பரவப்பட்ட அதில் பற்பல வண்ணப் பூக்களும் கொடிகளும் இரத்தினங்களால் சித்திரிக்கப்பட் டிருந்தன. அதன் தூண்களின் பொன்னும் மணியும் பதிக்கப்பட் டிருந்தன.

மிம்பர் மேடை தங்கத்தாலும் அரிய பலகைகள் நவரத்தினங் களும் இழைய அமைக்கப்பட்டிருந்தது.

ஐம்பது ராத்தல் எடையுள்ள பெரிய மெழுகு வர்த்தி இமாம் நிற்குமிடத்தின் அருகே எரிந்து கொண்டிருந்தது. சாம்பிராணியையும், வாசனைப் பொருட்களையும் சேர்த்து அவ்வப் போது நெருப்பிலிட்டு நறுமணப் புகை கிளம்பும் படி செய்து கொண்டிருந்தனர் நூற்றுக்கணக்கான பணியாட்கள்.

புற ஒளியிலே அமர்ந்தவர்களாக அக வொளி பெறச் சித்தமாக இருந்தனர், மெய்யடியார்கள். அக்காட்சியின் மாட்சியில் தம்மை மறந்தார் மூஸா.

மீண்டும் உலக நினைவு திரும்பிய போது....

அதோ மன்னர் போ அப்தில்- மந்திரி யூசுப்....!

'என்ன! இதுவரை நாம் கண்டது....வெறும் பிரமை தானா?

அந்த அளவு எல்லாம் இமைப் பொழுதில் அவர் மனக் கண் முன் தோன்றி மறைந்து விட்டன.

ஐநூறு ஆண்டுகளுக்கு மேலாக உந்தலுஸின் தலைமைப் பீடமாக விளங்கிய குர்த்துப்பாவைப் பற்றி மூஸா சின்னஞ்சிறு வயதிலிருந்தே எவ்வளவோ கேள்விப் பட்டிருந்தார்; படித்திருந்தார். ஏன், தாமே நேரில் அவர் ஓரிரு முறை அரசு கடமையாக அங்கு சென்று வந்திருக்கிறார்.

அப்பெரு நகரின் மாட்சியைப் பற்றி நினைவூட்ட அங்கு இன்னும் இருந்தனவே பல சின்னங்கள்!

ஆம், உண்மையிலேயே அது உந்தலுஸின் பெருமைக்குரிய தலைநகரம்....உலகின் ஆபரணம் தான்!

ஜபல் குர்த்துபா மலைத் தொடரின் அடிவாரத்தில் பேராற்றங் கரையின் வட கரையில் அரை வட்டம் போன்ற செழுமையான வெளியில் அமைந்திருந்தது. அந் நகர்.

கோட்டை மதிலுடன் கூடிய பிரதான நகரம்- அதைச் சுற்றிலும் இருபத்தேழு சார்பு நகர்கள்.

புகழின் உச்சத்திலே குர்த்துபாவில் பத்து லட்சம் மக்கள் வசித்தனர். அதன் சிறப்பின் அந்திம நிலையிலும் கூட அங்கே வாழ்ந்தவர்களின் எண்ணிக்கை இரு லட்சத்துக்கும் குறைவில்லை.

மொத்தம் அறுபதினாயிரம் அரண்மனைகள், மாளிகைகள்- இரண்டு இலட்சத்து அறுபதினாயிரம் வீடுகள்-எண்பதினாயிரம் கடைகள்- நானூறு பள்ளி வாயில்கள்- ஐம்பது லட்சம் நூல்கள் கொண்ட எழுபது பொது நூல்நிலையங்கள்- தொள்ளாயிரம் பொதுக் குளியல் இடங்கள்! ஆம் அங்கிருந்த ஏழையிலும் ஏழையும் கூட மற்ற பொருள்களை விட சவுக்காரத்தை மிகப் பிரீதியுடன் வாங்கினான். ஐரோப்பா முழுவதிலுமே முஸ்லிமல்லாதார் தினம் குளித்து முழுகுவதையே ஒரு தொல்லையாக நினைத்த காலமது!

உண்மையில், அந்நகரம் கலாச்சாரம், கல்வி, கலை, தொழில், வணிகத்தின் தலை சிறந்த பீடமாக இருந்தது. ஐரோப்பாவிலே வேறெந்த நகரமும் கண்டிராத அளவில் நாகரிகமும் பண்பாடும் துப்புரவும் வனப்பும் மிக்கதாக இருந்தது.

மூவாயிரம் சிறு நகர்கள்- கிராமங்களிலிருந்து தலை நகருக்குத் தேவையான பொருள்கள் வந்தன.

மலையுச்சியிலிருந்து தெளிந்த குடிநீர். கற்களைக் கொண்டு கட்டப்பட்ட மாபெரும் வாய்க்கால் வழியாக வந்து நகரத்தின் மத்தியிலிருந்த தேக்கத்தில் வந்து நிரம்பியது.

அங்கிருந்து அந்நீர் பெரிய- சிறிய தொட்டிகளுக்குப் பாய்ந்தது. அரண்மனைகளில் தங்கத்தாலும் வெள்ளியாலும், மற்ற இடங்களில் வெண்கலம் அல்லது சலவைக்கற்களாலும் அந்த நீர்த் தொட்டிகள், அமைக்கப்பட்டிருந்தன.

ஈயக் குழாய்கள் வழியாக நகருக்கும் அதன் சுற்றுப் புறங்களுக்கும் வழங்கப் பட்டது போக, மீத நீர் தேக்கத்திலிருந்து ஆற்றிற்கு ஓடி விடுவது ஒரு அற்புத மாக இருந்தது.

அத்தகைய வசதிகளும் சிறப்புகளும் பெற்றிருந்த தலைநகரி லிருந்து நான்கு மைல் தொலைவில் அல் ஜஹ்ரா அரண்மனை யிருந்தது. உலகின் பல பகுதிகளிலிருந்தும் கொண்டு வரப்பட்ட வெள்ளை, இளஞ்சிவப்பு, பச்சை, மற்றும் பல வண்ணச் சலவை, பளிங்குக் கற்களால் அது அமைக்கப்பட்டிருந்தது.

அதன் கிழக்கு மண்டபத்தில் பல நீருற்றுக்கள் அவற்றின் நடுவே தங்கத்தில் வார்க்கப்பட்டு இரத்தினங்கள் பதித்த மிருகச்

சிலைகள்! அம்மிருகங்களின் வாய்களிலிருந்து தொடர்ந்து நீர் வீழ்ந்து கொண்டிருந்தது. அவ்வாறு இடையறாது வீழ்ந்த நீர்ச் சரங்கள் வெய்யிலில் வெள்ளிக் கம்பிகளைப் போல் பிரகாசிக் கின்றன.

சலவைக் கல்லால் கட்டப்பட்ட தர்பார் மண்டபத்தில் தங்கமும் இரத்தினங்களும் இழைந்த அழகான தூண்கள்.

அரண்மனைத் தோட்டத்திலே பற்பல வனவில்ங்குகள்- பல நாட்டுப் பறவைகள்!

ஜும்ஆ பள்ளியிலே வெள்ளிக் கிழமை தோறும் தொழுகைக் குப் பிறகு, தலைநகருக்க அண்மையில் உள்ள ஊர்களிலிந்து வரும் நீதிபதிகள் பொது மக்கள் முன் தங்கள் அறிக்கைகளை வழங்குவது வழக்கமாக இருந்தது.

அத்துணை மாண்புடன் திகழ்ந்த குர்த்துபாவின் வீழ்ச்சிக்குப் பிறகு அதன் முந்தைய மாட்சியை வரித்துக் கொண்டது போல விளங்கியது கர்னாதா.

அதன் அரசர்களில் ஒருவரான அல்கனீ பில்லாஹ் பண்பாடும் மேதாவிலாசமும் கூடியவராக இருந்தார். அவருக்கு அமைச்சராக இருந்தவர் லிஸானுத்தீன் (மார்க்கத்தின் நாக்கு) என்ற சிறப்புப் பெயர் பெற்றார்

அவ்வரசரின் காலத்தில் முஸ்லிம்களுக்கும் கிறிஸ்துவர் களுக்குமிடையே நல்லுறவு நிலவியது. அதனால் நாட்டில் செல்வ வளம் கொழித்தது. கலைகளும் தொழில்களும் மீண்டும் தழைக்கலாயின. மத்திய கிழக்கு- கீழை நாட்டுப் பொருள்கள் கர்னாதாவின் துறைமுகங்களில் வந்திறங்கின.

ஸிதி மூன்றாம் யூசுஃப் மீது காஸ்தீலிய மன்னன் ஹென்றியின் அரசமாதா மிகுந்த அபிமானம் கொண்டிருந்தார். அந்த நல்லுறவிலே அவ்விருவரும் அன்பளிப்புகளை, பரிமாற்றம் செய்து வந்தனர். நட்பான முறையில் ஒருவருக்கொருவர் ஓலைகள் அனுப்பி வந்தனர்.

காஸ்தீலியா, அராகூன் குதிரை வீரர்கள் தங்கள் அரசாங்கங்களின் மீது குறைப்பட்டுக் கொள்ளும் நேரங்களில், யூசுஃபின் தர்பாருக்கு வந்தனர். மேலும், தங்களுக்கிடையில் நடக்கும் போட்டி பூசல்களிலும் அவருடைய மந்தியஸ்தம் கோரினர். அவர்களிடையே சண்டையைத் தடுத்துச் சமாதானம் செய்து வைப்பார், சுல்தான் யூசுஃப். இரக்கம், நீதி, தயாளம் மிக்க அவரை உள் நாட்டினரும், வெளி நாட்டினரும் நேசித்தனர். அவராட்சியிலே நிலவிய அமைதி அதுவரை முஸ்லிம் கிறிஸ்துவரிடம் அடைந்திருந்த சேதங்களை ஈடுபடுத்துவதற்கான அவகாசம் அளித்தது.

11. போர்க் கனல்

எழுநூறு ஆண்டுகளாக வளர்ந்தோங்கிய உந்தலுஸ் பேரரசின் வரலாற்றுச் சிறப்புகள் மூஸா அபில் கஸ்ஸானின் உள்ள விதானத்தில் பற்பல நினைவுக் கதிர்களைப் பரப்பி நின்றன.

உணர்ச்சி ததும்ப அவர் கூறினார்:

''நம்முடைய பாரம்பரியத்துக்கு நாம் உண்மையாக நடந்து கொள்ள வேண்டும். அதிர்ஷ்டம் மீண்டும் நம் பால் வராமல் போய் விடாது. நம்மிடம் உள்ளவற்றை நாம் தீர்க்கமுடன்- திறமையுடன்- உறுதியாகப் பயன்படுத்துவோமாக! நம்மிடம் தேர்ந்த காலாட் படைகள் உண்டு. சிறந்த புரவிப் பிரிவுகள் இருக்கின்றன. உந்தலுஸ் தயா வீரத்தில் மலர்ந்தவர்கள் நம் வீரர்கள். போரில் நல்ல அனுபவம் பெற்றவர்கள். எந்தனையோ சமர்களில் விழுப்புண்கள் பெற்றவர்கள்.

''நம்முடைய மக்களைப் பற்றி கேவலமாகக் கருத வேண்டாம். அவர்கள் என்ன அவ்வளவு மோசமானவர்களா? அவர்களின் வீரத்திலும் தீரத்திலும் ஏன் சந்தேகம்? வாலிபத் துடிப்பின் செந்நாப் பிழம்புகள் துள்ளும் நெஞ்சங்கள் கொண்ட இருபதினாயிரம் இளைஞர்கள் நம்மிடையே இருக்கிறார்கள்.

''நம்முடைய இல்லங்களைத் தற்காத்து நிற்பதில் அவர்கள், படைத் தேர்ச்சி பெற்றுள்ளவர்களை விட எவ்வகையிலும் சளைத்து விட மாட்டார்கள்; சரிசமமாகச் செயலாற்ற முடியும்.

''உணவுப் பொருள்கள் இன்னும் வேண்டுமா? அவற்றைக் கொண்டு வரக் காற்றைவிடக் கடிதோடும் குதிரைகள் நம்மிடம் இல்லையா? பகைவர் மீது பாய்ந்து வர நம்முடைய புரவி வீரர்கள் பின் வாங்க மாட்டார்கள்!

''கிறிஸ்துவர்களிடம் சரணடைந்துள்ள முஸ்லிம் பகுதிகளில் அவர்கள் புகுந்து தொல்லை தந்து சூறையாடி வருவார்கள். எதிரிப் பிரதேசங்களில் நுழைந்து தாக்கி வருவார்கள். விரைவிலே, உணவுப் பொருள்களைக் குதிரைகள் மீது ஏற்றியவர்களாக நம்முடைய கோட்டை வாயில்களுக்குத் திரும்பி வருவார்கள்.

பகைவருடன் கடுமையாகப் போராடிப் பெறும் உணவை விட இனிமையானது ஒரு வீரனுக்கு வேறெதுவும் இல்லை.''

போர்க்கனல் தெறிக்கப் பேசிய மூஸாவின் கண்ணியமான இதயத்திலிருந்து கனன்றெழுந்த வார்த்தைகள்; கோழைகள், உரமில்லாதவர்களின் 'நெஞ்சங்களிலும் கூட வீரத்தையும் வைராக்கியத்தையும் கொளுந்து விட்டெரியச் செய்தன

சலன சித்தமும் நிலையற்ற போக்கும் கொண்ட சுல்தான் போ அப்தில்லையுமே அவ்வார்த்தைகள் கிறிஸ்துவர்களுடன் தீரமுடன் போராட வேண்டுமென்ற வீரவுணர்வு கொண்டெழச் செய்தன- நம்பிக்கைச் சுடர் மறைந்து விடும் போலிருந்த கூட்டத்திலும்! மண்டபத்தில் குழுமியிருந்த படைத் தலைவர்களை மன்னர் உறுதி பளிச்சிடும் கண்களால் நோக்கினார்.

''நாட்டின் கேடயங்களே! நம்முடைய மார்க்கத்திற்கு எதிராக புரியப்பட்ட எல்லா அநீதிகளுக்கும் பழிவாங்க வேண்டியது நம் மெல்லாருடைய கடமை! இறந்துபட்ட நம்முடைய அருமை உறவினர்கள்- அன்பு நண்பர்களின் உயிர்களுக்கும் நாம் பழிக்குப் பழி வாங்க வேண்டும். நம்முடைய பெண்டிர் மீது இழைக்கப்பட்ட அக்கிரமங்களுக்கு வஞ்சம் தீர்க்க வேண்டும். நமது நாட்டின் மீது குவிக்கப்பட்ட துன்பம், துயரங்களுக்கு ஈடு காண வேண்டும். இதற்காக என்னென்ன செய்ய வேண்டுமோ, அவற்றையெல்லாம் செய்யச் சித்தமாகுங்கள். நமது குடிமக்களைப் பாதுகாப்பது இனி உங்களுடைய பொறுப்பு!'' என்று அவர் கூறினார்.

அவர் முன்னே குழுமியிருந்தோரிடையே போர் உற்சாகம் பொங்கியெழுந்தது. புத்துணர்வும் புதியதோர் உத்வேகமும் கொண்டவர்களாகக் கூவினர்:

''ஆம், அப்படியே செய்ய வேண்டும். அவ்வாறே செய்வோம்!''

அந்தச் சூழ்நிலையில் குதிரைப் படை அதிகாரிகளில் ஒருவராக நயீம் ரிஸ்வானை நியமித்தார் போ அப்தில்.

அவருடைய சிறிய தந்தையார் அல்ஜஹ்லின் கீழே மாலகா பிரதேசத்தில் கிறிஸ்துவர்களிடையே படு நாசத்தை விளைவித்த அதே ரிஸ்வான்!

அவரையும் முஹம்மத் ஜைதாவையும் துணைத் தளபகிளாகக் கொண்ட புரவிப் படைத் தலைவராக மூஸா அபில் கஸ்ஸான் நியமிக்கப்பட்டார். கோட்டை வாயில்களைப் பாதுகாத்து நிற்கும் பொறுப்பு அம்மூவரிடமும் ஒப்படைக்கப்பட்டது. அதே நேரம், எதிரிகள் மீது முன்னேறிச் சென்று தாக்குதல்கள் நடத்துவதற்கு அவரே தளகர்த்தாராகவும் இருக்க மன்னரின் ஆணை ஏற்றார், மூஸா.

அப்துல் ஜக்ரீ, மற்றும் சில படையதிகாரிகள் கோட்டை மதில்களைக் காத்து வரப் பணிக்கப்பட்டனர்.

அல்கஸ்பா, செங்கோபுரங்களின் 'ஸய்யித்' களுக்கு கோட்டைக் கொத்தளங்களின் தலைமை தரப்பட்டது.

போர்க் காலத்தில் தொண்டர்களைத் திரட்டவும் நகரிலிருந்த உணவுப் பொருள்களையும் ஆயுதங்களையும் கவனித்தக் கொள்ளும் படியும் கவர்னர் அபுல் காஸீம் மன்னரால் கட்டளையிடப்பட்டார்.

ஆயிற்று. விரைவிலே மூஸா அபில் கஸ்ஸான் செயல்படத் துவங்கினார்.

''கோட்டை வாயில்களைத் திறந்து விடுங்கள்! பகைவர்கள் நகரில் புகாது நாம் தடுத்து நிற்போம். எதிரிகள் புகுவதானால் என் இறந்த சடலத்தின் மீது தான் வர முடியும்!'' என்று வீரர்களிடம் உத்திரவிட்டார்.

அதைக் கேட்ட பொது மக்களின் உள்ளங்களில் வீரப் புல்லரிப்பு!

ஆம், அவர் வீண் பெருமை பேசவில்லை. வரட்டு அகம்பாவத்தில் ஏதும் சூளுரைக்கவில்லை. சொல்லைவிடச் செயலில் அவர் தீவிரமானவர் என்பது நாடறிந்ததாயிற்றே!

வாய்ச் சொல் வீரர்கள் தற்பெருமையாகத் தம்பட்டம் அடிப்பதையெல்லாம் மிஞ்சும் அளவு உண்மையிலேயே துணிகரமான செயல் புரியும் தீரர் அவர்.

அவர் அவ்வப்போது பிறப்பித்த கட்டளையாலும் இயக்கி வந்த நடவடிக்கைகளாலும் நகர் முழுதும் போர்ச்சித்தத்துக்கான பரபரப்பு. இரைச்சல். பட்டறைகளில் வாட்களும், வேல்களும் கட்டப்படும் ஓசை, கிடங்குகளில் ஆயுதங்கள் உராயும் ஒலி!

இஸ்லாமிய வீர உணர்வு எல்லாரது நெஞ்சங்களிலும் தணலிடத் துவங்கியது.

கிறிஸ்தவர்களின் சக்தியை செயலற்றதாக்குவதற்கும் கங்கணம் கட்டினர் கர்னாதா முஸ்லிம்கள்.

அவர்களின் குதிரைப் படைத் தலைவரான மூஸா அபில் கஸ்ஸான் அங்குமிங்குமாக நகரின் ஒவ்வொரு மூலைக்கும் பாய்ந்து சென்று வந்தார்.

நம்முடைய தணியாத சுதந்திர ஆர்வத்தை- பணியாத வீரவுணர்வை- ஊக்கத்தை மற்ற வீரர்களுக்கும் ஊட்டினார்.

அவரைத் தங்களின் முன் மாதிரியாக- வீர நாயகராகக் கொண்ட இளம் புரவி வீரர்கள் அவரை எல்லோரும் எந்நேரமும் சூழ்ந்திருந்தனர்.

ஏற்கெனவே பல களம் கண்ட படை வீரர்கள் அவரைத் தங்களது மதிப்புக்குரிய தளபதியாகப் போற்றி நடந்தனர்.

வீர முழக்கங்கள் இட்டவர்களாக அவரைப் பின் தொடர்ந்து சென்றனர் பொது மக்கள்.

திக்கற்ற முதியவர்கள், வலிமை குன்றியவர்கள் எல்லாம், அவர் தங்களின் நலத்தைப் பேணும் பாதுகாவலராக இருந்து வர வேண்டும் என்று நல்லாசி கூறினர்.

அந்நிலையில், கருமமே கண்ணாக யிருந்த மூஸாவின் கட்டளையின் படி, தேர்ந்த வீரர்களின் பிரிவொன்று கோட்டையின் ஒவ்வொரு வாயிலின் அருகிலும் நிறுத்தப்பட்டது.

''எதிரிகளின் இரகசிய நடவடிக்கைகள் நிறைவேறாமல் நாம் தடுக்க வேண்டும். எந்த நேரத்திலும் நாம் முன்னேறி அவர்களைத் தாக்க நேரிடலாம். சித்தமாக இருங்கள்!'' என்று அவ்வீரர்களுக்கு எச்சரிக்கையாகக் கூறினார் மூஸா.

அவ்வீரர்களின் புரவிகள் சேணமிடப்பட்டு அலங்கரிக்கப் பட்ட நிலையில் லாயங்களில் நின்றன. அவற்றின் மருங்கிலே ஈட்டிகளும் கேடயங்களும் சித்தமாக இருந்தன.

எதிரிகள் வருவதாகத் தெரிய வேண்டியதுதான்! நொடியில், புரவிப் படை வாயிலோரம் வந்து நிற்கும்- கார்மேகத்திடையே மின்னலைப் போல் பாய்ந்து செல்ல!

வெளியுதவி கிடைக்கும் வழிகள் எல்லாம் துண்டிக்கப்

பட்டிருந்த போதிலும், கர்னதாவின் கோட்டைகளும் கொத்தளங் களும் எதிரித் தாக்குதல்களைக் சமாளிக வல்லவையாகவே இருந்தன.

குறுகிவிட்ட முஸ்லிம் பேரரசின் கடைசிப் புகலிடமாக இருந்தது, கர்னாதா நகரம். மெல்ல மெல்ல நாட்டை வெற்றி கண்டு பிடித்து வந்த பகைவர்களின் எஞ்சிய வீரர்கள் அங்கே வந்து கூடியிருந்தனர். கண்ணியமான இஸ்லாமியர்கள் வீரம் இறுதியில் மிஞ்சி நின்றதும் அங்கு தான்.

அந்நிலையில் அரச விசுவாசமும் நாட்டுப் பற்றும் மிக்கவர்கள் பொது ஆபத்தைத் தடுத்து நிறுத்த முனைந்தனர்.

பகைவரிடமிருந்து பத்திரமாக இருப்பதாக எண்ணிச் செயலற்றிருந்த கர்னாதா இப்போது நெருக்கடியான கட்டத்தில் எழுச்சி பெற்று நின்றது.

ஆகவே, வெறும் படை பலத்தால் மட்டுமே நகரைப் பணியச் செய்வதால் பெரும் இரத்தக் களறி ஏற்படும் என்பதை உணர்ந்தார் அரசர் பெர்டினாண்டு. அதனால் தீரத்தை விட, தந்திரத்தாலேயே வெற்றி காண எண்ணினார்! பய்யாஸாவை வீழச் செய்த அதே வழியைக் கையாண்டு கர்னாதாவையும் பட்டினி போட்டே பிடிக்க அவர் விரும்பினார்.

அவருடைய படைகள் அல்புஷாராத் பகுதியில் புகுந்து, சமவெளிகளைப் பாழ்படுத்தி, கர்னாதாவாசிகள் தங்கள் உணவுக்கு நம்பியிருந்த நகரங்களைக் கொள்ளையடித்து, தீ வைத்தனர்.

கர்னாதா கோட்டைக்குப் பின் புறமிருந்த மலைப் பகுதிகளுக்கு அவருடைய வீரர்கள் சென்று, அந்நகருக்கு உணவுப் பொருள்கள் கொண்டு வரும் குதிரை, கோவேறு கழுதை கூட்டங்களைத் தடுத்து நிறுத்தினர்.

நிலைமை மோசமாக ஆக முஸ்லிம்களின் துணிச்சலும் அதிகமாகியது.

மூஸாவின் தலைமையில் குதிரைப் படை அடிக்கொரு முறை கோட்டையிலிருந்து கிளம்பிச் சென்று கிறிஸ்துவர்கள் படை முகாமடித்திருந்த எல்லையில் தொல்லை தந்து திரும்பின. சமயங்களில் அவர்களது மாடி வீடுகளினூடே அப்படை ஊடுருவிச் சென்றது.

மற்றும் சில சமயங்களில் பகைவர்களுக்கு உணவுப் பொருள் வரும் மார்க்கங்களை மூஸாவின் புரவி வீரர்கள் துண்டித்தனர். கிறிஸ்துவர்களின் நடவடிக்கைகள் பற்றி வேவு பார்த்து வந்தனர். அவர்களது முகாம்களைத் தாக்கி வெற்றிப் பொருள்களுடன் திரும்பினர்.

அவ்வாறு மூஸாவும் அவரது வீரர்கள் செல்லும் திசையெல் லாம் எளிதில் அறியக் கிடந்தது- அவர்களால் கொல்லப்பட்ட வர்களின் சடலங்கள், காயப்பட்ட வர்களின் வலிமை குன்றிய உடல்கள் வழியெங்கும் கிடப்பதைக் கொண்டு!

அவர்களுடன் சண்டையிட்டு காயமடைந்தவர்களும் தப்பியோடியவர்களும் மூஸாவின் வீர தீர சாகசச் செயல்கள் பற்றியும் அவரால் விளைந்த சேதங்கள் பற்றியும் கிறிஸ்துவர்களின் பாசறைக்குச் செய்திகள் கொண்டு போன வண்ணமிருந்தனர்.

அதே நேரம், முற்றுகையிடப் பட்டிருந்த கர்னாதா நகரினுள்ளே இருந்தவர்களின் வாய்களில் மூஸாவின் பெயர் அடிபட்டுக் கொண்டிருந்தது. அவரது நடவடிக்கைகள் அவர்களது நெஞ்சங்களை ஊக்குவித்து வந்தன. ஆனால் பகைவர்களின் உள்ளங்களிலோ அவருடைய பெயரும் செயலும் பெரும் பீதியை வளர்த்து வந்தன.

கர்னாதா முஸ்லிம்கள் அந்த அளவு எதிர்ப்புக் காட்டுவார்கள் என்று அரசர் ஃபெர்டினாண்டு கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. ஆகவே, அந்நகர் வாசிகள் துணிச்சலுடன் நடத்தி வந்த திடீர் தாக்குதல்களால் விளைந்த தொல்லைகளையும் நஷ்டங்களையும் கண்டு அவர் மனம் குழம்பினார்.

'இனி எவ்வாறு நடந்து கொள்வது?- என்ன செய்வது?

கிறிஸ்துவர்கள் பாளையமிறங்கி யிருந்த இடத்தைச் சுற்றிலும் பலமான அரண் அமைக்க உத்திரவிட்டார் அவர்.

அடுத்து, அரண்மனை ஆழமான அகழி ஒன்று வளைத்து, நின்றது.

நாற்சதுர வடிவிலே நகரைப் போல அமைந்திருந்த அந்த பாசறையினூடே குறுக்குமறுக்குமாக பல தெருக்கள் ஓடின.

கிறிஸ்துவர்கள் பாளையமிறங்கியிருந்த இடத்தில் நூற்றுக் கணக்கான வண்ணக் கூடாரங்கள் அடிக்கப்பட்டிருந்தன. மேலும், செடி கொடிகளையும் மரக் கொப்புக்களையும் கொண்டு கட்டிய எளிய குடில்களும் இருந்தன. அவற்றில் எல்லாம் எரிந்து வந்து அடுப்புகளிலிருந்து கிளம்பிய புகை பகல் எல்லாம் மேகம் போலப் படர்ந்து நின்றது. அதனூடே பரவிய கதிரொளி முகாம் எங்கும் ஒருவித கருங்காலி முலாம் ஏற்றியது.

அந்தப் படை நகரிலே கர்னாதா சரணடையும் வரையில் தங்கியிருக்கும் உறுதியுடன் இஸபெல்லா அரசியார் தம்முடைய பிள்ளைகளுடன் வந்திருந்தார்.

அங்கே இன்பத் திருவிழாவோ வெற்றிக் கோலாகலமோ என்று முஸ்லிம்கள் எண்ணும் வண்ணம், காலையிலிருந்து மாலை வரை கிறிஸ்துவ படை முகாமில் ஒரே மகிழ்ச்சி ஆரவாரம். வீரர்கள் போர்ப் பாடல்களை இசைத்து வந்த ஒலி.

அந்நிலையில், முஸ்லிம்களுடன் களத்திலே நேரடியாகப் பொருதி தங்கள் வீரத்தை வெளிப்படுத்துவதை விட அவர்கள் கோட்டை நகர் மீது தாங்கள் இட்டிருந்த முற்றுகையைக கைவிடுவதில்லை என்ற உறுதியைக் காட்டினர், கிறிஸ்துவர்கள்.

அம் முற்றுகையின் கடுமை அதிகரித்து வந்த போதிலும் முஸ்லிம்களின் வீரம் குன்றிவிடவில்லை.

அவர்களுக்குத் தலைமை தாங்கி வந்த மூஸாவின் உள்ளமும் கொஞ்சமேனும் தளரவில்லை. வழக்கம் போலவே நம்பிக்கையுடனும் உற்சாகத்துடனும் இயங்கி வந்தார்.

அவருடைய புரவி வீரர்கள் மிக்க தீரமுடனும் திறமையுடனும் எதிரிகளைத் தாக்கி வந்தனர்.

உயர்ந்து நின்ற அரண்களோ ஆழ்ந்த அகழியோ அவர்களை அஞ்சி ஒடுங்கும் படி செய்ய வில்லை. அடிக்கடி அவர்கள் பகைவர் முகாமினுள்ளே புகுந்து படை வீடுகளைத் தாக்கினர்

ஆம், அல்ஹம்ரா வீழ்ச்சியுற்ற பிறகு பத்து வருடங்களில் தங்கள் அரசின் ஒரு பகுதியிலன்றோ அவர்கள் பகைவர்களுடன் போராடி வந்திருக்கின்றனர்? கர்னாதாவின் வெற்றியையும் பெருமையையும் காத்து நிற்க எத்தனை களங்களில் எதிரியுடன் சமர் செய்திருக்கின்றனர்?

கர்னாதா?

மத்திய தரைக் கடலுக்கும் வாதீ அல் கபீருக்கும், இடையே இல்பீரா குன்றுகள், அல் புஷா ராத் மலைத் தொடரின் அணைப் பிலே கிடந்தது அது.

கிழக்கிலிருந்து மேற்கே இரு நூற்றிருபது கல் -வடக்கிலிருந்து தெற்கே எழுபத்தைந்து கல் தூரம் பரவியிருந்த சிறு பிரதேசம் தான். என்றாலும், ஒரு பேரரசுக்குரிய இயற்கை வளம் அங்கே கொழித்தது.

பரந்த சமவெளிகள்- இடையிடையே இயற்கை கனி வளமிக்க மலைகள்! ஜபல் ஷுலைர் மலையிலிருந்து கிளம்பும் சிஞ்ஜீல், தர்ரோஹ், மற்றும் ஆறுகள்- எண்ணற்ற கால்வாய்கள், ஓடைகள் எல்லாம் கர்னாதா முழுவதையும் செழிக்கச் செய்தன.

அதன் கடற்கரை நெடுகிலும் இருந்த பல துறைமுகங்கள் மத்திய தரைக் கடல் பிரதேசத்தின் சந்தைகளாக விளங்கி வந்தன. ஐரோப்பா, ஆப்பிரிக்கா, மத்திய கிழக்கு கப்பல்கள் அத்துறைமுகங் களுக்கு வந்து நங்கூரம் பாய்ச்சி சரக்குகளை இறக்கியும் ஏற்றியும் சென்றன.

கர்னாதா வெங்கும் ஆரஞ்சு, நாரத்தை. திராட்சைத் தோட்டங்கள்!

ஜைத்தூன், முசுக் கட்டை, மரங்களும் ஏராளம்.

'கோத்தாத்' சமவெளியில் தொன்னூறு கல் நீளம் வரை ஒரே செழுமை தான். நோக்குமிடமெல்லாம் எழில் தோட்டங்கள். அவற்றைச் சுற்றி பசுமையான வயல்கள்!

ஆண்டு முழுவதும் பழங்களும் தானியங்களும் தட்டுப்பாடின்றி மக்களுக்குக் கிடைத்து வந்தன.

நாட்டிலே முப்பது பெரு நகரங்கள்- எண்பது கோட்டை நகர்கள்- ஆயிரக் கணக்கான கோட்டை, கொத்தளங்கள், ஊர்கள், பெரிய கிராமங்கள்.

வாதி அல் கபீர் ஆற்றங்கரை நெடுகில் மட்டும் ஒரு லட்சத்து இருபதினாயிரம் கிராமங்களும் சிறுசிறு நகரங்களும் அமைந் திருந்தன.

அல் மரிய்யா, மாலகா ஆகிய இடங்களிலிருந்து பட்டும் சணலும் இத்தாலியின் துறைமுகங்களுக்கு ஏற்றுதியாகி வந்தன.

ஒவ்வொரு நகரமுமே-ஒவ்வொரு கைத் தொழிலுக்குப் புகழ் பெற்றிருந்தது.

அத்தகைய சிறப்பு வாய்ந்த நாட்டைப் படு நாசத்திலிருந்து காப்பாற்றவே தம்முடைய பெருமையையும் விட்டுக் கொடுத்து, அரசுக்குச் செய்யும் ஒரு தியாகமாகவே ஹென்றி மன்னனுடன் சமாதானம் செய்து கொள்ள நினைத்தார், சுல்தான் இஸ்மாயீல்..

அவர் இறந்த மூன்றாவது ஆண்டு...

அரசர் ஃபெர்டினாண்டுக்கும் அரசி இஸபெல்லாவுக்கும் திருமணம் நடந்தது. அதனால் காஷ்தீலியா, அராகூன், லியூன் சிற்றரசுகள் ஒன்றுபட்டன. மீண்டும் முஸ்லிம் அரசுக்கு கிறிஸ்த வர்கள் ஒருமித்தவர்களாகத் தொல்லை தரலாயினர். அதன் மீது அடிக்கடி படையெடுத்து வந்தனர்.

மெல்ல மெல்ல வடக்கே ஜபல் அல்புர்தாத் வரை விரிந்திருந்த கர்னாதா அரசு ஜபல் ஷுலைருக்கும் கடலுக்குமிடையே அடை பட்டு நெறுக்கப்பட்டு விட்டது போலக் குறுகிவிட்டது. காலூன்றி நிற்குமிடத்தில் எல்லாம் எதிரியுடன் முஸ்லிம்கள் சண்டை செய்தனர்.

முடிவில், தலைநகர் கர்னாதா மட்டும இப்போது கொந்தளிக்கும் கடல் நடுவே ஒரு தீவு போலத் தனித்து நின்றது....

''இதோ நாம் நின்று போரிடும் இந்த நிலம் தவிர நமக்கு வேறென்ன இருக்கிறது? இதையும் இழந்து விட்டால், நமக்கு நாடுமில்லை; பேரும் இராது!''

மூஸா அபில் கஸ்ஸான் தம்முடைய வீரர்களிடம் அடிக்கடி கூறி அவர்களுக்கு ஆவேசம் ஊட்டினார்.

12. மாதுளம் -முத்துக்கள்!

''கர்னாதா ஒரு மாதுளம் பழம் போல! அதன் முத்துக்களை ஒவ்வொன்றாக எடுத்து விடுவேன்'' என்று அரசர் பெர்டினாண்டு அடிக்கடி சொல்லிக் கொள்வார். அதன் படியே அவர் அப்பேரரசின் நகரங்களையும் கோட்டைகளையும் அடுத்தடுத்துக் கைப்பற்றி வந்தார்.

''அந்த மூர் வல்லூறின் சிறகுகளையெல்லாம் தரித்து விட வேண்டும்'' என்று தமது அவையினரிடம் அவர் அவ்வப்போது கூறியிருக்கிறார். அவ்வாறே தம் முன்னோர்களைப் போலவே அவரும் மூர்கள் என்ற உந்தலூஸ் முஸ்லிம்களுடைய அரசின் பகுதிகளை கொஞ்சம் கொஞ்சமாகப் பிடித்து வந்தார்.

முடிவில், எஞ்சி நின்றது தலைநகர் கர்னாதா!

மணிமகுடமிருந்த ஜாலஷுுலைர் மலைச் சரிவிலே பீட பூமியில் அமைந்திருந்த, கர்னாதா நகரம், 'கோத்தாத்' சமவெளியில் ஒரு காவற் கோபுரம் போல நின்றது. அந்நகரை ஏழு கல் சுற்றளவில் வலிமையான கோட்டை- மதில்- வளைத்திருந்தது.

அதை எளிதாகத் தாக்கி இலகுவில் வென்று அதனுள்ளே புக முடியாது என்பதை அரசர் ஃபெர்டினாண்டு நன்கு உணர்ந்திருந்தார்.

அக்கோட்டை நகரிலிருந்து அடிக்கடி வெளிக் கிளம்பி வந்து தாக்கும் முஸ்லிம்களுடன் எதிர்த்துப் போராடுவதில் தம்முடைய புகழையும் பொருள்களையும் அவர் வீணில் இழக்க விரும்ப வில்லை.

அதை வெற்றி கொள்வதற்காக வீரத்தை விட விவேகமே சிறந்ததென்பதை அவர் உணர்ந்திருந்தார்.

ஆகவே, அவர் அந்நகரை பட்டினி போட்டு மெல்ல மெல்ல ஆனால் நிச்சயமாக சரணடையச் செய்ய முடிவு செய்திருந்தார்.

அதன்படியே அவர் கர்னாதாவைச் சுற்றி மிக எச்சரிக்கையான முறையிலே ஏராளமான வீரர்களைக் கொண்டு தீவிர முற்றுகை இட்டிருந்தார்.

தலைநகரின் களஞ்சியமான அல் புஷாராத் பகுதிகளிலிருந்து தானியங்களோ மற்ற உணவுப் பொருள்களோ அங்கே வந்து சேரும் வழி வகைகளையெல்லாம் தடுத்து நின்ற அம் முற்றுகை மாதக் கணக்கில் நீடித்தது.

ஆனால் கர்னாதா முஸ்லிம்களின் உறுதி குலையவில்லை. மூஸாவுடையவும் உள்ளம் தளரவில்லை.

அவர்களுக்கும் அரசர் ஃபெர்டினாண்டின் படையினருக்கும் சில்லறைச் சண்டைகள் தொடர்ந்து நடந்து வந்தன.

கோட்டையிலிருந்து திடீர் திடீரென முஸ்லிம் புரவி வீரர்கள் வெளிப்படுவார்கள். ஆங்காங்கே தங்கள் முன் எதிர்ப்படும் கிறிஸ்துவ வீரர்களுடன் அவர்கள் துவந்தச் சண்டைகள் நிகழ்த்தினர்.

அவ்வாறு கர்னாதா கோட்டை வாயில்களின் முன்னே- கிறிஸ்துவ முகாம் அருகே நாள் தோறும் நடந்து வந்தது.

கடுஞ்சமரின் போது களத்திலே நடக்கும் மூர்த்தண்யமான சண்டைகளாக அவை இருக்கவில்லை. இரு தரப்பினருமே நேர்த்தி யான கவசங்களுடன் அலங்கரிக்கப்பட்ட புரவிகள் மீது அமர்ந்த வர்களாக கம்பீரமான சடங்குகளுடன் ஏதோ விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்வது போலவே அவர்களிடையே வாட்சண்டைகளும் வேல் சண்டைகளும் நடக்கும்.

அவற்றில் எல்லாம் பெரும்பாலும் முஸ்லிம் வீரர்களே வெற்றி அடைந்து வந்தனர். அதனால் கர்னாதா வாசிகள் உற்சாகமும் உயிர்ப்பும் பெற்று வந்தனர். அதே நேரம், கிறிஸ்துவ வீரர்கள் பலர் உயிரிழக்க நேர்ந்தது.

முற்றுகை, பஞ்சம், பற்றாக்குறையால் முடிவில் கர்னாதா கோட்டை கிறிஸ்துவர்களிடம் நிச்சயம் வீழ்ந்து விடும்' என்றே நம்பினார், அரசர் ஃபெர்டினாண்டு. இருந்த போதிலும், முஸ்லிம்களுடன் தனிப்பட்ட முறையில் சண்டையிடக் கூடாது என்று தமது வீரர்களை அவர் கட்டுப் படுத்தினார்.

அதன் பேரில் முஸ்லிம் வீரர்கள் ஒருவருக் கொருவர் பேசிக் கொண்டனர்.

''தயா வீரமும் பெருந் தீரமும் நமக்கிருந்து என்ன பயன்? கிறிஸ்துவ அரசர் தந்திர மிக்கவர். ஆனால் போரிலே அவருக்குப்

பெருந் தன்மை இல்லையே! பட்டினியால் நம்முடைய உடல்களை நலியச் செய்தே நம்மைப் பணிய வைக்க முயல்கிறார். அன்றி, நம்முடைய மனோ வலிமையை எதிர்த்து நிற்க அவர் அஞ்சுகிறார்''

அந்நிலையில், அந்த முஸ்லிம் வீரர்கள் கிறிஸ்துவ வீரர்களைச் சந்தித்த போதெல்லாம் அவர்களை நோக்கி தனிப் போட்டிக்கான 'சவால்' களை விடுவித்தனர்.

அவற்றை எதிரிப் படையினர் ஏற்காத போது அவர்களை எவ்வகையிலும் சண்டைக்கு இழுக்கப் பலவாறாக முயன்றனர், முஸ்லிம்கள்.

சமயங்களில் திடீரென கர்னாதா புரவி வீரர்கள் கிறிஸ்துவ முகாமின் எல்லைக்கு விரைந்து செல்வார்கள். ஆங்கோரிடத்தில் தங்கள் புரவிகளை நிறுத்தியவர்களாக, பகைவரின் பாசறையினுள் வெகு தூரம் யார் தான் வேல் எறிய முடியும் என்று பார்க்க முனைவார்கள். அவ்வாறு துள்ளிப் பாயும் வேலின் கூர்முனையில் அதை எறிபவனின் பெயர் அல்லது எதிரியைச் சவாலுக்கு அழைக்கும் வாசகம் கொண்ட சீட்டிருக்கும்!

ஆனால் கிறிஸ்துவர்களோ தங்கள் அரசன் கட்டளைக்கு அடியோடு கட்டுப்பட்டவர்களாக முஸ்லிம்களின் சவால்களுக்கு எதிர் நடவடிக்கை எடுக்காது விலகினர்.

ஒரு முறை தாரிஃப் என்ற வீரர் தம்முடைய சகாக்களை விடத் துரிதமாக ஏகினார். எதிரி முகாமின் தடைப்பாடுகளைத் தாண்டி அரசு விடுதிக்கருகே சென்றார். அவர் எறிந்த ஈட்டி அரசர்-அரசியாரின் அலங்காரக் கூடாரங்களின் ஓரம் நிலைகுத்தித் தள்ளாடியது. அதைக் கண்ட மன்னர் ஃபெர்னாண்டின் காவல் வீரர்கள் தாரிஃப் நின்று வேலெறிந்த திக்கை நோக்கி ஓடிச் சென்றனர். ஆனால் அவர்கள் வந்து சேர்வதற்குள் அவர் கிறிஸ்துவ முகாமைத் தாண்டி தமது புரவி எழுப்பிய தூசுப் படலத்தினூடே நகரை நோக்கி விரைந்து விட்டார்.

அவர் எறிந்து சென்ற வேலை கிறிஸ்துவ வீரர்கள் சிலர் எடுத்துப் பார்த்த போது-

அதன் முனையில் குத்தியிருந்த சீட்டின் வாசகம் அவர்களின் ஆத்திரத்தைக் கிளப்பியது.

அரசியாரை அவமதிப்பது போல அவ்வாசகம் இருந்ததாக அவர்கள் எண்ணினர்.

''ஆபத்தான ஒரு முயற்சியில் என்னுடன் யார் வருவது?''-

உணர்ச்சி பொங்கக் கேட்டான், ஹென்றி என்பான்.

''இதோ! நான் வருகிறேன்! எனப் பலர் குரல் எழுப்பினர்; தங்கள் கரங்களை உயர்த்தி ஆட்டினர்.

அவர்களில் உடல் வலுவும் நெஞ்சுரமிக்க பதினைந்து பேர்களை ஹென்றி தேர்ந்தெடுத்தான். அவர்களுடன் முஸ்லிம்கள் பால் துரோக சிந்தை கொண்டிருந்த ஒருவனையும் அவன் சேர்த்துக் கொண்டான். அண்மையில் சுயநலத்துக்காக இஸ்லாத்தைத் தழுவிவிட்டு, மீண்டும் கிறிஸ்துவத்தின் பால் திரும்பி விட்டவன் அவன்!

அவன் கூறிய சில உளவுகளைக் கொண்டும் இரகசிய திட்டம் உடனடியாகத் தீட்டப்பட்டது!

நள்ளிரவு வர, ஹென்றியும் அவனது தேர்ந்த வீரர்களும் கிறிஸ்துவ முகாமை விட்டு இருள் மறைவில் கிளம்பினர். அந்தத் துரோகி காட்டிச் சென்ற இரகசியப் பாதை வழியாக மெது மெதுவாகச் சென்றனர்.

தர்ரோஹ் ஆற்றினோடு வந்து கலந்த வடிகால் வழியாக ஒருவர் பின் ஒருவராக அவர்கள் முன்னேறிச் சென்றனர். சுல்தானின் அரண்மனை வாயிலோரம் ஒரு பாலம்!

அதன் கீழே வந்த போது, ஹென்றி தனது குதிரையிலிருந்து கீழே குதித்தான் . தன்னுடனிருந்தவர்களில் அறுவரை அங்கேயே அசையாமல், வாயாடமால் நிற்கச் சொன்னான்.

''வாருங்கள்!'' என்ற மற்றவர்களை நோக்கி சைகை செய்தான்.

மீண்டும் அந்த மதமாறி வழி காட்ட, அவர்கள் அந்த வடிகால் வழியாக தொடர்ந்து சென்றனர்.

விரைவிலே அவர்கள் நகரினுள்ளே வந்து விட்டனர்.

எங்கும் இருள்; இரவின் அமைதி. நகரம் சந்தடியற்றுக் கிடந்தது.

ஹென்றி கட்டளையிட அவனை அங்கு வழிகாட்டி வந்தவன் நகரின் பிரதான பள்ளி வாயலுக்கு அழைத்துச் சென்றான். அதன் முன்னே நின்றவனாக ஹென்றி தனது இடையிலிருந்த ஒரு தோள் சுருளை எடுத்தான். அதை விரித்துப் பள்ளிவாயலின் முன் கதவில் மெதுவாகச் சிறு ஆணிகளைக் கொண்டு அறைந்தான். பிறகு தனக்குத் தானாக, கிண்டலாகச் சிரித்துக் கொண்டான்.

பிறகு அவன் அல்கய்ஸரி நோக்கி விரைந்தான். அவ்விடத்தில் வெடி மருந்துடன் இணைக்கப்பட்ட நீண்ட திரியின் முனையில் நெருப்புப் பற்ற எண்ணிய போது-

''தீப்பந்தம் எங்கே?''- என ஹென்றி கேட்டான்.

அருகில் நின்றவன் பதறினான்; நாக்குழறக் கூறினான்:

''அதுவா? அங்கல்லவோ விட்டு வந்து விட்டேன்!''

அப்படியவன் மறந்து தான் பள்ளிவாசல் வாசற்படியில் வைத்து விட்டு வந்தானா? அல்லது....?

இனி அங்கு போய் அதை எடுத்துவர நேரமேது?

ஹென்றி சட்டென யோசித்தான். தன்னிடமிருந்த சக்கி முக்கி கல்லையும் தனது வாளையும் கொண்டு தீபற்ற முயலலானான்.

கனமான எஃகு கவசங்கள் அணிந்து, கரங்களில் நெடிய வேல்களை ஏந்தியவர்களாகப் புரவி வீரர்கள் பாய்ந்து சென்றனர்.

அவர்களின் அணிக்குப் பின்னே துள்ளியோடிய பரிகள் மீது பெருமிதத்துடன் சவாரி செய்தனர் அரசர் பெர்டினாண்டும் அரசியார் இஸபெல்லாவும்.

அவர்களுடன் சென்று கொண்டிருந்த இளவரசர், இளவரசிகளின் நீலக்கண்களில் ஏதோ ஆர்வம் ததும்பியது.

அவர்களைச் சூழ்ந்து சென்ற மெய்க்காவலர்களின் முகங்களிலே கடமையுணர்வு பதிந்திருக்க, சீமாட்டிகளின் பார்வையிலே ஒரு விதக் களிப்பு!

வரிசை வரிசையாகச் சென்று கொண்டிருந்த அரச பரிவாரங்களுக்கு வலிமை வாய்ந்த குதிரைப் படைப் பிரிவுகளும் காலாட் படைப் பிரிவுகளும் பின்னணியாக அமைந்திருந்தன.

அவ்வீரர்களும் மற்ற ஏவலர்களும் தூக்கிப் பிடித்திருந்த கொடிகளும் மயிலிறகு விசிறிகளும் அணிந்திருந்த பட்டுப் பட்டாடைகளும் வெய்யிலில் பளபளக்க, அவர்கள் இசைத்த போர்ப் பாடல்களின் ஒலி காற்றிலே மிதந்து சென்றது.

அவ்வாறு கிறிஸ்துவ அணிகள் வேகமாகச் சமவெளியினூடே முன்னேறி வந்து கொண்டிருந்ததைத் தூரத்தே குன்றுகளின் மருங்குகளை மறைந்திருந்த அரண்மனைகள், கோபுரங்களின் உச்சிகளிலிருந்து கர்னாதாவாசிகள் பார்த்து நின்றனர்.

நகருக்கு இடது திசையில் நின்ற குன்றின் அடிவாரத்தில் இருந்த ஜூபியா கிராமத்தை நோக்கி, கிறிஸ்துவப் படை, பரிவாரங்கள் சென்றன.

அக்கிராமத்தை அண்மிய போது கிறிஸ்துவ வீரர்கள் சமவெளியில் அணிவகுத்து நிற்கலாயினர்.

அவ்வாறு அவர்கள் தங்களுக்கும் நகருக்குமிடையே அரண் போல இருக்கும் பத்திரமான நிலையில், அரச குடும்பத்தினர் தங்கள் வாகனங்களிலிருந்து இறங்கினர். தங்களுக்கென ஏற்கெனவே சித்தம் செய்யப்பட்டிருந்த வீட்டில் புகுந்து சிரம பரிகாரம் செய்யலாயினர். சற்று நேரத்தில் அரசரும் அவரைச் சார்ந்தவர்களும் வந்தனர். மேன்மாடி வந்தனர். எல்லாருடைய கண்களும் கர்னாதாவை நோக்கின.

அதோ! நிழல் தரும் மரக் கூட்டங்களுக்கிடையே செங்கோபுரங்கள் கம்பீரமாக எழுந்து நின்றன. நகரின் எழில் மிக்க பகுதிகள் மிக எடுப்பாகத் தெரிந்தன.

தமது விழிகளில் பூரிப்புப் படர அருகில் நின்று கொண்டிருந்த காடிஸ் பிரபுவை நோக்கித் திரும்பினார், அரசியார் இஸபெல்லா.

''உம்முடைய ஏற்பாடுகளை நாம் மிகவும் மெச்சுகிறோம்!'' என்றார்.

''அரசியார் சித்தம் எனது பாக்கியம்''என்று மரியாதையுடன் உடல் குனிந்து, சிரம் தாழ்த்திக் கூறினார் காடிஸ் பிரபு.

உலகப் புகழ் பெற்ற கர்னாதா நகரை அருகிலிருந்து பார்க்க அரசியார் விருப்பம் தெரிவித்தவுடனே தொலைவிலிருந்த

கிறிஸ்துவ முகாமிலிருந்து அவரையும் மற்றவர்களையும் படை பாதுகாப்புடன் அழைத்து வந்தவர் அவர் தானே?

அரசியாரின் பாராட்டுதலினால் அவர் மனம் உவந்து போக, அங்கிருந்த சீமாட்டிகள், 'அல்ஹம்ரா கோட்டைக்குள்ளே கத்தோலிக்க அரச தம்பதியரின் தர்பார் என்று நடக்கும்!''என எண்ணிப் பார்க்க, மினாராக்கள் கொண்ட அதன் பள்ளிவாயல்கள் என்று மாறும்? அங்கெல்லாம் இமாம் களுக்குப் பதிலாக தங்களைப் போன்றோர் மதச் சடங்குகளை நடத்துவது என்னாளோ? என்று பாதிரிகளின் உள்ளங்கள் வினவி நிற்க-

அங்கே கர்னாதாவில்....

சமவெளியில் கிறிஸ்துவ வீரர்கள் அணிவகுத்து நின்றதைக் கண்ட முஸ்லிம்கள், அவர்கள் போருக்குச் சித்தமாகவுள்ளதாகவே நினைத்தனர்.

''அவர்களின் சவாலை ஏற்காமல் இருக்க முடியுமா, என்ன?''- முஸ்லிம்கள் உள்ளங்கள் குறுகுறுத்தன.

சற்றைப் பொழுதில் கர்னாதா கோட்டையிலிருந்து முஸ்லிம் புரவி வீரர்கள் துள்ளிப் பாய்ந்து வந்தனர். அவர்கள் அனைவருமே தக்கபடி ஆயுத பாணிகளாக இருந்தனர். கண்ணைக் கவரும் வண்ண ஆடைகள் தரித்திருந்தனர்.

அவர்கள் வீரவுணர்வுடன் விரட்டி வந்த குதிரைகளின் உடம்புகள் பூ வேலைப்பாடுகள் கொண்ட பொன்னிறத் துணிகளால் போர்த்தப்பட்டிருந்தன.

ஆம், அவர்கள் மூஸாவின் தலைமையில் இயங்கி வந்த பிரிவுகளில் முதன்மையானவர்கள்.

அவர்களுக்குப் பின்னால் அடுத்தடுத்துப் பல பிரிவுகள் வந்தன. அவற்றைச் சேர்ந்தவர்களில் ஒரு சிலர் எறியீட்டிகளும் கேடயங்களும் ஏந்தியிருந்தனர்.

கடைசியாக வந்த காலாட் படை வீரர்களில் ஒரு சிலர் துப்பாக்கிகளும் விற்களும் வைத்திருந்தனர். மற்றும் சிலர் வேல்களும் வாட்களும் பிடித்திருந்தனர்.

அவ்வாறு முஸ்லிம் வீரர்கள் வந்து கொண்டிருந்ததை அரசியார் இஸபெல்லா கவனித்தார்.

அந்நேரம், முஸ்லிம்களுடன் பொருத வேண்டுமென்றே காடிஸ் பிரபுவின் மனம் உந்தியது. அக்குறிப்பை அறிந்த அரசியார் அவரை நோக்கிச் சொன்னார்:

''அதோ வரும் முஸ்லிம்கள் மீது எவ்விதத் தாக்குதலும் நடத்த வேண்டாம். அவ்வீரர்களிடம் சண்டைக்கு 'சவால்' விடவும் வேண்டாம்....

''ஆம், இங்கு வந்ததால் எம் முடைய ஆவல் நிறைவேறி விட்டது. ஆகவே, எவ்வித உயிர்ச் சேதமும் ஏற்பட நாம் விரும்பவில்லை.''

''அவர்களுக்குத் தக்க பாடம் கற்பிக்காமல் விடுவதா?... இருந்தாலும், தங்கள் ஆணையை ஏற்று நடப்பேன், எங்கள் அரசியாரே!'' என்று பணிவுடன் கூறினார், காடிஸ் பிரபு.

அதனால் போருக்கு அணி வகுத்து நிற்பது போல் நின்று, கிறிஸ்துவ வீரர்கள் பகைவரின் வருகையைக் கண்டும் செயலற்றிருந்ததைக் காண முஸ்லிம் வீரர்களுக்கு வியப்பாக இருந்தது.

தத்தம் அணிகளிலிருந்து அவர்கள் அடிக்கடி சிறு சிறு குழுவினராக முன்னேறிச் சென்றனர். தாங்கள் எய்யும் அம்புகள் எட்டும் தொலைவரை எதிரிகள் தங்கியிருந்த இடத்தை நோக்கி சென்றன. ஆனால் கிறிஸ்துவர்களோ கொஞ்சமும் அசைந்த பாடில்லை. அதைக் கண்ட முஸ்லிம் வீரர்களில் பலர் தங்கள் புரவிகளை நாற்கால் பாய்ச்சலாக விரட்டிச் சென்றனர். பகைவர் அணிகளை நெருங்கி, தங்கள் வேல்களையும், வாட்களையும் ஆட்டியவர்களாக, கிறிஸ்துவர்களை தங்களுடன் துவந்தப் போட்டிக்கு அழைத்தனர்.

அவ்விதப் போட்டிகளில், கலந்து கொள்ளக் கூடாதென்று தான் அரசர் பெர்டினாண்டு ஏற்கெனவே தம்முடைய வீரர்களுக்கு தடை விதித்திருந்தாரே!

அதை மீறி நடக்க இப்போதும் விரும்பவில்லை, கிறிஸ்துவ படை வீரர்கள்.

வேண்டா வெறுப்பாக நிலவி வந்த அந்த அமைதியினூடே-

கோட்டை வாயில் முன்னே திடீரென கோஷமும் நகைப் பொலியும் கிளம்பியது.

போருடை தரித்து, வேலும் வாளும் தாங்கிய முஸ்லிம் வீரன் ஒருவன் பாய்ந்து வந்தான். அவன் பின்னே மக்கள் கூட்டமொன்று ஆரவாரமிட்டு வந்தது.

அவ்வீரன் கிறிஸ்துவர்கள் அணி வகுத்து அரண் போல வளைத்து நின்ற இடத்திற்கு அண்மையில் வர, அந்தக் கூட்டம் பின்வாங்கிச் சென்றது.

அந்த முஸ்லிம் வீரன் வெகு திடகாத்திரமாகத் தோற்றமளித்தான். கவசம் மூடாத இடமெல்லாம் அவனுடம்பில் திரண்ட தசைகள் முறுக்கேறி நின்றன. அவன் கண்களை அவனது தலைச் சீராவின் இரும்புதிரையொன்று மறைத்திருந்தது. ஒரு கரத்தில் பெரிய கேடயமும் மற்றொரு கரத்தில் கனமான ஈட்டியும் அவன் ஏந்தியிருந்தான். அவன் இடையிலே திமிஷ்கிலே செய்த ஒரு கூரிய வளைவாள் தொங்கிக் கொண்டிருந்தது.

அவன் வேறு யாருமல்ல, முன்னொரு முறை அரசர் பெர்டினாண்டின் அலங்கார கூடாரத்தைக் குறி வைத்து ஈட்டியெறிந்த அதே தாரிஃப்.

கிறிஸ்துவ படையணிகளுக்கு முன்னே அவன் மெதுவாகச் சவாரி செய்து கொண்டு சென்ற போது, அவனுடைய குதிரையின் அனல் கக்கும் கண்கள்- அகல விரிந்த நாசித் துவாரங்களுடன் சதுராடியது.

அதன் வாலில் கட்டப்பட்டுத் தொங்கியது,

அன்றிரவு கர்னாதா பள்ளி வாயலின் முகப்பிலே அறையப் பட்டிருந்த அதே சீட்டு...'ஆவேதரியா!'

அதைக் கண்ட கிறிஸ்துவர்களுக்கு ஆத்திரம் பொங்கியது. அப்போது அங்கே ஹென்றி இருக்கவில்லை.

ஆகவே, அவலுடைய சகாவான கார்ஸிலாஸோ தனது புரவியில் தாவி ஏறினான். அதன் விலாக்களில் தனது கால்களால் தொடர்ந்து இடித்து, ஜுபியா கிராமத்தை நோக்கி விரைந்து சென்றான்.

விரைவிலே அங்கு வந்து சேர்ந்த அவன், மன்னர் முன் மண்டியிட்டான்.

தாரிஃப் வந்த கோலத்தை எடுத்துக் கூறிய அவுன் மேலும் சொன்னான்:

''அவனுடைய சவாலை நான் ஏற்கிறேன். அன்னை மரியாளின் புனிதப் பெயருக்கு ஏற்பட்ட அவமானத்தைத் துடைக்க வேண்டாமா? அரசே தங்கள் அனுமதியை வேண்டுகிறேன்.''

அவன் குரலில் உணர்வு துடித்தது.

''சரி, அப்படியே செய்!''என்றார் அரசர் பெர்டினாண்டு.

அவருக்கு மரியாதை செய்தவனாக உடனே அங்கிருந்து அகன்று சென்றான் கார்ஸலாஸோ.

மீண்டும் தனது புரவி மீதேறியமர்ந்தான். 'ஸேபிள்' மிருக ரோமத்தாலான நான்கு செண்டுகளால் அலங்கரிக்கப்பட்டிருந்த தலைகாப்பை அணிந்து கொண்டான். கேடயத்தைப் பற்றிப் பிடித்தவனாக ஈட்டியையும் ஏந்தினான்.

தாரிஃபை எதிர்க்க விரைந்தான் அவன்.

கிறிஸ்துவ வீரன் குதிரை மீது துள்ளிப் பாய்ந்து வருவதை கண்ணுற்ற கர்னாதாவாசி அவனுடன் பொருதச் சித்தமானான்.

''இதோ! உன் சவாலை ஏற்கிறேன். எங்கள் அன்னை மரியாள் ஆணை! உன்னை நான் சும்மா விடப் போவதில்லை. எங்கே உன் சமர்த்தைப் பார்த்து விடுவோம்''-லகானைப் பிடித்து இழுத்துத் தனது குதிரையை நிறுத்தியவனாக மெத்த திமிருடன் அறை கூவினான் கார்ஸிலாஸோ.

''வீண் பேச்சு எதற்கு? இதோ வாங்கிக் கொள்!''- மிகத் திறமையுடன் தனது புரவியைச் சமாளித்தவனாக தாரிஃப், எதிரியின் மீது தனது ஆயுதங்களைச் சக்தியுடன் பிரயோகிக்க முனைந்தான்.

உருவத்தில் இவன் கார்ஸிலாஸோவை விடப் பெரியவன்; உடலுரம் மிக்கவன். அவனுடன் போட்டியிட முனைந்த தங்கள் வீரனின் நிலைபற்றி கிறிஸ்துவர்கள் அஞ்சினர்.

ஒரு புறம், அவர்களும் மறு புறம் முஸ்லிம்களும் பார்த்திருக்க, போட்டி மிகவும் கடுமையாகத் துவங்கியது.

ஈட்டிகள் ஒன்றோடொன்று விசையுடன் மோதின. இடையிடையே ஒருவனது ஈட்டி முனை மற்றவனின் இதயத்தைத்

துளைத்துச் செல்லத் துடித்தது. அவ்வாறு நிகழாமல் தடுத்து நிறுத்த முயன்ற கேடயத்திலிருந்து 'ஙஙங்' என்ற ஒலி. அப்போது இரும்புச் சிதள்கள் சிதறித் தெறித்தன.

ஒரு முறை தாரிஃபின் தாக்குதலின் வேகத்திலே தனது சேணத்திலிருந்து பின் தள்ளப்பட்டான். கார்ஸிலாஸோ. அவன் ஏறியிருந்த குதிரையும் தத்தளித்து, அலையாடி அப்பால் விலகிச் சென்றது.

ஒருவாறு தன்னைச் சமாளித்துக் கொண்டு, குதிரையின் கடிவாளத்தை இறுக்கி நிறுத்தியவனாக, மீண்டும் சண்டைக்குத் திரும்பினான், அந்தக் கிறிஸ்துவ வீரன்.

அப்போது அவனை நோக்கி தாரிஃப் தனது வாளை வீசினான். கார்ஸிலாஸோவும் தனது வாளை உருவினான்.

அவனைச் சுற்றிச் சுற்றி வந்தான் தாரிஃப், தனது குறி மீது பாயுமுன் அதைச் சுற்றி ஒரு வல்லூறு பறப்பது போல இருந்தது அது.

அவ்வாறு அவன் தனது எதிரியுடன் சண்டையிட்டுக் கொண்டிருந்தபோது அவன் விருப்பத்தை உணர்ந்தது போலவே அவன் குதிரையும் அவன் இழுப்புக்கெல்லாம் கட்டுப்பட்டு நடந்தது.

ஒவ்வொரு முறையும் தாரிஃபின் வாள் வீச்சிலே கிறிஸ்துவ வீரன் விழுந்து படுவானோ என்ற நிலை. ஆனாலும் உருவத்தில் மெலிந்து சிறியவனாக இரு ந்த அவன் துரித கதியில் இயங்கி, தனது பகைவனின் வாள் வீச்சுக்களை, சமயத்தில் வாளால் தடுத்தான்; சமயங்களில் தனது கேடயத்தால் தாங்கினான்.

அந்த வாட் போரிலே இரு வீரர்களுக்குமே ஏற்பட்ட காயங்களிலிருந்து இரத்தம் கசிந்து வழிந்தது.

மெல்ல மெல்ல கார்ஸிலாஸோவுக்கு களைப்பு மேலிட்டது.

அந்நிலையில், அவனைக் கெட்டியாகப் பிடித்து அவனை குதிரைச் சேணத்திலிருந்தும் விழுத்தாட்ட முனைந்தான் தாரிஃப்.

அந்த முயற்சியில் அவனுமே கார்ஸிலாஸோவுடன் பூமியில் விழுந்தான்.

ஆனால் கொஞ்சமும் சுணங்காமல் அவன் எழுந்து நின்றான். கீழே கிடந்த எதிரியின் நெஞ்சின் மீது தனது முழங்காலை அழுத்தி, அவனது தொண்டையைக் குறி வைத்து வாளை ஓங்கினான் அவன்.

அதைக் கண்ட கிறிஸ்துவர்களிடையே யிருந்து அவலக்குரல் எழுந்தன.

மறுகணமே அங்கே மகிழ்ச்சி ஆரவாரம் கிளம்பும் வகையில் கொஞ்சமும் எதிர்பாராதவாறு முஸ்லிம் வீரன் சுருண்டு கீழே உருண்டான்.

அவனது வாள் கார்ஸிலாஸோவின் உயிரைக் குடிக்குமுன் அந்த கிறிஸ்துவ வீரனின் வாள் முந்திக் கொண்டு அவன் நெஞ்சில் பாய்ந்து விட்டது.

வெற்றிக் களிப்பிலே தன் வேதனையை மறந்தவனாக, தாரிஃபின் குதிரையின் வாலில் கட்டியிருந்த 'ஆவே மரியா' சீட்டை மரியாதையுடன் அகற்றி, அதை தனது வாள் முனையால் உயர்த்திப் பிடித்தான், கார்ஸிலாஸோ.

அதற்குள் வெய்யவன் உச்சிக்கு வந்து விட்டான். அவனது வெம்மைக் கதிர்கள் மட்டு மின்றி, தங்கள் வீரன் ஒருவன் எதிரியிடம் தோல்வியுற்று மடிந்ததும் முஸ்லிம்களின் இரத்த நாளங்களிலே சூடேற்றின.

''அதோ! பகைவர்கள் மீது வெடி தீருங்கள்!''என்று தீரர் மூஸா உரத்த குரலில் உத்திரவிட்டார்.

உடனே இரண்டு பீரங்கிகள் கிறிஸ்துவர்களை நோக்கி முழங்கின.

அவர்கள் அணியின் ஒரு பகுதியில் ஒரே குழப்பம்.

அந்நேரம்-

''வீண் சவால்களில் இனியும் நாம் ஈடுபட வேண்டாம்.

வாருங்கள், எதிரி மீது பாய்வோம். களத்தில் முன்னேறித் தாக்குவோர்தான் போரில் சாதகம் அடைவார்கள்''எனத் தளபதி களிடம் உணர்வுடன் கூறினார் மூஸா.

அடுத்த கணம் அவர் தமது புரவி மீது தாவியேறி கார்ஸிலாஸோ சென்ற திசையில் விரைந்தார். அவரைத்தொடர்ந்து ஏராளமான முஸ்லிம் புரவி வீரர்கள், காலாட் படையினர் முன்னேறிச் சென்று, கிறிஸ்தவர்களின் முன்னணிக் காவற் படை மீது பாய்ந்தனர். அப்படையைச் சேர்ந்தவர்களை காடிஸ் பிரபுவின் கீழிருந்த பட்டாளங்களை நோக்கி விரட்டினர்.

நிலைமையை உணர்ந்தார் காடிஸ் பிரபு.

'இனி? எதிரிகள் பாய்ந்து வரும் போது வாளாவிருக்க முடியுமா? இப்போது அரசியார் கட்டளைக்குட் பட்டிருப்பதற்காக அவசியம் இல்லை'

''எதிரியைத் தாக்குங்கள்?'' என்று ஆணையிடுவது போல தமது கரத்தை ஆட்டிச் சைகை செய்தார்.

''சந்தியாகோ!''

கிறிஸ்தவ படையணி முழுதும் வீர முழக்கங்கள்!

மறுகணம் ஆயிரத்து இருநூறு வீரர்களுடன் காடிஸ் பிரபு அடர்ந்தேறினார்.

அதே போல மற்ற புரவி வீரர்களும் போர்க்குரல் எழுப்பிச் சென்றனர்.

துவந்தப் போட்டிக்குப் பதில் பொதுவான போர் மூண்டது.

சற்று நேரத்தில் முஸ்லிம் காலாட் படையினர் பின் வாங்க லுற்றனர்!

அவர்களை மீண்டும் ஒன்று திரட்டி முன்னேற மூஸாவும் அவரது புரவி வீரர்களும் முயன்றனர். பயன் இல்லை.

பலர் குன்றுகளில் தஞ்சம் அடைந்தனர். பெரும்பாலோர் குழப்பமுற்றவர்களாக- ஒருவரையொருவர் இடித்துத் தள்ளி மிதித்துக் கொண்டு தலை நகர் நோக்கி ஓடினர். அவர்களைக் கோட்டை வாயில் வரை துரத்திச் சென்றனர், கிறிஸ்துவர்கள்.

முஸ்லிம் வீரர்களில் இறந்து பட்டவர்களும் காயமடைந்த வர்களும் சிறைப்பட்டவர்களும் நானூறு பேர்கள் இருக்கும், அவர்களுடன் கைப்பற்றப்பட்ட இரண்டு பீரங்கிகளையும் தங்களது வெற்றியின் சின்னமாக் கொண்டு சென்றனர் காடிஸ் பிரபுவும் அவரது வீரர்களும்.

மாலை வந்தது. அர்மில்லா என்னுமிடத்தில் ஐம்பது கிறிஸ்துவ புரவி வீரர்கள் ஒரு புதருக்குப் பின்னால் மறைந் திருந்தனர்.

அந்தியிருள் கவிந்த பின்னர் களத்தில் இறந்து கிடப்பவர்களை எடுத்து அடக்கம் செய்ய முஸ்லிம்கள் கோட்டையிலிருந்து வெளியேறி வருவார்கள் என அவர்களைப் பார்த்துக் காத்திருந்தனர்.

எதிரியின் அசைவாட்டத்தைக் கவனிப்பதற்குக் காட்டு மரமொன்றில் ஏறிய முஸ்லிம் வீரனொருவன் அவர்களைப் பார்த்து விட்டான்.

உடனே மரத்திலிருந்து கீழிறங்கி நகருக்குள் விரைந்து சென்று பகைவர்கள், ஒளிந்திருந்த செய்தியை அறிவித்தான்.

கங்குல் படர்ந்த பின்னர், கர்னாதா வீரர்கள் பலர் கோட்டையி லிருந்து கிளம்பிச் சென்று அந்த கிறிஸ்துவ வீரர்களைத் திடுமெனச் சூழ்ந்தனர்.

அதைக் கொஞ்சமும் எதிர்பாராத அவ் வீரர்கள் குழப்பமடைந் தனர். அவர்கள் ஒளிந்திருந்த பிரதேசமோ அவர்களுக்குப் புதியது. இருட்டிலே எப்படித் தப்பிச் செல்வது என்று தயங்கினர்.

அந்நிலையில், அடவிகள் தோப்புத் துரவுகளினூடே ஓடிய வாய்க்கால்கள், ஓடைகளின் மதகுகளை எல்லாம் முஸ்லிம்கள் திறந்து விட்டனர். எப்படி அவர்கள் பின் வாங்கிச் செல்வது? உண்மையில் அது ஆபத்தான காரியம் என்பதை அந்த ஐம்பது கிறிஸ்துவ வீரர்களுமே உணர்ந்தனர்.

சட்டென உரணா பிரபுவை முஸ்லிம் வீரர்களில் சிலர் வளைத்தனர். அப்பொழுது அவருடைய விசுவாசமான வீரர்கள் இருவர் அவரை உடனடியாக ஆபத்திலிருந்து காப்பாற்றினர்.

அதே நேரம் கிறிஸ்துவ வீரர்களில் பலர் தங்கள் புரவிகளை இழந்தனர். முஸ்லிம்களின் தாக்குதலை எதிர்த்து நிற்க முடியாமல் அநேகர் வாய்க்கால்களில் தவறி விழுந்து உயிரிழந்தனர்.

அவ்வாறு நீரோடை ஒன்றில் விழுந்து விட்ட குர்துபாவின் கான்சாலவோவுக்கு 'உயிர் இழந்து விடுவோமோ?' என்ற நிலை மிகுந்த சிரமத்துடன் அவர் எழுந்தார். அவருடைய உடம்பெல்லாம் சேறும் சகதியும்! போர் உடையின் கனம் வேறு அவர் உடம்பை அழுத்தியது. பின் வாங்கிச் செல்ல அவரால் முடியவில்லை.

அதை அவரது சகோதரர் அலோன்ஸேவின் உறவினர் இனிகோதெ மெண்டோசா கண்டுவிட்டார்.

''ஐயா! இதோ என் குதிரையை நீர் எடுத்துக் கொள்ளும். காலூன்றி நின்று உம்மை உம்மால் காப்பாற்றிக் கொள்ள முடியாது.

என்னால் முடியும். ஒரு வேளை நான் மடிந்துபட்டு ஊர் திரும்பாவிட்டால், என் மனைவி மக்களை நீர் கவனித்துக் கொள்ளும்'' என்றார், பணிவுடன்.

அதன் படி அவரது குதிரை மீதேறிக் கொஞ்ச தூரம் தான் சென்றிருப்பார், கான்சால்வோ,

வேதனை ஓலம் கேட்டுத் திரும்ப-

முஸ்லிம் வீரர்களின் ஈட்டிகள் மெண்டோசாவின் உடலைக்குத்தி அவர் உயிரைக் குடித்து நின்றன.

13. விழாவா, விபத்தா?

கர்னாதாவின் கோட்டை, கொத்தளங்களையும் கலையும் கனவின் உருவங்களைப் போலக் கண்ணுக்குத் தெரிந்தும் தெரியாமலும் இருந்தன.

இருளும் ஒளியும் பொருந்திய நிலையில் பொழுது மெல்ல மெல்லப் புலர்ந்து கொண்டிருந்தது.

உடலை உலுக்கும் குளிர் காற்றுச் சில்லென வீசலாயிற்று.

அந்த அதிகாலைப் பொழுதிலேயே துயில் கலைந்து எழுந்து விட்டார், சுல்தான் போ அப்தில்.

இரவிலேயே நல்ல தூக்கமில்லாத நிலையிலும், கொஞ்சமும் சோர்வில்லாமல் குளித்து முடித்து, உடம்பெல்லாம் நறுமணம் தடவிக் கொண்டார்.

பூரணமான போருடை தரித்துக் கொண்டவராக அவர் தூதுவர் மண்டபத்திலிருந்து கிளம்பினார்.

அதன் முற்றத்திலிருந்து எழிலார்ந்த மண்டபச் சாலையினால் பிரிக்கப் பட்டு இருபுறமும் அலங்காரக் கொடி வீடுகளைக் கொண்டிருந்த முன்னறைக்கு வந்தார். அவர்.

''விடை கொடுங்கள், சென்று வருகிறேன். எனக்காகப் பிரார்த்தியுங்கள்' என்று அவர் தம்முடைய தாயார், மனைவி, தங்கை ஆகியோரிடம் விடை பெறலானார்.

தமக்கே உரித்தான கம்பீரமான அரசியார் ஆயிஷா தம்முடைய மைந்தரை நோக்கினார்.

''இறைவன் உமக்குத் துணை செய்வானாக!'' என்று ஆசீர்வதித்தார்.

அவர் நீட்டிய கரத்தை மரியாதையுடன் முத்தமிட்டார், சுல்தான்.

அதற்குள் மன்னரை அவரது மைந்தரும் மகளாரும் சுற்றி வளைத்துக் கொண்டு கண்ணீர் வடித்து விசித்து அழுதனர்.

அவர்களுடன் சேர்ந்து கொண்டு அரண்மனை ஊழியர்களும் தாதியரும் புலம்பியது அல்ஹம்ரா மண்டபங்களில் எதிரொலித்தது.

மவுனமாக மன்னர் கோட்டை வாயிலை நோக்கிச் சென்றார்.

அங்கே அவருக்குச் சித்தமாக நின்ற புரவி மீதேறி அமர்ந்தார். பின்னர் அவர் அதை நடத்திச் சென்று அணிவகுத்து நின்ற வீரர்களுக்கு முன்னர் போய் நிறுத்தினார்.

சற்று நேரத்தில் படை புறப்பட்டது.

குதிரைகளின் குளம்புகள் பூமியின் மீது பட்டுச் சென்றது போல, அவருள்ளத் தளத்தில் எண்ணங்கள் வந்து மோதின.

அதோ! அந்தச் சமவெளிதான் போர் நாசத்திலிருந்து ஒரு சிறிது தப்பி நின்றது.

கர்னாதா நகரைச் சுற்றிலும் சிஞ்சீல், தர்ரோஹ் ஆற்றங் கரையோரம் தான் ஏதோ பழமரத் தோட்டங்கள் கொண்ட பசுமை வட்டம்.

அதிலிருந்து கிடைத்தவை தான் பஞ்ச நிலையில் நகர மக்களுக்கு உதவி வந்தன.

ஆனால்...

அவையும் கூட கர்னாதா நகர மக்களுடையவோ மிருகங்களுடையவோ உயிர்களைக் காப்பாற்றி வர முடியாத படி பசுமை எதுவுமேயில்லாத படி அழித்து இறுதி நாசம் செய்ய அல்லவோ அந்த கிறிஸ்துவர்களின் அரசர் உறுதி பூண்டு விட்டார்.

விரைவில் அதற்கான நாளும் குறிக்கப்பட்டு விட்ட செய்தியை ஒற்றர் மூலம் அறிய வந்தார் சுல்தான் போஅப்தில்.

அந்த நாசத்திலிருந்தும் நகரைக் காப்பாற்ற இறுதியாக ஒரு கடும் முயற்சி செய்ய அவர் துணிந்தார்.

எஞ்சியிருந்த வீரர்களுடன் அவர் நகரிலிருந்து வெளியே கிளம்பி வந்தார்.

அதன் கோட்டையின் கொத்தளங்களிலும் கோபுரங்களிலும் மக்கள் குழுமிவிட்டனர்.

ஆம், இப்போது அவர்களின் வீடுகளுக்கு வெகு நெருக்கத்தில் அன்றோ பகைவர் வந்து விட்டனர்?

கவலையேதுமின்றி அவர்கள் களியாட்டங்கள் நிகழ்த்திய பால்ய நாட்கள் அவர்களின் நினைவுக்கு வந்தன. அன்று அவர்கள் குடும்ப வாழ்க்கை நடத்தி வந்த காட்சிகள் நெஞ்சங்களில் பசுமையாக இருந்தன.

அந்நிலையில் அவர்கள் தங்கள் பெண்டு பிள்ளைகள், பெற்றோர், உடன் பிறந்தோர், ஏன், தாங்கள் நேசித்த மனிதர்கள், இடங்கள், பொருள்களுக்கு முன்னே நின்றவர்களாகச் சண்டையிடத் துவங்கினர்.

அடர்ந்தேறி வந்துவிட்ட பகைவர்கள் முன்னே ஒவ்வொரு பழத் தோட்டமும் ஒரு போர்க் களமாக மாறியது. அங்கே பொருதியோரிடையே கடுமையான போர்!

ஒவ்வொரு அடி நிலத்திலும் முஸ்லிம்கள் சோர்வில்லாமல் சண்டை செய்தனர்! அதீத வீரம் காட்டினர்; ஆழ்ந்த சோகத்தை ஏற்றனர்.

அவர்களின் தீவிர எதிர்ப்பை வெகு சிரமமுடன் சமாளித்து முன்னேற வேண்டிய நிலை, கிறிஸ்துவர்களுக்கு!

அவர்களை மூஸாவின் புரவிப் படைப் பிரிவுகள் ஒவ்வொரு பகுதியிலும் களம் கண்டன. அவர் செல்லுமிடமெல்லாம் வீரர் களிடையே- மக்களிடையே புதியதோர் உற்சாகம் பொங்கி எழுந்தது.

வெம்மை, களைப்பு, காயம் ஆகியவற்றால் அல்லலுற்ற நிலையிலும் மூஸா வருவதைக் கண்டவுடன் ஒவ்வொரு முஸ்லிம் வீரனும் புத்துணர்வு பெற்றான்.

மரண வாயிலில் வேதனையுற்றுக் கிடக்கும் நிலைமையிலும் கூட அவன் தனது முகத்தை மூஸாவை நோக்கித் திருப்பி, ஈன சுரத்தில் உற்சாக முழக்கம் செய்தான். தனது அபிமானத்தவருக்கு நல்லாசியைத் தெரிவித்தான்.

இருந்தும், நகருக்கருகிலிருந்த கோபுரங்களில் பல கிறிஸ்து வர்கள் வசமாயின. அங்கிருந்து அவர்கள் முஸ்லிம்கள் மீது தங்கள் கனத்த விற்களையும், சுமந்து செல்லும் ஒருவித துப்பாக்கிகளையும் கொண்டு தாக்கினர்.

முஸ்லிம்கள் பல திசைகளிலும் சிதறியோடினர். அவர்களைக் கிறிஸ்துவர்கள் நெருங்கினர்.

அந்நிலையில், களத்தின் பல பகுதிகளுக்கும் தமது புரவி வீரர்களுடன் மாறி மாறிச் சென்று, முஸ்லிம் காலாட்படை வீரர்களைத் தொடர்ந்து போர் செய்யும் படி உற்சாக மூட்டி வந்தார், மூஸா.

இருந்த போதிலும், காலாட் படையினர் பீதியுற்று ஓடினர்.

அப்போது மிகைத்து நின்ற எதிரிகளைத் தமது சிறிய புரவிப் படை அணிகளைக் கொண்டு சுல்தான் போ அப்தில் சமாளிக்க வேண்டியதாயிற்று.

சற்றைப் பொழுதில் அவர் கிறிஸ்துவர் வசம் விழுந்து விடும் நிலை!

ஆனால் அவரும் அவரது வீரர்களும் திடீரென சுதாரித்துத் தங்கள் புரவிகள் மீது கடிவாளங்களை எறிந்தடித்து களத்திலிருந்து வெளியேறினர்.

அப்புரவிகளை விரட்டியவர்கள் கடிதில் விரைந்து வந்து மீண்டும் கோட்டைச் சுவர்களின் பாதுகாப்பை அடைந்தனர்.

மூஸாவோ, பின்வாங்கி வந்து கொண்டிருந்த காலாட் படையணிகள் முன்னே பாய்ந்து நின்றார்.

''மீண்டும் களம் செல்லுங்கள். உங்கள் குடும்பங்களையும் வீடுகளையும் எண்ணிப் பாருங்கள். உங்களுக்குப் புனிதமான வற்றையும் பிரியமானவற்றையும் பாதுகாக்க ஊக்கமுடன் போரிடுங்கள்!''-

உணர்வு ததும்பும் குரலில் அவர் உத்திரவிட்டார்.

ஆயினும் அவர்கள் முறியடிக்கப்பட்டார்கள்- தன்னம்பிக்கை இழந்தவர்களாக- குழப்பத்தில் நெஞ்சங்கள் அலையாடியவர்களாக கோட்டை வாயில்களை நோக்கிக் குடல் தெறிக்க ஓடிக் கொண்டிருந்தனர்.

களத்திலே நின்று தொடர்ந்து சண்டையிடவே மூஸாவுக்கு எண்ணம். ஆனால் அவரது வீரர்களில் அநேகர் கொல்லப்பட்டனர். பலருக்கு பலத்த காயம், ஒரு சிலர் அங்க சேதமடைந்தனர்.

அந்நிலையில், அவர் வேண்டா வெறுப்பாக மெதுவாகவே நகரை நோக்கித் திரும்பிச் சென்றார்.

அவருள்ளத்திலே பகைவர்களுடன் முஸ்லிம்கள் இறுதி வரை உறுதியுடன் சண்டையிட முடியவில்லையே என்ற ஆத்திரமும் தாபமும் மேலோங்கியது.

கோட்டையை வந்தடைந்ததும் அவர் அதன் வாயில்களை அடைத்துவிடக் கட்டளையிட்டார்.

அவற்றைக் காத்து நின்ற வில் வீரர்கள் மீதும் துப்பாக்கி வீரர்கள் மீதும் அவருக்கு அறவே நம்பிக்கையில்லை.

அவர் உத்திரவின் பேரில் கொத்தளங்களில் நின்ற பீரங்கிகள், முன்னேறி வரும் கிறிஸ்துவர்களைத் தடுத்து நிறுத்த வெடி தீர்க்கலாயின.

அப்போதைக்கு அதற்கு மேலும் சண்டையை அழுத்த விரும்பவில்லை, அரசர் பெர்டினாண்டு.

எரிந்து கொண்டிருந்த வயல்களிலிருந்தும் பூங்காக்களி லிருந்தும் திரண்டு கிளம்பிய புகை மண்டலம் கர்னாதாவை சூழ்ந்து கொண்டிருக்க, அதன் தற்காப்பிலே உயிரிழந்த வீரர்களின் பிணங்களினூடே அவர் தம்முடைய அணிகளை அழைத்துச் சென்று கொண்டு தமது படை முகாம் திரும்பினார்.

அல்ஹம்ராவின் செங்குன்றுகளுக்குப் பின்னே மாலைக் கதிரவன் தணிந்து கொண்டிருந்தான்.

அந்தி வானத்தின் செவ்வொளியிலே வேகா சமவெளி பொற் கடலாகத் தோற்றியது.

அதிலே தோய்த்தெடுத்தது போல செம்மை மெருகேறிய மினராக்களுடனும் வில் மண்டபங்களுடனும் எழிலாக நின்றது, அல்ஹம்ரா.

அந்தச் செங்கோட்டை நகருடன் போட்டியிடுவது போல கிறிஸ்துவ முகாமும் கம்பீரமாகக் காட்சியளித்துக் கொண்டிருந்தது.

பட்டாலும் ,சரிகை, சித்திர வேலைப்பாடுகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்த வண்ணக் கூடாரங்களுடன் கூடிய அது சிறு நகரமாகவே காணப்பட்டது.

அரச குடும்பத்தினரும் மற்றும் பிரபுக்களும் கனவான்களும் தங்கியிருந்த அக் கூடாரங்களின் உச்சியிலே கொடிகளும் பதாகைகளும் அசைந்தாடிக் கொண்டிருந்தன.

காடிஸ் பிரபு தம்முடைய கூடாரத்தை அரசியாருக்கெனத் தந்திருந்தார். மற்ற கூடாரங்களுக்கெல்லாம் நாயகம் போல உயர்ந்து நின்ற அது கம்பீரமானதொரு மாளிகை போல இருந்தது. அதன் மத்தியில் கீழை நாட்டுப் பாணியில் அமைந்த அழகான பட்டு மண்டபம், அங்கே சிறந்த வேலைப்பாடுகளுடன் வேல் வரிசை தாங்கி நின்ற தொங்கல் சீலைகளும் போர்ச் சின்னங்களும் இருந்தன.

அந்தப் பட்டு மண்டபத்தைச் சுற்றிலும் திரைகள் பிரித்து நின்ற பல அறைகள் இருந்தன.

மாலை வளர வளர சூழ் வெளியின் வெம்மை குறைந்து வந்தது போல, கிறிஸ்துவ முகாமில் சந்தடியும் தணியத் துவங் கியது. மறுநாள் நடவடிக்கைகளில் சுறுசுறுப்பாக இயங்குவதற்கான முறையில் ஓய்வெடுக்க அங்கிருந்தவர்கள் சித்தமாகினர்.

காலைப் பொழுதிலே, மீண்டும் நகரைத் தாக்கச் செல்லும் தமது படைகளுக்குத் தலைமை தாங்கிச் செல்ல வேண்டுமே என்று சேவல் கூவுமுன் எழும் எண்ணத்தில் சீக்கிரமே படுக்கைக்குச் சென்றார் பெர்டினாண்டு மன்னர்.

அவர் குடும்பத்தினர் தங்கியிருந்த கூடாரங்களில் இராணுவ ஆயத்தங்கள் மெல்ல மெல்ல ஓய்ந்து விட்டன. பெண்கள் விடுதி களிலிருந்து யாழின் தந்திகள் மீட்கப்படும் ஒலிகூடக் கேட்கவில்லை.

'அரசியார் இஸபெல்லா தாம் தங்கியிருந்த அந்தரங்க அறையில் இரவுப் பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்தார். மறுநாள் போரில் நம்முடைய கணவருக்கு ஆபத்து ஏதும் ஏற்பட்டு விடக் கூடாதென்று அவருள்ளம் விழைந்ததோ?

திடீரென அவரது கூடாரத்திலே ஒரு ஒளி பளிச்சிட்டது. அடுத்த சில வினாடிகளில் மூச்சுத் திணறச் செய்யும் புகைக் குழல் கிளம்பி வந்தது. நொடிப் பொழுதில் கூடாரம் தீ பற்றி எரிய ஆரம்பித்தது.

அப்போது காற்று வேகமாக வீச, கூடாரத்திலிருந்து கூடாரம் நெருப்புப் படரலாயிற்று, எங்கும் கொழுந்து விட்டெரியும் தீயின் செந்நாக்குகள் பற்றிப் படரத் துடிதுடித்துக் கொண்டிருந்தன.

கூடாரத்தை விட்டு ஓடி வந்தார் இஸபெல்லா அரசியார். அவரது பரபரப்பிலும் கூட அவர் நினைவு அரசர் பால் ஓடியது. தமது கணவர் தங்கியிருந்த கூடாரம் நோக்கி கடிதில் விரைந்தார் அவர்.

அதன் தலைவாயிலிலே அரசர் பெர்டினாண்டு நிற்பதைக் காணவும்தான் அரசியாருக்கு ஆசுவாசப் பெருமூச்சு வந்தது.

எதிரிகள்தான் தங்கள் முகாமைத் தாக்கி விட்டனரோ என்ற எண்ணத்தில் அரசர் எச்சரிக்கையுடன் கேடயம் தாங்கியபடி வாளேந்தி நின்று கொண்டிருந்தார்.

இரவுக்காக மேல் உடைகளைக் கழற்றிவிட்ட நிலையிலும் இரும்பு மார்புக் கவசம் அணிந்தவராகப் பகைவரை எதிர்த்துத் தாக்க சித்தமாக இருந்தார்.

முகாம் எங்கும் ஒரே குழப்பம்! ஒரு கூடாரத்திலிருந்து மற்றொரு கூடாரத்துக்கு தீ ஜுவாலைகள் வேகமாகத் தாவிக் கொண்டிருந்தன. அத் தீப் பிழம்புகள் ஒளிபுட்டுப் போர்க்கவசங்களும் பொன், வெள்ளிப் பாத்திரங்களும் சுடர் தெறித்தன.

குச்சிகளையும் காய்ந்த கொம்புகளையும் கிளைகளையும் கொண்டு போர் வீரர்கள் வேய்ந்திருந்த குச்சுகள் படப ட வென்று பொறிந்து விழுந்தன. அவை, விரைவிலே முகாமெங்கும் நெருப்புப் படர்ந்தெரியச் செய்தன.

அறைகுறையான ஆடைகளுடனிருந்த நிலையிலும் அச்சத்தால் அலறிக் கொண்டே பெண்கள் தங்கள் கூடாரங்களி லிருந்து வெளியே ஓடி வந்தனர்.

கொட்டுகளும் எக்காளங்களும் முழங்கின. சேகண்டிகளும் கேடயங்களும் உரக்க ஒலித்தன.

அரைகுறையாக ஆயுதங்கள் தரித்திருந்த மனிதர்கள் கலக்கமுற்றவர்களாகச் சிதறி ஓடினர்.

''தீ! தீ!'' என்ற பீதி நிறைந்த கூக்குரல்.

அது முஸ்லிம்களின் போர்த் தந்திரமாக இருக்கலாம் என்று கிறிஸ்துவ முகாமில் பலர் எண்ணினர்.

'இந்தச் சூழ்நிலையில் முஸ்லிம்கள் நம் முகாமைத் தாக்கினால்?....''.-

மூவாயிரம் குதிரை வீரர்களுடன் காடிஸ் பிரபு, நகரிலிருந்த முஸ்லிம் வீரர்கள் முன்னேறி வருவதைத் தடுத்து நிறுத்தும் நோக்கத்தில் முகாமிலிருந்து கிளம்பினார்.

கொட்டு, எக்காள முழக்கம் கேட்டுத் தங்களிடங்களுக்குத் திரும்ப ஓடியவர்கள்- கூடாரங்களிலிருந்து போர்க்கவசங்கள், விலையுயர்ந்த பொருள்களைக் காப்பாற்ற முயன்றவர்கள்- அச்சத்தால் நிதானமிழந்த குதிரைகளை இழுத்துச் சென்றவர்கள்- இவ்வாறாக முகாம் எங்கும் அவசரம்.பீதி!

அவற்றைக் கடந்து தம்முடைய வீரர்களுடன் அல்ஹம்ரா நோக்கிச் சென்றார், காடிஸ் பிரபு.

முகாமிலிருந்து வெளியேறிய போது அவர் சூழ்வெளி யெங்கும் அந்தி வானத்தைவிடச் செம்மை படர்ந்திருப்பதைக் கண்டார்.

அப்போது அந்த பெரும் நெருப்பினால் நகர் மீது பரவி நின்ற வெளிச்சத்தில் அதன் ஒவ்வொரு கொத்தளமும் கோபுரமும் அவர் கண்ணுக்குத் துல்லியமாகத் தெரிந்தன.

அந் நகரின் மாடியில் எல்லாம் மனிதத் தலைகள் தென்பட்டன. கோட்டை மதில்களில் காவல் புரிந்து நின்ற வீரர்களின் கவசங்கள் மின்னின.

ஆனால் கிறிஸ்துவர்கள் எண்ணியது போல முஸ்லிம்களின் எவருமே கோட்டையை விட்டு வெளியேறவில்லை.

கிறிஸ்துவ முகாமின் திசையிலிருந்து பரவி வந்த நெருப்பின் ஒளியைக் கண்ட கர்னாதா முஸ்லிம்களில் பெரும்பாலோர் எண்ணினர்:

''கிறிஸ்துவர்கள் என்ன தந்திரம் செய்துள்ளனரோ?''

அவர்கள் முகாமிலே எரிந்து கொண்டிருந்த நெருப்பு கொஞ்சம் கொஞ்சமாகத் தணிந்தது.

மீண்டும் நகரம் பார்வையிலிருந்தும் மறையலாயிற்று. சற்று நேரத்தில் எங்கும் இருள் அமைதி!

காடிஸ் பிரபு முகாம் திரும்பினார்.

பொழுது விடிந்தது.

அழகிய கூடாரங்கள் எல்லாம் இப்போது கனன்று கொண்டிருக்கும் குப்பைக் குவியல்களாகி இருந்தன.

தலைச்சீராக்களும் மார்க்கவசங்களும், மற்றும் போர்க் கருவிகளும் குவிந்து கிடந்த சாம்பலினூடே பளிச்சிட்டன. உருகிய தங்கமும் வெள்ளியும் இளம் வெய்யிலில் மின்னின.

அரசியாரின் ஆடைகள் எல்லாம் முற்றிலும் எரிந்து நாசமாகி விட்டன. தங்கத் தட்டுகளும், ஆபரணங்களும், விலையுயர்ந்த பொருட்களும், மற்றும் பிரபுக்கள் அணியும் சிறந்த கவசங்களும் ஏராளமாகச் சேதமடைந்திருந்தன.

அந்த அளவு இரவிலே ஏற்பட்ட விபத்தைக் கொண்டும் முஸ்லிம்கள் உற்சாமும் புத்துணர்வும் பெற்று விடக் கூடாது என்று பெர்டினாண்டு அரசர் விரும்பினார்.

வைகறை நேரத்திலே கிறிஸ்துவ முகாமில் கொட்டுகளும் எக்காளங்களும் முழங்கின.

கொடிகள் ஏந்தி போர்ப் பாடல்களைப் பாடியவர்களாக, பளிச்சிடும் கவசங்கள் அணிந்த கிறிஸ்துவ வீரர்கள் புகைந்து கொண்டிருந்த முகாமிலிருந்து வெளியேறிச் சென்றனர்.

ஆம், நேற்றிரவு முழுவதும் தங்கள் முகாமில் நடந்தது, கோலகலக் கொண்டாட்டம். மகிழ்ச்சி விழாவன்று; ஏதும் விபத்தல்ல என்று முஸ்லிம்களை நம்பச் செய்ய வேண்டும் என்றே அவர்களை அவ்வாறு பணித்திருந்தார் அரசர் பெர்டினாண்டு.

ஆனால் திடீரென பிடித்த நெருப்பினால் கிறிஸ்துவ முகாம் ஒரே நாசக்காடாகப் போய்விட்டதை முஸ்லிம்கள் ஒற்றர்கள் மூலம் அறிந்தனர்.

'இது அவர்களை முற்றுகை நீக்கும் படிச் செய்யும். கோடையுடன் அவர்களின் படையெடுப்பு நின்று விடும். இலையுதிர் காலமழையின் போது அவர்கள் படைகள் இங்கிருந்து திரும்பிச் சென்று விடும் என்றே அவர்கள் நம்பினர்.

கிறிஸ்துவ முகாம் நெருப்புப் பற்றியெறிந்து இரண்டு மூன்று நாட்களாகிவிட்டன.

அதற்கிடையில் நடந்த புலன் விசாரணையில் அந்நெருப்பு துரோகச் சதியால் ஏற்படவில்லை. தற்செயலாக நிகழ்ந்தது என்று தெரிய வந்தது.

ஆம், அன்று இரவிலே பிரார்த்தனைக்குச் சென்ற போது தம்முடைய படுக்கையருகிலிருந்த விளக்கை அப்பால் எடுத்துச் செல்லும் படி, தமது தாதிக்கு உத்திர விட்டார் அரசியார் இஸபெல்லா.

அதையெடுத்துச் சென்ற அத்தாதி அதைக் கூடாரத்தின் பிறிதோரிடத்தில் கொண்டு போய் வைத்தாள். ஏதோ நினைவில் அவ்விளக்கைச் சரியாக அணைத்து விட்டோமே என்று பார்க்காமல் அப்பால் சென்று விட்டாள்.

திடீரென காற்றடிக்க, அசைந்தாடிய தொங்கல் சீலை முனையில் விளக்குத் திரியிலிருந்து பாய்ந்தெழுந்த செந்நாப் பிழம்பு பற்றியது.

தொடர்ந்தடித்த காற்றின் வேகத்தில் கூடாரத்திலே நெருப்பு பரவியது.

அதன் விளைவாக முகாம் முழுவதுமே தீக்கிரையாகி விட்டது.

'இனி!'-

கிறிஸ்துவ அரச தம்பதியாரின் தலைமையில் போர் ஆலோசனைக் கூட்டம் நடந்தது.

கூடிய விரைவிலே முகாமைப் புனரமைக்க வேண்டுமென முடிவாகியது.

''கர்னாதா முற்றுகையிலே எதுவுமே நம்மைத் தளரச் செய்ய முடியாது என்பதை முஸ்லிம்கள் உணர வேண்டும். ஆகவே, நம்முடைய முகாம் இருந்த இந்த இடத்திலே செங்கற்களும் சுண்ணாம்பும் கொண்டு ஒரு புதிய நகரமே கட்ட வேண்டும்'' என்றார் அரசியார் இஸபெல்லா.

''ஒரு நகரமா! எப்படி ஒரு நகரை இங்கு அமைப்பது?'' என்று அவையினர் ஏகோபித்துக் கேட்டனர்.

''மனமிருந்தால், இடமுண்டு. நம்பிக்கையைக் கொண்டு என்னதான் சாதிக்க முடியாது?'' என்று அரசியார் மென்மையாகக் கூறினார்.

''அரசியார் சொல்வது சரி தான்!'' என்று அரசர் பெர்டினாண்டு ஆமோதித்தார்.

அவர் மேலும் சொன்னார்:

''நாட்டில் நமக்கு விசுவாசமான ஒன்பது முக்கிய நகரங்களுக்கு நாம் ஆளை அனுப்புவோம். இங்கு நம்முடைய துருப்புகள் தங்கி வர ஒரு நகர் அமைக்க வேண்டிய அவசியத்தைத் தெரிவிப்போம். இதற்கான மனிதர்களையும் மற்ற தேவைப் பொருள்களையும் அந்நகரங்கள் அனுப்பி வைக்கட்டும். எவ்வளவு விரைவிலே இதைக் கட்ட முடியுமோ அவ்வளவு விரைவிலே கட்டி முடிப்போம்!''

''புதிய நகருக்கு இஸ்பெல்லா என்று பெயரிடலாம். மாட்சிமை தங்கிய அரசியார் அவர்களின் யோசனையை நினைவு கூர்வதற்கு இது சிறந்த வழியாக இருக்கும்''என்றார் காடிஸ் பிரபு.

''வேண்டாம்! சாந்து பூசும் கரணையின் பெயரையா கட்டி முடிக்கும் வீட்டுக்கு இடுவார்கள்? செங்கல் மீது செங்கல்லாக உயர்ந்தெழும் சுவர்களை அமைக்கத் தேவையான நம்பிக்கை புனித நம்பிக்கையின் பெயரால் புதிய நகரை அழைப்போம். சாந்தாரூஃப் நன்னம்பிக்கை நகரம் என்று அதற்குப் பெயரிடுவோம்'' என்றார் அரசியார் இஸபெல்லா.

''மிகச் சிறந்த யோசனை! ஸ்பெயினிலேயே முஸ்லிம்களின் மார்க்கத்தினால் கறைபடாமல் இருக்கப் போகும் ஒரே நகர்- இதற்குப் பொருத்தமான பெயர் ஸாந்தா ரூஃப்!'' என்று கோமகன் ஒருவர் உணர்ச்சியுடன் கூறினார்.

''நகர் இன்னும் கட்டப்படவில்லை, அதற்குள் ஏன் இத்தகைய ஆவேசமும் உணர்ச்சியும்,? முதலில் நகர் உருவாதவதைப் பார்ப்போம்.'' என்றார் அரசர் பெர்டினாண்டு.

விரைவிலே, வேகா சமவெளியெங்கும் மீண்டும் பசுமை கொழிக்கத் துவங்கியது போல, கிறிஸ்துவர்களின் உள்ளத்திலும் நம்பிக்கை பசுமையாக நின்றது,.

சிலுவை வடிவத்திலே குறுக்குமறுக்குமாக இரண்டு பிரதான பாட்டைகள் அமைக்கப் பட்டன. அவற்றின் முனைகளிலே நகரத்தின் வாயில்கள் நான்கு திசைகளை நோக்கி நின்றன.

அப்பாட்டைகள் இணையும் மத்திய பகுதியிலே படையினர் குழுமியிருக்க மாபெரும் சதுக்கம், அதைச் சுற்றிலும் வெள்ளை, மஞ்சள் கற்களாலான வீடுகளும் கட்டடங்களும் கோபுரங்களும் துரித கதியில் எழலாயின.

எங்கு பார்த்தாலும் கொத்தர்களும் தச்சர்களும் கொல்லர்களும் சுறுசுறுப்பாகத் தங்கள் பணியில் ஈடுபட்டிருந்தனர். இப்போது கரணைகளும், உளிகளும் சம்மட்டிகளும் எழுப்பி வந்த ஓசையிலே, இராணுவ முகாமிலே வழக்கமாகயிருந்து வரும் வாள்கள் கூராக்கும் ஒலி, துப்பாக்கித் துளைகளைச் சுரண்டிச் சுத்தம் செய்யும் ஒலி பீரங்கி வண்டிகளின் சக்கரங்கள் உருண்டு செல்லும் ஒலி. துருப்புகள் அப்புறமும் இப்புறமும் அணி வகுத்து நடந்து செல்லும் காலடியோசை போன்றவை எல்லாம் அற்பமாக அமுங்கிப் போய்விடுவது போல இருந்தன.

நாள்தோறும் ஆங்காங்கிருந்து நூற்றுக்கணக்கான வேலை யாட்களும் அடிமைகளும் வந்த வண்ணமிருந்தனர்.

அவர்களிலே பலர் பொழுதெல்லாம் கல்லும் சுண்ணாம்பும் சுமந்து சென்றனர். மற்றும் பலர் பாறைக் கற்களை அறுத்துக் கொண்டும் பிளக்கப்பட்ட சலவைக் கற்களுக்கு மெருகேற்றிக் கொணடும் இருந்தனர்.

ஒரு சில வாரங்களிலே அரச குடும்பத்தினரும் உயர் பிரபுக்களும் கனதனவான்களும் தங்குவதற்கான அரண்மனைகளும் மாளிகைகளும் கட்டி முடிக்கப் பட்டன.

அடுத்த இரண்டு மாதங்களுக்குள் கிறிஸ்துவப் படை வீரர்கள் அனைவருக்குமே விடுதிகள் அமைக்கப்பட்டு விட்டன.

பகைவரின் கோட்டையை முற்றுகையிட்டு நின்றபோது இவ்வாறு நகர் அமைப்பதென்பது புதுமையான தொன்றுதான்.

அவ்வாறு உருவாகிய நேர்த்தியான நவீன நகரை வலிமையான மதில்கள் சூழ்ந்து நின்றன.

அங்கே நாட்டின் பலவிடங்களிலிருந்தும் கோவேறு கழுதைகள் மீது சரக்குகள் ஏற்றியவர்களாக வணிகர்கள் வரத் துவங்கினர்.

நாள் தோறும் நான்கு வாயில்கள் வழியாக அவர்கள் வந்து போய்க் கொண்டிருந்த நிலையில் ஸாந்தரூஃப் நகரச் சந்தையில் பலவித வணிகப் பண்டங்கள் குவியலாயின.

அந்நிலையில், அந்நகரிலிருந்து கிறிஸ்தவ காவல் கண்காணிப்பு வீரர்கள் அடிக்கடி வெளியேறி வந்து கர்னாதா நகர் முன்னிருந்த களத்தைச் சுற்றி வந்தனர்.

இடையிடையே காடிஸ் பிரபு தம்முடைய வீரர்களுடன் கிளம்பி வருவார்., அல்புஷ்ராத்திலிருந்து முஸ்லிம் வீரர்களின் பாதுகாவலில் கர்னாதாவாசிகளின் நிவாரணத்துக்காக உணவுப் பொருள்களை ஏற்றி வரும் கோவேறு கழுதைகள், மற்றும் ஆடு மாடுகளையும் தடுத்து நிறுத்தி, அவற்றையெல்லாம் கிறிஸ்துவ முகாமுக்குக் கொண்டு செல்வார்.

இதற்கிடையில் கோடை முடிந்து, இலையுதிர் காலம் வந்தது. தாங்கள் முற்றுகையிட்டிருந்த பிரதேசத்தின் அறுவடையை யெல்லாம் கிறிஸ்துவர்கள் கவர்ந்து சென்றனர்.

அந்நேரம் கோட்டைக்குள் அடைப்பட்டுக் கிடந்த முஸ்லிம் கள் நீடித்த முற்றுகையின் விளைவை உணரலாயினர். எங்கும் பஞ்சம், உணவு நெருக்கடி, பட்டினி, பிணி, மக்கள் பெரும் அவதியில் ஆழ்ந்தனர்.

இருந்தாலும், அவர்கள் ஆண்மையுடன் தங்கள் அன்றாடப் பணிகளைக் கவனித்து வந்தனர்.

''சமாதானமாவது, சரணாகதியாவது?'' என்று புரவி வீரர்கள் எதிரிக்குப் பணிந்து போக மறுத்தனர்.

''பகைவரிடம் ஒப்படைக்கவா நாங்கள் கோட்டையைப் பாதுகாப்பதாக ஏற்றுக் கொண்டோம்'' என்று தளபதி மூஸா அபில் கஸ்ஸானும் அவருடைய வீரர்களும் கேட்டனர்.

14. சரணாகதியாம் சரணாகதி!

அல்ஹம்ராவில் அரசவை மீண்டும் அவசரமாகக் கூடியது.

சுல்தான் போ அப்தில் களை இழந்த முகத்துடன் அரியணையில் அமர்ந்திருந்தார்.

அவருக்கு ஆழ்ந்த மரியாதை செலுத்தி விட்டு, அவையிலே பேசலுற்றார், ஆளுநர் அபுல் காஸீம் அப்துல் மாலிக்-

''அரசாங்க களஞ்சியங்களில் இருந்த தானியம் எல்லாம் அநேகமாகத் தீர்ந்து விட்டது. வெளியிலிருந்து உணவுப் பொருள்கள் வருமென்றும் நாம் இனி எதிர்பார்க்க முடியாது. போர்க் குதிரை களுக்கான தீனியை இப்போது நம் படைவீரர்களின் போஷாக் குக்காகவே வழங்கி வருகிறோம். அந்தக் குதிரைகளையும் கூட மனிதர்களின் வயிற்றுப் பசி போக்க கொன்று வருகிறோம். களம் செல்லக் கூடிய ஏழாயிரம் குதிரைகளில் இப்போது முந்நூறு தான் மிஞ்சியுள்ளன.

''நம்முடைய நகரிலோ மொத்தம் இரண்டு லட்சம் மக்கள் இருந்து வருகின்றனர்.

''அவர்களில் பெரியவர், சிறியவர் என்றில்லாமல், ஒவ்வொருவருமே பசி, பசி, உணவு, உணவு என்று பரிதாபமாக ஓலமிடுகின்றனர்.''

இவ்வாறு சோகம் கப்பிய குரலில் ஆளுநர் அப்துல் மாலிக் எடுத்துக் கூறினார்.

''ஆம், அது முற்றிலும் உண்மை, நகரத்தின் பாதுகாப்புக்காக மனிதர்கள் இடையறாது இரவு பகலென்று பாராமல் உழைத்து வருகின்றனர். இந்நிலையில் அவர்களுக்குப் போதிய உணவு வராவிட்டால்--.? தலைநகரைக் காத்து நிற்கும் சிரமங்களை இனியும் மக்கள் தாங்க முடியாத நிலை! நம் எதிரிகளோ முற்றுகையை எடுப்பதில்லை என்று உறுதியாக இருக்கிறார்கள். அவர்களுக்கு எதிராகப் பட்டினியும் பசியுமாக நம்மவர்கள் எவ்வாறு தாக்குப் பிடித்து நிற்க முடியும்? சரண் அல்லது சாவைத் தவிர அவர்களுக்கு வேறு வழி என்ன இருக்கிறது?'' என்று ஷெய்கு ஒருவர் கேட்டார்.

ஆவேசங்கொள்ளும் மக்களால் சுல்தான் அவர்களின் உயிருக்கே ஆபத்து விளையக் கூடும்!''என மற்றொருவர் கூறினார்.

அவ்வாறு நகரப் பிரமுகர்கள் பலர் மக்களின் அவதியை-அவர்களின் மனோநிலையைச் சாங்கோபாங்கமாக எடுத்துரைத்தனர்.

''நம்முடைய நகருக்கு ஏற்பட்டுள்ள மற்ற சோதனைகளுடன் பஞ்சத்தின் கொடுமை வேறு சேர்ந்து கொண்டது. வெளியிலிருந்து படையுதவி வரும்-பட்டினியால் வாடும் மக்களுக்கு நிவாரணம் வரும் என்று எவ்வளவு எதிர்பார்த்தோம்! கண்ட பலன்? ஏமாற்றம் தான்! கடைசியாக நாம் நடத்திய தாக்குதலும்கூட எதிரியை அசைக்க முடியவில்லை. மழை காலம் -குளிர் காலம் ஆகியவற்றினால் உண்டான இடைஞ்சல்களும் பகைவர்களின் உறுதியைக் குலைக்க முடியவில்லை. நாம் கோட்டைக்குள் அடைப்பட்டுக் கிடந்து சாவதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்? அதை விட்டு, கோட்டையை எதிரிகளிடம் சரணடையச் செய்தாலாவது நம் மக்கள் உயிர் தப்புவார்கள்''.

அந்த வார்த்தைகள் சுல்தான் போ அப்தில்லின் உள்ளத்தைத் தொட்டு விட்டன. முகத்தில் சோகம் படர, அவையிலே மவுனமாக அமர்ந்திருந்தார்.

மூஸா அபில் கஸ்ஸான் எழுந்து நின்றார். தோல்வியை ஏற்க விரும்பாத அவர் கண்களில் எதிர்ப்புணர்வு மின்னியது. அவ்விழிகளை அவையினர் மீது சுழலவிட்டவராக அவர் துள்ளித் தெறிக்கும் வார்த்தைகளைச் சுடுசரம் போல் தொடுக்கலானார்.

''சரணாகதியாம் சரணாகதி! அதைப் பற்றி எண்ணிப் பார்க்க இன்னும் நேரம் வரவில்லை. நம்மிடமுள்ள வசதிகள் என்ன, முற்றிலும் தீர்ந்து விட்டனவா? நமக்கு வலிமை ஊட்டி வந்த ஊற்றுக்கண் தூர்ந்து விட்டதா?- எத்தனையோ தடவை அது நம்முடைய வெற்றிக்கு நீர் பாய்ச்சியுள்ளது. அந்த ஊற்று எது வென்று கேட்கிறீர்களா? நம்பிக்கை முற்றிலும் தளர்ந்து விட்ட நிலையிலும் நம்மை நாம் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்ற உள்ளத் துடிப்பிருக்கிறதே! அந்தத் துடிப்பைத் தான் நான் உங்களுக்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

''அதைக் கொண்டும் நாம் நம்முடைய மக்களுக்கு உணர்வூட்டுவோம். அவர்களைக் கரங்களில் ஆயுதமேந்தச்

செய்வோம்! முடிந்தவரையில் நாம் பகைவர்களுடன் நேர்முகமாக சண்டையிடுவோம்.

''அவர்களது ஈட்டி முனைகள் என் நெஞ்சத்தில் பாய்ந்தால் என்ன? அவர்கள் நெருக்கமாக உள்ள அணிகளை ஊடுருவும் வகையில் நம் வீரர்களுக்குத் தலைமை தாங்கிச் செல்வேன்! கர்னாதாவின் காப்பிலே வீர மரணமடைவோரில், ஒருவனாக இருப்பேனேயன்றி, அது சரணாகதியடையத் தோல்வியேற்று உயிர் வாழ்வோரில் ஒருவனாக இருக்க மாட்டேன். நாம் உடனே களம் காண்போம். சுல்தான் அவர்களின் ஆணை வேண்டும்!''

மன்னர் போ அப்தில் அதை மவுனமாகவே செவி மடுத்தார். சபல சித்தமுள்ள அவருக்கு உடனடியாகத் தீர்க்கமானதொரு முடிவுக்கு வர முடியவில்லை.

சுல்தானா ஆயிஷா அவரிடம் அடிக்கடி சொல்வதுண்டு-

''சிம்மாதனம் அல்லது சவக்குழி! இதைத் தவிர நாடாளும் சுல்தானுக்கு கண்ணியமானது உலகில் வேறொன்றுமில்லை.''

இப்போது....

''நாம் சிம்மாதனம் இழந்தாலும் பரவாயில்லை. சாவு....! இப்போது வேண்டாம்!

''மூஸா கூறுவது போல நடப்பதானால்....?!-

''தளபதி மூஸா கூறியது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? உங்கள் மனதில் பட்டதைக் கூறுங்கள்! என்று தமது மந்திரி, பிரதானிகளை நோக்கிக் கேட்டார், சுல்தான்.

உற்சாகம் குன்றி மரத்துப் போயிருந்த அவர்களுடைய உள்ளங்களை மூஸாவின் உணர்ச்சி ததும்பும் தீரமான பேச்சினால் தட்டியெழுப்ப முடியவில்லை.

அவர்களின் சிந்தனையச் சுற்றி சுழன்று வந்தது...

'உணவு! உணவு!'

அந்தச் சிந்தனையோட்டத்திலேயே அவையிலே சிலர் பேசலுற்றனர்-

''அல் புஷாராத்துடன் தலை நகருக்கிருந்த தொடர்புகளையும் எதிரிகள் துண்டித்து விட்டனர்.

''ஜபல் ஷுலைர் மலை மீதும் பனி மூடிவிட்டது. அதன் கணவாய்கள் வழியாகக் கொஞ்ச கொஞ்சமாக வந்து கொண்டிருந்த உணவுப் பொருட்களை இனி எதிர்பார்க்க முடியாது. கோட்டைக்கு வெளியே ஒரு துண்டு வயல் கூட நம் வசமில்லை. உணவுக்கு வழி?....''

''கடலுக்கப்பாலிருந்து படை உதவி வந்தாலாவது, நம்மை முற்றுகையிட்டிருக்கும் பகைவரை எப்படியாவது நிலைபெயர்ந்து போகும்படி செய்ய முயன்று பார்க்கலாம்....''

''அமீருல் மூஃமீனின் ...சல்தான் யூசுஃப் தாஷ்ஃபீன் போல ஒருவர் ஆப்பிரிக்காவிலிருந்து வரமாட்டாரா? அன்று ஜல்லாக் காவில் முஸ்லிம்களுக்குக் கிட்டிய மாபெரும் வெற்றி போல இங்கே கர்னாதாவிலும் நமக்கு கிடைத்து விடுமே....''

அவையினர் நினைவிலோ நானூறு ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த அந்த சம்பவம் நிழலாடியது.

யூஸுஃப் தாஷ்ஃபீன்...ஜல்லாக்கா!''

ஹாஜிப் அல் மன்சூருக்குப் பிறகு குர்துபாவில் ஒரே குழப்பம், கொந்தளிப்பு

மாலகா, அல் ஜஸீராஸ், கர்னாதா, பலன்ஸிய்யா, அல் மரிய்யா போன்ற நகர்களும் அவற்றைச் சுற்றியிருந்த பகுதிகளும் குறுநில அரசுகளாகப் பிரிந்து நின்றன. மற்றும் சில பகுதிகளில் ஷெய்குகள் அதிகாரம் கொண்டிருந்தனர்.

அவர்களிடையே வேற்றுமையும் பொறாமையும் போட்டி யும். பூசலும் நிலவி வந்தன.

அதே நேரம், லியூன், காஸ்தீலியா. கலீஷியா. நபாரா ஆகிய சிற்றரசுகளை ஒன்றிணைந்து பேரரசர் என்ற பட்டமுடன் ஆறாம் அல் பான்ஸோ ஸ்பானிய தீபகற்ப முழுவதையுமே தமது குடையின் கீழ் கொண்டு வர எண்ணினார்.

அந்நாட்டில் இருந்து வந்த முஸ்லிம் சிற்றரசர்களிடமிருந்து கப்பங்கள் பெற அவர் விரும்பவில்லை. உந்தலூஸ் முழுவதையுமே வென்று விட முடிவு செய்தார்.

ஐரோப்பாவின் பல நாடுகளிலிருந்தும் ஏராளமான போர் வீரர்களைத் தமது படைகளில் சேர்த்தார்.

''விண்ணிலிருந்து வானவர்கள் வந்தாலும் சரி, பாதாளத்தி லிருந்து பூதகணங்கள் புறப்பட்டு வந்தாலும் சரி, எல்லாருடனுமே போர் செய்யத் தயார்'' என்று அவர் பிரகடனம் செய்தார்.

அவரிடம் துலைத்துலா சரணடைந்தது. கர்னாதா, பதல்போஸ், இஷ்பீலியா மற்றும் நகரங்கள் இன்னும் முஸ்லிம்களிடமிருந்து வந்தன. என்றாலும், அவற்றை ஆண்டு வந்தவர்கள் பொதுவான எதிரியொருவர் முளைத்து விட்ட நிலையிலும் ஒன்று படாமலிருந்து வந்தனர்.

அதனால் ஏற்படக் கூடிய ஆபத்தை உணர்ந்த இஷ்பீலியா சுல்தான் முஃதமித் இதர முஸ்லிம் சிற்றரசர்களைக் கலந்தார். கடலுக்கப்பால் இப்ரிக்கியா வட ஆப்பிரிக்காவிலிருந்து முஸ்லிம் அரசுகளிடமிருந்து உதவி பெறுவதை அவர்களில் ஒரு சிலர் விரும்பவில்லை.

ஆனால் முஃதமித் வீரமுடன் கூறினார்:

''கஷ்தீலிய நகரில் அல்பான்ஸோ விடம் அடிமையாகிப் பன்றி மேய்ப்பதை விட, இப்ரிக்கியாவின் பாலைவனங்களில் ஒட்டக மோட்டியாக இருப்பது மேல்.''

முடிவில், உந்தலூஸ் சிற்றரசர்கள் 'அமீருல் முமினீன்' யூசுஃப் தாஷ்பீனிடம் உதவி கோரினர்.

மேற்கு ஆப்பிரிக்காவில் ஸஹாரா வனாந்திரப் பிரதேசத்தில் வாழ்ந்த பெர்பர் இனத்தவர் இஸ்லாத்தை ஏற்று 'மர்பூத்' (புனித புருஷர்) என்ற தங்கள் ஞானசிரியர்களின் உதவியால் மேற்கில் செனிகாம்பியாவிலிருந்து கிழக்கில் அல்ஜீரியா வரை தங்கள் ஆட்சியைப் பரப்பினார்கள். அவர்களது 'மராபிதா'- சுல்தான்களில் ஒருவரே யூசுஃப் தாஷ்பீன்

பட்டத்துக்கு வந்த பிறகு, விரைவிலே அமீருல் மூமின், என்ற பட்டத்தை அவர் சூட்டிக் கொண்டார்.

முஃதமித் ஆகியோரிடமிருந்து வந்த கோரிக்கையை ஏற்று அவர் பெரும்படைகளுடன் உந்தலூஸ் கரை வந்திறங்கினர்.

இஷ்பீலியாவுக்கு அண்மையில் முஃதமித் மற்றும் உந்தலூஸ் சிற்றரசர்கள் கூட்டாகச் சேர்ந்து பதல் போஸ் சென்றனர்.

அதற்குத் தெற்கே பன்னிரண்டாவது கல் தொலைவில் இருந்தது - ஜல்லக்கா.

அதன் அருகில்...

இருபதினாயிரம் முஸ்லிம் வீரர்கள் தாஷ்பீன் தலைமையில் ஒரே அணியாகத் திரண்டு நிற்க, அவர்களை எதிர்த்து அல்பான்ஸோ வுடன் அறுபதினாயிரம் கிறிஸ்தவ வீரர்கள் போருக்குச் சித்தமாகினர்.

அவ்வாறு களம் கண்ட இரு சேனைகளுக்குமிடையே கடும் போர் நடந்தது. ஒரே இரத்தக் களறி:

''வானவர்களுடனும் பூதகணங்களுடனும் போரிடுவேன்'' என்று கர்வ போதையில் முழங்கிய அல்பான்ஸோ தலை தப்பியது போதும் என்று தப்பியோடினான்.

அதன் பின்னர் யூசுஃப் தாஷ்பீன் உயிருடன் இருந்த வரையில் கிறிஸ்துவர்கள் அஞ்சியிருந்தனர்.

அவருக்குப் பிறகு அவர் மைந்தர் அபுல் ஹஸன் என்ற அலீ அந்த கிறிஸ்துவர்களிடமிருந்து தலவெரா மஜ்ரீத், வாதீயுல் ஹிஜாரா, ஷந்தரீன், பதல்யோஸ், புர்த்துக்கார், தெபொராஹ் அல்உஷ்பூனா ஆகிய இடங்களைக் கைப்பற்றினார்.

தருஸ் ஆற்றுக்கப்பால், அராகூன், கட்டலோனியா, மற்றும் ஜபல் அர்புர்தைக் கடந்து வந்த பரங்கியப் படைகள் சரகுஸ்தா, கலத் அய்யூப் நகர்களைத் தங்கள் வசப்படுத்தின.

ஏழாம் அல்பான்ஸோ, தனது பாட்டனாரைப் போல, பேரரசர் பட்டம் சூட்டிக் கொண்டு, குர்தூபா, இஷ்பீலியா, கர்மூனாவரை படை யெடுத்துச் சென்றான். ஜொராஸில் கொள்ளை, தீயிட்டுக் கொளுத்தல் நிகழ்த்தியவனாக, வாதீ அஷ் வரை படை நடத்திச் சென்றான்.

சில ஆண்டுகள் சென்று ஜய்யான், பய்யாஸா, ரபதா, அந்துஜார், போன்ற செழுமையான பிரதேசங்களை அவன் நாசப் படுத்தினான்.

அப்போது உந்தலூஸ் முஸ்லிம்கள் மீண்டும் ஜலசந்திக்கு அப்பாலிலிருந்து உதவி கோரினர்.

சுல்தான் அப்துல் மூமின் கடற்படையும் தரைப் படையும் அனுப்பினார். அவற்றின் உதவியால் உந்தலூஸில் புகுந்த கிறிஸ்துவர்கள் அடித்து விரட்டப்பட்டனர்.

அதன் பின்னர்....

கர்னாதாவில் ஆட்சியமைத்த அஹ்மாரின் மைந்தர் அபூ அப்துல்லாஹ் முஹம்மத் காலத்திலும் கூட, கிறிஸ்துவர்கள் படையெடுத்து வந்தபோது, ஆப்பிரிக்காவிலிருந்து முஸ்லிம் மன்னர் உதவி வந்து உந்தலூஸ் முஸ்லிம்கள் வெற்றி பெறவில்லையா? அப்போது நிகழ்ந்த சண்டையில் காஸ்தீலிய மன்னன் தனது உயிரையே இழந்தான்?

ஆனால் இப்போது...?

'உந்தலூஸைப் போலவே ஆப்பிரிக்காவிலும் வட முஸ்லிம் அரசர்கள் போட்டியும் பூசலும் கொண்டு ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டிருக்கின்றனரே!''-

இவ்வாறு போ அப்திலின் அவையினர் பலரின் சிந்தனை ஓடியது.

''எத்தனையோ மாதங்களாகியும் கடலுக்கப்பாலிருந்து உதவி வருவதற்கான அறிகுறி இல்லை. இனி எங்கு வரப் போகிறது?''
''அப்படியே வருவதானாலும் எந்தத் துறைமுகத்தில் வந்திறங்கும்!''

''நமது கடல் பிரதேசங்களில் கிறிஸ்ததுவ மன்னரின் போர்க் கலங்கள் வலிமையுடன் 'ரோந்து' வந்து கொண்டிருக்கின்றன.

அவையில் பலர் பலவாறாக எடுத்துக் கூறினர்.

நெஞ்சங்கள் தளர்ந்து போய் விட்ட நிலையில் அவர்களின் செவிகளில் மூஸாவின் பேச்சு விழுந்ததாகத் தோன்றவில்லை.

''கிறிஸ்துவ மன்னரை சாந்தப் படுத்த வேண்டும். அவருடன் சமாதானப் பேச்சு வார்த்தைகள் நடத்த வேண்டியது அவசரம்'' என்ற முறையில் அவையினர் சிலர் ஆலோசனை கூறினர்.

''ஆமாம், அரசர் பெர்டினாண்டிடம் நாம் அபுல் காஸீம் அப்துல் மாலிக்கை அனுப்பி வைப்போம்'' என்றார் சுல்தான் போ அப்தில்.

அவையின் பொதுவான குரலை ஏற்று விட்டார் அவர்.

கர்னாதா பேரரசை அமைத்த அஹ்மாரின் மைந்தர் அபூ அப்துல்லாஹ்வைப் போலவே எதிரியுடன் இறுதிவரை போராடத் துணியாதவராக அவர் இருந்தார்.

கர்னாதா வாசிகள் அழைத்து வந்தது போல அவர் சுல்தான் 'அல்ஜஸாஹீர்' -சின்ன சுல்தான் தானே அவர்? ஆம். சின்ன இதயம் படைத்தவர்!

பிறந்த பொன்னாட்டை விடத் தமதுயிரைக் காப்பாற்ற நினைத்து, கிறிஸ்துவ அரசரிடம் தூது அனுப்ப அவர் விரும்பி விட்டார்!

சுல்தானின் ஆணையேற்று கர்னாதா ஆளுநர் அபுல் காஸிம் அப்துல் மாலிக் அல்ஹம்ராவிலிருந்து நம்பிக்கையான காவல் வீரர்களுடன் புறப்பட்டுச் சென்றார்.

ஸந்தாஃபேயில் அந்த முதியவரை அரசர் பெர்டினாண்டும், அரசியார் இஸபெல்லாவும் மரியாதையுடன் வரவேற்றனர்.

அவர் அங்கு வந்த நோக்கமறிந்ததும், போரை நிறுத்தி, சமாதானம் செய்து கொள்ள முன்வந்தார் கிறிஸ்துவ மன்னர்.

ஆனால் அதற்கு முன் கர்னாதா கோட்டை அவரிடம் சரணடைய வேண்டாமா?

''முதலில் உங்கள் கோட்டை எங்களிடம் சரணடைய வேண்டும். அதற்கான நிபந்தனைகளைப் பற்றிப் பேசிக் கொள்வோம். உங்கள் சுல்தானிடம் சொல்லும்'' என்றார் அரசர் பெர்டினாண்டு.

உடனடியாகவே முஸ்லிம்களுடன் சரண் நிபந்தனைகளைப் பற்றிப் பேச்சுவார்த்தைகள் நடத்த கான்ஸால்வோ தெ குர்த்துபா , பெர்னாண்டோ தெ ஜாப்ஃரா ஆகியோரை தமது சார்பில் நியமித்தார்.

பெர்னாண்டோ மன்னரின் அந்தரங்கச் செயலாளர் கான்ஸால்வோ நல்லபடி அரபி மொழி தெரிந்திருந்ததுடன் முஸ்லிம்களின் பழக்கவழக்கங்களையும் நன்கு அறிந்திருந்தார்.

''இவர்களுடன் உங்கள் பிரதிநிதிகள் விவாதித்து ஒரு முடிவுக்கு வரட்டும்'' என்றார் பெர்டினாண்டு அரசர்.

அந்த செய்தியுடன் அபுல் காஸிம் தலைநகர் திரும்பினார்.

அவரையும் வஜீர் யூசுஃப் இப்னு கமிஷா, கர்னாதாவின் தலைமை காஜியார் ஆகியோரையும் எதிரியுடன் சமாதானம் பேச தமது சார்பில் நியமித்தார். சுல்தான் போ அப்தில்.

மேலும், தம்முடைய நல்லெண்ணத்தின் அறிகுறியாக தம்முடைய மைந்தரைப் பிணையென பெர்டினாண்டு அரசரிடம் அனுப்பி வைத்தார்.

அடுத்து விரைவிலே சுர்ருவானா என்ற குக்கிராமத்திலே கிறிஸ்துவ பிரதிநிதிகளும் முஸ்லிம் பிரதிநிதிகளும் சந்தித்தனர்.

கர்னாதாவிலிருந்து இரண்டு கல் தொலைவிலும் ஸந்தாஃபயிலிருந்து நான்கு கல் தொலைவிலுமிருந்த அந்த கிராமத்தில் இரு தரப்பினரும் நள்ளிரவு நேரங்களிலே பேசினர்.

அவர்களில் முதலில் அங்கு வருபவர்கள் மற்றவர்களுக்கு தீப்பந்தம் மூலம் சைகைகள் செய்தனர்.அல்லது ஒற்றர்கள் மூலம் செய்தி அனுப்பினர்.

அவ்வாறு அவர்கள் அடுத்தடுத்துப் பலமுறை கூடிப் பேசினர். விவாதங்களும் எதிர் வாதங்களும் இருதரப்பினருக்குமிடையே பரிமாறிக் கொள்ளப்பட்டன.

சரணாகதிக்கான நிபந்தனைகள் முடிவான பிறகு அபுல் காஸிம் ஸந்தாஃப சென்றார். அந்நிபந்தனைகள் எழுதப்பட்ட பத்திரத்தில் கிறிஸ்துவ அரச தம்பதியர் பெர்னாண்டோ, இஸபெல்லா ஆகியோரின் கையொப்பங்கள் பெற்றார்.

அதே போல அந்த பத்திரத்தில் சுல்தான் போ அப்திலின் கையொப்பம் வாங்க அவர் கர்னாதா திரும்பினார். அவருடன் அரசர் பெர்டினாண்டு சார்பில் கான்ஸால்வோவும் வந்தார்.

அவர் அல்ஹம்ராவின் விருந்தினர் மாளிகையில் தங்கியிருக்க, அலங்கரிக்கப்பட்ட அதன் சதுர மண்டபத்தில் அரசவை அவசர மாகக் கூடியது.

இராணுவ அதிகாரிகள், கோட்டைத் தலைவர்கள், ஷெய்குகள், மார்க்க அறிஞர்கள் அதில் கலந்து கொண்டனர்.

சுல்தான் போ அப்தில் வீற்றிருந்த அரியாசனத்தின் இருமருங்கிலும் மந்திரி பிரதானிகள் வரிசையாக அமர்ந்தனர்.

அவர்கள் முன்னே தொங்கிய முகத்துடன் சரணாகதி நிபந்தனைகளை ஒவ்வொன்றாக வாசித்தார், அபுல் காஸிம்-

சமாதான உடன்பாடு கையெழுத்தான அறுபது நாட்களுக்குள் கர்னாதா நகரம், அதன் கோட்டை வாயில்கள், கோபுரங்கள், அரண்களுடன் கிறிஸ்துவர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்....

கர்னாதாவிலிருந்து வரும் கிறிஸ்துவக் கைதிகள் எவ்வித ஈட்டுப் பணமும் இன்றி விடுவிக்கப்ப ட வேண்டும்.

சுல்தான் போ அப்தில், மற்றும் அவருடைய படைத் தலைவர் கள், புரவி வீரர்கள், அமைச்சர்கள், குடிமக்கள் அனைவருமே கிறிஸ்துவ அரச தம்பதியருக்குப் பணிவு காட்ட வேண்டும். காஸ்தீலிய அரசுக்கு விசுவாசப் பிரமாணம் செய்ய வேண்டும்...

கர்னாதா முஸ்லிம்கள் ஸ்பானிய அரசின் குடிமக்களாக வேண்டும். உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற பாகுபாடில்லாமல் முஸ்லிம்களின் உயிர்களுக்குப் பாதுகாப்பளிக்கப்படும். அவர் களுடைய சொத்துக்கள், ஆயுதங்கள், குதிரைகளையெல்லாம் அவர்கள் தங்களுடன் வைத்திருக்கலாம். அவற்றை சர்வ சுதந்தரமாக அனுபவித்து வரலாம். பீரங்கிகளைத் தவிர மற்றவற்றை அரசாங்கத்திடம் ஒப்படைக்க வேண்டியதில்லை....

முஸ்லிம்கள் தங்கள் மார்க்கத்தை முன்போலவே எவ்வித இடைஞ்சலுமின்றிப் பின்பற்றி வர முடியும். அதற்கான பாதுகாப்பு அவர்களுக்கு இருந்து வரும்....

பள்ளிவாயில்கள், மத்ரஸாக்கள் வழக்கம் போல எவ்வித குறுக்கீடுமில்லாமல் இயங்கி வரலாம்....

மினாரக்களிலிருந்து முஅத்தீன்கள் 'அதான்' சொல்வது தடை செய்யப்படாது...

முஸ்லிம்களின் பழக்க வழக்கங்கள், மொழி, உடை , முதலியன எப்போதும் போலவே இருந்து வரலாம்....

கிறிஸ்துவ அரச தம்பதியரால் நியமிக்கப்படும் ஆளுநர்களின் கீழ் 'காஜிகளால்' நிர்வகிக்கப்படும் இஸலாமியச் சட்டங்களினால் முஸ்லிம்கள் ஆளப்படுவார்கள். அந்த சட்டங்களின் படியே முஸ்லிம் நீதிபதிகள் நாங்கள் விசாரிக்கும் வழக்குகளில் தீர்ப்பளிப்பார்கள்....

முஸ்லிம்கள், கிறிஸ்துவர்களிடையே நடைபெறும் பரிவர்த் தனைகளை இரு சமூகத்தார்களின் கூட்டு மன்றம் பரிபாலித்து வரும்....

மூன்று ஆண்டுகள் வரை முஸ்லிம்கள் கிறிஸ்துவ அரசருக்குத் திறை செலுத்த வேண்டியதில்லை. அதன் பிறகு அவர்கள் முன்னர் தங்களின் சுல்தானுக்கு முறையாகச் செலுத்தி வந்த அதே வரியையே காஸ்தீலிய அரசுக்குச் செலுத்தி வர வேண்டும். அதற்கு மேல் எந்த வரியும் அவர்கள் செலுத்த வேண்டியதில்லை.....

மூன்று ஆண்டு காலத்திற்குள் ஆப்பிரிக்கா செல்ல விரும்பு வோருக்கு எந்த துறைமுகத்திலிருந்தும் தங்கள் பொருள்களுடன் செல்ல இலவசமாகக் கப்பற் பயண வசதிகள் செய்து தரப்படும்,...

சரணடைவதற்கு முன்னர் அதன் நிபந்தனைகள் சரிவர நிறைவேற்றப் படுவதற்குப் பிணையாகக் கர்னாதாவின் முக்கிய குடும்பங்களைச் சேர்ந்த ஐநூறு பேர்களை கிறிஸ்துவர்களிடம் ஒப்படைக்க வேண்டும். உடன்பாடு நிறைவேறிய பிறகு அவர்கள் அனைவரும் ஏற்கெனவே கிறிஸ்துவ அரசரிடம் இருந்து வரும் கர்னாதா இளவரசருடனும் மற்றவர்களுடனும் ஏக சமயத்தில் விடுவிக்கப்படுவார்கள்....

அவையெல்லாம் பொது மக்கள் தொடர்பான நிபந்தனைகள்.

அவற்றை வாசித்து முடித்ததும் சற்றே நிறுத்தினார் அபுல் காஸீம்.

சுல்தானை நோக்கினார், பிறகு தம்முடைய கையில் பிடித்திருந்த பத்திரத்தைச் சுருட்டித் தமது மன்னரிடம் தந்தார். அவரும் அதை மவுனமாகவே வாங்கிக் கொண்டார்.

அவரையும் அரச குடும்பத்தினரையும் பொறுத்த அந்தரங்க நிபந்தனைகளும் அந்த பத்திரத்தில் இருந்தன.

அவற்றை சுல்தான் போ அப்திலும் மிக நெருங்கிய அந்தரங்க அதிகாரிகளும் ஏற்கெனவே அறிவார்கள்.

அவற்றைப் பொது மன்றத்தில் படித்துக் காண்பிப்பதை விரும்பவில்லை, அபுல் காஸீம்.

அந்நிபந்தனைகளைப் பற்றி அவர் மனதில் மட்டுமின்றி சுல்தான் போ அப்திலின் நெஞ்சத்திலுமே மீண்டும் நினைவு எழுந்தது.

சுல்தான் போ அப்தில், அவருடைய அரசத் துணைவியார் மர்யம் அவருடைய தாயார் சுல்தானா ஆயிஷா, அவருடன் பிறந்தோர்- மறைந்த சுல்தான் மவ்லா அபுல் ஹஸனின் விதவை

ஸுரய்யா- மற்றும் அரச பரம்பரையினருக்குச் சொந்தமாக இருந்து வரும் நிலங்கள் வீடுகள், ஆலைகள், குளியல் தலங்கள், வேறு பல சொத்துக்கள் அவர்களிடமே தரப்படும்.

அவற்றை அவர்கள் நேரிடையாகவோ முகவர்கள் மூலமாகவோ விற்பதற்கு உரிமை இருக்கும்...

கர்னாதா பிரதேசத்திலும் அதன் சுற்றுப்புறங்களிலும் நல்ல ஆஸ்திகள் சுல்தான் போ அப்திலுக்கும் அல்புஷாராத்தில் பல நகரங்கள்- நிலங்கள் -செழுமையான வெளிகள் சுல்தான் போ அப்திலுக்கும் அவருடைய சந்ததியினருக்கும் கிடைக்கும்....

சரணடையும் நாளன்று சுல்தான் போ அப்திலுக்கும் முப்பதாயிரம் பொற்காசுகளும் வழங்கப்படும்....

பெருமை மிக்க பேரரசின் வாரிசாகப் பட்டமேறி அரசாண்ட சுல்தான் போ அப்திலுக்கு இந்த நிலை....?

அந்த எண்ணம் அபுல் காஸிமின் உள்ளத்தில் எழுந்தது.

ஆனால்....

''நம்மை முற்றுகையிட்டு நிற்கும் எதிரியிடம் இதைவிட நல்ல நிபந்தனைகளைப் பெற முடியாது''என்றார் அவர்.

நாம் எதிர்பார்த்ததற்கு மேல் தாராளமான நிபந்தனைகள் தாம்!''

''ஆம், இவற்றை நாம் ஏற்காமல் எளிதில் தள்ளி விடுவதற்கில்லை...''

''துச்சமாக ஒதுக்கி விட முடியாதவை...''

''இருந்தாலும் எத்தனையோ நூற்றாண்டுகளாக நாம் கட்டிக் காத்து வந்த சுதந்திரம், போனால் போனது தான்....''

அரசவையில் அவ்வாறு சிலர் கருத்துக்களைத் தெரிவித்தனர்.

சுல்தான் அபூ ஆப்துல்லாஹ் மவுனமாக மந்திரி பிரதானிகளைச் சூழ நோக்கினார்.

அப்போது அவரது இதயப் பரப்பிலே சிந்தனை அலைகள் புரண்டன-

''சிம்மாதனமா? சவக்குழியா?

'சிம்மாதனம்....கர்னாதா பேரரசின் பெருமை மிக்க சிம்மாதனம்! சரணாகதி உடன்பாட்டில் நாம் கையொப்பமிட்டு முத்திரையிட்டு விட்டால்....?நம்முடன் இப்பேரரசின் வாழ்வு முடிந்து விடும்...கர்னாதாவின் மாட்சியும் மறைந்து விடுமே!

'சிம்மாதனத்தைத் துறந்து விடுவதானால், இனி போரில்லை. களத்திலே மரணம் இல்லை. ஆனால்....

உயிருடனிருந்தும் நடைப் பிணம் போலத் தான்.....உயிரற்ற கட்டையாகத் தானே வாழ்விருக்கும்!''

'சரணாகதி பத்திரத்திலே கையெழுத்திட்டு கர்னாதா அரசின் இறுதி நாசத்துக்கு முத்திரையிட்டு விட்டால்?....

'அது நம் இனத்தையே பெயரில்லாமல் செய்து விடும் துக்க நாளாக அன்றோ விருக்கும்?'

அவ்வாறு எண்ணிய போது அலை புரளும் கரை மணல் போல அவர் உள்ளம் தளர்ந்து சரிந்தது.

அவரைப் போலவே அவையில் பலர் சிந்தனை அலையில் சிக்கித் திணறினர்....

'கர்னாதா!'

'குர்துபாவுக்குப் பிறகு உந்தலூஸின் சீரையும் சிறப்பையும் கட்டிக் காத்து வந்த கர்னாதா! இது 'ஜின்' கள் கூடி அமைந்த விந்தை நகரமா?

15. நெஞ்சிலிருந்து நீங்குமா?

சுல்தான் அல் அஹ்மரின் பேரரசின் தலைநகரான பிறகு கர்னாதா எல்லை ஆதிநகருக்கு மேல் பரப்பிலும் எழில் வனப்பிலும் வளர்ந்து கொண்டே வந்திருக்கிறது.

அங்கே எங்கு நோக்கினும் இயற்கையின் பொழிவு, வெள்ளிப் பனி மலையாக நின்ற ஜபல் ஷுலைரின் பொழிவும் அதிலிருந்து வனப்பும் அருவிகளின் அழகும் அவ்வருவிகள் ஒன்று சேர்ந்து ஆறுகளாகப் பெருகியோடும் மாட்சியும் இந்த நீர்வளத்தால் புற்பூண்டு, பசுங்கொடிகள், பாதாம் மரங்கள், வயல்கள் முதலியன பச்சைப் பசேலென தோற்றுவதும் இணையில்லா இன்பக் காட்சிகளாக இருந்தன.

நகரின் ஒரு பகுதி சமவெளியையொட்டியும் மற்றொரு பகுதி மலைச் சாரலிலும் இருந்தது.

பதினேழு சார்புப் பகுதிகளைக் கொண்டிருந்த அந்நகரத்தை வளைத்திருந்த கோட்டைக்கு இருபது வாயில்கள் இருந்தன. ஆயிரத்துக்கும் மேற்பட்ட கோபுரங்கள் எழுந்து நின்றன.

அவற்றிற்கு நடுவே அமைந்திருக்கிறது. சுல்தானின் அரண்மனை.

அவ்வரண்மனையைச் சுற்றிலுமிருந்ததைப் போல அந்நகரின் ஒவ்வொரு வீட்டிற்கும் முன்னே ஒரு தோட்டம். அங்கே ஆரஞ்சு, நார்த்தை, எலுமிச்சை. மற்றும் வாகை மரங்கள் அடர்ந்து நின்றன.

வெண்ணிற மலர்கள் பூத்துக் குலுங்கும் 'மிர்ட்டில்' செடிகள்-நறுமணம் பரப்பும் மரஞ்செடி கொடிகள் பசுமை பரப்பிக் கொண்டிருந்தன.

அவற்றிற்கெல்லாம், நீர் பாய்ச்சியவாறு தெளிந்த தண்ணீர் ஓடை ஓடிக் கொண்டிருந்தது.

வீடுகள் எல்லாம் உள்ளும் புறமும் சித்திர- சிற்ப வேலைப் பாடுகளும் அலங்கார வண்ணப் பூச்சுகளும் கொண்டிருந்தன.

சலசலவென ஒலியெழுப்பியவாறு தர்ரோஹ் நதி கர்னாதா நகரத்தின் மத்தியிலே ஓடியது.

அந் நகரத்து மாளிகைகள், சந்தைகள், ஆலைகள், குளியல் தலங்களுக்கெல்லாம் நீர் வழங்கிவிட்டு அது சமவெளி சென்றடைந்தது.

அத்தகைய சிறப்புப் பெற்றிருந்த கர்னாதா பெரிய வணிக கேந்திரமாக-பற்பல நாடுகளின் பொதுவான சந்தை நகரமாகவும் இருந்தது. அங்கே தங்கம், பொன், வெள்ளி விரும்பிய மட்டும் வந்து குவிந்தன.

தலைநகருக்கப்பால் சிறப்புப் பெற்றிருந்த கர்னாதா பெரிய வணிக கேந்திரமாக, பற்பல நாடுகளின் பொதுவான சந்தை நகரமாகவும் இருந்தது. அங்கே தங்கம், பொன், வெள்ளி விரும்பிய மட்டும் வந்து குவிந்தன.

தலைநகருக்கப்பால் பனி முடி தரித்த ஜபல் ஷுலைர் மலையின் பின்னணியிலே ஒரு பீடபூமி. அதிலே ரோசா மலர் கிரீடமோவென மதீனத்துல் ஹம்ரா. அல்ஹம்ரா அரண்மனையைச் சுற்றி உருவான அழகிய நகரம் இருந்தது.

அதனை வளைத்து நின்ற கோட்டையின் மூன்று புறமும் தர்ரோஹ் நதி அணைந்து சென்றது. தென் கீழ் புறமோ மதிலேதுமின்றி திறவையாக இருந்தது.

நகரின் முன் பகுதியில் நின்ற அல்கஸா-கோட்டை - பிரமாண்டமான கரடு முரடான வெளிச் சுவர்களைக் கொண்டு விளங்கியது. அங்கே வலிமையான கொத்தளங்களும் உயரமான கோபுரங்களும் நகருக்கு அரணாக அமைந்திருந்தன.

அக்கோட்டைக்கு சற்றுத் தொலைவில் தான் அல்ஹம்ரா கண்ணுக்கு எடுப்பாக மென்மையான தோற்றமுடன் காட்சியளித்தது.

கோட்டைக்குள்ளே அழகிய புகு மண்டபங்கள் வரிசை வரிசையாக நின்ற தூண்களை அற்புத வேலைப்படுகளுடன் கூடிய வளைவுகள் இணைந்திருந்தன. அவை தாங்கி நின்ற கூறையின் உட்புறம் முழுவதும் கண்ணைக் கவரும் வண்ணக்கலவை.

காற்றோட்டமுடன் விசாலமாக இருந்த மண்டபங்களுடன் இணைந்த வகையில் சுல்தானின் அல்ஹம்ரா அரண்மனையும் அல்தா என்றழைக்கப்பட்ட அதிகாரிகளின் மாளிகைகளும் இருந்தன.

அரண்மனையை, பரந்த காவுகளும் பூங்காக்களும் சூழ்ந் திருந்தன. நந்த வனங்களில் பூத்து நின்ற மலர்களின் நறுமணம் குளுமை யான தென்றலிலே மிகுந்தது; அரண்மனை யெங்கும் பரவிக் கமழ்ந்தது.

''தோட்டம் எவ்வளவு கொள்ளை அழகு! அங்கே பூத்திருக்கும் மலர்கள் விண்ணில் மலர்ந்திருக்கும் மின்மினிகளுடன் அன்றோ போட்டியிடுகின்றன? உன்னுடைய வெண்கலக் கிண்ணத்தில் நிரம்பி வழியும் படி நீருற்றிலிருந்து தாவிப் பாயும் பளிங்கு போன்ற நீரை முழு நிலவுடன் தவிர எதனுடன் ஒப்பிடுவது!''

இத்தகைய கருத்துப்படும் வாசகம் ஒன்று அரண்மனையின் சுவர்களில் ஒன்றில் காணப்பட்டது.

அல்ஹம்ராவிலே நுழைய பிரம்மாண்டமான தொரு வளைவு. அதன் கீழே பெயருக்கேற்ப அழகிய மாதுளை வாயில்.

அப்பால் செங்குத்தான மலைச்சரிவுக்கு மேலே நீதி வாயில். அதன் உயரே குதிரை லாட வடிவில் ஒரு வளைவு. அதையொட்டி யிருந்த சதுரக் கோபுரம்தான் சுல்தானிடம் பொது மக்கள் நேரிலே குறையிரந்து நீதி பெறும் பெருமன்றம்.

அதைக் கடந்து சிறிய தொரு கதவு வழியாகச் சென்றால் அரபு மாளிகை!

அம்மாளிகையின் தாழ்வாரப் பாதையைக் கடந்து செல்ல, நல்லரசு முற்றம் எதிர்ப்படும்.

அந்த முற்றத்தின் நடுவே சலவைக் கற்கள் பதித்த அல்பர்க்கா.

ரோஜா, மற்றும் எண்ணிறந்த வண்ண மலர்கள் சிரிக்க,இளங் காற்றில் அசைந்தாடும் பூச்செடிகள் சூழ்ந்த அந்தக் குளத்தின் மத்தியில் பெரியதொரு நீர்க் கிண்ணம், அதன் உயரே அமைந்திருந்த இரு பீங்கான் ஜாடிகளிலிருந்து சதா நீர் தளும்பி வழிந்து கொண்டிருக்கும்.

எப்போதும் தண்ணீர் நிரம்பி யிருக்கும் அந்த சுந்தரக் குளத்தில் தங்க மீன்கள் துள்ளித் துள்ளி நீந்திக் கொண்டிருக்கும்.

அதற்கு தெற்கே சலவைக் கல் தூண்கள் தாங்கிய பிரதான நுழைவாயில் அதைத் தாண்டிச் சென்றால் ஹம்ராவில் ஆங்காங்கே பல முற்ற வெளிகள். அவ்வெளிகளின் நடுவே நீருற்றுக்கள்!

அவற்றிற்லிருந்து பீரிட்டு வெளிப்படும் நீரை விருப்பம் போல உயரேயோ, தாழவோ விழும் படி கட்டுப்படுத்துவதற்கு சாதனங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

அதனால் அந்நீரை ஒரேயடியாக மேல் நோக்கித் தாவியெழும் படி செய்யலாம். சமயங்களில் ஊற்று நீரை, சதுர வடிவில் திரை போல படர்ந்து பாயும்படியும் செய்யலாம். அந்த நீர்த் திரையிலே, சூழவிருந்த அழகான கட்டிடங்கள்,. எழில் நீருற்றுக்கள்- நிர்மலமான நீல வானின் தோற்றமெல்லாம் பிரதிபலிப்பது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

அந்த முற்ற வெளிகளைச் சுற்றியிருந்த கட்டடங்களுடைய சுவர்களின் மேற் புரத்தில் செடி கொடி சித்திரங்களும் சிற்பம் போல மேடு பள்ளமான அலங்கார வேலைப்பாடுகளும் காணப்பட்டன. ஆங்காங்கே, திருமறை வசனங்கள் அல்லது அரபிக் கவிதைகள் பொறிக்கப்பட்டிருந்தன.

அந்தச் சுவர்களின் பரப்பிலே வித விதமான உருவங்கள்- சித்திரங்கள். இன்னும் பெரிதும் சிறிதுமான சதுரங்கள், வட்டங்கள் போன்று காணப் பட்டன.

நேர்த்தியாகப் பளிங்குத் துண்டுகள் பதிக்கப்பட்டிருந்தன. அதுவும் தான் எத்தனை எத்தனை வித வண்ணங்களில்!

பொன்- சிவப்பு?- இலேசான ஊதா- இருண்ட சிவப்பு, இன்னும் பலநிறப் பளிங்குகளின் அழகோவியங்களாக விளங்கிய அச்சுவர்களின் அடிப்பாகத்திலும் பல வண்ணப் பளிங்குகளைக் கொண்டமைந்த வேலைப்பாடுகள்!

அல்பர்க்காவைக் கடந்து அப்பால் ஒரு வளைவைத் தாண்டிச் சென்றால், அல்ஹம்ராவின் சிங்க முற்றம் வந்து சேரலாம்.

சலவைக் கற்களாலும் நீல வெள்ளை, நீல நிற ஓடுகளாலும் தளமிடப் பட்டிருந்த அந்த முற்றத்தின் நான்கு புறங்களிலும் நிழலில் செல்வதற்கான மூடிய நடைபாதைகள் ஓடின.

அவற்றிலே வரிசை வரிசையாக இருக்கக்கூடிய இருபத்தெட்டு ஒல்லியான வெண்சலவைக்கல் தூண்கள் தந்தத்தில் கடைந்தெடுக்கப்பட்டவையோ என்று எண்ணும்படியாக எழிலுடன் தோன்றின.

மக்கள் வந்து வரிசை வரிசையாக இருக்கக் கூடிய அமருமிடங்களைத் தாழ்வான மட்டத்தில் அத்தூண்கள் தாங்கி நின்றன.

சிங்க முற்றத்தின் நான்கு மூலைகளிலும் கூரை மண்டபங்கள் இருந்தன.

அங்கே ஐந்தடி உயரத்துக்கு நல்ல சிவப்பு, ஊதா பொன் நிறங்கள் இணையும் முறையில் அழகிய வண்ணப் பூச்சு பற்பல வண்ணங்கள் சுடரிடும் சிற்ப வேலைப்பாடுகள்- சலவைக் கற்களைத் துளைத்து விளைந்த சித்திரமயமான இடைவெளிகள் கொண்ட வளைவுகள்- நீலப் பொன்னிறம் கொண்ட அலங்கார அடிப்பகுதிகளுடன் கூடிய சுவர்கள்- அழகிய கும்பங்கள்- அவற்றின் நடுவே வெண்கல் மணி மண்டபம்.

நீள் சதுரமான அந்த முற்ற வெளியின் மத்தியில் ஒரு சிங்கார சிங்க நீரூற்று!

வெண் சலவைக் கற்களில் செதுக்கப்பட்ட பன்னிரண்டு சிம்மங்கள் வட்டமாக நின்று வெண்கல் சிறுநீர்த் தேக்கம் ஒன்றைத் தாங்கிக் கொண்டிருப்பது போல் அது அமைக்கப்பட்டிருந்தது.

அந்த சிம்மங்களின் வாய் வழியாக வேறு நீர்வழிந் தோடிய வண்ணமிருந்தது.

சிங்க நீரூற்றிலிருந்து வெளிப்படும் நீர்த்திரள் விசேஷ எந்திர சாதனையால் சமயங்களில் இசைலயத்துக் கேற்ப நடனமாடுவது போல இருக்கும். சமயங்களில் வெண்கதிரின் ஒளியையோ தன்மதியின் சுடரையோ பிரதி பலித்துக் கொண்டிருக்கும்.

சிங்க முற்றத்தை யொட்டி இசைக் கலைஞர்கள் அமர்ந்து இனிய கலை நிகழ்ச்சிகள் நடத்த, அவற்றை சுல்தானும், அமைச்சர் களும் ரசிப்பதற்காக அமர்ந்திருக்கும் மேடை கொண்ட இசை மண்டபமும் இருந்தது.

முற்றத்தில் மற்றொரு புறமிருந்த அலங்கார வழிக்கப்பால் அபன் ஸராஜஸ் மண்டபம் இருந்தது! அரச பரம்பரையைச் சேர்ந்த பல தீரமிக்க புரவி வீரர்கள் போர்களில் கொலையுண்டதை யொட்டி அந்த மண்டபம் அப்பெயரால் வழங்கி வந்தது.

சிம்ம ஊற்றின் வடக்கே அழகானதொரு வாயிலின் வழியே புகுந்து போக, இரு சகோதரிகள் மண்டபம் எதிர்ப்படும்.

அரண்மனை அந்தப் புரத்தின் ஒரு பகுதி அது.

மூஸா அபுல் கஸ்ஸானின் முகம் மட்டும் மாறவில்லை.

அவர் குரல் அவையிலே 'கணீர்' என எழுந்தது.

''அழுவதைப் பெண்டிருக்கும் பிள்ளைகளுக்கும் விடுங்கள்!...''

வழக்கமான உறுதியும் அஞ்சாமையும் அக்குரலில் தொனித்தன.

''...ஆம், ஆடவர்களாகிய நாம் மென்மையான பலவீனமான உள்ளமுடையோரைப் போல கண்ணீர் விடுவதா? நம்முடைய இதயங்களை இரும்பாக்கி செந்நீரையன்றோ சிந்த வேண்டும்?

''வீறு கொண்டெழுங்கள்! நம்முடைய அரசின் பெருமைக்கு- நமது மரபுக்கு- பாரம்பரியத்துக்கு ஏற்ற முறையிலே எதிரியுடன் போராடுவோம். போர்க்களத்திலே சமர் புரிந்து இறப்போம்!

''அன்று தீரர் தாரிக் சிங்கமுகக் குன்றிலே இறங்கிய போது நிகழ்ந்த சம்பவத்தைச் சற்று நினைத்துப் பாருங்கள்!

''புதியதொரு நாட்டிலே பகைவர்களின் பலம் தெரியாத நிலையிலும் தாங்கள் ஏறி வந்த கப்பல்களையெல்லாம் எரித்து விடும்படி அவர் தம்முடைய வீரர்களுக்குக் கட்டளையிட்டாரே, ஏன்?

''ஒன்று, வெற்றி பெற வேண்டும். அல்லது, வீர மரணம் அடைய வேண்டும். தோல்வியுடன் தாயகம் திரும்பும் நிலை ஏற்படக் கூடாதென்பது தானே அவர் எண்ணமாக இருந்தது?

''அவருடைய வீர வழி வந்த நம்மவர்கள் எத்தனை முறை வீரம் புரிந்துவெற்றியடைந்தார்கள்.

''அந்த வெற்றியாளர் தாரிக்குடைய வீரர்கள் ஆர்த்தெழுந்ததைப் போல இன்று நீங்கள் ஆர்த்தெழுங்கள்!

''உங்களுக்கு நான் தலைமை தாங்கிச் செல்கிறேன். உறுதி குலையாத உள்ளத்துடன் உங்களைப் படை நடத்துவேன்.

''களத்திலே கண்ணியமாக இறக்க நாம் ஏன் தயங்க வேண்டும்?

''நமக்கு வெற்றி கிடைத்தால், நமது அரசு நம்மிடம் தங்கும். இறந்து பட்டால், வரலாறு நம்மைப் போற்றும்!

''வாருங்கள்! நம்முடைய விடுதலை காப்போம்! நமது வயல்களை, வீடு வாசல்களை, தொழில் துறைகளை நாசம் செய்த-

நம்மையே பூண்டோடு அழிக்க, கங்கணம் கட்டி நிற்கும் பகைவரை எதிர்ப்போம்.

பொதுவாக உந்துலூஸ் மீதும், குறிப்பாக அதில் எஞ்சி நிற்கும் பகுதியான கர்னாதா மீதும் அவர்கள் இழைத்து வந்துள்ள அக்கிரமங்களுக்கும் அநீதிகளுக்கும் நாம் பழி வாங்குவோம்!

''இந் நகரைப் பாதுகாப்பதில் போரிட்டு இறக்க நம்முடைய பிரபுக்களும் கணவான்களும் அஞ்சியொதுங்கினர் என்ற பழியேற் படுவதை இறைவன் தடுப்பானாக!''

ஆவேசமுடன் பீரிட்டு வந்த தமது பேச்சை சற்றே நிறுத்தினார் மூஸா. பிறகு மீண்டும் தமது உள்ளத்து உணர்ச்சிகளை வார்த்தை களாக வடித்தார்-

''...நாம் உயிருக்குயிராகப் போற்றி வந்தவற்றிற்காக- நம்முடைய நம்பிக்கைகளுக்காக நமது கடைசி முயற்சியைச் செய்ய உங்களுக்குத் துணிவில்லையா?- வீரமில்லையா?

''உங்களுக்கு ஒவ்வுமானால், இந்த இழிவான நிபந்தனை களை தாராளமா ஏற்றுக் கொள்ளுங்கள் மனதிலே எவ்வித தயக்கமுமின்றி- முகத்திலே எவ்வித சலனமுமின்றி இவ்வாறு செய்யும் ஒவ்வொருவருமே தமது கழுத்தைக் குனியட்டும் அங்கே கேவலமான அடிமைத் தனத்தின் நுகத்தடி நிரந்தரமாக ஏற்றப்படும.

''அன்று மாலகாவில் சிறைப்பட்ட நமது சகோதரர்களின் கதியை நினைத்துப் பாருங்கள்!''

''அவர்களை, கிறிஸ்துவ அரசரும் மற்றவர்களும் அடிமை களாகப் பகிர்ந்து கொண்டதுடன் மட்டுமா நின்றார்கள்?

''அது மட்டுமல்லவே! நம்முடைய அருமைப் பெண்மணி களை அரசி இஸபெல்லா மட்டுமா அடிமைகளாக வைத்துக் கொண்டார்? ஐரோப்பாவில் மற்ற சகோதர அரசிகளுக்கும் கூட அவர்களில் பலரை அரண்மனைச் சேவகத்துக்கு அன்பளிப்பாக அவர் அனுப்பி வைத்தாரே!

''நமது அரசைக் காப்பாற்ற- அருமைத் தாயகத்தைக் காப்பாற்ற முடியாது என்று அவநம்பிக்கை கொள்ளும் அளவுக்கா மக்களின் உணர்ச்சி தாழ்ந்து விட வேண்டும்!

''ஆனால் கண்ணியத்தை விரும்புவோருக்கு கண்ணியமான மரணமே சாலச் சிறந்தது. அடிமையாக அவமானத்துடன் மனங்

குன்றி வாழ்வதை விட சுதந்தர மனிதனாக மகிழ்வுடன் இறப்பதையே நான் பெரிதும் விரும்புகிறேன்.''

அவ்வாறு கூறியவராக மூஸா தமது விழிகளை அவையினர் மீது சுழல விட்டார். சுல்தானைப் பார்த்தார். அவரைச் சூழ்ந்துள்ள மந்திரிப் பிரதானிகளைப் பார்த்தார். மற்றும் கன தனவான்களைப் பார்த்தார். அவர்களிடமிருந்து தம்முடைய வீரமான அழைப்புக்குச் சாதகமாக ஏதும் பதில் வருமா என்று எதிர் நோக்கி நின்றார்.

ஆனால்-

தொடர்ந்து நீடித்த முற்றுகையின் தாளமுடியாத கொடுமை - மிகைத்து நின்ற பகைவருடன் சமமாகப் போரிட முடியாமை பற்றிய சிந்தனைகள் அவையினரைத் தளர்வடையச் செய்திருந்தன.

அந்நிலையில். எதிரியோடு தீரமுடன் பொருதி நிற்க மூஸா விடுத்த வேண்டுகோளுக்கு அவர்கள் என்ன பதில்சொல்வார்கள்?

அவை முழுதும் சாவின் அமைதியைப் போல நிசப்தம்.

அங்கே சலனமற்றிருந்த முகங்களை ஏறிட்டு நோக்கினார் மூஸா. ஏதாவது நம்பிக்கையின் ஒளிக்கீற்று தென்படுகிறதா என்று!

சுரணையற்ற உள்ளத்தின் சாயல் முகத்திலே படர்ந்திருந்த நிலையில் சுல்தான் பேசலுற்றார்:

''இறைவன் ஆணையாக! நம்முடைய எதிரிகள் வலிமை கொஞ்சமும் குறைந்த பாடில்லை. அவர்களைக் களத்திலே எதிர்த்து பின்னடையச் செய்வதற்குத் தலைநகரிலும் சரி, நமது அரசிலும் சரி தக்க படைகள் இல்லை. எனவே, அவர்களுடன் போராடுவதில் என்ன பயன்? இறைவன் நாட்டப்படி நடப்பது நடக்கட்டும். நான் மிகவும் துரதிர்ஷ்டசாலி. என்னுடைய ஆட்சியில் இந்த அரசு விழும் என்று தர்வேஷ் கூறியது உண்மையாகி விட்டது!''

''ஆமாம், இறை நாட்டம் நடந்தே தீரும்!''- அமைச்சர்களும் நீதி வல்லுநர்களும் அரசருடன் ஒத்துக் கூறினர்.

ஏமாற்றமும் ஆத்திரமும் உள்ளத்திலே கொப்பளிக்க, கொதிக்கும் கனலிலிருந்து, தெறிக்கும் நீரைப் போல வார்த்தைகளைக் கொட்டலாயினார், மூஸா-

''கிறிஸ்துவர்கள் தங்கள் வாக்குறுதிகளை நிறைவேற்றுவார்கள் என்று எண்ணுகிறீர்களா? உங்களை நீங்களே ஏமாற்றிக்

கொள்ளாதீர்கள். போரில் இறுதி வெற்றியடைந்து விட்ட பிறகு அவர்கள் நம்பால் பெருந்தன்மையுடன் நடந்து கொள்வார்கள் என்று எதிர்பார்த்து வீண் போகாதீர்கள்.

''கடந்த காலத்தை நினைத்துப் பாருங்கள்! நம்முடைய முந்தையர்களின் வரலாற்றை எண்ணிப் பாருங்கள், நம்முடைய உதிரத்தை உறிஞ்சி விடவே கிறிஸ்துவர்கள் வேட்கை கொண்டுள் ளனர். அவ்வுணர்வை அவர்கள் அடிக்கடி தூண்டிக் கொண்டு வருகின்றனர்

''நாம் அஞ்ச வேண்டியது சாவை அல்ல! அதை நம்முடைய துரதிர்ஷ்டத்தால் விளைந்துள்ள வேதனைகளைப் பற்றித்தான் நாம் அஞ்ச வேண்டியவர்களாக இருக்கிறோம்.

''நன்றாகச் சிந்தித்துப் பாருங்கள்!

''நிச்சயமாக அவர்கள் நம் முடைய நகரைக் கொள்ளை அடிப்பார்கள். நம்முடைய புனிதமான பள்ளி வாயல்களை மாசுப் படுத்துவார்கள். நமது வீடு வாசல்களை இடித்துத் தகர்ப்பார்கள். நம் பெண்டு பிள்ளைகளிடம் அக்கிரமமாக நடப்பார்கள். அவர்களை மானபங்கம் செய்யவும் தயங்க மாட்டார்கள்.

''ஆமாம், ஈவிரக்கமற்ற முறையில் நமது மக்கள் மீது அடக்கு முறை, அநீதி, குறுகிய மனப்பான்மை, மதவெறி ஆகியவற்றைக் கட்டவிழ்த்து விடுவார்கள். அதை எதிர்த்து நிற்போரைக் கொடுஞ்சிறையில் தள்ளுவார்கள்.

''இஷ்பீலியாவில் அவர்கள் யூதர்களுக்கு இழைத்து வரும் இன்னல்களைப் பற்றி யோசித்துப் பாருங்கள்!

''நம்முடைய ஆட்சியில் அந்த யூதர்கள் வளம் பெற்றிருந் தனர். அவர்களுடைய திரண்ட செல்வம் காஸ்தீலிய மன்னர்களின் பேராசையைத் தூண்டி விடவில்லையா?

''ஒன்று, யூதர்கள் மூதாதையர்களின் மதத்தைக் கைவிட வேண்டும். அல்லது, நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்று நம்மீது படை யெடுத்து வந்துள்ள இதே பெர்டினாண்டு அரசர் தானே உத்திரவிட்டார்; ஆனால் மத விசாரணை என்ற சாக்கில் எத்தனை ஆயிரம் யூதர்கள் சித்திரவதை செய்யப்பட்டனர்; அதைவிடக் கொடுமையிலும் கொடுமையாக, எத்தனை பேர்கள் உயிருடன் எரிக்கப்பட்டனர்;

''அந்தோ! அவ்வாறு நம்மவர்களும் கம்பத்தில் தூக்கிக் கட்டப்பட்டு - கீழே விறகுக் கட்டைகள் அடுக்கப்பட்டு- எரியூட்டப் படும் காட்சியை இதோ! என் மனக்கண்ணால் இப்போதே காண முடிகிறது!

''இன்று கண்ணியமாகச் சாவை விரும்பாது ஒதுங்கி நழுவிச் செல்ல முயலும் ஆத்மாக்கள் அந்தக் கொடிய காட்சியை நேரிலே காணட்டும்; அக்கொடூரத்தை நேரிலே அனுபவிக்கட்டும்!

''இறைவன் மீது ஆணையாக! அதைக் காண நான் உயிருடன் இருக்க மாட்டேன்.''

கொள்கைக்காக -கடமைக்காக உயிர் துறக்கும் உயரிய எண்ணத்தின் சுடரொளி வீசும் பார்வையைச் சுற்றிலும் மிதக்க விட்டார் மூஸா

மந்திரி, பிரதானிகள் தங்கள் இதயங்களில் கவிந்திருந்த இருள் முகங்களில் நிழலிட அமர்ந்திருந்தனர். தலைகள் குனிந்திருக்க, அவர்களுக்கு மூஸாவை ஏறிட்டுப் பார்க்க துணிவில்லை.

அவையெங்கும் ஒரே மவுனம்.

அங்கிருந்தோரை நோக்கி மீண்டும பேசலுற்றார்-

''ஏன் வாய் திறந்து ஒன்றும் பேசாதிருக்கிறீர்கள்? உங்கள் ஆண்மைக்கு உண்மையாக நடவுங்கள்! சோதனையான கட்டத்திலே உங்கள் உறுதியிலிருந்து பிறழாதீர்கள்! மனிதராகப் பிறக்கும் ஒவ்வொருவருக்கும் இறப்பென்பது உறுதி தானே? இப்போது இங்கிருக்கும் உங்களில் ஒவ்வொருடையவும் ஆண்மையில் அது இருக்கத் தான் செய்கிறது.

''ஆகவே, எஞ்சியுள்ள கொஞ்ச நேரத்தையாவது நீங்கள் எதிரிகள் மீது வஞ்சம் தீர்க்க ஏன் பயன்படுத்தக் கூடாது?

''என்னருமைச் சகோதரர்களே! எழுங்கள், செயல்படுங்கள், நமது விடுதலைக்காகப் போராடி இறப்போம். படைகளை வெற்றி கொள்ளும் பகைவனின் அடிமைச் சங்கிலி நம்மைப் பிணைக்காமல் பூமித்தாய் தனது அரவணைப்பில் நம்மை அணைத்துக் கொள்வாள்.

''மற்றுமொன்று, தன்னுடைய 'ஜனாஸா' வை மூட ஒரு 'கப்ரு'வை விரும்புபவன், அதை வானம் வளைத்துக் கொள்வதை விரும்ப மாட்டான்''

கூறி முடிந்ததும் சற்றே மவுனமாக நின்றார், மூஸா. மற்றவர்களிடமிருந்து எவ்வித பதிலும் வரவில்லை.

அவையினர் அனைவருமே ஆடாது அசையாது அமர்ந்திருந்தனர்.

‘இதுவரை போராடி என்ன பயன்! எதிரியின் நிலை இம்மியும் ஓயவில்லையே! சமபலம் இல்லாத போது மேலும் போராடினால்----?-

அவ்வெண்ணம் ஓடிய நிலையில் அவர்களின் மனக் கண்முன்னே....

தெருத் தெருவாகச் சண்டை நடக்கிறது.ஒருவருக்கொருவர் தனித் தனியாக எதிர்த்துப் பொருதும் சண்டைகள்! நெருப்பின் செந்நாக்குகளின் ஜுவாலை! தீ பரவுகிறது! கர்னாதாவின் அரண் மனைகள், மாட மாளிகைகள், கூட கோபுரங்கள், அழகிய நீருற்றுகள், கலை, கட்டடக் கலை, சாதனைகள் எல்லாம் அழிவதை...

அதற்கு மேல் அவர்களால் எண்ணிப் பார்க்க முடியவில்லை.

வட ஆப்பிரிக்காவில் ஆட்சி புரிந்து வந்த முஸ்லிம் மன்னரிகளிடம் அடுத்தடுத்து தூதர்கள் அனுப்பியும் அதுவரை எந்த பயனுமில்லை. மற்றொரு ஜல்லாக்காவிற்கு வழியுமில்லை.

முன்னர் ஜபல் அல்புர்த் வரை பரந்து விரிந்திருந்தது முஸ்லிம் அரசு, கொஞ்சம் கொஞ்சமாக அது சிதறிச் சுருங்கி இப்போது கர்னாதா கோட்டை அளவுக்குக் குறுகி நின்றது.

நம்மால் இயன்ற அளவு நகரைத் தற்காத்து நிற்க நாம் முயல வில்லையா? அதனால் துன்பங்கள், துயரங்கள் தானே நாளுக்கு நாள் பெருகி வந்தன. நம்மிடம் மிஞ்சியுள்ள உணவுப் பொருள்களோ கொஞ்சம். ஆனால் அவற்றிற்காகத் துடிக்கும் வயிறுகளும் வாய்களும்...அதிகம், மிக அதிகம்!

சிந்தனைச் சுழலில் உள்ளங்கள் சிக்க, அவர்கள் நாக்குகள் ஆடவில்லை!

அதே நேரம் மூஸா அபில் கஸ்ஸான்....

சுதந்தரமே அவர் மூச்சாக இருந்தது.

தீரமிக்க வீரராக- திறமையான ஆளுநராக- சிறப்பான வெற்றி நாயகராக அவர் கடமையாற்றி வந்திருக்கிறார்.

இப்போது தம்முடைய இனத்தவரின் பெருமையைக் காப்பாற்ற ஏதாவது செய்தாக வேண்டுமென்றே அவருடைய இதயம் துடித்தது.

அத்தாணி மண்டபத்தில் வீற்றிருந்த சுல்தானின்- மந்திரி பிரதானிகளின் வெளிறிய முகங்களை, சுடர் குன்றிய கண்களை நோட்டமிட்டார், அவர்.

ஆனால் அவருடைய பேச்சை ஆதரிப்பதற்காக அறிகுறி ஏதும் தெரியவில்லை.

''இறைவன் மீது ஆணையாக! நான் ஒரு போதும் அடிமையாக வாழ மாட்டேன். கண்ணியமாக இறப்பேன்''- அவையில் நிலவிய நிசப்தத்தினூடே தளபதி மூஸாவின் சூளுரை துள்ளி வந்தது.

வேதனை கவ்விய சோகப் போர்வையை அவர் சுல்தான் போ அப்தினின் மீது படர விட்டார். மந்திரி பிரதானிகள் மீதும் படர விட்டார்; படையதிகாரிகள் மீதும் படரவிட்டார்; அவ்வாறு அனைவரையும் சற்றே பார்த்து நின்றார்.

'இனி நாம் பேசுவதற்கு என்ன இருக்கிறது?''

''உங்களிடமிருந்து விடை பெறுகிறேன்'' என்று அவர் கண்கள் கூறுவது போலிருந்த நிலையில் சற்றே பின் வாங்கினார், மூஸா.

பிறகு தமது உடலைத் திருப்பியவராக, மெதுவாகத் தட்டுத் தடுமாறும் எட்டுக்களுடன் நடந்தார்.

தர்பார் மண்டபத்தை விட்டு வெளியேறிய அவர் சிங்க மண்டபத்தின் முற்ற வெளியைத் தாண்டி அல்ஹம்ராவின் வெளி மண்டபங்களைக் கடந்து சென்றார்.

வழியில் தம்மிடம் பணிவு காட்டி நின்ற அரண்மனை ஊழியர்கள் எவரிடமும் எதுவுமே பேசவில்லை.

அந்நிலையில் அவர் உள்ளம் சோர்ந்தவராக தமதில்லம் சென்றடைந்தார்.

16. என்னருமை உந்தலூஸ்!

மேற்கு வானிலே வெய்யவன் சாய்ந்து கொண்டிருந்த நேரம்.

போருடை தரித்துக் கொண்டார் மூஸா அபில் கஸ்ஸான்.

''சென்று வருகிறேன்! உங்களுக்கு இறைவன் போதுமானவன்'' என்றவராகத் தமது வீட்டினரிடம் விடைபெற்றார்.

விம்மலுக்கும் விசும்பலுக்கும் இடையே அவருடைய மனைவி, மக்கள் ஆதங்கத்துடன் அவரை நோக்கினர்.

கர்மவீரரான அவர் உள்ளத்து உணர்ச்சிகளைக் கொஞ்சமும் வெளிக் காட்டாது. மௌனமாக அங்கிருந்து நடந்து சென்றார்.

வெளியே அவரது வீரப் புரவி சித்தமாக நின்றது. தமக்குப் பிரியமான அக்குதிரையின் மீது அவர் தாவி ஏறினார்.

தலையில் அணிந்திருந்த இரும்புச் சீராவின் மூடியை கீழிறக்கி தமது முகத்தை மறைத்துக் கொண்டார்.

அதன் பின்னால் இடைவெளிகளினூடே பார்வையச் செலுத்தியவராகத் தமது இருக்கையைச் சரி செய்து கொண்டார்.

சேண முகப்பிலே நீண்ட வாள் தொங்கிக் கொண்டிருந்தது. அவர் வலது கரத்திலே நெடிய வேல் இருந்தது.

அவ்வீரரைப் போலவே அவரது புரவியின் உடம்பையும் இரும்புக் கம்பிகளாலான வலையொன்று போர்த்தியிருந்தது.

லகானை லேசாகச் சுண்டியிழுக்க, புரவி ஓடலாயிற்று.

சற்றைப் பொழுதில் மூஸா அபில் கஸ்ஸான் இல்பீரா வாயில் வழியாகச் செங்கோட்டையிலிருந்து வெளியேறினார்.

அங்கு வடிகளினால் தமது புரவியின் விலாக்களிலே இடித்தார். லகானையும் சற்று இழுத்துப் பிடித்தார்.

மலைப்பாதை வழியாக மரஞ் செடிகளினூடே விரைந்தோடியது. தனது எசமானரின் குறிப்பறிந்த பரி.

விரைவிலே கர்னாதா நகரிலிருந்து வெளியேறினார். மூஸா.

'டக்! டக்! டக்! டக்! குதிரைக் குளம்பொலிகள் நிலப்பரப்பிலே பட்டுத் தாளம் போடுவது போல ஒலி எழுப்பின.

அவற்றின் லயத்துக்கேற்ப அப்புரவியின் மீது சவாரி செய்து கொண்டிருந்த மூஸாவின் நெஞ்சத் தளத்தில் நினைவுகள் முட்டி மோதின...

என்னருமை உந்தலூஸே!

எத்தனையெத்தனை வீரர்கள் செங்குருதி சிந்தி -எத்தனை எத்தனை உழைப்பாளிகள் வியர்வையைப் பாய்ச்சி உன்னை மாட்சியுறச் செய்தனர்!

உன்னை ஆண்ட மன்னர்களில் எத்தனையெத்தனை வீர புருஷர்கள் போரிலே வெற்றி கண்டு வரலாறு படைத்தனர்- எத்தனையெத்தனை சிற்பிகள் நாட்டிலே அமைதி தழைக்கச் செய்து வரலாறு கண்டனர்!

என்னருமை உந்தலூஸ்!

பேரரசாகப் பெருகிப் படர்ந்த நீ காலப்போக்கிலே பல குறுநில ஆட்சிகளாகப் பிரிந்து, அதன் சிற்றரசர்கள் வேறுபட்டு ஒருவருக்கொருவர் உட்பகை கொண்டு சண்டையிட்டுக் கொண்ட நிலையிலும் கூட ஒரே ஒரு விஷயத்தில் மட்டும் அவர்கள் ஒன்று பட்டு நின்றனரே!

ஆம், அவர்கள் அனைவருமே கல்வி, கலை, பொது நிர்மாணம் ஆகியவற்றின் புரவலர்களாக இருந்தனர்.

அதனால்-

இலக்கியம், வரலாறு, புவியியல், தத்துவம், வான சாஸ்திரம், மருத்துவம், கணிதம், விஞ்ஞானம்- எல்லாமே வளர்ந்து தழைத்தன.

விஞ்ஞானம்! இப்னு பிரினாஸ் கீழைநாட்டு இசைச் செல்வத்தை மட்டுமா உன்னிடம் கொண்டு வந்தார்?

விஞ்ஞானத் துறையில் தாம் பெற்ற திறனால் விண்ணிலே பறக்க முயன்றார். சிறகு விரித்து ஆகாயத்தில் திரியும் பறவைகளைப் போல! ஆம், இறகுகளால் அமைந்த உடைகளை அணிந்து, இரு கரங்களிலும் செயற்கை இறகுகளைக் கட்டிக் கொண்டு குன்றின் உச்சியிலிருந்து தாவி வெகுதூரம் சென்ற அதிசய சம்பவத்தை உன் வரலாறு என்றறென்றும் கூறுமே!

உன்னை ஆண்ட மன்னர்கள் ஆதரித்த முஸ்லிம் விஞ்ஞானிகள் தான் என்னென்ன புதியன புரிந்தனர்! என்னென்ன விந்தையான கருவிகளைக் கண்டு பிடித்தனர்!

பள்ளிவாயில் மினாராக்களிலிருந்து இசையுடன் மணி யடிக்கும் கடியாரங்கள் -வெயிலில் நேரங்காட்டும் கடியாரங்கள்- திசையறியும் கருவிகள்- பூமியையும் வான மண்டலத்தையும் விளக்கமாகக் காட்டும் தாமிரக் கோளங்கள்- நீரிலும் நிலத்திலும் திசையறியும் கருவிகள்- இன்னும் எத்தனை விதமான கண்டு பிடிப்புகள்!

மேலும்-

'மர்ஸுலா' வை கண்டுபிடித்த அப்துல் ரஹ்மான்,. சூரியனில் சிறு சிறு கரும்புள்ளிகளைக் கண்டுபி டித்த ஹக்கீம் அபுல் வலீத் முஹம்மத் குஷ்த் போன்ற எத்தன னயெத்தனையோ மேதைகள் உனக்கு சிறப்புத் தேடித் தந்தனரே!

அது மட்டுமா?

அறிவு மேதைகள் அபுல் வலீத் அஹ்மத் போன்ற அற்புதக் கவிஞர்கள், வீரத் திலகங்களின் பிறப்பிடமாக- வளர்ப்பிடமாக அன்றோ, என்னருமை உந்தலூஸ்! நீ இருந்து வந்திருக்கிறாய்!

உன் உதிரத்தில் உதித்தப் பெண்களிலும் கூட பலர் இலக்கியத்தில் சிறப்புப் பெற்றிருந்தனரே! ஜைனப், நஸ்ஜூன், மரியா போன்ற இலக்கியக் கர்த்தாக்கள் என்ன, அஷ்ஷரீபா என்ற சிறப்பித்துக் கூறப்பட்ட–நபிகளாரின் வழி வந்த அம்மத்துல் அஜீஸ், அல்வல்லதா, ஹஸ்ஸானா அல்தமீமியா, உம்முல் ஊலா போன்ற கவிஞர்களும் கூட உனது பெண் குலத்தின் தோன்றல்கள் தானே?

என்னருமை உந்தலூஸ்! 'மார்க்கத்தின் நா'வான தாரிக் தவ்லத்துன் நஸ்ரிக்யாவை இயற்றிய இப்னு கதீப்-அவர் காலத்தில் இஷ்பீலியாவிலிருந்து கர்னாதா வந்து பெத்ரூ அஷ்புன்ஷாவின் தர்பாருக்குத் தூதுவராகச் சென்ற இப்னு கல்தூன் போன்ற- எத்தனையோ வரலாற்று வல்லுநர்களை நீ கண்டிருக்கிறாய்!

என்னருமை உந்தலூஸ்! இப்னு மாஜா-இப்னு ஜுஹா- இப்னு ருஷ்த்- இப்னு துஃபயல் போன்ற மருத்துவ - தத்துவ மேதைகளை - அல்ஜஹ்ரவீ போன்ற அறுவை மருத்துவ வல்லுநர்களை நீ தோற்றுவிக்கவில்லையா?

குர்துபா, இஷ்பீலியா, துலைத்துலா, ஜய்யான், மாலகா, ஆகிய அறிவுப் பீடங்களை நீ பெற்றிருக்க வில்லையா? அந்நகர் களிலிருந்த கல்லூரிகளுக்குத் தானே இத்தாலி, ஜெர்மனி, இங்கிலாந்து. ஏன் ஐரோப்பா முழுவதிலிருந்துமே மாணவர்கள் கணிதம், வான நூல், தாவர நூல், வரலாறு, தத்துவம், நீதி நூல்களைக் கற்க வந்து சென்றனர்?

அக்கல்லூரிகள் பல்கலைக் கழகங்களின் கல்வித்தரம்தான் என்னே? குர்தூபா பல்கலைக் கழகத்தில் பயின்ற இப்னு குதைப் கர்தபீ மருத்துவம், தாவர இயல் துறைகளில் ஆயிரத்து நூறு நூல்கள் எழுதினார் என்பதை இன்று எண்ணிப் பார்த்தாலும எவ்வளவு வியப்பாக இருக்கிறது? அவர் சிந்தனை மிக்க விந்தை மனிதராகத் தானிருக்க வேண்டும்!

அவரளவு இல்லாவிட்டாலும் அங்கு கல்வி கற்ற அலீ அல்பேதரும் தாவர இயலில் ஒரு தலை சிறந்த பேரறிஞர்தான்!

முஸ்லிம்களின் பரம வைரியான பரங்கிய மன்னர் சார்லமான்! அவருங் கூட அந்த கல்லூரிகளில் ஒன்றிற்குத் தானே தமது மைந்தரை கல்வி பெற அனுப்பி வைத்தார்!

அவரென்ன! குர்தூபாவிலே பயின்ற ஆயிரக்கணக்கான மாணவர்களில் ஒருவர் கிறிஸ்துவ உலகின் சமயப் பெருந்தலை வரான ரோமாபுரி போப்பாக உயர்வு பெறவில்லையா?

குர்தூபாவில் மட்டும் நூற்றெழுபது புகழ்பெற்ற அறிவு மேதைகள் தோன்றி மறைந்தனர். அவர்கள், தீர்க்கமான- சிறப்பு மிக்க தத்துவ உண்மைகளைத் தந்தனர். மார்க்கத்தையும், விஞ்ஞானத்தையும் -நன்நம்பிக்கையும் (ஈமான்) பகுத்தறிவையும் (அக்ல்) இணங்கி இயையும்படிச் செய்தனர். அதனால் விஞ்ஞானம் கிறிஸ்துவ மதத்தின் எதிரி என்று போதித்து வந்த பாதிரிமார்களின் பிடியிலிருந்து ஐரோப்பாவையே விடுவிக்க முடிந்தது. அங்கே இருண்ட காலம் முடிந்து, பகுத்தறிவு யுகம் பிறந்தது, பல்வேறு துறைகளில் புலமைக்கு ஆக்கம் பிறந்தது.

என் தாயகமான கர்னாதா மட்டும் என்ன? ஒரு காலத்தில் இங்கே மட்டும் இருநூற்றைம்பது தொடக்கப் பள்ளிகள்- பதினேழு கல்லூரிகள் - எழுபது பொது நூலகங்கள் இருக்கவில்லையா?

கர்னாதா பல்கலைக் கழகத்தை மட்டும் நூற்றிருபது நூலாசிரியர்கள் மார்க்க மேதைகள், வரலாற்றாசிரியர்கள், தத்துவ வாதிகள், விஞ்ஞானிகள். மெய்ஞ்ஞானி (ஸூஃபி)கள் அவ்வப்போது அணி செய்து வந்திருக்கின்றனரே!

அவர்களில் ஒருவரான பல்கலை வல்லுநர் இப்னு அரபி எழுதியவை, ஒரு சிலவா? ஏறத்தாழ முந்நூறு நூல்கள்!

என்னருமை உந்தலூஸ்! ஆண்டாண்டு காலமாகத் தரிசாகக் கிடந்த உன்னை அலைகடலுக்கப்பால் இருந்து வந்த எங்கள் மூதாதையர்கள் தானே வளங் கொழிக்கும் நிலமாக மாற்றினர்?

'விவசாயத்தையே விஞ்ஞான முறையில் அன்றோ அவர்கள் மாற்றியமைத்தனர்? மண்ணுக்கு ஏற்ற, மண்ணின் இயல்புக்கும் வளத்துக்கும் ஏற்ற பயிர்கள் சாகுபடி-மரங்கள் தொழில்களை எவ்வாறு வளர்த்தனர்: பெருக்கினர் என்பதை நினைக்கும் போது...உள்ளம் பெருமையால் பூரிக்கிறது. புல்லரிக்கிறது!

அவர்கள் புதிதாக துவக்கி வைத்த நெசவுத் தொழிலில்தான் எத்தனைப் பிரிவுகள்! பட்டு, பருததி, கம்பளம் ஆகியவற்றில் எல்லாம் எவ்வளவு நேர்த்தியான நெசவுகள்! கைத்தறி தொழில் களுக்கு குர்துபா முதலிடம் வகித்தது. அடுத்து, அல்மரிய்யாவில் மட்டும் ஏறத்தாழ ஐநூறு கைத்தறிகள் இயங்கி வந்தன. அவற்றி லிருந்து உற்பத்தியான துணிவகைகள்தான் எத்தனை! பூக்கள், வட்டங்கள், சதுரங்கள், முக்கோணங்கள், நீள சதுரங்கள், பற்பல வண்ணங்களில் தீட்டப்பட்ட பட்டாடைகளுக்குத் தான் எவ்வளவு 'மவ்ஸ். மாதா கோவில்களும் பிரபுக்களும் மன்னர்களும் அல்லவா அவற்றைப் பிரியமுடன் வாங்கினர்!

துலைத்துலா, இஷ்பீலியா பல வகை உலோகங்களில் பற்பல பொருள்கள் செய்வதில் தலைசிறந்து விளங்கின. அங்கே உற்பத்தி யான கத்திகளும் வாட்களும் உலகச் சந்தைகளில் பிரசித்தி பெற்றிருந்தன.

குர்துபாவிலே பொன்னிலும் வெள்ளியிலும் எழில் கூடிய டப்பிகள், பெட்டகங்கள் தட்டுகள் செய்யப்பட்டு வந்தன.

மற்றும் சில இடங்களில் பல வண்ணங்களில் பள பளப்பான பீங்கான் பாத்திரங்கள், கூரை வேய மெருகிட்ட பீங்கான் ஓடுகள் தயாரிக்கப்பட்டு வந்தன.

தோலைப் பதனிட்டு மெருகிடும் கைவினையில் தான் எனது முந்தையர் எத்துணை தேர்ச்சி பெற்றிருந்தனர்! தோல்களில் எழுத்துக்கள் மேடாக வரும்படி செய்து முனைப்பியலாகச் செதுக்கி அமைப்பதில் தான் அவர்களுக்கு எவ்வளவு திறமை இருந்தது!

அதே போல சர்க்கரை, காகிதம் உற்பத்தி செய்வதை உந்தலூஸே! உன்னிடை எனது மூதாதையர்கள் தானே கண்டுபிடித்து முதல் முதல் புகுத்தினர்!

அவர்களின் தொழில் உணர்வும் கலையார்வமும் அத்துடன் நிற்கவில்லையே!

வண்ணங்களுக்காகப் பூச்சிகளை உலர்த்தினர். பாதரசம், தங்கம், வெள்ளி, செம்பு, தேனிரும்பு, உருக்கு, ஜைத்தூன் எண்ணை, பட்டு, கம்பளத் தயாரிப்புகள், அம்பர், சாம்பிராணி, வாசனைப் பிசின்கள், காந்தக் கல், அப்ரகம், பாறைப் பளிங்கு, சர்க்கரை, கந்தகம், குங்குமம், இஞ்சி, மருந்துப் பொருட்கள், பவளம், முத்துக்கள், சிகப்பு, நீலம் மற்றும் இரத்தினங்களைத் திரட்டியோ உற்பத்தி செய்தோ ஏற்றுமதி செய்து வந்தனர் எனது முந்தையர்.

வெளிநாட்டு வணிகத்தில் காசோலைகள், பணவுத்தரவு சீட்டுகளை அவர்கள் தானே முதல் முதல் அறிமுகப்படுத்தினர்!

என்னருமை உந்தலூஸ்! ஐரோப்பா முழுவதும் பண்ட மாற்று தலைக் கொண்டே வணிகம் நடந்து வந்தபோது அல்ஹம்ராவைக் கட்டிய முஹம்மத் காலிப் பில்லாஹ் ஆட்சியில் தானே முதல் முதல் நாணயங்கள் அச்சடிக்கப்பட்டன!

எனதன்பு நாடே! நீ எந்தத் துறையில் தான் தன்னிரகற்று இருக்கவில்லை? சிற்பம் என்ன -ஓவியம் என்ன அப்பப்பா! உன் மண்ணில் எழுப்பிய ஒவ்வொரு கட்டடமும் மாளிகையும் அரண்மனையும் அவற்றிற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்து விட்டனவே!

என்னருமை உந்தலூஸ்! உன் சமூக வாழ்வு தான் எவ்வளவு சீரும் சிறப்பும் மிக்கது! வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலுமே மாதர்கள் ஆண்களுடன் சரிசமமாகப் பங்கேற்க வில்லையா!

விளையாட்டுப் போட்டிகள், விழாக்கள், கொண்டாட்டங் கள், மற்ற பொது நிகழ்ச்சிகளில் பெண்டிர்கள் பார்வையாளர் களாகப் பங்கேற்று அவற்றிற்கெல்லாம் உயிர்ப்பளித்து வந்தனரே!

ஏழை பணக்காரர் என்ற பாகுபாடில்லை. எலலோருக்குமே சமநீதி! அதனால் எளிய குடும்பத்தில் பிறந்தவர்களும், தாழ்நிலையில் வாழ்வைத் துவங்கியவர்களும் கூட உன்னத நிலையை -பதவியை அடைய வழியிருந்தது.

இனி....

என்னருமை உந்தலூஸ்! உன் பெருமைக்காக -சிறப்புக்காக-வரலாற்றில் நீ பெற்றுவிட்ட மாட்சிக்காக- மாண்புக்காக நான் தனியாகவாவது, உன்னை அழித்துவிடத் துடித்து நிற்கும் எதிரிகளிடையே பாய்வேன், அவர்களை நிலைகுலையச் செய்ய என்னால் முடிந்த வரை முயல்வேன். அல்லது...

சிஞ்ஜீல் நதியோரம் வந்துவிட்டார் மூஸா.

அவருள்ளத்திலே உந்தலூஸின் மாட்சி பற்றிய எண்ணக் கலவை! அம்மாட்சியின் சின்னமாக நின்ற அல்ஹம்ரா அரண்மனை மதில்களின் நீலம், சிவப்பு, பொன்னிறம் போன்ற பன்னிற வண்ணக் கலவை, மேற்கு வானத்திலே!

சற்றைப் பொழுதிலே அக்காட்சி மறைந்து, அந்தி மயங்கிக் கொண்டிருந்தது. அந்த நேரத்திலே மெல்ல மெல்ல மங்கி வந்த ஒளியில் நிழலுருவமாக நடந்து கொண்டிருந்தார். கர்னாதாவின் வீரத் தளபதி!

''அதோ!...''

அவரை கிறிஸ்துவ வீரன் ஒருவன் கவனித்து விட்டான்.

உடனே அவனும் அவனுடனிருந்த பதினான்கு வீரர்களும் மூஸா வந்து கொண்டிருந்த திசையை நோக்கித் தங்கள் புரவிகளைத் தட்டிவிட்டனர்.

''நில்! நீ யார்?''-

எதிரி வீரன் ஒருவன் மூஸாவை அதட்டிக் கேட்டான்.

அவரிடமிருந்து எவ்வித பதிலுமில்லை. சடாரென அவர்களிடையே பாய்ந்தார் மூஸா.

தமது ஈட்டியை உயரே தூக்கினார். சடுதியில் அதைத் தம்மைத் தடுத்து நின்ற கிறிஸ்துவ வீரர்களில் ஒருவனை நோக்கி வேகமாக

நீட்டினார். அதன் தாக்குதலைச் சமாளிக்கத் தனது கேடயத்தை நீட்டினான் அவன். அந்தக் கேடயத்தின் மீது தமது ஈட்டியை பலங் கொண்ட மட்டும் அழுத்தி அவனை ஒரு நொடியில் சேணத்தி லிருந்து வீழ்த்தினார்.

அப்படியே சுற்றிச் சுழன்ற நிலையில், தமது வாளை உருவியோங்கி மற்றவர்களைத் தாக்கலுற்றார்.

அவர்களும் தங்கள் வாட்களை அவரைக் குறி வைத்துச் சுழற்றிச் சுழற்றி வீசினர்.

அதனால் தமக்கு ஏற்பட்ட காயங்களைச் சற்றேனும் பொருட் படுத்தாமல் சண்டையிட்டார் மூஸா! எதிரி வீரர் சிலரின் வாள் வீச்சு அவரது கால்களிலும் கூட பலத்த வெட்டுக் காயங்களை உண்டு பண்ணின.

இருந்தும் அவர் நெஞ்சுறுதி தளராமல் தொடர்ந்து சண்டையிட்டுக் கொண்டிருந்தார்.

திடீரென எதிரியொருவன் ஈட்டி முனை மூஸாவின் குதிரையின் மேல் பாய்ந்தது. அது வேதனையில் நிலை தடுமாற மூஸா கீழே விழுந்தார்.

''சரி, இதோடு தப்பிச் செல்! பிழைத்துப் போ!''என்று அந்த கிறிஸ்துவ வீரர்கள் கூறினர்.

''ப்பூ!'' இவர்களிடமாவது, கருணை ஏற்பதாவது? மூஸாவின் உள்ளத்தில் எழுந்த வெறுப்புணர்ச்சி அவர் வெளிறிய முகத்தில் படர்ந்தது.

அவர் பட்டிருந்த காயங்களிலிருந்து இரத்தம் வெகுவாக வெளியேறி விட்டது. மிகவும் பலவீனம் மேலிட உடம்பெல்லாம் ஒரே சோர்வு. வேதனை, மயக்கம்!

இருந்தும், தம் மூச்சையெல்லாம் இறுக்கப் பிடித்தவராக மண்டியிட்டவாறு அவ்வெதிரிகளுடன் தன்னந்தனியாகச் சண்டையிட்டார். ஆயாசம் அதிகமாகி வந்த நிலையிலும் சண்டை யிட்டார். உடலிலிருந்த உயிர் பிரிந்து கொண்டிருந்த நிலையிலும் தம்முடைய அருமை உந்தலூஸின் பெருமை காக்கப் போரிட்டார்.

இறுதியில்-

பெரு முயற்சியுடன் எழுந்து நின்றார். ஒரே தாவிலே ஆற்றிலே குதித்தார்.

அவரணிந்திருந்த கனமான போருடைகளின் பலுவினால் நீரில் மூழ்கினார். நதிப்பரப்பிலே செந்நீர் திவலைகள். அடுத்து: சிற்றலைகளின் வட்டங்கள் படர்ந்தன.

அதைக் காணப் பொறாமல் அந்தி வானத்திலே கவலையிருள் பரப்புவது போல கதிரவன் மேலைக் கடலில் மூழ்கினான்.

அங்கே அல்ஹம்ராவிலே! கர்னாதாவின் தலைவிதி முடிவாகியது.

சரணாகதி பத்திரத்திலே சுல்தான் கையெழுத்திட்டார்.

அதனால் கர்னாதா மண்ணிலே பல்லாண்டுகளாக நடந்து வந்த பகை நடவடிக்கைகள் நின்றன.

சிஞ்ஜீல், தர்ரோஹ் ஆற்றங்கரைகளில் மீண்டும் முஸ்லிம்களும் கிறிஸ்துவர்களும் கலந்துரையாடலாயினர்.

இருந்தாலும்-

'இன்னும் அறுபது நாட்களுக்குள் ஆப்பிரிக்காவிலிருந்து உதவி வந்தால்?... கர்னாதா முஸ்லிம்கள் மீண்டும் தற்காப்பு நடவடிக்கைகள் எடுக்கக் கூடும்'-

அவ்வாறு எண்ணிய கிறிஸ்துவ அரசர் பெர்டினாண்டு எச்சரிக்கையாகவே இருக்க விரும்பினார். கர்னாதா மீது அவரது கண்காணிப்பு இருந்து வரலாயிற்று. அவரது கட்டளையால் உணவு முதலிய பொருள்கள் அந்நகருக்குள் நுழைவதற்கான வழிகள் தொடர்ந்து தடுக்கப்பட்டு நின்றன.

ஸ்பெயின் நாட்டுத் துறைமுகங்களில் எல்லாம் அவரது படைகள் நிறுத்தப்பட்டன. ஜபல் அல்தாரிக் ஜல சந்தியில் அவரது போர்க் கப்பல்கள் சதா 'ரோந்து' வந்து கொண்டிருந்தன. எகிப்து, பெர்பர் நாடுகளின் சுல்தான்களிடமிருந்து கர்னாதாவுக்கு எத்தகைய உதவியும் வராமல் கப்பல்கள் காத்து நின்றன.

ஒரு மாதத்துக்கு மேல் ஓடிவிட்டது. கர்னாதா கோட்டையை பீடித்திருந்த பஞ்சம் இன்னும் அதிகமாகியது. அங்கிருந்த முஸ்லிம்களுக்கு சாதகமாக எதுவுமே நிகழவில்லை.

அந்நிலையில் சரணாகதிக்குக் குறித்த நாள் வரை தாக்குப் பிடித்து நிற்பதென்றால், நகர மக்களின் தொல்லையும் துயரமும் அதிகரிக்கும் அன்றோ?

அரசவையைக் கூட்டி ஆலோசனை நடத்தினார். சுல்தான் போ அப்தில்.

அதன் விளைவாக அவர் தமது பிரதம அமைச்சர் யூசுஃப் கமிஷாவை அரசர் பெர்டினாண்டிடம் அனுப்பினார். சிறந்த வாளொன்றையும் மிக நேர்த்தியாக அலங்கரிக்கப்பட்ட இரண்டு அரபிப் புரவிகளையும் கிறிஸ்துவ மன்னருக்கு அன்பளிப்பாக அனுப்பி வைத்தார்.

மறுநாள்...

தர்வேஸ் அஹ்மது இப்னு ஸிராஜ் கர்னாதாவிலே தோன்றினார். எத்தனையோ முறைகள் வரும் பொருளுரைத்து அந்நகர் மக்களுக்கு உணர்வூட்டியிருக்கிறார்.

ஒரு சில காலமாக அவர் அல்புஷாராத்தின் குன்றுகளி னிடையேயோ பெர்பர் கரையோரங்களிலோ நடமாடித் திரிந்த வராக, கர்னாதாவின் நிவாரணத்துக்காக முஸ்லிம்களிடையே பிரச்சாரம் செய்து வந்தார்.

எலும்பும் தோலுமாக மெலிந்த உருவம். ஆனால் கண்களோ-மெத்த பிரகாசமாக இருந்தன! ஞானச் சுடரோ அது?

இப்போது அவர் தலைநகர் கர்னாதாவின் தெருக்களிலும் சதுக்கங்களிலும் நின்றவராக-

''கர்னாதா வாசிகளே! சரணடையாதீர்கள். உங்கள் மன்னவரும் சரி, மந்திரி பிரதானிகளும் சரி பெயரளவிலேயே முஸ்லிம்கள். உறுதியுடன் நில்லுங்கள்! இறுதியில் சிறப்பான வெற்றி உங்களுக்குக் கிடைக்கும். ஆகவே, நீங்கள் நன் நம்பிக்கைக் கொள்ளாதவர்களிடையே துணிந்து பாய்ந்து போரிடுங்கள்!'' என்று மக்களுக்கு நம்பிக்கையும் ஊக்கமும் ஊட்டிப் பேசினார்.

அதைக் கேட்டு உணர்வு பெற்றவர்களாக இருபதினாயிரம் பேர்களுக்கு மேலானவர்கள் ஆயுதம் ஏந்தியவர்களாக வீதிகளின் வழியே முழக்கமிட்டுச் சென்றனர்.

கடைகளும் வீடுகளும் மூடப் பட்டன.

அல்ஹம்ராவிலிருந்து சுல்தான் போ அப்தில் வெளிக் கிளம்பவில்லை. அரண்மனையிலே அடங்கியொதுங்கி இருந்தார்.

தர்வேஷ் அஹ்மதின் ஆவேசப் பேச்சுக்களால் கொந்தளித்து எழுந்த மக்கள் கூட்டத்தில் பகல் எல்லாம்- ஏன், இரவு வந்த பிறகும் கூட தெருக்களிலே போர் முழக்கம் செய்தவர்களாகச் சுற்றித் திரிந்தனர்.

பசி வருத்தமும் அலைந்து திரிந்ததால் ஏற்பட்ட சோர்வும் ஊதற்காற்றும் அவர்களது உணர்வின் வேகத்தை மெல்ல மெல்லத் தணியச் செய்து விட்டன.

பொழுது விடிந்தது!

''தர்வேஷ் அஹ்மத் எங்கே? ''- நகரின் பல பகுதிகளிலும் மக்களின் வாயிலிருந்த அந்தக் கேள்வி எழுந்த வண்ணமிருந்தது.

மன்னரின் ஆணைப்படியோ நகரப் பிரமுகர்களின் கையாட் களினாலோ அவர் கொலை செய்யப்பட்டிருக்க வேண்டும்'' என நகரவாசிகளில் ஒரு சாரார் வாய் வழியாக செய்தி பரப்பினர்.

அந்நிலையில், கனதனவான்கள் புடைசூழ, அல் ஹம்ராவிலிருந்து வெளிவந்தார், சுல்தான் போ அப்தில்.

மக்கள் கூட்டம் கூட்டமாக இருந்த இடங்களில் எல்லாம், சரணாகதி நிபந்தனைகளை ஏற்று நடக்க வேண்டிய அவசியம் பற்றி எடுத்துக் கூறினார்.

''மக்களே! நம்முள் பல பிரச்சனைகள் பூதாகரமாக எழுந்து நிற்கின்றன. நகரத்தைப் பஞ்சம் பிணியிலிருந்து காக்க வேண்டும். இனியும் கோட்டையை நாம் தற்காத்து நிற்பதில் பயனேதும் இல்லை. பகைவரிடம் பிணையாக இருந்து வரும் நம் அன்புக் குரியவர்களை விடுவிக்க வேண்டாமா? நன்றாகச் சிந்தித்துப் பாருங்கள்''என்றார்.

மேலும், உணர்ச்சி குன்றிய நிலையில் -உள்ளம் தளர்ந்த வாறாக அவர் கூறினார்.

''எமது தந்தையாருக்கு எதிராகக் கலகம் செய்து நாம் சிம்மாசனம் ஏறியது குற்றமே! அதுவே இவ்வரசின் மீது பல தொல்லைகளைக் கொண்டு வந்து விட்டது.

''என் பாவத்துக்கான தண்டனையை இறைவன் எமக்குத் தந்து விட்டான்!

''மக்களே! உங்களுடைய நன்மையைக் கருதியே கிறிஸ்துவ அரசரிடம் நாம் உடன்பாடு செய்துள்ளோம். பகைவரின் வாள் வீச்சிலிருந்து உங்களை- பட்டினியின் கொடுமையிலிருந்து உங்கள் குழந்தைகளை-மான பங்கத்திலிருந்து உங்கள் மனைவி மக்களைப் பாதுகாக்கவே இந்த உடன்பாட்டை ஏற்றுள்ளோம்.

உங்கள் சொத்துக்களையும் சுதந்தரங்களையும் மார்க்க உரிமைகளையும் நீங்கள் பத்திரமான முறையில் எம்மைவிட அதிர்ஷ்டமுள்ள ஒரு அரசாங்கத்தின் கீழ் நீங்கள் அனுபவிக்க வேண்டுமென்றே இவ்வுடன்பாட்டைச் செய்து கொண்டுள்ளோம்''

இவ்வளவு பணிவாக அவர் கூறியது மக்களின் உள்ளங்களைத் தொட்டு விட்டது.

''சரணாகதி நிபந்தனைகளின் படி நடப்போம்!'' என்று கூவினர்.

ஒரு சிலர், ''சுல்தான் போ அப்தில் அல்ஜுஃகைரபி (பரிதாபத்துக்குரிய மன்னர்) வாழ்க!''என்று கூறியவர்களாக அமைதியுடன் தங்கள் இல்லங்களுக்குத் திரும்பிச் சென்றனர்.

அடுத்து சுல்தான் போ அப்திலின் தூதுவர்கள் பெர்டினாண்டு அரசரிடம் விரைந்து சென்றனர். அவருக்குத் தலைநகர் கர்னாதாவில் நடந்தவற்றைத் தெரிவித்து இன்னும் சுணங்குவதால் குழப்பங்கள் தான் ஏற்படக் கூடும் என்று செய்தி அனுப்பினார். அல்ஜஹீர்.

அதன் பேரில் முதலில் குறித்த நாளுக்கு இரண்டொரு நாட்கள் முன்னதாகவே கர்னாதா கோட்டை கிறிஸ்துவர்களிடம் சரணடைவதென்று முடிவு செய்யப்பட்டது.

அந்த சரணாகதிச் சடங்கின் போது சுல்தான் போ அப்தில் நகரை வெற்றி கொண்ட கிறிஸ்துவ அரசர்- அரசியார் கரங்களை முத்தமிடுவதை அரசியார் ஆயிஷா விரும்பவில்லை.

''இந்த நிபந்தனை நீக்கப்படாவிட்டால், நகர் சரணடைவதைத் தடுக்க நாம் வழி காண்போம்'' என்று குலப் பெருமை மிக்க அந்த சுல்தானா அறிவித்தார்.

அவரது எதிர்ப்பு பிரதமர் யூசுஃபின் நிலைமையை தர்ம சங்கடத்திற்குள்ளாக்கியது.

சுல்தானா ஆயிஷாவின் மனப்பாங்கு அவருக்குத் தெரியும். சுல்தான் போ அப்தில் மீது அவருக்கிருந்த பிடிப்பையும் செல்வாக்கையும் அவர் நன்குணர்ந்திருந்தார்.

எனவே அவர் ஸந்தாபேயிலிருந்து தமது நண்பர் டென்டில்லா மகா பிரபுவுக்கு நிலைமையை விளக்கி மடல் அனுப்பினார். அதை அன்னவர் கிறிஸ்துவ அரச தம்பதிகளிடம் எடுத்துரைத்தார்.

ஸ்பானிய அரச மன்றம் கூடியது. அதிலே சுல்தான் ஆயிஷாவின் கோரிக்கை ஓரளவு ஏற்கப்பட்டது.

17. சென்று வருகிறேன்

பொழுது புலர இன்னும் வெகு நேரமிருந்தது.

அரண்மனைக் கருவூலங்களும் அரசு குடும்பத்தினரின் ஆடை ஆபரணங்களும் நிறைந்த பெட்டிகள் அவசரமாகக் கோவேறு கழுதைகள் மீது ஏற்றப்பட்டன.

ஆயிற்று. புரவி வீரர்கள் சூழ, மெல்லிய முகத்திரைகள் அணிந்த அரசிகளும், இளவரசர், இளவரசிகளும் அல்ஹம்ராவின் பின்புற வாயிலொன்றின் வழியாக வெளியேறினர்.

நகர வாசிகளில் ஏளனம் செய்வோர் கண்ணில் படாமல் எதிரியின் உற்சாகம் அதிகமாகி விடாமலிருக்கவும் அவர்கள் அவ்வாறு இரவின் இருள் மறைவில் புறப்பட்டுச் சென்றனர்.

சுல்தானா ஆயிஷா மவுனமாகச் சவாரி செய்து கொண்டு சென்றார். அவர் முகம் கவிந்திருந்த போதிலும் கம்பீரமாகவே தமது வாகனத்தில் அமர்ந்திருந்தார.

அரசி மர்யமும் மற்ற அரண்மனைப் பெண்டிர்களும் அல்ஹம்ராவின் அந்தப்புர மாளிகைகளைத் திரும்பி திரும்பிப் பார்த்து, அழுது புலம்பிக் கொண்டே சென்றனர்.

அரண்மனையின் கூட கோபுரங்கள் இருளினூடே மங்கலாகத் தோன்றின.

ஆனால் நிலவிலே....?

அவையெல்லாம் எவ்வளவு மாட்சிமையுடன் சோபித்து நின்றன. அல்ஹம்ராவின் ஒவ்வொரு முற்றத்திலும் மண்டபத்திலும் விண்மதி எத்துணை எழிலுடன் தண்ணொளி பரப்பியது! அரண் மனைகளைச் சுற்றியிருந்த தோட்டங்களில் நின்ற ஆரஞ்சு, நாரத்தை மரங்களின் உச்சிகளில் எல்லாம் ஒரே வெள்ளி முலாம். நீரூற்றுகளி லிருந்து சிதறி விழும் நீர்த் திரள்கள் மதியின் சுடரொளியில் மின்னின!

அதை நினைத்துப் பார்க்க அவர்களின் உள்ளங்களின் தாபம் ஏக்கப் பெருமூச்சுகளாக வெளிப்பட்டது.

ஆனால், விதியின் சதியால் இருண்டுவிட்ட அவர்கள் வாழ்வில் இனியும் நிலவொளி பாயுமோ?

அவ்வாறு எண்ண எண்ண அவர்களின் புலம்பல் அதிகமாயிற்று.

அரச குடும்பத்துக்காகத் தங்கள் உயிர்களையே தத்தம் செய்யத் சித்தமாகயிருந்த அரண்மனை ஊழியர்களும் அரசரின் விசுவாசமான வீரர்களும் சுல்தான் போ அப்திலின் குடும்பத்தின ருடன் சென்றனர்.

நகரம் இன்னும் துயில் கொண்டிருந்தது.

சந்தடியற்றுக் கிடந்த தெருக்களின் வழியே அரச குடும்பத்தினர், புரவி வீரர்கள் வழி காட்டிச் செல்ல, கர்னாதா நகரின் தலைவாயிலை வந்தடைந்தனர்.

அங்கு காவல் புரிந்து கொண்டிருந்த வீரர்கள் அவர்களுக்கு வாயிலைத் திறந்து அரசியார்களும் இளவரசிகளும் இருந்த அவலக் கோலத்தைக் கண்டு கண்களில் நீர் வழிய நின்றனர்.

அல்ஹம்ராவிலிருந்து வந்தவர்கள் அங்கு அதிக நேரம் தாமதிக்கவில்லை

அல்புஷ்ாரத்தை நோக்கிச் செல்லும் பாட்டையில் சென்றனர்.

சற்றைப் பொழுதில் அவர்கள் ஒரு கிராமத்தை வந்தடைந் தனர். அங்கே அவர்கள் சுல்தான் போ அப்தில் வரும் வரை எதிர்பார்த்துக் காத்திருக்க வேண்டும்!

அவர்கள் அல்ஹம்ரா அரண்மனையிலிருந்து கிளம்பிய சோக நிகழ்ச்சி நடந்த அதே இரவு ஸந்தாஃபேயிலே...

கிறிஸ்தவர்கள் மறுநாள் விடிவதை ஆவலுடன் எதிர் நோக்கலாயினர்.

''நாளை கர்னாதா நம்மிடம் சரணடையப் போகிறது!'' என்ற செய்தி அந்நகரமெங்கும் பரவியது.

அங்கிருந்த படைகளின் வீரர்களுக்கு அவரவர்களின் கொடிகளின் கீழ் அதிகாலையிலே அணி திரளும்படி உத்திரவிடப்பட்டது.

பிரபுக்களும் அவர்களது பரிகாரர்களும் சந்தர்ப்பத்துக்கேற்ப நேர்த்தியான உடைகள் அணிந்து வரும்படி பணிக்கப்பட்டனர்.

அது மட்டுமல்ல.

சரணாகதி உடன்பாட்டில் ஒரு நிபந்தனை: கர்னாதா கோட்டையை வசப்படுத்தச் செல்லும் படைகள் அந்நகரினுள்ளே கடந்து செல்லாமல், கோட்டை மதில்களுக்கு வெளியே விசேஷமாக அமைக்கப்பட்ட பாதை வழியாக மலையேறி அல்ஹம்ராவுக்குச் செல்ல வேண்டும்!

கர்னாதா வாசிகளின் உள்ளத்துணர்ச்சிகளைக் கிளறாமல் இருக்கவும் அவர்களுக்கும் வெற்றி கண்ட கிறிஸ்துவர்களுக்கு மிடையே மோதல் ஏற்படாமலிருக்கவும் அந்நிபந்தனையை மீறாமலிருக்க கண்டிப்பான உத்தரவு பிறப்பித்தார், அரசர் பெர்டினாண்டு.

1492 -ஆம் ஆண்டு பிறந்த மூன்றாம் நாள்.

ஜால் ஷுலைரின் மணிமுடியின் மீது காலைக் கதிரவன் செவ்விளங் கதிர்கள் மெல்ல மெல்லப் பரவத் துவங்கின.

அப்போது அல்ஹம்ராவின் உயரமான கொத்தளங்களிலிருந்து மூன்று பீரங்கிகள் முழங்கின.

கோட்டை சரணுக்குச் சித்தமாகி விட்டது என்பதற்கான சமிக்ஞை அது!

ஸந்தாஃபேயிலிருந்து கிறிஸ்துவப் படைகள் வெளியேறி வேகா சமவெளியின் குறுக்கே முன்னேறிச் சென்றன.

அவற்றிற்குப் பின்னே, அரசர் ஃபெர்டினாண்டும், அரசியார் இஸபெல்லாவும் இளவரசர், இளவரசிகள், மத குருக்கள்,

பிரபுக்கள், சீமாட்டிகள் ஆகியோருடன் தேர்ந்த வீரர்கள் சூழ்ந்து வர, கர்னாதாவை நோக்கிப் புறப்பட்டுச் சென்றனர்.

தாங்கள் அமைத்த புதிய நகரிலிருந்து ஒன்றரைக் கல் தொலைவில் இருந்த அர்மில்லா கிராமத்தில் வந்து தங்கினர்.

அதற்கிடையில் ஸ்பெயின் நாட்டின் பிரதம மத குரு டான் பெட்ரோகான்! ஜலஸ், மூவாயிரம் காலாட் படையினர், புரவி வீரர்கள், தளபதி டான் பெடியர்ரஸ் மற்றும் பாதிரிமார்களும் முன்னணியாக சிஞ்ஜீல் ஆற்றைக் கடந்து, அல்ஹம்ரா கோட்டையைக் கிறிஸ்துவர்களின் வசப்படுத்தச் சென்றனர்.

விசேஷப் பாட்டை வழியே முன்னேறிய அவர்கள் செங்கோட்டையை நெருங்கி வர, அதன் வெளி மதிலொன்றின் புறவாயில் வழியாக சுல்தான் போ அப்தில் வெளியேறினார்.

அல்ஹம்ரா அரண்மனை நகரை கிறிஸ்துவர்களிடம் ஒப்படைக்கும் பொறுப்பைத் தமது வஜீர் யூசுஃப் கமீஷாவிடம் தந்து விட்டு, ஐம்பது வீரர்களுடன் அவர் புறப்பட்டு வந்திருந்தார். கிறிஸ்துவர்களின் பிரதம மத குருவான கார்டினல்டான் பெட்ரோவைச் சந்திக்கச் சென்றார்.

அவர் வருவதைக் கண்ட கார்டினால் தமது குதிரையிலிருந்து இறங்கி வந்தார்.

பிறகு சுல்தானும் அவரும் தனியே விலகிச் சென்றனர். ஏதேதோ மெதுவாகப் பேசிக் கொண்டனர்.

பிறகு-

''போம்..போம்! உம்முடைய வலிமை மிக்க அரசர், அரசியார் பெயரால் அந்தக் கோட்டையை வசப்படுத்திக் கொள்ளும்!'' என்று உரத்த குரலில் கூறினார், சுல்தான் போ அப்தில்.

அவர் அடைந்து விட்ட தோல்விக்கு ஆறுதல் கூறிய கார்டினல்டான் பெட்ரோ சுல்தானைப் பரிவுடன் நோக்கினார்!

''சுல்தான்! தாங்கள் விரும்புவதானால் எந்த நேரத்திலும் எங்கள் முகாமில் தங்கலாம். என்னுடைய கூடாரத்தை தாங்கள் தாராளமாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்'' என்றார்.

''ஸீனோர்! உமக்கு மெத்த நன்றி!''என்றவராக அந்த மதகுரு வந்த அந்த வழியாக மலைச்சரிவிலிறங்கியவராக வெளி வந்தடைந்த சுல்தான் போ அப்தில், அரசர் ஃபெர்டினாண்டையும் அரசியார் இஸபெல்லாவையும் சந்திக்கச் சென்றார்.

வழியெங்கும் எதிரிகள், விளைத்த நாசம், மரங்களும் கூட எரிந்து, கிளைகள் ஒடிந்து நின்றன.

பிரதம மதகுரு டான் பெட்ரோ, தம்முடன் வந்திருந்த மற்றவர்களுடன், யூசுஃப் கமீஷா திறந்து விட்ட வாயில் வழியாக அல்ஹம்ராவில் புகுந்தார்.

அவர் முன்னிலையில் முஸ்லிம் வீரர்கள் தத்தம் ஆயுதங்களைக் கொண்டு வந்து தளபதி டான் பெடியரஸ்ஸிடம் ஒப்படைத்தனர்.

அதன் பிறகு கிறிஸ்துவ வீரர்கள் செங்கோட்டையின் கொத்தளங்களையும் கோபுரங்களையும் தங்கள் வசப்படுத்திக் கொள்ள முனைந்தனர்.

அங்கே அர்மில்லாவிலிருந்து அல்ஹம்ராவின் கோபுரங்கள் மீது தங்கள் விழிகளைப் பதித்தவாறு இருந்தனர்.

நேரம் செல்லச் செல்ல அவர்கள் முகங்களிலே ஐயப்பாடு ரேகை எகிறியது.

ஏன் இன்னும் அவர்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த அந்த நிகழ்ச்சி நடைபெறவில்லை?

''ஒரு வேளை நகரில் குழப்பமோ?....எதிர்ப்போ!''-

திடீரென அவர்கள் கண்கள் மலர்ந்தன.

அதோ! நீர் மேல் மின்வெட்டினாற் போன்ற ஒளி, ஆம், அல்ஹம்ராவின் தலைமைக் காவல் கோபுரத்தின் உச்சியில் மாபெரும் வெண்சிலுவை உயர்ந்து நின்றது.

அதன் அருகிலே ஸெயிண்ட் ஜேம்ஸின் நீண்டு குறுகிய படை துவஜம் ஊன்றப்பட்டது. அடுத்து காஸ்தீலீய அரசின் கொடி ஏற்றப்பட்டது.

உடனே எக்காள முழக்கங்களுடன் தேர்ந்த புரவி வீரர்கள் புடைசூழ அரசர் ஃபெர்டினாண்டு அல்ஹம்ரா திசையில் முன்னேறிச் சென்றார்.

எதிர்த் திசையில் சிஞ்ஜீல் ஆற்றங்கரையோரம் ஒரு சிறு பள்ளி வாயில். அதனருகே சுல்தான் போ அப்தில் புரவி மீதேறி சிறு குழாமுடன் வருவது தெரிந்தது.

சற்றைப் பொழுதில் 'அல்ஜஹீர்' வெகு அண்மையில் வந்து விட்டார்.

தமது குதிரையிலிருந்து இறங்கு வதுபோல அவரது பாவனை இருந்தது.

அவ்வாறு செய்ய வேண்டாமெனத் தடுப்பது போல சைகை செய்தார். அரசர் ஃபெர்டினாண்டு.

காவி நிறப் புரவி மீது அவர் அமர்ந்திருந்தார்.

தம்மை வெற்றி கொண்டவரின் கரத்தைப் பிடிக்க முன் வந்தார்.

ஆனால் அதுவும் வேண்டாமென அரசர் ஃபெர்டினாண்டு முகக் குறியால் தடுத்து விட்டார்.

அதன் பேரில் அவரது வலது தோளைத் தொட்டு முத்தமிட்டார், சுல்தான் 'அல்ஜஹீர்' .

அடுத்து, தலைநகர் கர்னாதாவின் சாவிகளை, கிறிஸ்துவ மன்னரிடம் ஒப்படைக்க முன்வந்தார்.

''இவைதாம் ஸ்பெயினில் அரபியர் அமைத்த அரசின் சாவிகள், எங்களுடைய வெற்றியின் சின்னங்கள்- எங்கள் அரசு முழுவதும் இனி உங்களுடையதே! இறைவன் நாட்டப்படி நடப்பது நடந்தே தீரும். இதோ! இவற்றை ஏற்றுக் கொள்ளுங்கள்''என்றார்.

வெற்றிப் பெருமிதம் முகத்திலே தவழ அவரை நோக்கினார், அரசர் ஃபெர்டினாண்டு.

''எம்முடைய வாக்குறுதிகளின் மீது அவநம்பிக்கை வேண்டாம். போரிலே இழந்து விட்ட எமது நட்பை மீண்டும் பெற முடியாது என்று எண்ணி விடாதீர்!''என்று அவர் கூறினார்.

''இதோ, டெண்டில்லா பெரும் நிலப்பிரபு டான் இனிகோ லொபஸ்! இவரையே கர்னாதா நகரின் ஆளுநராக நாம் நியமித்துள்ளோம்'' என்றும் அவர் தெரிவித்தார்.

அதை அவர் டான் இனிகோ லொபஸிடம் தந்தவராகக் கூறினார். தானே தனது துகைவிரலொன்றிலிருந்து மணிகள் பதித்த மோதிரம் ஒன்றைக் கழற்றினார். சுல்தான் போ அப்தில். அதை அவர்டான் துனிகோ லொபஸிடம் தந்தவராகக் கூறினார்.

''இந்த முத்திரை மோதிரத்தைக் கொண்டுதான் நாம் கர்னாதாவை ஆண்டு வந்தோம். இப்போது இதைக் கொண்டே நீரும் இந்நகரை ஆளும்!''

அப்பால் தமது வீரர்களுடன் அர்மில்லா நோக்கி விரைந்தார் சுல்தான் போ அப்தில்

அங்கிருந்த அரசியார் இஸபெல்லாவுக்கு அரச விசுவாச மரியாதை செய்ய முன் வந்தார். அதை அவ்வரசியார் கண்ணிய மாகவே மறுத்து விட்டார். தம்மிடம் பிணையாக இருந்த கர்னாதா இளவரசரையும் சுல்தானிடம் ஒப்படைத்தார்.

மென்மையான உணர்ச்சிகள் கரை புரண்டோடிய தமது நெஞ்சத்தோடு தம் அருமை மைந்தரை இறுக அணைத்துக் கொண்டார் அவர்.

உடனே அவர் இளவரசரையும் அழைத்துக் கொண்டவராக தமக்கு முன்னே சென்று விட்ட அரச குடும்பத்தினர் தங்கியிருந்த கிராமத்தை விரைவிலேயே வந்தடைந்தார்.

பின்னர் அவர்கள் அனைவருமே அல் புஷாரத்தை நோக்கிச் சென்றனர்.

சோகத்தால் மவுனமாகிவிட்ட நிலையில் புரவி வீரர்கள் அவர்களைப் பின்தொடர்ந்து சென்றனர்.

வெற்றி கண்ட கிறிஸ்துவப் படையினர் எழுப்பிய மகிழ்ச்சி ஆரவாரமும் எக்களிப்பும் அவர்கள் இசைத்த பாடல்களும் காதில் விழ சுல்தான் போ அப்திலிடமிருந்து ஆழ்ந்த பெருமூச்சு வெளிப்பட்டது.

புர்ச்சனா வெளியில் தமக்கு வழங்கப்பட்டிருந்த மாளிகையை நோக்கி அவர் சென்று கொண்டிருந்தார்.

அல்ஹம்ராவிலிருந்து ஆறு கல் தொலைவில் அல் புஷாரத்தின் வெளிப்புறத்தில் இருந்த பாதுல் குன்றின் மீது வளைந்து வளைந்து ஏறி அதன் உச்சியை அடைந்த போது அவரும் அவருடன் சென்ற பரிவாரங்களும் வீரர்களும் சற்றே தாமதித்தனர்.

தங்கள் அருமை நகரைக் கடைசியாக ஒருமுறை பார்த்துக் கொள்ள விரும்பினர்.

ஆம், இன்னும் சிறிது அப்பால் சென்று விட்டால், நகரின் தோற்றம் அவர்களின் பார்வையிலிருந்தே மறைந்து விடும்!

அந்நகர் தான் இப்போது எத்துணை அழகாகத் தோன்றுகிறது. தூரம் வேறு அதற்கு மேலும் எழில் கூட்டி நின்றது. அதிலும் காலைக் கதிரவன் கதிர்கள் பட்டு கர்னாதாவின் ஒவ்வொரு கோபுரமும் மினாராவும் ஒளிமயமாகத் தோன்றின. செங்கோட்டையின் கொத்தளங்கள் பொன் மெருகுடன் காட்சியளித்தன. சிஞ்ஜீல் நதியோ மாபெரும் வெள்ளிப் பாம்பு போல நெளிந்து சென்று கொண்டிருக்க, வேகா சமவெளியின் பசுமை, பட்டொளி வீசிப் படர்ந்து கிடந்தது.

அவற்றையெல்லாம் பார்த்து நின்ற முஸ்லிம் வீரர்களுக்குச் சொல்லொண்ணாத வேதனை! அங்கே அந்த பொன்னகரில் தானே அவர்கள் தங்கள் காதற் கிழத்திகளுடன் இன்பமயமான இல்லறம் நடத்தி வந்தனர். வளமான வாழ்க்கையில் ஆனந்தமுடன் இருந்து வந்தனர்!

மற்றவர்களைப் போலவே, சுல்தான் போ அப்திலும் தம்முடைய புரவியை நிறுத்தியவராகப் பின்னே திரும்பினார். ஆழ்ந்த பெருமூச்சுடன் பாதுல் மலைகளுக்கு அப்பால் தமது பார்வையைச் செலுத்தினார்.

அப்போது இலேசாக பீரங்கி முழக்கம் கேட்டது. அவரது தலைநகர் முற்றிலும் கிறிஸ்துவர்களின் வசமாகி விட்ட தென்பதையே தெரிவித்தது. உந்தலூஸ் முஸ்லிம்களின் சிம்மாதனம் இறுதியாகி மற்றவர்களிடம் இழக்கப் பட்டு விட்டது!

''கர்னாதா, சென்று வருகிறேன்'' என்று பிரியா விடை பெற்றார். அவரையுமறியாமல் துக்கமேலிட கண்ணீர் வடித்தார். மெல்ல மெல்லப் புலம்பலுற்றார்.

அரசியார் ஆயிஷாவின் அழகிய முகத்திலே கோபத்தின் செம்மை படர்ந்தது.

''ஆண்மையுடன் தற்காத்து நிற்க முடியாத ஒன்றிற்காக இப்போது ஒரு பெண்ணைப் போல் அழுகிறாயே!'' என்று கேட்டார்.

''சிம்மாதனம் அல்லது சவக்குழி!'' என்று தமது மைந்தரிடம் அரசுரிமை மீது ஆர்வமுட்டி வந்தவராயிற்றே அவர்? தம்முடைய புதல்வர் நாடாள வேண்டுமென அவர் செய்த வந்த சூழ்ச்சிகள், செயல்படுத்திய திட்டங்களின் முடிவு அவ்வாறாகவா இருக்க வேண்டும்?

அருகில் நின்று கொண்டிருந்த வஜீர் யூசுஃப் தம்முடைய அரசருக்கு ஆறுதல் சொல்ல முனைந்தார்-

''துன்பங்களைத் திட சித்தமுடன் சகித்துக் கொள்ளுங்கள். வளமான சாதனைகளைப் போலவே, குறிப்பிடத் தக்கத் தோல்வி களும் கூட மனிதர்களைப் புகழ் பெறச் செய்து விடும். இதை தாங்கள் எண்ணிப் பாருங்கள்!''என்றார்.

ஆனால் சுல்தான் போ அப்திலின் மனம் நிம்மதியடை வதில்லை. அவர் தொடர்ந்து புலம்பினார். புலம்பி அழுதவாறு கூறினார்:

''என்னுடைய துன்பங்களைப் போல வேறெவருக்கும் ஏற்பட்டதில்லை!'

அதற்கிடையில் அங்கே அல்ஹம்ராவின் பிரதான வாயிலின் பெரிய வளைவின் கீழே பிரதம கார்டினால் டான் குடியெர்ரஸ் ஆகியோர் இப்னு கமீஷாவுடன் அரசர் ஃபெர்டினாண்டு, அரசியார் இஸபெல்லா இருவரின் வருகையை எதிர்ப்பார்த்து நின்றார்.

தம்மிடம் தரப்பட்ட சாவிகளை அரசர் ஃபெர்டினாண்டு அரசியார் இஸபெல்லாவிடம் தந்தார். அவர் அவற்றை இளவரசர் ஜுவானிடம் தந்தார். இளவரசர் அவற்றைத் தலைமை மத குருவிடம் தந்தார் அவரோ அவற்றை டெண்டில்லா நிலப்பிரபு விடம் கொடுத்தார்.

இப்போது அவர்தானே கர்னாதாவின் அல்சய்யித்- தலைவர், அதன் பிரதம தளபதி!

அந்நகருக்கு வெளியே அரச குடும்பத்தினர் அதிக நேரம் தாமதிக்க வில்லை. டான் குடியர்ரெஸ் தலைமையில் வலிமையான படையொன்றை நிறுத்திவிட்டு ஸந்தாஃபே திரும்பினர்.

கர்னாதா கோட்டை மதில்கள் மீது நெடுகிலும் கிறிஸ்துவ வீரர்கள் அணிந்திருந்த இரும்புத் தொப்பிகளும் அவர்கள் ஏந்தியிருந்த வேல்களும் வெய்யிலில் மின்னின. கிறிஸ்துவ அரசின் கொடிகளும் துவஜங்களும் காற்றில் அசைந்தாடிக் கொண்டிருந்தன.

1492 ஜனவரி 6-

பிரம்மாண்டமான இராணுவ அணிவகுப்புகளுடன் அரசர் ஃபெர்டினாண்டும் அரசியார் இஸபெல்லாவும் வெற்றியாளர்களாக முற்றிலும் தங்கள் வசமாகிவிட்ட கர்னாதா நகரினுள்ளே நுழைந்தனர்.

அடுத்து, இளவரசரும் இளவரசிகளும் சீமான் சீமாட்டிகளும் வரிசை வரிசையாகச் சென்றனர்.

அவர்களுக்குப் பின்னே ஈட்டி முனைகளில் கொடிகளை உயர்த்திப் பிடித்தவர்களாக -இராணுவ இசை முழங்கியவர்களாக கிறிஸ்துவ வீரர்கள் அணியணியாக வந்தனர்.

தலைநகரின் வீதிகளிலே அவர்கள் எல்லாரும் வெற்றிப் பெருமிதமுடன் பவனி வந்து கொண்டிருக்க, முஸ்லிம்கள் தங்கள் வீடுகளினுள்ளேயே இருந்தனர்.

கர்னாதாவின் பிரதம பள்ளி வாயில் இப்போது கிறிஸ்துவ தேவாலயமாக மாற்றியமைக்கப் பட்டிருந்தது.

அங்கே அந்த ஊர்வலம் வந்த சேர்ந்த போது, வெற்றி கீதம் எழுந்தது. அதிலே அரச பரிவாரத்தை சேர்ந்தவர்களும் புரவி வீரர்களும் குரல்களில் பெருமிதமும் வெற்றிக் களிப்பும் துள்ள இணைந்து பாடினர்.

அத்தேவாலயத்தில் கிறிஸ்துவ அரசர் பெற்ற வெற்றிக்கான மதச் சடங்குகள் நடந்து முடிந்த பிறகு, அரச தம்பதியரும் மற்றவர்களும் குன்றின் மீதேறி அல்ஹம்ரா நோக்கிச் சென்றனர்.

சற்றைப் பொழுதில் அதை வந்தடைந்த அவர்கள் நீதிவாயில் வழியே நுழைந்தனர்.

அவ்வழகிய நகரிலிருந்து வெளியேறிய சுல்தான் போ அப்தில் சில காலம் அந்தராக்ஸில் வசித்து வந்தார்.

உந்தலூஸில் அவர் தொடர்ந்து இருந்தால், தம்முடைய ஆட்சிக்கு ஆபத்து எனக் கருதிய அரசர் ஃபெர்டினாண்டு அந்நாட்டின் இறுதி முஸ்லிம் அரசரை ஆப்பிரிக்காவுக்கு நாடு கடத்தினார்.

அப்போது அபூ அப்துல்லாஹ் அல் ஜ-ரையி-பரிதாபத்துக் குரிய அரசர் போ அப்திலின் நினைவிலே அன்று தீரர் மூஸா கூறியது பளிச்சிட்டது-

''கிறிஸ்துவர்கள் தங்கள் வாக்குறுதியை நிறைவேற்றுவார்கள் என்று எண்ணி உங்களையே நீங்கள் ஏமாற்றிக் கொள்ளாதீர்கள்!''

'எவ்வளவு உண்மையான தூர நோக்குள்ள வார்த்தைகள்?''

அதை இப்போது எண்ணிப் பார்த்து மனமொடிந்த நிலையிலே தமது இறுதி நாட்களைக் கழித்து வந்தார். அவர் பெருமைப் பட்டுக் கொண்டது போல, அவரைத் துன்புறுத்திய தாரகைகள் இன்னும் மறைந்து விடவில்லை.' அந்தி வானம்' என்ற சிறப்புக்குரிய உந்தலூஸிலிருந்து மறைந்து விடட அவர் உண்மையிலேயே துர்பாக்கியவான் தான்!

18. அந்திக்குப் பின்....

மாலை மயங்கிய பிறகு கங்குல் படர்வது போல கர்னாதா வீழ்ச்சிக்குப் பிறகு உந்தலூஸ் முஸ்லிம்களைச் சோக இருள் சூழத் துவங்கியது.

கர்னாதாவின் சரணாகதியை ஏற்ற அரசர் ஃபெர்டினாண்டு அதற்கான நிபந்தனைகளை வெகு விரைவிலேயே மீற எண்ணி விட்டார்.

கிறிஸ்துவ மதத்தின் காவலர் என்று தம்மைக் கூறி வந்த அவர் எப்போதுமே தமது இரண்டகமான கொள்கையை மதப் போர்வை யிலே மறைத்துவிடுவார். எவரையும் ஏமாற்ற வேண்டுமானால், முதலில் அவர்களுக்குத் தாராளமாக வாக்குறுதி தருவது தான் வழக்கம்.

அதே போல, உந்தலூஸ் முஸ்லிம்கள் பால் அவர் நடக்க முனைந்ததில் என்ன வியப்பிருக்க முடியும்?

ஆறு ஆண்டுகள் சென்று அவர் மீண்டும் கர்னாதா வந்தார். துலைத்துலா, கர்னாதா நகர்களின் மதத் தலைவர்களுடன் தமது மந்திரிகளையும் கூட்டி, வெற்றி கொள்ளப்பட்ட முஸ்லிம்கள் விஷயத்தில் எவ்விதம் நடந்து கொள்வதென்று ஆலோசித்தார்.

அதன் விளைவாக, உந்தலூஸ் முஸ்லிம்கள் அவமானப் படுத்தப் படலாயினர். பலவாறான தொல்லைகளுக்கு அவர்கள் இலக்காயினர்.

இஸ்லாமிய மார்க்கத்தை முஸ்லிம்கள் அனுஷ்டித்து வருவதற்குத் தடை விதிக்கப்பட்டது.

பலவந்தமாக அவர்கள் கிறிஸ்துவ மார்க்கத்தில் சேர்க்கப் பட்டு வந்தனர்.

எண்பதாயிரம் அரபு நூல்கள் எரிக்கப்பட்டன.

கிறிஸ்துவர்கள் தங்களுக்கிழைத்து விட்ட நம்பிக்கை துரோகத்தை -அவர்கள் தங்களைப் பலவந்தமாக மத மாற்றம் செய்ய முனைந்து விட்டதை எதிர்த்து அல்பேய்ஸினிலிருந்த முஸ்லிம்கள் கலகம் செய்தனர். அல்புஷாரத்தில் முஸ்லிம்களுக்கும் கிறிஸ்துவர் களுக்கும் இடையே அடிக்கடி சண்டைகள் நடந்து வந்தன.

அந்தப் பகுதிகளுக்கு அரசர் ஃபெர்டினாண்டு நேரே சென்றார்!

இரண்டரை மாதங்களுக்குள் அங்குள்ள முஸ்லிம்கள் அனைவரும் ஞானஸ்நானம் பெற்று கிறிஸ்துவர்களாகிவிட வேண்டும் என்ற ஆணையின் படி பிரகடனம் செய்யப்பட்டது.

அவ்வாறு செய்யாதவர்களில் பதினான்கு வயதுக்கு மேற்பட்ட ஆண்களும் பெண்களும் நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டது.

அத்தகையோரும் கூட துருக்கி, மற்றும் ஸ்பெயினுடன் போர் செய்து கொண்டிருந்த நாடுகள் தவிர மற்ற தேசங்களுக்குத் தான் போகலாம். அதை மீறுபவர்களுக்கு மரண தண்டனையளிக்கப்படும் என்று பகிரங்கப்படுத்தப் பட்டது.

அதற்கு ஒரு சிலரே பணிந்தனர். பெரும்பாலோர் தங்களது புனித மார்க்கத்தைக் கைவிடுவதில்லை என்ற உறுதியுடன் அல் புஷாராத் மலைகளை நோக்கிச் சென்றனர். அங்கும் அவர்களை கிறிஸ்துவர்களின் அக்கிரமங்கள் தொடர்ந்து வந்தன.

ஒருமுறை முஸ்லிம் பெண்டிரும் பிள்ளைகளும் தஞ்சம் புகுந்திருந்த ஒரு பள்ளிவாயல் வெடி வைத்துத் தகர்க்கப்பட்டது.

இருந்தும், கிறிஸ்துவர்களைத் தீரமுடன் எதிர்த்துப் போராடிய முஸ்லிம்கள் ஜபல் பலன் சாவில் வெற்றி யடைந்தனர்.

அதன் பயனாக அப்பகுதியில் எஞ்சியிருந்த முஸ்லிம் குடும்பங்கள் மொரோக்கோ, துருக்கி, எகிப்து, ஆகிய நாடுகளுக்குச் செல்வதற்கு வாய்ப்பளிக்கப்பட்டது.

ஆனால் அவர்களின் சொத்துக்கள், அடிமைகள், ஆடு, மாடு, குதிரைகள் அரசினரால் பறிமுதல் செய்யப்பட்டன.

அப்படியும் ஸ்பெயினை விட்டு வெளியேறிச் செல்ல முடியாது பின் தங்கியவர்கள் வாள் முனையில் கிறிஸ்துவர்களாக்கப் பட்டனர். ஆனாலும் அந்தரங்கத்தில் அவர்கள் இஸ்லாத்தையே கடைபிடித்து வந்தனர். ஏக நாயகனாகிய அல்லாஹ்வை ஐவேளை 'ஒலு'ச் செய்து தொழுதனர். வெளிக்கு கிறிஸ்துவ முறைப்படி அவர்கள் திருமணம் செய்த போதிலும், வீடு திரும்பியதும் அவர்கள் இஸ்லாமிய சடங்குகளுடன் மீண்டும் 'நிக்காஹ்' செய்து கொண்டனர்.

கிறிஸ்துவர்களாக மத மாற்றம் செய்யப்பட்டவர்கள் மீண்டும் முஸ்லிம்களாகி விடாமல் கிறிஸ்துவ அரசு பெரிதும் கண்காணித்து வந்தது. அத்துமீறி நடப்பவர்கள் மீது மத விசாரணை நடத்தப்பட்டு, அவர்கள் உயிருடன் எரிக்கப்பட்டனர்.

கர்னாதா, குர்துபா, இஷ்பீலியா, ஆகிய நகரங்களில் நாள் தோறும் முஸ்லிம் ஆடவரையும் பெண்டிரையும் சின்னஞ்சிறு குழந்தைகளையும் கொழுந்து விட்டெரியும் செந்நாக்குகள் விழுங்கி வந்தன.

அவற்றிற்கெல்லாம் அஞ்சாது முஸ்லிம்களாகவே இருந்து வந்தவர்கள் ஒரு சிறு கத்தியை வைத்திருப்பதற்குக் கூட தடை

விதிக்கப்பட்டது. மேலும் பல வகைகளில் அவர்கள் சித்திரவதை செய்யப்பட்டுத் துன்பத்துக்குள்ளாக்கப் பட்டு வந்தனர்.

மெல்ல மெல்ல 'மூர்கள்' என்ற உந்தலூஸ் முஸ்லிம்கள் தாங்கள் பல நூற்றாண்டுகளாக மாட்சியுடன் ஆட்சி புரிந்து வந்த நாட்டிலேயே சிறுமையுற்ற அடிமைகளாக மாறி விட்ட பிறகும் கூட கிறிஸ்துவர்களுக்கு மனம் நிம்மதியடையவில்லை. அவர்களை யெல்லாம் இனம் தெரியாமலே பூண்டோடு அழித்து விட முயன்றனர்.

ஃபெர்டினாண்டுக்குப் பின் இரண்டாம் பிலிப் ஆட்சியில் கர்னாதா மத குருவின் கட்டளையை மேற்கொண்டு மதவெறி கொண்ட கிறிஸ்துவர்கள் முஸ்லிம்களைத் தங்களின் மார்க்கச் சம்பிரதாயங்களை-சடங்குகளை-பழக்க வழக்கங்களை- ஏன், தங்கள் இஸ்லாமியப் பெயர்களையுமே ஒரேயடியாகக் கைவிட்டு விடும்படி நிர்ப்பந்தம் செய்தனர். அந்த 'மூர்'கள் எல்லாம் ஸ்பானிய மொழி பேச வேண்டும். கிறிஸ்துவர்களின் வாழ்க்கை நடைமுறை களைப் பின்பற்ற வேண்டும் என்றும் அவர்கள் பலவந்தப் படுத்தி வந்தனர்.

அடுத்து வந்த அரசர்களின் கீழ் அல்புஷாரத்தில் கிராமங்கள், சமவெளிப் பிரதேசங்களில் வாழ்ந்து வந்த முஸ்லிம் ஆண்களும் பெண்களும், முதியவர்களும் சிறுவர்களும் படுகொலை செய்யப்பட்டனர். அதனால் எங்கும் பிணக்காடுகள்!

குகைகளில் போய் ஒளிந்த ஏழை எளியவர்கள் வெளியி லிருந்து மூட்டப்பட்ட புகையிலே மூச்சுத் திணறிச் சாகும்படி செய்யப்பட்டனர்.

அந்த நிலையில், ஐம்பதினாயிரம் முஸ்லிம்கள் தங்கள் பிழைப்புக்கு எவ்வித வழியுமின்றி ஆப்பிரிக்காவுக்குப் பலவந்தமாகக் கப்பல்களில் ஏற்றப்பட்டு அனுப்பப் பட்டனர்.

நாட்டின் உட்பிரதேசங்களில் வாழ்ந்த இரண்டு லட்சம் முஸ்லிம்கள் ஜபல் புர்த் மலைத் தொடருக்கப்பால் பிரான்சுக்கு வெளியேறிச் செல்லும் படி செய்யப்பட்டனர்.

அந்தப் பயணத்தின் சிரமங்கள், வழியில் அனுபவித்த கொடுமைகளிலிருந்து எஞ்சியவர்கள் அங்கிருந்து முஸ்லிம் நாடுகளில் குடியேறச் சென்றனர்.

கர்னாதா வீழ்ச்சியடைந்த பின்னர் சுமார் நூற்றி இருபது ஆண்டுகளில் ஏறத்தாழ முப்பது லட்சம் 'மூர்' கள் ஐபீரியத் தீபகற்பத்திலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

அவ்வாறு அந்த முஸ்லிம்கள் வெளியேறியதால் ஸ்பெயின் கண்ட பலன்?

பொன் முட்டையிட்ட வாத்தைக் கொன்ற கதைதான்!

மதவெறியிலே தவறான பாதையில் செலுத்தப்பட்ட ஸ்பானிய கிறிஸ்துவர்கள் தங்கள் செயல்களின் தன்மையை-அவற்றின் விளைவுகளை எண்ணிப் பார்க்கவில்லை. முஸ்லிம்களைத் துன்புறுத்தி- கொன்று குவித்து- எஞ்சியவர்களை வெளியேற்றியது எல்லாம் அவர்களுக்கு புதுமையாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது.

ஆனால் அதன் பிறகோ....அறிவும் புத்தி நுட்பமும் மிகுந்திருந்த நாட்டிலே மடமையும் அறியாமையும் பெருகியது. வளமும் வனப்பும் கூடியிருந்த ஸ்பெயின் மற்ற நாடுகளின் கணிப்பிலே தாழ்த்துவிடும் அளவுக்கு அங்கே நசிவும் இழிநிலையும் ஏற்பட்டு விட்டன.

அந்திக்குப் பின்னே முழுமதி பவனி வந்தது போக, அங்கே வெகு காலம் வரை அமாவாசை இருள் சூழ்ந்திருந்தது.

(முற்றும்)

'அந்தி வானம்' எழுத உதவிய ஆதார நூல்கள்

கர்னாதா வீழ்ச்சி (வாஷிங்டன் இர்விங்)

அல்ஹம்ரா கதைகள்(....)

ஸ்பெயின் நாட்டு கர்ண பரம்பரைக் காதைகள்(...)

அரபியர் வரலாற்றுச் சுருக்கம் (சய்யத் அமீர் அலீ)

இஸ்லாமியக் கலைக் களஞ்சியம் (....)

நூ.பி. ஷெய்க் அப்துல் காதர் என்ற இயற்பெயருடைய இந்த முதுபெரும் எழுத்தாளர் ஆரம்பத்தில் ஆங்கிலத்தில் பல பத்திரிக்கைகளில் கதைகள், கட்டுரைகள் எழுதி வந்தார். சென்னையிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த டெக்கன் டைம்ஸ் என்ற ஆங்கிலப் பத்திரிக்கையின் துணை ஆசிரியராக பொறுப்பு வகித்தார். பின்னர், சிங்கப்பூர் சென்று மலாயா நண்பன் என்ற தமிழ் தினசரியில் ஆசிரியராக பொறுப்பு ஏற்றார். நூல்கள் படிப்பதும், எழுதுவதும் தான் அவருடைய பொழுதுபோக்காக இருந்தது. பிறகு இரங்கூன் சென்று இந்தோனேஷியன் தூதரகத்தில் பொருளாதாரப் பிரிவின் தலைமைப் பதவி வகித்து வந்தார். அவருடைய முன்னோர்களில் சிறந்தவர்கள் இளையான்குடியில் நூருத்தீன் குடும்பத்தில் உதித்த புலவர் ஏறு மதாறுப் புலவர் அவருடைய மகன் வழிப்பேரனாகவும் தென்னகப் பெருந்தகையும், வணிக வள்ளலாகவும் வாழ்ந்த அபிராமம், நத்தம் கான்பஹதூர் துபாஷ் காதிறு, எஃப்.ஆர்.எஸ் (லண்டன்) மகள் வழிப் பேரனாகவும் திகழ்ந்தார். இவருடைய மைத்துனர்கள்தாம் துபாஷ் தாஜுதீனும், கேப்டன் அமீர் அலியும்.

வெற்றிமேல் வெற்றி, வெற்றிப்பிறை, இன்னும் பல நூல்களும் இயற்றியுள்ளார். இவருடைய நூலாகிய அந்தி வானத்தை இஸ்லாமிய இலக்கிய கழகத்தின் வாயிலாக தமிழாக்கத்திற்குத் தந்து அவருக்குப் பெருமை சேர்த்திருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

இஸ்லாமிய இலக்கியத் துறைக்காக தம் முழுநேரத்தையும் முழுக்க முழுக்க அர்ப்பணித்த ஒருவரை நினைவுகூர முடியுமா என்று என்னிடம் கேட்டால் சந்தேகத்திற்கு இடமில்லாமல் நான் சட்டென பதில் சொல்வேன் அவர் பெயர் நூன் என்று. மணிவிளக்கு ஆசிரியர் ஆ.கா.அ. அப்துஸ் ஸமது குறிப்பிட்டிருந்தார். அது மிகவும் பொருத்தமானது.